௩௭. ஆனால் "వాసుదేవోఽసి పూర్ణః" "வாஸுதேவோऽஸி பூர்ண:" என்கிற பரத்வத்திற்காட்டில் இங்குத்தைக்கேற்றமென்னென்ன, அருளிச்செய்கிறார், (ப்ரபத்திக்கு)என்றுதுடங்கி. (ப்ரபத்திக்கபேக்ஷிதங்களான) என்றது-உபாயமாகப்பற்றுமிடத்தில்வேண்டுமவையானவென்றபடி.(ஸௌலப்யாதிக)ளாவன-கண்டுபற்றுகைக்குறுப்பான ஸௌலப்யமும், மேன்மைகண்டகலாமைக்குறுப்பான ஸௌசீல்யமும், கார்யஞ்செய்யுமென்று விச்வஸிக்கைக்குறுப்பான ஸ்வாமித்வமும், குற்றங்கண்டு வெறுவாமைக்குறுப்பான வாத்ஸல்யமும்; "நிகரில்புகழாய்" இத்யாதிகளாலே இந்நாலு குணத்தையுமிறே ஆழ்வாரருளிச்செய்தது. (இருட்டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே) என்றது-பரத்வத்தில் இக்குணங்களெல்லாமுண்டாயிருக்கச்செய்தே,பரமஸாம்யாபந்நர்க்கு முகங்கொடுத்திருக்கிறவிடமாகையாலே, பகல் விளக்குப்போலே ப்ரகாசமற்றிருக்கும்; அர்ச்சாவதாரமானவிடத்தில் தண்மைக்கெல்லைநிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையாலே, அந்தகாரத்தில் தீபம்போலேஅத்யுஜ்ஜ்வலமாய்த்தோற்றுமென்றபடி; விஷயமுள்ளவிடத்தேயிறேகுணங்கள்

పూర్ణమేవ - సకలకల్యాణగుణపరిపూర్ణోఽర్చావతారఏవ, అవశిష్యతే - నిత్యశ్రీః ... తయా నిత్యసన్నిహితస్సౌలభ్యాదివిశిష్టభూమిస్సన్ పరత్వాదిషు చరమతయాఽవతిష్ఠతే, ఓమ్-రక్షకత్వ ప్రాప్యత్వవిశిష్టేఽర్చావతారే, సర్వమ్ - ఆశ్రయణసౌకర్యాపాదకాశ్రితకార్యాపాదక సకల కల్యాణగుణజాతమ్, సహపూర్ణమ్ - మిళితంసత్ పుష్కలమవలోక్యతే.

ஆ.—இந்த அர்ச்சாவதாரத்திலே; ஸங்குசிதமாய் பகல்விளக்குப்பட்டிருக்குமந்த பரத்வத்திலென்கிறார். ஸௌலப்யம்முதலாக வெடுத்தது ஸௌலப விஷயமே ப்ரபத்திக்குவேணுமென்னும் ப்ராதாந்யத்தைப்பற்ற.

௩௮. மேல் பரத்வத்திலர்ச்சாவதாரத்துக்குள்ள தன்னேற்றத்தையருளிச்செய்கிறார், (பூர்த்தியையும்) இத்யாதியால். அவாப்தஸமஸ்தகாமத்வமாகிற பூர்த்தியை இவனிட்டதுகொண்டு த்ருப்தனுப் குலைத்துக்கொண்டுஸ்வேச்சாசாரித்வமாகிற ஸ்வாதந்த்ர்யத்தை இவனிச்சாதீநவ்ருத்தியையுடையனுய் குலைத்துக்கொண்டு, அபராதமே பச்சையாக வாதரிக்கிற

டறையில் விளக்குப்போலே ப்ரகாசிப்பதிங்கே.

௩௮. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையுங்குலைத்துக் கொண்டு,

ஜீ.—ப்ரகாசிப்பது; அங்குள்ளாரும்சிலாதிகுணநுபவம்பண்ணுகைக்கு வருவதிங்கேயிறே; ஸௌலப்யம் முன்னுகவருளிச்செய்தது கண்டுபற்றுகைக் குறுப்பான ஸௌலப்யமே ப்ரபத்திக்கு ப்ரதாநாபேக்ஷிதமென்று தோற்றுகைக்காக.

௩௮. இக்குணங்கள் (ப்ரகாசிப்பதிங்கே) என்றத்தை யுபபாதிக்கிறார், (பூர்த்தியையும்) என்றுதுடங்கி. (பூர்த்தி) யாவது அவாப்தஸமஸ்தகாமத்வம்; அத்தைக் (குலைத்துக்) கொள்ளுகையாவது- இவனிட்டதுகொண்டு த்ருப்தனுகவேண்டும்படி ஸாபேக்ஷனுயிருக்கை; (ஸ்வாதந்த்ர்ய) மாவது- ஸ்வாதீநஸ்வரூபாதிமத்த்வம்; அத்தைக்(குலைத்துக்) கொள்ளுகையாவது- ஆச்ரிதாதீநஸ்வரூபஸ்த்தித்யாதிகளையுடையனுகை. “తదిచ్ఛయా మహాతేజా భుఙ్క్తే వై భక్తవత్సలః। స్నానం పానం తథా యాత్రాం కురుతే వై జగత్పతిః॥ స్వతన్త్రస్సజగన్నాథో ఉప్యస్వతన్త్రో యథా తథా। సర్వశక్తిర్జగద్ధాతా ప్యశక్త ఇవ చేష్టతే” “ததிச்சயா மஹாதேஜாபுங்க்தேவை பக்தவத்ஸலः। ஸ்நாநம் பாநம் ததா யாத்ராம் குருதே வைஜகத்பதிः॥ ஸ்வதந்த்ரஸ்ஸஜகந்நாதோஉப்யஸ்வதந்த்ரோ யதாததா। ஸர்வசக்திர் ஜகத்தாதாப்யசக்த இவ சேஷ்டதே” என்னக்கடவதிறே. “అర్చకపరాధీనాఖిలాత్మస్థితిః” “அர்ச்சகபராதீநாகிலாத்மஸ்த்திதிः” என்றருளிச்செய்தாரிறே பட்டர்; தன்னிச்சையொழிய இவற்றைக்குலைக்கைக்கு ஹேதுவில்லாமையாலே (குலைத்துக்கொண்டு) என்கிறார்; (தன்னையநாதரிக்கிறவர்களைத் தானுதரித்து நிற்கிறவிடம்) என்றது- தானிப்படி ஸௌலபனுய்வந்துநின்றால் அரியவனெளியவனுய்நிற்கப்பெற்றோமென்றுவிரும்பிமேல் விழுகையன்றிக்கே, அவ்வெளிமைதானே ஹேதுவாக உபேக்ஷிக்கிற ஸம்ஸாரிகளை தான்விடமாட்டாதவளவன்றிக்கே, அவர்களையொழியச்செல்லாமைதோற்றும்படிநிற்கிறஸ்த்தலம் அர்ச்சாவதாரமென்கை. (பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையுங் குலைத்துக்கொண்டு) நிற்கையாலேஸௌலப்ய ஸௌசீல்யங்களும், (தன்னையநாதரிக்கிறவர்களைத்தானுதரித்துநிற்கை) யாலே ஸ்வாமித்வவாத்ஸல்யங்களுமிங்கேதோற்றுநின்றதிறே.—அன்றிக்கே (பூர்த்தியையும்) என்றுதுடங்கி இவ்வாக்யமெல்லாவற்றாலும்- குணசதுஷ்டயத்திலும் ப்ரதாநமான ஸௌலப்யத்தையே வோடவைத்தாராகவுமாம்; அப்போதிவ்விஷயத்தினுடைய ஸௌலப்யாதிசயத்தை தர்சிப்பிக்கிறோரென்று வாக்யஸங்கதியாகக்கடவது; கண்ணுக்குவிஷயமாம்படி நித்யஸந்நிதி பண்ணுகிறவளவன்றிக்கே, ஸர்வப்ரகாரபரிபூர்ணனுய் நிரங்குச ஸ்வதந்த்ரனுயிருக்கிற தன்னை, ஸாபேக்ஷனும் பரதந்த்ரனுமாக்கிக்கொண்டு, தன்னையநாதரிக்கிற ஸம்ஸாரிகளைத் தானுதரித்து நிற்கைக்கு மேற்பட்ட ஸௌலப்யமில்லையிறே; “ఏవమ్భూతప్రకారోఽపి మాత్మనామ్భూతమథః।

ஆ.—தன்னை, அதிஸௌலப்ப்யமேபற்றுசாக முகம்பாராமலநாதரிக்கிறஹீந ஸம்ஸாரிகளை, அவ்வநாதரங்கண்டு விடமாட்டாத ஸ்நேஹமுடைய தான், அநாதரகந்தமற ஆதரிக்கிறவிடமர்ச்சாவதாரம்; அதுவே ப்ரபத்திக்கு விஷயமென்கிறார்

௫௯. பரத்வாதிகள் ப்ரபத்திக்கு விஷயமாகாது, அர்ச்சாவதாரமே விஷயமென்னுமிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார்; (பூகதஜலம்)இத்யாதியால். ஸங்கிஹிதமாயும்ப்ரயத்நஸாத்த்யமாய்க்கொண்டு துர்லபமான பூகதஜலம்போலே, அந்தராத்மதயாஸந்நிஹிதமாயும் அஷ்டாங்கயோகஸாத்த்யமாய்க்கண்ணுக்கெட்டாத வந்தர்யாமித்வமும், அதிவிப்ரக்ருஷ்டமாய்யெட்டுப்படாத ஆவரணஜலம்போலே அவ்வருகுபட்டு ஸம்ஸாரவர்த்திகளுக்கெட்டுப்படாத பரத்வமும், அதுபோலதிவிப்ரக்ருஷ்டமன்றியேயிருந்தும் மநுஷ்யாதிகளுக்குசெல்லப்போகாத பாற்கடல்போலே அண்டத்துக்குட்பட்டும் மூலமுடங்களான மநுஷ்யாதிகளுக்கு அலப்ப்யமான வ்யூஹமும், முன்புசொன்னவைபோலன்றியே ஸந்நிஹிதமாயும் தத்காலவர்த்திகளுக்கே உபஜீவ்யமாய் பிற்பட்டார்க்குபஜீவ்யமல்லாத பெருக்காறுபோலே பூமியிலே அவதரித்தும் தாதாத்விகர்க்கே ஆச்ரயணீயமாய் பிற்பட்ட பாவிகளுக்கெட்டாதேபோன விபவமும், ப்ரபத்திக்கு நித்யவிஷயமாகமாட்டாது; முன்புசொன்னவைபோலன்றியே அயத்நஸித்தமாய் அதிஸந்நி

தன்னையநாதரிக்கிறவர்களைத் தானுதரித்து நிற்கிறவிடம்.
௫௯. பூகதஜலம்போலே அந்தர்யாமித்வம்; ஆவரணஜலம்போலே பரத்வம்; பாற்கடல்போலே வ்யூஹம்;

జీ.—పూర్వస్మాదపి పూర్వస్మాజ్జ్యాయాంశ్చైవోత్తరోత్తరః॥సౌలభ్యతో జగత్స్వామీ సులభోహ్యుత్తరోత్తరః'' "ஏவம் பஞ்சப்ரகாரோஹமாத்மநாம் பததாமத:| பூர்வஸ்மாதபிபூர்வஸ்மாஜ்ஜ்யாயாம்ச்சைவோத்தரோத்தர: || ஸௌலப்யதோ ஜகத்ஸ்வாமீ ஸுலபோஹ்யுத்தரோத்தர:" என்று பரத்வாதிகளெந்திலும் ஸௌலப்ப்யமுண்டாயிருக்கச்செய்தே, பூர்வபூர்வத்தைக்காட்டில் உத்தரோத்தரத்துக்கு ஸௌலப்ப்யமதிசயித்திருக்குமென்று தானே யருளிச்செய்கையாலே ஸௌலப்ப்யத்துக்கெல்லைநிலம் அர்ச்சாவதாரமிறே.

௫௯. பரத்வாதிகளுடைய தௌர்லப்ப்யத்தையும் அர்ச்சாவதாரஸௌலப்ப்யத்தையும் த்ருஷ்டாந்தமுகேந தர்சிப்பிக்கிறார் மேல், (பூகதஜலம்)என்றுதுடங்கி. த்ருஷ்ணார்தனுக்கு தேசாந்தரத்தில் போகவேண்டாதபடி நிற்கிறவிடந்தன்னிலே யுண்டாயிருக்கச்செய்தேயும், கொட்டுங்குந்தாலியுங்கொண்டு கல்லினாலல்லது குடிக்கக்கிடையாத பூகதஜலம்போலேயாய்த்து, கண்டுபற்றவேணுமென்றாசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்திலேயிருக்கச்செய்தேயும், "கட்கிலீ" என்கிறபடியே கண்ணுக்குவிஷயமன்றிக்கே, அஷ்டாங்கயோகருபயத்நத்தாலே காணவேண்டும்படியான வந்தர்யாமித்வம். அவனுக்கு, அண்டத்துக்குப்புறம்பே பெருகிக் கிடக்கிறஆவரணஜலம்போலேயாய்த்து, இவனுக்கும் "அப்பால்முதலாய்நின்றவளப்பெரியவாரமுது" என்கிறபடியே லீலாவிபூதிக்கப்பால்பட்டிருக்கிற பரத்வம். அப்படி அதிவிப்ரக்ருஷ்டமன்றியே அண்டாந்தர்ப்பூதமாயிருக்கச்செய்தேயும், அவனுக்கு துஷ்ப்ராபகமான பாற்கடல்போலேயாய்த்து, இவனுக்கும் "பாலாழி நீ கிடக்கும் பண்பை யாங்கேட்டேயும்" என்கிறபடியே கேட்டிருக்குமத்தனையல்லது சென்று காணவரிதாம்படியிருக்கிற வ்யூஹம் ப்ரத்யாஸந்நமாயும் தாத்காலிகர்க்குபஜீவ்யமாய் பாச்சாத்யனானவனுக்கு

ஆ.—ஹிதமாய் எப்போதும் நிலைநிற்கிற பெருக்காற்றில் தேங்கினமடுக்கள் போலே, அஷ்டாங்கயத்நஸாதகமநிரபேக்ஷமாய் கோயில்முதலான திவ்யஸ்தலங்களிலும் க்ருஹங்களிலும் ஸந்நிஹிதமாய் ஸ்தாவரப்ரதிஷ்டையாக நிலைத்து, தத்ததவதாரங்களின் நித்யவிக்ரஹவிசிஷ்டமாய் கண்ணுக்கிலக்கமாய்க்கொண்டு ஸர்வஸமாச்ரயணீயமான வர்ச்சாவதாரமே, துர்லபவிஷயபராங்முகையான ப்ரபத்திக்கு ப்ரியதமவிஷயம், பெருவிடாயன் குளிர்ந்து தெளிந்து நிறைந்த தடாகமருகிருக்க, அத்தை விட்டு, கிணறுகல்லியும், அண்டத்தப்புறத்தெழப்பாய்ந்தும், பாற்கடலிற் பாரிபுகுந்தும், வற்றினவாற்றிலோடிச் சென்று தண்ணீர்குடித்து விடாய் கெடத்தேடுமாப்போலேயாய்த்து, ஸுலபவிஷயமான வர்ச்சாவதாரத்தை விட்டு துர்லபங்களான வந்தர்யாமித்வாதிகளைக்கிட்டி ப்ரபத்தி பண்ணத் தேடுகை.

௪௦. இப்படி ப்ரபத்திக்கு ஸுலபவிஷயமானளவேயல்ல, ருசிஜநகத்வாதிகளுமிவ்வர்ச்சாவதாரத்துக்குண்டென்கிறார், (இதுதான்) இத்யாதியால். இப்படிப்ரபத்திக்குநேரேவிஷயமானவிவ்வர்ச்சாவதாரந்தான் "ఇచ్ఛయా విషయాసక్తో నరో౽నర్థపరమ్పరామ్। యాత్యత్రాముత్రచాత్యర్థం విచారే తత్ర కా రతిః॥ మూత్రద్వారమిదం గవ్యం యత్రముగ్ధం జగత్త్రయమ్।అపానవాయునా జుష్టం సర్వథైవాతికుత్సితమ్" "இச்சயா விஷயாஸக்தோ நரோऽநர்த்தபரம்பராம்। யாத்யத்ராமுத்ராசாத்யர்த்த

பெருக்காறுபோலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள்போலே அர்ச்சாவதாரம்.

௪௦. இதுதான் சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணாதே,

ஜீ.—துர்லபமானபெருக்காறுபோலேயாய்த்து, "மண்மீதுழல்வாய்" என்கிறபடியே பூமியிலேயவதரித்து ஸஞ்சரித்தும், தத்காலவர்த்திகளுக்காச்ரயணீயமாய்பிற்காலத்திலுள்ளாரனவிவனுக்குக்கிட்டாதபடியானவிபவம், முன்பு சொன்னவைபோலன்றிக்கே, அவனுக்குவிடாய் கெடப்பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள்போலேயாய்த்து இவனுக்கும் தேசகாலகரணவிப்ரக்ருஷ்டமன்றிக்கே கோயில்களிலும் க்ருஹங்களிலும் என்று மொக்கவெல்லார்க்கும் கண்ணுக்கிலக்காம்படிநிற்கிற "பின்னானார்வணங்கும் சோதி"யான வர்ச்சாவதாரம், "భౌమనికేతనేష్వపి కుటీకుఞ్జేషు" "பௌமநிகேதநேஷ்வபி குடீகுஞ்சேஷு" என்கிறபடியே பலவிடங்களிலும் ஸந்நிதிபண்ணிநிற்கும்படியைநினைத்திறே, (மடுக்கள்போலே) என்று பஹுவசநத்தாலே யருளிச்செய்தது. அவதாரகுணங்களெல்லாம் அர்ச்சாஸ்தலங்களிலே பரிபூர்ணமாயிருக்கையாலும், அவதாரவிக்ரஹங்களை அர்ச்சாரூபேண பலவிடங்களிலும் பரிக்ரஹித்துக்கொண்டிருக்கையாலும், (அதிலே தேங்கின மடுக்கள்போலே) என்கிறது.

௪௦. இப்படி ஆச்ரயணருசிபிறந்தார்க்கு ஆச்ரயணீயத்வே ஸுலபமாயிருக்குமளவேயன்று, ருசிஜநகத்வாதிகளு மிவ்வர்ச்சாவதாரத்துக்குண்டென்று இதின் வைபவத்தை யருளிச்செய்கிறார் மேல், (இதுதான்) என்று தொடங்கி. ப்ரக்ருதமானஸௌலப்யாதிகுணயோகத்தையுட்கொண்டு (இதுதான்) என்று பராமர்சிக்கிறார்; (சாஸ்த்ரங்களால் திருத்தவொண்ணா)மையாவது ஹிதாநுசாஸநம்பண்ணுகிற ச்ருதிஸ்ம்ருத்யாதி சாஸ்த்ரங்களானவை, அருசிபிறக்கும்படி இதரவிஷயங்களினுடைய தோஷாதிக்யத்தையும், ருசிபிறக்கும்படி பகவத்விஷயத்தினுடைய குணாதிக்யத்தையுமுபதேசித்தாலும், அவற்றலிதரவிஷயங்களைவிட்டு இவ்விஷயத்தைப்பற்றும்படி பண்ணப்போகாமை; துர்வாஸநாபலம் உபதேசத்தை நிரர்த்தக

ஆ.— தம்விசரேதத்ரகா ரதி:||மூத்ரத்வாரமிதம் குஹ்யம்யத்ராமுக்த்தம் ஜகத்த்ரயம்| அபாநவாயுநா ஜுஷ்டம் ஸர்வதைவாதிகுத்ஸிதம்" என்றே வமாதிகளால் விஷய நிந்தைபண்ணும் ஹிதாநுசாஸநசாஸ்த்ரங்களாலே சாஸித்து திருத்தவொண்ணாதபடி, அப்ராப்தங்களுமாய் அபோக்யங்களுமாய் ஜுகுப்ஸிதங்களுமான ஹேயவிஷயங்களிலே, மீட்கவொண்ணாதபடி பெருமிடர்செய்துமண்டி, பகவத்விஷயமென்றால் கற்றங்கண்ட யானைபோலே முகம்மாறிக்கொண்டு, அநாதிகாலமேபிடித்து விமுகராயகர்த்தப்பட்டு அஸத்கல்பராய்ப் போரும் சேதநர்க்கு; பகவத்விஷயமென்றால் வேப்பங்குடிநீராய் "யாதானும்பற்றி நீங்கிப்" போருகிற வைமுக்யத்தை மறுவலிடாதபடி ருசிவாஸனைகளுடன் மாற்றி, "தன்பாலாதரம் பெருக வைத்த" என்று தன்னைக்கோகாட்டலாட்டும் விஷயங்களை காரித்துமியும்படி, மெய்யான ஸ்வருசியை பலபர்யந்தமாக விளைப்பிக்கக் கடவதாய், பற்றற்று விடாதபடியான தன்பக்கலுண்டான ருசி ஸ்வஸௌந்தர்யாவிஷ்காரத்தாலே ஒருபடி பிறந்தால் "திவத்தைத்தரும் மெய்" என்று இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரம் பண்ணுமயத்நஸித்த்தோபாயமாய் "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்றுபாயாத்த்யவஸாயிகளானால் "எனக்குத்தேனே பாலே" இத்யாதிப்படியே நிரதிசயபோக்யமான உபேயமாயிருக்கு

விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப்போரும் சேதநர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கக் கடவதாய், ருசிபிறந்தாலுபாயமாய், உபாயபரி

ஜீ,—மாக்கிவிடுமிறே; "జన్మాన్తరసహస్రేషు యా బుద్ధిర్భావితా నృణామ్। తామేవ భజతే జన్తురుపదేశో నిరర్థకః" "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு யா புத்திர்பாவிதா ந்ருணாம்| தாமேவ பஜதே ஜந்துருபதேசோ நிரர்த்தக:" என்னக்கடவதிறே; (விஷயாந்தரங்களிலே மண்டி விமுகராய்ப் போரு)கையாவது "சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார் திறத்தனையறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி" என்றும், "சுரிகுழல் மடந்தையர் திறத்துக்காதலே மிகுத்துக் கண்டவாதிருந்த" என்றும், "மாதரார்கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனை" என்றும் சொல்லுகிறபடியே இதரவிஷயங்களிலே அத்யபிநிவிஷ்டராய் "யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை" யேறிட்டுக்கொண்டு, பகவத்விஷயத்தில் முகம் வைக்க விசையாதே வர்த்திக்கை; இப்படிபோரும் சேதநர்க்கு (வைமுக்யத்தை மாற்றி ருசியை விளைக்கை) யாவது - "போதரேயென்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருகவைத்தவழகன்" என்கிறபடியே ஸ்வஸௌந்தர்யாதிகளாலே சித்தாபஹாரம்பண்ணி; தன்னைக்காணவேண்டோமென்றிருக்குமிருப்பைக் குலைத்து, கண்டகண்மாற வைக்கமாட்டாதபடி பண்ணுகை. (ருசிபிறந்தாலுபாயமாகை)யாவது இப்படி தன் வைலக்ஷண்யதர்சநத்தாலே தன்னை நித்யாநுபவம் பண்ணப் பெறவேணுமென்னும் ருசி பிறந்த வநந்தரம், "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்கிறபடியே ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்விகையான ஸ்வப்ராப்திக்கு தானே ஸாதநமாகை. (உபாயபரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கை)யாவது தன்னை யுபாயமாக பரிக்ரஹித்தால் உபேயஸித்திக்கொருதேசவிசேஷத்திலே போமளவும் பார்த்திருக்கவேண்டாதே, "அணியரங்கனென்னமுதனைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றும் "எனக்குத்தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக்கோனே" என்றும் சொல்லுகிறபடியே நிரதிசயபோக்யமாயிருக்கையாலே, தானே யுபேய

ஆ. —மென்கிறார். ஆக உபாயோபேயமாய் ததுபயருசிஜநகமாய் இதரவிஷயருசிமோசகமாய்தேசாத்யுபாதியற ஸர்வஸுலபமாய் அநாதரிப்பாரை யாதரிக்குமதாய் ப்ரபத்த்யநுகுணமாய் ஸர்வகுணஸம்பூர்ணமாய் ப்ரபந்ந ஜநகூடஸ்த்தர்க்குச் சரணவரணவிஷயமுமான அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கு நியதவிஷயம் ; இந்நியதியே ப்ரபத்திக்குள்ளதென்று கீழோடே ஸம்பந்தம்.

சுக. மேல் (இதில் ப்ரபத்திபண்ணும்)என்று துடங்கி(''இதம்சரணம்'' ''இதம் சரண'') மளவாக இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்திபண்ணுமதிகாரி த்ரைவித்த்யத்தையும், அதில்முக்க்யாதிகாரிவிசேஷத்தையு மருளிச்செய்கிறார், (இதில்) இத்யாதியால். ப்ரபத்திக்குநியதவிஷயமான விந்தவர்ச்சாவதாரத்தில், பரஸமர்பணரூபப்ரபத்திபண்ணும் நிவ்ருத்த்யதிகாரிகள், ப்ரபதநஹேதுபேதத்தாலே மூவர்.

சுஉ. அவர்களாரென்ன(அஜ்ஞரும் ஜ்ஞாநாதிகரும் பக்திவிவசரும்) என்கிறார்.

க்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்.

சுக. இதில் ப்ரபத்திபண் ணுமதிகாரிகள் மூவர்.

சுஉ. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்திவிவசரும்.

ஜீ. —முமாயிருக்கை. ஆகப்ரபத்திக்கு குணபூர்த்தியுள்ளவிடமேவிஷயமாகவேணுமென்றும், அதுதானுள்ளது அர்ச்சாவதாரத்திலேயென்றும், அத்தைப்பற்ற ஆழ்வார்களெல்லாரும் ப்ரபத்திபண்ணிற்று இவ்விஷயத்திலேயென்றும், இவ்விஷயத்திலே யெல்லாகுணங்களும் புஷ்கலங்கள் என்றும், விசேஷித்துப்ரபத்திக்கபேக்ஷிதகுணங்கள்விசதமாகப்ரகாசிப்பதிங்கேயென்றும், இதுதான்தன்னுடைய நைரபேக்ஷ்யாதிகளை யழியமாறி, தன்னை நாதரிப்பாரை யாதரித்துக்கொண்டுநிற்கிற ஸ்த்தலமென்றும், பரத்வாதிகளேரொருப்ரகாரத்தாலே துர்லபம் இது ஸர்வப்ரகாரஸுலபமென்றும், இவ்வளவேயன்று இவ்விஷயம் ருசிஜநகமுமாயுபாயோபேயமுமாயிருக்குமென்றும். சொல்லப்பட்டது ; இத்தாலுபாயோபேயங்களிரண்டும் தானேயாய், ஸ்வேதரவிஷயவிரக்திபூர்வகமாக ஸ்வவிஷயருசியை ஜநிப்பிக்குமதாய், ஸர்வஸுலபமாய், தன்படிகளை யழியமாறிக்கொண்டு தன்னையநாதரிப்பாரையுமாதரிக்குமதாய், ப்ரபத்த்யபேக்ஷிதகுணோஜ்ஜ்வலமாய், ஸமஸ்தகுணஸம்பூர்ணமாய், ப்ரபந்நஜநகூடஸ்த்தர்க்கு உபாயவரணவிஷயமாயிருந்துள்ள அர்ச்சாவதாரமே ப்ரபத்திக்கு நியதவிஷயமென்றதாய்த்து.

சுக. (ப்ரபத்திக்கு தேசநியமமும்) என்று துடங்கி, இவ்வளவுமுபாயவரணாத்மிகையான ப்ரபத்தியினுடைய தேசகாலாதிநியமாபாவமும் விஷயநியமமும் தர்சிப்பிக்கப்பட்டது ; இப்படி விஷயவிசேஷத்தை தர்சிப்பித்தவநந்தரம் பகவச்ச்சாஸ்த்ராதி ஸித்தமான வதிகாரிவிசேஷங்களையும் ப்ரகாசிப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, அதிகாரிவிசேஷத்தை யருளிச்செய்கிறார், (இதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகள் மூவர்) என்று. அதாவது ஸௌலப்ப்யாதிகுணபூர்த்தியாலே ப்ரபத்திக்கு நியதவிஷயமான இவ்வர்ச்சாவதாரத்தில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகள், ப்ரபதநஹேதுபேதத்தாலே மூன்றுவகைப்பட்டிருப்பர்களென்கை.

சுஉ. அவர்களாரென்னுமாகாங்க்ஷயிலே யருளிச்செய்கிறார், (அஜ்ஞரும்) என்றுதுடங்கி. (அஜ்ஞ)ராகிறார் - பகவல்லாபத்துக்குறுப்பாக ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணுகைக்கீடான ஜ்ஞாநமில்லாதவர்கள்; அஜ்

ஆ.—௬௫. இதரஸாதநங்களறியவுமநுஷ்டிக்கவு மரிதென்றும்(அஜ்ஞாநத்தாலே) ஸாதநாந்தரங்களை விட்டு, அவை யிரண்டுக்குமெளிதான ப்ரபத்திபண்ணும்(ப்ரபந்நர்) ஸ்தூலதர்சிகளான (அஸ்மதாதிகள்) என்று நுச்சிகரிக்கிறார்; இதரஸாதநம் ஸ்வரூபத்துக்கப்ராப்தம், ப்ரபதநம் ஸ்வரூபப்ராப்தமென்றறியாமையாகிற அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நரென்றும் யோஜிப்பர்கள்; துஷ்கரத்வாதிப்ரபத்தியால் விடுகை இரண்டுக்குமொக்கும்; அஜ்ஞாநமசக்திக்குபலக்ஷணம். ஸாதநாந்தரம் பரதந்த்ரஸ்வரூபநாசகம், ப்ரபதநம் ஸ்வரூபாநுரூபமென்கிற (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) நாதமுநிகள் தொடக்கமான (பூர்வாசார்யர்கள்). பகவத்ப்ரஸாதலப்தையான பக்தியின் பாரதந்த்ர்யஜ்ஞாநகாலுஷ்யத்தாலே (ப்ரபந்நர்) "மயர்வறமதிநலமரு"ளிப்பெற்ற (ஆழ்வார்கள்).

---

௬௫. அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்;
ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்;
பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

ஜீ.—ஞாநமசக்திக்குமுபலக்ஷணம்;(ப்ராபகாந்தரபரித்யாகத்துக்குமஜ்ஞாநாசக்திகளன்று) என்று மேலே யிவர்தாமே யருளிச்செய்கிறாரிறே. (ஜ்ஞாநாதிக)ராகிறார்-ஜ்ஞாநசக்த்யாதிகளுண்டாயிருக்கச்செய்தேயும், பகவதத்யந்தபாரதந்த்ரமான ஸ்வரூபயாதாத்ம்ய தர்சநத்தாலே, உபாயாந்தரங்கள் ஸ்வரூபவிருத்தமென்று பரித்யஜிக்கும்படிக்கீடான ஜ்ஞாநபூர்த்தியுடையவர்கள். (பக்திவிவச)ராகிறார்-ஒன்றையுமடைவுபட வநுஷ்டிக்கக்ஷமரல்லாதபடி பகவத்ப்ரேமாதிசயத்தாலே சிதிலகரணராயிருக்குமவர்கள்.

௬௫. இப்படி யிவ்வஜ்ஞாநாதிகளடியாக ப்ரபத்தி பண்ணினவர்கள் இன்னாரென்னுமிடங் காணலாமிடமுண்டோ வென்னுமாகாங்க்ஷையிலே அருளிச்செய்கிறார், (அஜ்ஞாநத்தாலே) என்று தொடங்கி. (அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நர்) என்றது-இதரோபாயாநுஷ்டாநத்திலிழிகைக்கு ஈடான ஜ்ஞாநாதிகள் முதலிலே யில்லாமையாலே, அநந்யகதிகளாய்க்கொண்டு பகவத்விஷயத்திலே பரந்யாஸம் பண்ணினவர்களென்றபடி; (அஸ்மதாதிகள்) என்று ஸ்வநைச்யாநுஸந்தாநத்தாலே மந்தாதிகாரிகளோடே தம்மையுங்கூட்டி யருளிச்செய்கிறார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்றது–உபாயாந்தரங்கள் ஸ்வரூபநாசகமென்று நடுங்கும்படியானஸ்வரூபயாதாத்ம்யதர்சநத்தால் வந்த ஜ்ஞாநபூர்த்தியாலே அநந்யகதிகளாய்க்கொண்டு, ஸ்வரூபாநுரூபமாக பகவதி ந்யஸ்தபரரானவர்களென்றபடி;(பூர்வாசார்யர்களா)கிறார் - நாதயாமுநயதிவராதிகள்.(பக்திபாரவச்யத்தாலே ப்ரபந்நர்) என்றது - பகவத்ப்ரேமபௌஷ்கல்யத்தாலே, "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றும் "இட்டகாலிட்டகை" என்றும் சொல்லுகிறபடியே சிதிலகரணராயிருக்கையாலே, ஸாதநாநுஷ்டாநத்துக்கு ஆளன்றிக்கே அநந்யகதிகளாய்க் கொண்டு, அவன்பக்கலிலே பரஸமர்பணம் பண்ணினவர்களென்றபடி; பக்திபரவசர்க்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணப்போகாதென்னுமிடம், "உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து நானெங்குத்தேனுமல்லேன்" என்றும் "என்கொள்வன்" என்கிறபாட்டிலும் ஆழ்வார் ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே.

ஆ.—சச. அஜ்ஞாநாதிஹேதுகமான வதிகாரிபேதோக்திக்கு ஹ்ருதயமருளிச்செய்கிறார்மேல், (இப்படி) இத்யாதியால். அஜ்ஞாநாதிஹேதுபேதத்தாலே ப்ரபத்த்யதிகாரத்தை இப்படி பிரித்துச் சொல்லுகிறதும், இவ்வதிகாரிகளுக்கு தந்தாமதிகரித்த அஜ்ஞாநாதிஹேதுகப்ரபத்திவிசேஷங்களிலுண்டான ப்ரதிபத்தி நியதி விசேஷத்தைப் பற்ற. ப்ராப்தாப்ராப்த ஸ்வரூப ஜ்ஞாநமில்லாத முற்பட்டவர்களுக்கு அஜ்ஞாநஹேதுக ப்ரபத்தியிலும் துஷ்கரத்வப்ரதிபத்தி நடக்கிலும், ப்ராப்தாப்ராப்த ஜ்ஞாநமுள்ள நடுவிலவர்களுக்கு ஜ்ஞாநாதிக்யஹேதுக ப்ரபத்தியிலும் ஸ்வரூப ஜ்ஞாநம் நடையாடிலும், பக்திபரவசரான பிற்பட்டவர்களுக்கு பக்திபாரவச்யஹேதுக ப்ரபத்தியிலும் நிஷ்டையாயிருக்குமென்றபடி.

சச. இப்படி சொல்லுகிறதும் ஊற்றத்தைப்பற்ற.

ஜீ.—சச. இப்படி அஜ்ஞாநாதிகளிலோரொன்றே இவர்களுக்கு ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகைக்கு மூலமென்னதென்கிறார், (இப்படி) என்று துடங்கி. அதாவது அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமும் பகவத்பக்தியுமாகிற இவை மூன்றிலும், மூவர்க்குமந்வயமுண்டாயிருக்கச் செய்தே ஓரொன்றே இவர்களுக்கு ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகிறதும் இவற்றிலோரொன்றே இவ்வதிகாரிகள்பக்கல் உறைத்திருக்கையாலே யென்கை. இத்தால் முற்பட்டவர்கள்பக்கல் ஜ்ஞானபக்திகளிரண்டும் குறைந்து அஜ்ஞாநமே மிஞ்சியிருக்கும்; நடுவிலவர்கள்பக்கல் அஜ்ஞாநமற்பமாய் பக்தியுமளவுபட்டு ஜ்ஞாநமே மிஞ்சியிருக்கும்; பிற்பட்டவர்கள் பக்கல் அஜ்ஞாநமத்யற்பமாய் ஸ்வரூப ஜ்ஞாநமும் குறைவற்றிருக்கச் செய்தே ப்ரேமமே கரைபுரண்டிருக்கும்; ஆகையாலெல்லாம் எல்லார்பக்கலிலுமுண்டேயாகிலும், அற்பங்களானவை கிடக்கச்செய்தே அதிகமானதுவே யவ்வவர்க்குப் ப்ரபதந ஹேதுவாமென்றதாய்த்து.—இந்த யோஜநைக்கொருகுறையுண்டு - "மயர்வறமதிநலம் பெற்ற வாழ்வார்களுக்கும், அஜ்ஞாநம் சிறிது கிடக்கிறதுண்டென்று கொள்ளவேண்டிவருகையாலே: ஆனால் செய்வதென் என்னில், (ஊற்றத்தைப் பற்ற) என்கிறவித்தையநுஸந்த்தாநபரமாக்கி யோஜிக்குமளவில் இவ்விரோதமில்லை; அப்போது (இப்படி) இத்யாதிக்கு அஜ்ஞாநாசக்திகளும் ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும் பகவத்பக்தியுமாகிற விம்மூன்றினுடையவநுஸந்த்தாநம் மூவர்க்குமேதேனுமொருபடி யுண்டாயிருக்கச்செய்தே, ஓரொன்றே யிவர்களுக்கு ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகிறதும், இவற்றிலோரொன்றிலே யிவ்வதிகாரிகளுக்கூற்றமாகையாலே என்று பொருளாகக் கடவது; அதாவது அநந்யகதிகளாய் ப்ரபந்நராகைக்குடலான அஜ்ஞாநாதித்ரயாநுஸந்த்தாநமும்மூவர்க்குமுண்டானாலும், மூன்றிலும்வைத்துக் கொண்டு ப்ரசுரமானதே தந்தாமுக்கு அநந்யகதிகளாய் ப்ரபத்தியிலிழிகைக்குஹேதுவாகவநுஸந்த்தித்திருக்கையாலே யென்றபடி. இதில் ப்ரதமாதிகாரிகளுக்கு அஜ்ஞாநாநுஸந்த்தாநம் ஸ்வரஸம்; நடுவுசொன்னவர்களுக்கும் ப்ராமாணிகராகையாலே அஜ்ஞாநத்திநுடைய ஸவாஸநநிவ்ருத்தி கூடாமையால் அஜ்ஞாநாநுஸந்த்தாநங்கூடும்; பிற்பட்டவர்கள் "மயர்வறமதிநலம்பெற்றவர்களாகையாலே அஜ்ஞாநாநுஸந்த்தாநம்நைச்யநிபந்த்தநமாமித்தனை.

ஆ.—சரு. இந்த ஹேதுத்ரயத்தின் காரணத்ரயத்தை யருளிச்செய்கிறார்மேல். இந்த அஜ்ஞாநாதிகளில் அஜ்ஞாநாசக்திகள் அசித்தத்த்வத்தைப்பற்றிவரும், துர்ஜ்ஞேயத்வதுஷ்கரத்வங்கள் ப்ராக்ருதகரணஸங்கோசநிபந்தநமாய் வருகையால்; ஜ்ஞாநாதிக்யம் ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிவரும், ப்ராப்த்யப்ராப்திகள் ஸ்வரூபாநுஸந்தாநநிபந்தநமாய் வருகையால்; பக்திபாரவச்யம் ஈச்வரதத்த்வத்தைப்பற்றிவரும், பாரவச்யம் பகவத்வைலக்ஷண்யஜ்ஞாநநிபந்தநமாய் வருகையால்.

சசு. இந்தபேதங்கண்டவிடமுண்டோவென்ன உண்டென்கிறார், ("என்னான்") இத்யாதியால். "என்னான் செய்கேன்" என்கிற வாழ்வாருடைய ப்ரபதநோக்தியிலே, அஜ்ஞனான நானென்செய்கேன், அப்ராப்தனான நானென்செய்கேன், பக்திபரவசனான நானென்செய்கேன், என்றிம்மூன்றுபேதமுமுண்டு.

சரு. இம்மூன்றும் மூன்றுதத்த்வத்தையும் பற்றிவரும்.

சசு. "என்னான்செய்கேன்" என்கிறவிடத்தில் இம்மூன்றுமுண்டு.

ஜீ.—சரு. இவ்வஜ்ஞாநாதித்ரயத்துக்கும் காரண மின்னதென்கிறார், (இம்மூன்றும்) என்றுதுடங்கி. (மூன்று தத்த்வத்தையும்பற்றிவரும்) என்றது ஸாதநாநுஷ்டாநத்தில் அஜ்ஞாநாசக்திகளுக்குமூலம், கர்மநிபந்தநமானவசித்ஸம்பந்தமாகையாலே அஜ்ஞாநம் அசித்தத்த்வத்தைப்பற்றிவரும்; இதரஸாதநங்கள் ஸ்வரூபவிருத்தமென்றுபரித்யஜிக்கைக்குடலான ஜ்ஞாநபூர்த்திக்கடி, மத்யமபதத்தில் சொல்லுகிற ஆத்மஸ்வரூபயாதாத்ம்யதர்சநமாகையாலே, ஜ்ஞாநாதிக்யமாத்மதத்த்வத்தைப்பற்றிவரும்; ஒன்றையுமடைவுபட வநுஷ்டிக்கமாட்டாதபடி கரணசைதில்யத்தைபண்ணும்பக்திவிவ்ருத்திக்குக்காரணம் "காதல்கடல்புரைய விளைவித்தகாரமர்மேனி" என்னும் பகவத்விக்ரஹவைலக்ஷண்யமாகையாலே, பக்திபாரவச்யம் பகவத்தத்த்வத்தைப்பற்றிவருமென்றபடி.

சசு. அதிகாரித்ரயத்துக்கும் அஜ்ஞாநாதித்ரயத்திலுமந்வயமுண்டாயிருக்க ஓரொன்றே ப்ரபதநஹேதுவாகச் சொல்லுகிறது (ஊற்றத்தைப்பற்ற) என்றிறே சொல்லிற்று; இப்படி ஏகாதிகாரிபக்கலிலே இம்மூன்றுமுண்டென்னுமிடங்காணலாமிடமுண்டோ என்ன அருளிச்செய்கிறார், ("என்னான்") என்றுதுடங்கி. அதாவது எம்பெருமான்தம்முடைய ஆர்த்திகண்டிரங்கக் காணாமையாலே, தன்னைப்பெறுமிடத்தில் சில ஸாதநாநுஷ்டாநம்பண்ணவேணுமென்றிருந்தானாகக் கொண்டு, உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதை யில்லாதபடி அஜ்ஞனான நான் என்செய்கேன்; ஜ்ஞாநம் தந்தோமேயென்னில், நீதந்த ஜ்ஞாநத்தாலே ஸ்வரூபபாரதந்த்ர்யத்தையுணர்ந்து ஸாதநாநுஷ்டாநமப்ராப்தமென்றிருக்கிற நான் என்செய்கேன்; ஸ்வரூபத்துக்குச் சேராதாகிலும் உன்னைப்பெறலாமாகில் அதுதன்னை நுஷ்டிக்கலாய்த்திறே; ஜ்ஞாநமாத்ரத்தைத் தந்தாயாகில், பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தருகையாலே ஒன்றையுமடைவுபட வநுஷ்டிக்க க்ஷமனல்லாதபடி பக்திபரவசனான நான் என்செய்கேனென்று மூன்றும் ஆழ்வார்க்கு விவக்ஷிதமாகையாலே, இவ்விடத்திலே யிம்மூன்றுமுண்டென்கை; ஆகையாலிவ்விடத்திலே காணலாமென்றுகருத்து.

ஆ.—௪௭. அந்த ஸூக்தியில் பக்திபாரவச்யமொன்றையுமேபற்றி ப்ரபத்திவருமென்றே கொள்ளவேணும், அஜ்ஞாநப்ராப்திகள் பாரவச்யத்தாலே ஜ்ஞாநவிஷயமாகமாட்டாமையால்.

௪௮. அசித்தையும் ஆத்மாவையும்பற்றி வருமதில், பகவத்வைலக்ஷண்யத்தைப்பற்றி ப்ரபந்நநாம் அதுவேமுக்க்யம்; மற்றையவையிரண்டும் கௌணமென்கிறார்.

௪௯. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணோபாதாநம் பண்ணுகிறார் மேல், "అవిద్యాతో దేవే పరిబృఢతయా వా విదితయా స్వభక్తేర్భూమ్నా వా జగతి గతిమన్యామవిదుషామ్ । గతిర్గమ్యశ్చాసౌ హరిరితి జితన్తాహ్వయమనోరహస్యం వ్యాజహ్రే స ఖలు భగవాన్ శౌనకమునిః" "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர்ப்பூம்நா வா ஜகதி கதிமந்யாமவிதுஷாம்। கதிர்கம்யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ கலு பகவாந் சௌநகமுநிः" என்கிற ச்லோகத்தில் "அவித்யாதः" என்று ஜ்ஞாந

---

௪௭. அங்கொன்றைப்பற்றியிருக்கும்

௪௮. முக்க்யமதுவே.

௪௯. "అవిద్యాతః" "அவித்யாதः" என்கிற ச்லோகத்திலே

ஜீ.—௪௭. ஆனால் இம்மூன்றுமவ்விடத்தில் ப்ரபத்திகாரணமாகிறதோ வென்ன (அங்கொன்றைப்பற்றியிருக்கும்) என்கிறார்; அதாவது அவ்விடத்தில் ப்ரபத்தியானது மூன்றிலும் வைத்துக்கொண்டுன்றியிருக்கிற பக்திபாரவச்யத்தையே தனக்கு ஹேதுவாகப்பற்றியிருக்குமென்றபடி.

௪௮. இந்தஹேதுத்ரயமடியாக வரும் ப்ரபத்திகளில் முக்க்யமேதென்ன (முக்க்யமதுவே) என்கிறார்; அதாவது பக்திபாரவச்யமடியாக ப்ரபத்திபண்ணுமிடத்தில் ப்ராப்யருசி கண்ணழிவற வுண்டாகையாலே யதுவே முக்க்யமென்றபடி.

௪௯. இவ்வதிகாரித்ரயத்துக்கும் ப்ரமாணமுண்டோவென்ன ப்ரதமம் பட்டருளிச்செய்ததொரு ச்லோகத்தை உதாஹரிக்கிறார், ("అవిద్యాతః" "அவித்யாதः") என்று துடங்கி, "అవిద్యాతో దేవే పరిబృఢతయా వా విదితయా స్వభక్తేర్భూమ్నా వా జగతి గతిమన్యామవిదుషామ్ । గతిర్గమ్యశ్చాసౌ హరిరితి జితన్తాహ్వయమనోరహస్యం వ్యాజహ్రే స ఖలు భగవాన్ శౌనకమునిః" "அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா ஸ்வபக்தேர்ப்பூம்நா வா ஜகதி கதிமந்யாமவிதுஷாம்। கதிர்கம்யச்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ கலு பகவாந் சௌநகமுநிः" இச்ச்லோகார்த்தம் ஜிதந்தாவ்யாக்க்யாநோபோத்காதத்திலே "'ப்ரபத்திக்கதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதமாக பட்டருளிச்செய்தாரிறே' என்று துடங்கி, 'அஜ்ஞனாகிறான் பகவல்லாபத்துக்கு தன்பக்கலில் ஜ்ஞாநசக்திகளில்லாதவன்; ஸர்வஜ்ஞனாகிறான் தேசகாலவஸ்துக்களால் பரிச்சேதிக்கவொண்ணாத வைபவத்தையுடையவன் ஈச்வரனென்றிருக்கையாலே அநந்யஸாத்யனென்றிருக்குமவன்; பக்திபரவசனாகிறான் ஜ்ஞாநசக்திகளுண்டாயிருக்கச்செய்தே அடைவுபட வநுஷ்டிக்கமாட்டாதவன்; இவர்கள் மூவரும் பகவத்விஷயமொழிய வேறுபாயமுண்டென்றறியாதவர்கள்; இவர்களுக்கு ப்ராபகனுமாய் ப்ராப்யனுமாயிருக்கும் ஸர்வேச்வரன்' என்று ஜிதந்தை என்றுபேரையுடைத்தான மந்த்ரரஹஸ்யத்தை, ஸர்வஜ்ஞனான ஸ்ரீசௌநக

ஆ.—ஹேதுகப்ரபத்தியையும் "దేవీ పరిబృఢతయా వా విదితయా" "தேவே பரிப்ருடதயா வா விதிதயா" என்று ஜ்ஞாநாதிக்யஹேதுகப்ரபத்தியையும், "స్వభక్తేర్భూమ్నా వా" "ஸ்வபக்தேர்ப்பூம்நா வா" என்று பக்திபாரவச்ய ஹேதுகப்ரபத்தியையும் சொல்லிற்று.

௫௦. "ఇదం శరణమజ్ఞానామిదమేవ విజానతామ్। ఇదం తితీర్షతాం పారమిదమానన్త్యమిచ్ఛతామ్" "இதம் சரணமஜ்ஞாநாமிதமேவ விஜாநதாம்। இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம்" என்கிற ச்லோகத்திலும் அஜ்ஞாந விஜ்ஞாந திதீர்ஷைகளாலே இம்மூன்றதிகாரமுமுக்தமென்றிவ்வளவாக

இம்மூன்றும் சொல்லிற்று.

௫௦. "இதம் சரணமஜ்ஞாநாம்."

ஜீ.—பகவான் வ்யாக்யாநம்பண்ணப்பெறுவதேயென்கிறார்" என்றுச்சான் பிள்ளையருளிச்செய்தார். (ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர்) என்கிறவிடத்தில் ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் ப்ரபதநஹேதுவாகச்சொல்லிற்று, இந்த ச்லோகத்தில் பகவதநந்யஸாத்யத்வஜ்ஞாநம் ப்ரபதநஹேதுவாகச் சொல்லிற்று, ஆகையாலிரண்டும் ஜ்ஞாநாதிகர்க்கு அநந்யகதித்வபூர்வகமான ப்ரபதநத்துக்கு ஹேதுவாமென்று கொள்ளவேணும் ; கீழுமிதுதானே யர்த்தமானாலோவென்னிலொண்ணாது, (இம்மூன்றும் மூன்று தத்த்வத்தையும்பற்றி வரும்) என்றத்தோடு சேராமையால்.

௫௦. அநந்தரமிவ்வர்த்தவிஷயமாக அகிலஜகந்மாதாவாய் ஆப்ததமையான பிராட்டி, லக்ஷ்மீதந்த்ரத்திலருளிச்செய்த வசநத்தை உபாதாநம்பண்ணுகிறார், ("ఇదం శరణమజ్ఞానామ్") ("இதம் சரணமஜ்ஞாநாம்") என்று. "ఇదం శరణమజ్ఞానామిదమేవ విజానతామ్ । ఇదం తితీర్షతాం పారమిదమానన్త్యమిచ్ఛతామ్" "இதம் சரணமஜ்ஞாநாமிதமேவ விஜாநதாம்। இதம் திதீர்ஷதாம் பாரமிதமாநந்த்யமிச்சதாம்" இந்த ச்லோகத்தில் "இதம்" என்று பராமர்சிக்கிறது கீழ்ச்சொன்ன சரணாகதியை; "అపాయోపాయనిర్ముక్తా మధ్యమాం స్థితిమాస్థితా । శరణాగతిరగ్ర్యైషా సంసారార్ణవతారిణీ" "அபாயோபாயநிர்முக்தா மத்யமாம் ஸ்த்திதிமாஸ்த்திதா। சரணாகதிரக்ர்யைஷா ஸம்ஸாரார்ணவதாரிணீ" என்றிறே கீழ்ச்சொல்லிகின்றது; லிங்கவ்யத்யயம் சரணசப்தவிவக்ஷையாலே; இதில் அஜ்ஞஸர்வஜ்ஞர்களை ஸ்ப்புடமாகச்சொல்லுகையாலே மேல் பக்திபரவசரைச் சொல்லுகிறதென்று கொள்ளவேணும் ; "ఇదం తితీర్షతాం పారమ్" "இதம் திதீர்ஷதாம் பாரம்" என்றது சடக்கெனவநிஷ்டநிவ்ருத்தி பிறக்கவேணுமென்னும் த்வரையுடையார்க்கென்றபடி ; "ఆనన్త్యమిచ్ఛతామ్" "ஆநந்த்யமிச்சதாம்" என்றது ஸ்வரூபப்ராப்த பரிபூர்ணபகவதநுபவத்தைப் பெற்றாலல்லது தரிக்கமாட்டாதார்க்கென்றபடி; இவையிரண்டும் பக்தியினுடைய பூமாவாலே வருமவையிறே ; பக்திபாரவச்யமுபாயாந்தராநுஷ்டாநத்தில் அசக்திக்குமுறுப்பாய், அநிஷ்டநிவ்ருத்தியிலுமிஷ்டப்ராப்தியிலுமுண்டான விளம்பாக்ஷமதைக்குமுடலாயிறே யிருப்பது ; அதில் விளம்பாக்ஷமதைக்குடலானவாகாரத்தை இந்த ச்லோகத்தில் சொல்லுகிறது; ஆனால், கீழ் அசக்திக்குடலாகவன்றோ சொல்லிப்போந்தது, அதுக்கிது ப்ரமாணமாமோவென்னில், அதிகாரித்ரைவித்யம் தர்சிப்பிக்கிறவளவே இவ்விடத்திலபேக்ஷிதமாகையாலே இது ப்ரமாணமாகச் சொல்லத்தட்டில்லை; "అవిద్యాతః" "அவித்யாதः" என்கிற ச்லோகத்தில் ஜ்ஞாநாதிக்யத்துக்குடலாகச் சொன்னதும் கீழ்ச்சொல்லி

ஆ.—அர்சாவதாரத்தில் ப்ரபத்திபண்ணுமதிகாரிவிசேஷங்களை யருளிச் செய்து,

ருக. அதில் பக்திபரவசர்க்கு பாரவச்யபாகவிசேஷத்தாலே இப் ப்ரபத்திதான் குலையுமென்கிறார் மேல், (பக்திதன்னிலே) இத்யாதியால். ப்ரபத்தியிலே மூட்டுமதான ஸத்தாநிபந்த்தநபக்திதன்னிலே, க்ருதப்ரப த்த்யத்யவஸாயபஞ்ஜகமான புநர்ப்ரபதநாதிப்ரோகத்வாரதிசயரூபாவஸ் த்தாபேதமும் பக்த்யுத்பாதகேச்ச்சாநுகுணமாகப் பிறந்தவாறே, ஸக்ரு த்கரணீயமாய் உபாயாந்தரஸ்பர்சகந்தம்பொறுத பூர்வக்ருதமான விப்ர பதநந்தான், சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே நிலைகுலையக்கடவ தாயிருக்கும்.

ருஉ. இப்படி ப்ரபத்தியிலே மூட்டுவது குலைப்பதாய்க்கொண்டு, ஒரு படிப்பட்டிராமை பக்திக்குள்ளதொன்றென்கிறார், (தன்னைப்பேணவும்) இத்யாதியால். "காறை பூணும்... தன் கோவைச்செவ்வாய் திருத்தும்" என்று தன்னைப்பேணவும்பண்ணும்; "அயர்க்கும்" என்று ஸ்வாலங்கார மநர்த்தஹேதுவாய்த்தோ வென்று மோஹம் விளைய "தேறி" என்றந்த

ருக. பக்திதன்னிலே யவஸ்த்தாபேதம் பிறந்தவாறே இதுதான் குலையக்கடவதா யிருக்கும்.

ருஉ. தன்னைப்பேணவும்பண்ணும் தரிக்கவும்பண்ணும்.

ஜீ.—வந்ததும் பிங்நமாயிருக்கச்செய்தே, அதிகாரித்ரைவித்த்யத்துக்கு ப்ரமாணமாகவத்தைச் சொன்னப்போலே.

ருக. ஆக ப்ரபத்த்யதிகாரித்ரைவித்த்யத்துக்கு ப்ரமாணங்காட்டின ராய்நின்றார்கீழ். இந்த த்ரிவிதப்ரபத்தியிலும் பக்திபாரவச்யப்ரபத்தியே முக்க்யமென்றிறே கீழ்ச்சொல்லிற்று; ஏவம்பூதப்ரபத்திநிஷ்டரானவர் கள் தந்நிஷ்டடை குலைந்து பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்நத்திலே மீளுவது, அவன்வரக்கொள்ள அவனையுபேக்ஷிப்பதாகிற விவற்றுக்குநிதா நமேதென்ன வருளிச்செய்கிறார், (பக்திதன்னிலே) என்று துடங்கி. (பக்தி தன்னிலேயவஸ்த்தாபேதம் பிற)க்கையாவது கரணசைதில்யத்தாலே ஸ்வயத்நக்ஷமரன்றிக்கே, அவனேயுபாயமாகவத்யவஸித்து, அவன் வரவு பார்த்திருக்குமவஸ்த்தையளவன்றிக்கே, கண்ணுஞ்சுழலையிட்டு ஏதேனுமொருபடியாலேயாகிலும் அவனையிப்போதே பெறவேணுமென்னு மதிமாத்ரத்வராவஸ்த்தைவிளைகை. (இது) என்று ப்ரபத்தியைச்சொல் லுகிறது. தாத்ருசாவஸ்த்தைபிறந்தால் ப்ரபத்தி(குலை)கையாவது "என் னன்செய்கேன்" என்று ஸ்வப்ரவ்ருத்தியிலந்வயமற்று பகவதி ந்யஸ்தபாரரா யிருக்குமிருப்புக்குலைகை. *நேரிவுடையீர்*

ருஉ. இப்படி ப்ரபத்திநிஷ்டடைகுலையும்படி பிறந்த பக்தியும் அவஸ் த்தாபேதம்விளைக்குமத்தையருளிச்செய்கிறார், (தன்னை) என்றுதுடங்கி. (தன்னைப் பேணப்பண்ணு)கையாவது - "காறைபூணும்" இத்யாதியிற் படியே அவன்வரவுக்குடலாகத் தன்னையலங்கரிக்கும்படி பண்ணுகை; அதாவது பகவல்லாபார்த்தமாக ஸ்வயத்நத்திலே மூட்டுமென்றபடி; இது மடலெடுக்கைமுதலானவற்றிலே மூட்டுமதுக்குமுபலக்ஷணம்; (தரிக்கப் பண்ணு)கையாவது - அரைக்ஷணமவனையொழிய தரிக்கமாட்டாமையாலே, அவன்வரவுக்குடலாக ஸ்வயத்நத்திலே மூளும்படிபண்ணினவதுதானே, அவன்வரக்கொள்ள விளம்பரோஷத்தாலே "போகுநம்பி" "கழகமேறேல் நம்பி" என்று அவனையுபேக்ஷித்து தள்ளி தரித்திருக்கும்படி பண்ணுகை ஆக இவையிரண்டாலும் "என்னன்செய்கேன்" என்றும் "தரியேனினி

ஆ.—க்ஷணத்திலே அந்திமதசையில்போல் மேல்மேலன தெளிவுபிறந்து, இந்த தசையில் வாராதொழியாயென்று தரிக்கவும்பண்ணும்; இப்படி நாநாஸ்வபாவத்தை விளைக்கை பக்திக்குள்ளதொன்று.

௫௯. இந்த ஸ்வபாவம் பக்திவிஷயத்தைப்பற்றி வருமவையெல்லாத்திலுங் காணலாமென்கிறார் மேல், (இந்த ஸ்வபாவம்) இத்யாதியால். பல ஸ்வபாவத்தை விளைக்கையாகிற விந்த ஸ்வபாவவிசேஷங்கள், ''வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடையாய்'' ''கோவிந்தன்குணம்பாடியாவிகாத்திருப்பேனே'' என்று பாதகமாயும் தாரகமாயும் போருகிற கல்யாணகுணங்களிலும், ''கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்'' ''மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினளே'' என்று ஸாத்யமாதும் ஸாத்மித்தும் போருகிற

---

௫௯. இந்த ஸ்வபாவவிசேஷங்கள் கல்யாணகுணங்களிலும்

ஜீ.—என்றுமிருக்குமிருப்புக்கு ப்ரதிகோடியை விளைக்குமென்றபடி. ஆகையால் ப்ரபத்திநிஷ்டைகுலைந்து ஸ்வப்ரவ்ருத்யாதிகளில் இழிகைக்கடி பக்தியினுடையவவஸ்த்தாபேதமென்று கருத்து.

௫௯. (தன்னைப்பேணவும்பண்ணும் தரிக்கவும்பண்ணும்) என்று எம்பெருமான் வருகைக்குடலாக க்ருஷிபண்ணுகையும், அவன் வரக்கொள்ள அவனையுபேக்ஷிக்கையுமாகிற பரஸ்பரவிருத்தஸ்வபாவங்களை விளைக்கும்படியையிறே சொல்லிற்று; இப்படி பக்தியானது ஸ்வாவஸ்த்தாவிசேஷங்களாலே சேதநர்க்கு விளைக்கும் பரஸ்பரவிருத்தஸ்வபாவங்கள் தத்விஷயமாத்ரத்திலன்றிக்கே, தத்ஸம்பந்திவஸ்துக்கள்விஷயமாகவுங் காணலாமென்கிறார் மேல், (இந்த) என்றுதுடங்கி. (இந்த ஸ்வபாவவிசேஷங்கள் என்று கீழ்ச்சொன்னவைதன்னையே சொல்லுகிறதன்று, இப்படிப்பட்ட ஸ்வபாவவிசேஷங்களென்றபடி; அவையாவன-அநுபாவ்யவிஷயமொருபடிப்பட்டிராநிற்கச்செய்தே அத்தையநுபவிக்கிறவிவர்களுக்கு தாரகமாய்த்தோற்றுகையும் பாதகமாய்த்தோற்றுகையும். (கல்யாணகுணங்கள்) இத்யாதி. ''கோவிந்தன்குணம்பாடியாவிகாத்திருப்பேனே'' என்று தாரகமாகவும், ''வல்வினையேனையீர்கின்றகுணங்களையுடையாய்'' என்று பாதகமாகவும் சொல்லுகையாலே கல்யாணகுணவிஷயமாகவும், ''சரங்களாண்டதண்டாமரைக்கண்ணனுக்கன்றியென்மனந்தாழ்ந்துநில்லாதே'' என்று தாரகமாகவும், ''சரங்களே கொடிதாயடுகின்ற'' என்று பாதகமாகவும் சொல்லுகையாலே திருச்சரவிஷயமாகவும், ''திருமாலைப்பாடக் கேட்டு மடக்கிளியைக்கைகூப்பிவணங்கினளே'' என்று தாரகமாகவும், ''கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர்''என்று பாதகமாகவும் சொல்லுகையாலே திருநாமவிஷயமாகவும், ''எங்களுக்கேயொருநாள்வந்தூதவுன் குழலின்னிசை போதராயே'' என்று தாரகமாகவும், ''அவனுடைத்தீங்குழலீருமாலோ'' என்று பாதகமாகவும் சொல்லுகையாலே திருக்குழலோசைவிஷயமாகவும் காணலாமென்றபடி. என்றுமொக்க போக்யங்களாயிருந்துள்ள கல்யாணகுணாதிகள் தாரகமாய்த்தோற்றுவது பாதகமாய்த்தோற்றுவதாகிறது, அநுபோக்தாக்களானவிவர்களுடைய ப்ரேமஸ்வபாவவிசேஷங்களாலேயிறே; அல்லது குணாதிகளின் ஸ்வரூபபேதத்தாலன்றே; ஆகையால் பக்த்யவஸ்த்தாபேதஜநிதங்களான ஸ்வபாவவிசேஷங்கள், இவ்வோவஸ்துக்கள்விஷயமாகவுங்காணலாமென்கிறது. குணாதிகள் தாரகங்களாகவும் பாதகங்களாகவும் பேசுகிறவிடத்தில், இரண்டுமொருவர் பேச்சன்றிக்கேயிருந்ததேயாகிலும், ஆழ்வார்களெல்லாருமேகப்ரக்ருதி

ஆ.—திருநாமங்களிலும், "छिन्नं भिन्नं शराग्र्यैः" "சிந்நம் பிந்நம் ஶரைர்தக்தம்" "எரிசிதறும் சரத்தால்" "சரங்களாண்ட" என்று சேதநபேதநாதிமுகத்தாலுமழகாலும் ப்ரதிகூலரை முடித்துமநுகூலரை வாழ்வித்தும் போருகிற திருச்சரங்களிலும், "அவனுடைத் தீங்குழலீருமாலோ" "எங்களுக்கே வொருநாள் வந்தூதாய்" என்று அஸஹ்யமாயும் ஸஹ்யமாயும் போருகிற திருக்குழலோசையிலும் விசேஷஜ்ஞர்க்குக் காணலாம்; பக்திவிஷயபகவத்ஸம்பந்தமுடையவைபோல் பக்திபாரவச்யமும் ப்ரபத்தியிலே மூட்டுவது குலைப்பதாய்க்கொண்டு பலஸ்வபாவத்தை விளக்கை தத்ஸம்பந்தி வஸ்துஸ்வபாவமென்றபடி; ஆச்ரயதோஷத்தால் குலையிலிறே யதிகாரப்ரச்யுதிவருவது.

திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழலோசையிலுங் காணலாம்.

ஜீ.—களாகையாலும், எல்லாருடையபக்தியும் பகவத்ப்ரஸாதலப்த்தையான பரபக்தியாகையாலும், அந்தபக்திஸ்வபாவவிசேஷங்கள் காட்டுகிறமாத்ரமேயிவ்விடத்திலபேக்ஷிதமாகையாலே விரோதமில்லை. "சரங்களே கொடிதாயடுகின்ற" என்கிறவிது பராஜிதராக்ஷஸர்பாசுரமன்றோ, அத்தை "சரங்களாண்ட" என்கைக்கு ப்ரதிகோடியாகச்சொல்லலாமோவென்னில், ராமவிஜயம் தமக்கிஷ்டமாகையாலே, அந்தவிஜயத்துக்கிலக்காய்த்தோற்ற ராக்ஷஸர்தசைபிறந்து, பிராட்டிமார்தசைபிறந்து பேசுமாப்போலே, தாமானதன்மைதோற்றாதே தோற்ற ராக்ஷஸர்பாசுரத்தாலே விஜயத்தைப்பேசி அநுபவிக்கிறாரென்றிறே இத்திருமொழிக்கு வ்யாக்க்யாநம் பண்ணியருளுகிறவாசார்யர்களருளிச்செய்வது; ஆகையால் தம்முடைய ப்ரேமஸ்வபாவத்தாலே தததவஸ்த்தாபந்நரான பின்பு, திருச்சரங்கள் பாதகமாய்த்ததும் தமக்கேயாய்த்தோற்றிப்பேசுகையாலே, அப்படிசொல்லக்குறையில்லை.—அதவா (தன்னைப்பேணவும் பண்ணும் தரிக்கவும்பண்ணும்) என்றவிவையிரண்டாலும் அவன் தானே வருமளவும் தரியாமல் வரவுக்குடலாக யத்நிக்கப்பண்ணுவது, வரக்கொள்ள ப்ரணயரோஷத்தாலே தள்ளி தரித்திருக்கப் பண்ணுவதாம்படியையிறே சொல்லிற்று; இப்படி விருத்தஸ்வபாவங்களையொன்றுதானே விளைக்குமென்னுமிது வேறுசிலவிஷயங்களிலும்காணலாமோவென்ன வருளிச்செய்கிறார், (இந்த) என்று துடங்கி. அதாவதிப்படிப்பட்ட ஸ்வபாவவிசேஷங்கள் "கோவிந்தன்குணம்பாடி" என்றுதுடங்கி கீழ்ச்சொன்னபடியே ஒருதசையிலே தாரகமாகப்பேசுவது ஒருதசையிலே பாதகமாகப் பேசுவதாம்படி, இவர்களுக்கு தரிப்பும் பாதையுமாகிற விருத்தஸ்வபாவங்களை விளைக்கிற கல்யாணகுணாதிகளிலேயும் காணலாமென்கை. ஆக (ப்ரபத்திக்கு) என்று துடங்கி இவ்வளவாக ப்ரபத்திவைபவத்தையும், தத்விஷயவைபவத்தையும், தததிகாரித்ரைவித்த்யத்தையும், த்ரிவிதப்ரபத்தியிலும்பக்திபாரவச்யஹேதுகப்ரபத்தியினுடைய முக்க்யதையையும், அதுதனக்கு ஸ்வஹேதுபூதபக்த்யவஸ்த்தாபேதத்தால்வரும் குலைதலையும், அந்தபக்த்யவஸ்த்தாபேதம் செய்விக்குமம்சங்களையுமருளிச்செய்தார்.

ஆ.—நுசு. இந்தஸ்வகதப்ரபத்தி உபயஸ்வரூபஸம்பந்ததூஷகமாய்த் தலைக்கட்டுமென்கிறார், (இதுதன்னை) இத்யாதியால். ரக்ஷகன்பண்ணும் ரக்ஷணஹேதுவாக ரக்ஷ்யமானவிவன்பண்ணும் ப்ரபத்திதன்னை உள்ளபடி நிரூபித்துப்பார்த்தால், ஹிதைஷியாய் அறியாததசையிலும் ரக்ஷிக்கையாகிற பெற்றபிதாவுக்கு, பிதாபுத்ரஸம்பந்தமறிந்த ரக்ஷணீயபுத்ரன் உபநயநாதியைப்பண்ணி என்னை ரக்ஷிக்கவேணுமென்று மார்விலேபொறித்தெழுத்துவாங்கினால், நல்லபிதாவும் நல்லபுத்ரனுமாய்த்தென்று, நாட்டார் பழிமொழியும் விளைந்து, உபயஸம்பந்தக்கொத்தையும் விளையுமாப்போலே, விசேஷஜ்ஞர் சிரிக்கைக்குமுபயஸம்பந்தக்கொத்தையும் விளைக்கைக்குமடியாயிருப்பதொன்று.

நுசு. இதுதன்னைப்பார்த்தால் பிதாவுக்கு புத்ர
னெழுத்துவாங்குமாப்போலே யிருப்பதொன்று.

ஜீ.—நுசு. இப்ப்ரபத்திதனக்கு (தர்மபுத்ராதிகளும்) என்றுதுடங்கி கீழ்க்தரானவதிகாரிகள்பக்கலிலே ஸாத்யாநுஷ்டானம் காண்கையாலும், (கர்மஜ்ஞானபக்திப்ரபத்திகள் என்றுபாயங்களோடே ஸஹபடிதமாய்ப் போருகையாலும்,) 'యద్యేన కామకామేన న సాధ్యం సాధనాన్తరైః। ముముక్షుణా యత్సాఙ్ఖ్యేన యోగేన న చ భక్తితః। ప్రాప్యతే పరమం ధామ యతో నావర్తతే పునః। తేన తేనాప్యతే తత్తన్న్యాసేనైవ మహామునే। పరమాత్మా చ తేనైవ సాధ్యతే పురుషోత్తమః'' ''யத்யேந காமகாமேந ந ஸாத்த்யம் ஸாதநாந்தரை꞉ । முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தித꞉ । ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்ததே புந꞉ । தேந தேநாப்யதே தத்தந்ந்யாஸேநைவ மஹாமுநே । பரமாத்மா ச தேநைவ ஸாத்த்யதே புருஷோத்தம꞉'' என்றும் ''ఇదం శరణమజ్ఞానామ్'' ''இதம் சரணமஜ்ஞாநாம்'' என்றும் இப்படியே சாஸ்த்ரங்களித்தை ஸாதநமாகச் சொல்லுகையாலும், உபாயத்வப்ரதிபத்தியோக்யதையுண்டாகையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக அதுக்குடலான பலவற்றையுமருளிச்செய்கிறார் மேல்; அதில் ப்ரதமத்திலே இப்ப்ரபத்தியை யுபாயமாகக் கொண்டால் வருமவத்யத்தை தர்சிப்பிக்கிறார், (இதுதன்னை) என்றுதுடங்கி. (இதுதன்னைப்பார்த்தால்) என்றது—இச்சேதநனீச்வரவிஷயத்தில் பண்ணுமிப்ப்ரபத்திதன்னை யுபாயமாகப்பார்த்தாலென்றபடி.—ஈச்வரன் தன்னை ரக்ஷிக்கைக்கு ஹேதுவாக இச்சேதநன்பண்ணும் ப்ரபத்திதன்னை நிரூபித்தால் என்றிங்ஙனே அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; அப்போதுமர்த்தமொக்குமிறே. (பிதாவுக்குபுத்ரனெழுத்துவாங்குமாப்போலே யிருப்பதொன்று) என்றது-உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய், தானறியாததசையிலும் தன்னை ரக்ஷித்துக்கொண்டு போரும் தமப்பனுக்கு, புத்ரனானவன், தானறிந்ததசையிலே என்னை நீ ரக்ஷிக்கவேணுமென்று எழுத்துவாங்கினால் இரண்டுதலைக்குமுண்டான வுறவுக்குக் கொத்தையாமாப்போலே, ஸத்தாகாரணபூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க்கொண்டுபோருகிற அகாரவாச்யனான ஸர்வேச்வரனுக்கும் மகாரவாச்யனான இவனுக்குமுண்டான ஸம்பந்தத்துக்கவத்யகரமென்றபடி; (எழுத்துவாங்கு)கையாவது - ரக்ஷகன்பேரைத் தன் மார்பிலே யெழுதிக்கொள்ளுகை.

ஆ.—௫௫. ஆகில் இப்ப்ரபத்திக்கு ஸ்வரூபமாய்த்ததேதென்ன ஸாதநத்வாகாரமற்ற நிலையின்றவாகாரத்தை யருளிச்செய்கிறார்மேல், (இதுதனக்கு) இத்யாதியால். சரணவரணரூபையானவிப்ப்ரபத்திக்கு ஸ்வாஸாதாரணரூபம், அதிகாரிவிசேஷணமாகையே நிலையின்றவேஷமானதன்னை, பலஸாதநமானவுபாயமென்ன, ஸ்வவ்யாவர்த்யாதிகாரம் குலையும்படி பொருதொழிகை. பரப்ரேரிதமாய் பரதந்த்ரவஸ்துவிசேஷணமானதன்னை ஆபாதஸ்வப்ரதீதிமாத்ரமாய்க்கொண்டு உபாயமென்னப்பொருதிறே; இது வரணபூர்வபாவியுமாய் வரணாநந்தரபாவியுமான ஸ்வரூபமென்னவும் உபேயமென்னவும் பொருது; (தன்னைப்பொருது) என்கிற ஸாமாந்யோக்தி, உசிதார்த்தத்தை யிப்படிகாட்டித்தேயாகிலும், உபாயமென்னப்பொருது என்னுமிதுவே ப்ரகரணோசிதம். பரகதமானதன்னை ஸ்வகதமாக்கப் பொருதென்றுமருளிச்செய்வர்; ஸ்வகதமானபோது ஆச்ரயவிஷயதூஷகமாய்க்கொண்டு தானுமழியும்; பரகதமானபோது ஆச்ரயவிஷயோத்தேஜகமாய்க்கொண்டு தான் வீறடிக்கும்.

௫௬. “யதங்கம் தத்ஸாதநம்” “யத்யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம்” என்கையால் உபாயத்வலக்ஷணமான விதரோபாயத்யாகமாகிற வங்கமிதுக்குண்டேயென்ன, இந்தவங்கத்தினுகாரவிசேஷத்தை யருளிச்செய்து, உபாயத்வத்தை துடைக்கிறார்மேல், (அங்கம்) இத்யாதியால். ஸித்தோபாயஸ்வீகாரத்தைப்பற்ற ச்லோகத்தில் விதேயமானவிதரோபாயத்யாகமாகிறவங்கம், த்யாகரூபமானதன்னையொழிந்த ப்ரதியோகிஸ்வீகாரரூபமானவற்றை, அதிகாரபங்கம் வாராதபடி பொருதொழிகை; ஸ்வரூபோத்பாதகத்வம், உத்பந்நஸ்வரூபவர்த்தகத்வம், வர்த்திதஸ்வரூப பலப்ரதத்வமாகிற அங்கலக்ஷணமின்றியே, இதரஸ்பர்சாஸஹத்வமாத்ரமேயிறே இந்தவங்கத்துக்குள்ளது; ஸ்வீகாரபூர்வபாவித்வமாத்ரங்கொண்டுஇத்தையங்கமென்கிறதித்தனையிறே; இதுக்கங்கியாய்த்தோற்றுகிறதுபாயமாகிலிறே இதங்கமாவது; இனி ஸித்தோபாயத்துக்கு அங்கஸாத்யத்வ

௫௫. இதுதனக்கு ஸ்வரூபம் தன்னைப்பொருதொழிகை.

ஜீ.—௫௫. ஆனாலிதுதனக்கு ஸ்வரூபமேதென்ன வருளிச்செய்கிறார், (இதுதனக்கு) என்றுதுடங்கி. (இதுதனக்கு ஸ்வரூபம்) என்றது - இப்ப்ரபத்திதனக்கஸாதாரணாகாரமென்றபடி; (தன்னைப்பொருதொழிகை)யாவது - உபாயவரணாத்மகமான தன்னை உபாயமென்ன ஸஹியாதபடியாயிருக்கை; அதாவது ஆபாதப்ரதீதியிலொழிய உள்ளபடி நிரூபித்தால் ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்திக்கு யோக்யமாகமாட்டாதபடி யிருக்கையென்றபடி. அன்றிக்கே (தன்னைப்பொருதொழிகை) என்கிறவிடத்தில் உபாயத்வேந ப்ரதீதமானதன்னைப்பொருதொழிகை என்று அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; இப்படிசொன்னாலும் ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்த்யஸஹத்வமே பொருளாமிறே.

௫௬. சரமச்லோகத்தில் இத்தை ஸாங்கமாகவிதிக்கையாலே “யதங்கம், தத்ஸாதநம்” “யத்யத்ஸாங்கம், தத்தத் ஸாதநம்” என்கிற ந்யாயமிதுக்கும் வாராதோவென்ன, அங்கஸ்வரூபத்தை தர்சிப்பிக்கவே அந்த ந்யாயமிங்குவாராதென்று பார்த்து அதுதன்னை யருளிச்செய்கிறார், (அங்கம்) என்றுதுடங்கி. (தன்னையொழிந்தவற்றைப் பொருதொழிகை)யாவது - ஸ்வீகாரரூபமான தன்னையொழிந்த சேதநப்ரவ்ருத்திகளில் ஒன்றையும் ஸஹியாதபடியிருக்கை; ஸாதநரூபஸகலப்ரவ்ருத்திகளினுடை

ஆ.—மில்லையிறே. அன்றியே ப்ரபத்யங்கமானவிது, அங்கியானஸ்வீகாரந்தன்னையொழிந்தவற்றைப் பொருதொழிகையென்றும், த்யாகரூபமான தன்னையும் ஸ்வீகாரரூபமானவொழிந்தவற்றையும் ப்ரவ்ருத்யஸஹத்வேந பொருதொழிகையென்றுமருளிச்செய்வர். ஆக, அங்கத்வந்துடையுண்கை யால் உபாயமென்னப்பொருது என்ற ப்ரதிஜ்ஞையுபபாதிக்கப்பட்டது.

ருஎ. ஆகில், பொறுப்பதேதென்னவருளிச்செய்கிறார்மேல், ஸித்தோபாயமானவீச்வரன், உபேயமான தன்னை சேதநன் சயலருதியைப் பற்ற உபாயமென்னப்பொறுக்கும், ஸித்தோபாயமென்றிவ்வளவை ஸஹிக்குமித்தனையல்லது, அங்கியென்னவும் ஸஹியாது, அங்கமென்னவும் ஸஹியாது.

ருஅ. இப்பொருமை எல்லாவுபாயத்துக்குமொக்குமோவென்ன, ஸாத்யமான கர்மாத்யுபாயங்கள், அங்கம் அங்கி என்கிற விரண்டையும் பொறுக்குமென்கிறார். கர்மம் ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமாகையாலே

ருசு. அங்கம் தன்னையொழிந்தவற்றைப்பொருதொழிகை.
ருஎ. உபாயம் தன்னைப்பொறுக்கும்.

ஜீ.—யவும் ஸவாஸநத்யாகமிறே யிதுக்கங்கம்; “యద్వృత్త్యాఙ్గమ్” “யத்யத் ஸாங்கம்” என்கிறவிடத்தில், ப்ரவ்ருத்திரூபாங்கஸஹிதமானவற்றையிறே ஸாதநமாகச் சொல்லுகிறது; அப்படியன்றிக்கே இதினுடைய வங்கம் நிவ்ருத்திரூபமாகையாலே, இதுதானே இதினுடைய வநுபாயத்வஸூசகமென்று கருத்து.

ருஎ. இதினுடைய வநுபாயத்வத்தை த்ருடீகரிக்கைக்காக ஸித்தஸாத்யோபாயங்களின் படிகளைச்சொல்லி, அவையிரண்டையும்பற்ற இதுக்குண்டான வ்யாவ்ருத்தியையருளிச்செய்கிறார், (உபாயம்) என்றுதுடங்கி (பொருது) என்னுமளவாக. (உபாயம் தன்னைப் பொறுக்கும்) என்றது - ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் இஷ்டாநிஷ்டப்ராப்திபரிஹாரங்களிரண்டுக்கும் ஸ்வயமேவ நிர்வாஹகனாகையாலே, தன்னை உபாயமென்றால் அதுக்குத்தகுதியாயிருக்குமென்றபடி. “ఉపాయోపేయత్వే తదిహ తవ తత్త్వం న తు గుణౌ” “உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் ந து குணௌ” என்றுபேயத்வத்தோபாதிவஸ்துவுக்கு ஸ்வரூபமாயிறே உபாயத்வமிருப்பது; “యేచ వేదవిదో విప్రా యే చాధ్యాత్మవిదో జనాః। తే వదన్తి మహాత్మానం కృష్ణం ధర్మం సనాతనమ్॥ శరణ్యం శరణం చ త్వామాహుర్దివ్యా మహర్షయః। అమృతం సాధనం సాధ్యం సమ్పశ్యన్తి మనీషిణః” “யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா: । தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் । சரண்யம் சரணம் ச த்வாமாஹுர்திவ்யா மஹர்ஷய: । அம்ருதம் ஸாதநம் ஸாத்யம் ஸம்பச்யந்தி மநீஷிண:” என்னக்கடவதிறே. (தன்னைப்பொறுக்கும்) என்கிறவிவ்வளவே சொல்லிவிடுகையாலே, தன்னையொழிந்தவற்றைப்பொருமைஅர்த்தாத்ஸித்தம்; இந்த ஸித்தோபாயம் ஸஹாயாந்தரஸம்ஸர்காஸஹமாயிறேயிருப்பது, இவ்வுபாயவிசேஷம் ஸ்வவ்யதிரிக்தமாயிருப்பதொன்றை ஸஹியாமையாலேயிறே “ஆநுகூல்யஸங்கல்பாதிகளுக்குபாயாங்கத்வமன்றிக்கே, அவகாதஸ்வேதம்போலே ஸம்பாவிதஸ்வபாவத்வமுண்டாகிறது” என்று இவ்வாததத்தை பாகதபடியிலே இவர்தாமே யருளிச்செய்தாரிறே.

ருஅ. (உபாயாந்தரமிரண்டையும் பொறுக்கும்) என்றது-ஸித்தோபாயேதரமான ஸாத்யோபாயம், ஸ்வபாரதந்த்ர்யஜ்ஞாநரஹிதராய் ஸ்வயத்நபரராயிருப்பார்க்கு மோக்ஷஸாதநதயா சாஸ்த்ரவிஹிதமாகை

ஆ.—ஜ்ஞாநத்தையங்கமாகவுடைத்தாய், ஜ்ஞாநம்விரோதிபாபநிவர்த்தக கர்மபூர்வகமாகையாலே கர்மத்தையங்கமாகவுடைத்தாய், பக்திகர்மஜ்ஞா நஸாத்யமாகையாலே ததுபயத்தையுமங்கமாகவுடைத்தாய், அந்தஜ் ஞாநகர்மங்கள்தான் ப்ரீதிபூர்வகமாய் வருகையால் பக்தியை யங்கமாக வுடைத்தாய், இப்படியுபாயாந்தரங்களுக்கு அங்யோந்யமங்காங்கிபாவ முண்டாகையால் இரண்டையும் பொறுக்குமிறே.

ருகூ. ஆகில், ஸித்தோபாயேதரமாய்க்கொண்டு உபாயாந்தரமென் னலானவிவன்பண்ணும் ப்ரபத்தியும் இரண்டையும்பொறுக்குமே, பொருதெ ன்னீரென்ன, ப்ரவ்ருத்யஸஹமான நிவ்ருத்திரூபமாகையால் அங்கமெ ன்னவும்பொருது, நிரபேக்ஷஸித்தரூபமாயிருப்பதொன்றுகையாலே அங் கியென்னவும் பொருதென்கிருர்; "ஆநுகூல்யாதிகளுமங்கமல்ல இப் ப்ர பத்தியுண்டாகவே அவகாதஸ்வேதம்போலே தன்னடையே வருமவை யாகையால், உபாயமாகாதவித்தை உபாயமாகவிதித்ததும், ஜ்ஞாநபா காநுகுணமாக உபாயாந்தரங்களைவிட்டு ஸித்தோபாயநிஷ்டை வரு கைக்கு வழியாகவித்தனை. ஆக, அதிகாரிவிசேஷணமானவிதுக்குபாயத் வாகாரம் நேராகத் துடையுண்கையால், அங்காங்கித்வங்களை ஸஹியாதெ ன்றதாய்த்து.

ருஅ உபாயாந்தரமிரண்டையும் பொறுக்கும்.

ருகூ. இதிரண்டையும் பொருது.

ஜீ.—யாலே, ஸ்வஸ்மிந்நுபாயத்வப்ரதிபத்திஸஹமுமாய், ஸ்வோத்பத்யா திகளில் ப்ரவ்ருத்திரூபாங்கஸாபேக்ஷமாகையாலே ஸ்வவ்யதிரிக்தங்களை யும்ஸஹிக்குமதாய் இருக்குமென்றபடி. "భక్త్యా లభ్యస్త్వనన్యయా" "ఉభయపరికర్మి తస్వాన్తస్యైకాన్తికాత్యన్తికభక్తియోగైకలభ్యః" "జన్మాన్తరసహస్రేషు తపోజ్ఞానసమాధిభిః । నరాణాం క్షీణపాపానాం కృష్ణే భక్తిః ప్రజాయతే" "பக்த்யா லப்யஸ்த்வநந்யயா" "உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்யைகாந்திகாத்யந்திகபக்தியோகைகலப்ய:" "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: । நராணாம் க்ஷீணபா பாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே" என்னக்கடவதிறே.

ருகூ. (இதிரண்டையும்பொருது) என்றது - ஸித்தோபாயவரண ரூபமாய் நிவ்ருத்திஸாத்யரூபமாய் அதிகாரிவிசேஷணமாய் ஸ்வரூபாநதி ரேகியாயிருக்கிற இவ்விந்தப்ப்ரபத்தி, உபயாஸஹமாயிருக்குமென்றபடி; ஆகையால் ஸித்தஸாத்யோபாயவ்யாவ்ருத்தவேஷையாயிருக்கிறவிந்த ப்ப்ரபத்திக்கு உபாயத்வமஸம்பாவிதமென்றதாய்த்து.

அன்றிக்கே (இது தனக்குஸ்வரூபம் [ருரு.]) இத்யாதிக்கு,—ஆ னால் ஸாங்கமாக சாஸ்த்ரவிஹிதமானவிந்தப்ப்ரபத்திக்கு ஸ்வரூபமேது, இதுந்தச் சொல்லுகிறவங்கந்தானேதென்ன, அவை இரண்டையுமடை வே யருளிச்செய்கிருர், (இதுதனக்கு) இத்யாதிவாக்யத்வயத்தாலே.

ஆனல் தன்னைப்பொறுப்பதேதென்ன வருளிச்செய்கிருர், (உபாயம் [ருஎ.]) இத்யாதி. தன்னையும் தன்னையொழிந்தவற்றையும் பொ றுக்குமதேதென்னவருளிச்செய்கிருர், (உபாயாந்தரம்[ருஅ.]) இத்யாதி. இந்தஸித்தஸாத்யோபாயங்களிரண்டிலுமிப்ப்ரபத்திக்குண்டான வ்யா வ்ருத்தியை தர்சிப்பியாநின்றுகொண்டு உக்தார்த்தத்தை நிகமிக்கிருர், (இதிரண்டையும்) இத்யாதி என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம்.

ஆ.—சூ௦. இப்படி யிப்ப்ரபத்தி யுபாயமல்லவாய்விட்டால் பேற்றுக்கடியாக சில இத்தலையில் வேண்டாவோவென்ன, அதுக்கு வேண்டுவது இவ்வளவேயென்கிறார்மேல், (பலத்துக்கு) இத்யாதியால். ஸ்வதந்த்ரஸ்வாமி கொடுக்கிறபலலாபத்துக்கு, திருமந்த்ரோக்தமான சேஷசேஷிஸம்பந்த ஜ்ஞாநமும், நானுன்னை ரக்ஷிப்பனென்றால் ப்ரதிஷேதியாமையுமே, சாஸ்த்ரம் சிலுகிடாமைக்கு வேண்டுவது. ஜ்ஞாநமடியாக பலமுண்டாகையாலும், அதுதான் ஸ்வரூபமாகையாலும், ஸர்வமுக்திப்ரஸங்கஸஹேதுகத்வங்கள் வாராதென்றபடி.

சூக. இத்தலையில் சிலஸாபேக்ஷனாய், பலப்ரதனானால் வருங்குறையேதென்ன, உபயர்க்குங் கொத்தையாமென்கிறார், (அல்லாதபோது) இத்யாதியால். ஆத்மஜ்ஞாநாதியொழிய அவன்ஸாபேக்ஷனாக இவன் சிறிது செய்யும்போது, நிருபாதிகரக்ஷ்யரக்ஷகஸம்பந்தத்துக்கும் ஸாபேக்ஷத்வசங்காகந்தமற்ற பூர்த்திக்கும், ஸோபாதிகத்வாபூர்த்தித்வங்களாகிற கொத்தையாம். ஸார்வபௌமன் ஸாபேக்ஷனாய் தன்மஹிஷீரக்ஷணம்பண்

சூ௦. பலத்துக்கு ஆத்மஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

சூக. அல்லாதபோது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.

ஜீ.—அதவா இதினநுபாயத்வத்தை ஸாதிக்கைக்காக இதினுடைய ஸ்வரூபாங்கங்களிரண்டையும் தாமே யருளிச்செய்கிறார், (இதுதனக்கு[ருரு]) இத்யாதிவாக்யத்வயத்தாலே; இதினநுபாயத்வத்தை ஸ்ப்புடமாக்குகைக்காக ஸித்தஸாத்யோபாயங்களின்படிகளை தர்சிப்பிப்போமென்று திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் ஸித்தோபாயத்தின்படியை யருளிச்செய்கிறார், (உபாயம்[ருள]) இத்யாதியால்; அநந்தரம் ஸாத்யோபாயத்தின்படியை யருளிச்செய்கிறார், (உபாயாந்தரம்[ருஅ]) இத்யாதியால்; இவை யிரண்டிலும் ப்ரபத்திக்குண்டான வ்யாவ்ருத்தியை தர்சிப்பிக்கிறார், (இதிரண்டையும்) இத்யாதியால் என்றிங்ஙனே ஸங்கதியாகவுமாம்; இவ்வுபயஸங்கதிக்கும் வாக்யங்களுக்கர்த்தம் பூர்வவத்.

சூ௦. இப்படி யிப்ப்ரபத்தி யுபாயமல்லவாய்விட்டால், பலஸித்திக்கு இவன்பக்கலிலும் சிலவேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார், (பலத்துக்கு) என்றுதுடங்கி. (பலத்துக்கு) என்றது-பலஸித்திக்கென்றபடி; (ஆத்மஜ்ஞாந)மாவது ஸ்வஸ்வரூபஜ்ஞாநம். அதாவது-ததேகசேஷத்வததேகரக்ஷ்யத்வங்களையறிகை; (அப்ரதிஷேத)மாவது - நிருபாதிகசேஷியாய் நிருபாதிகரக்ஷகனானவவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காமை. அதாவது - ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயநிவ்ருத்தி. அவதாரணத்தால்-இவையிரண்டுமொழிய பின்னையொன்றும் வேண்டாவென்றபடி. சரமபதத்திற் சொல்லுகிறபலத்துக்கு, ப்ரதமபததிற்சொல்லுகிற ஆத்மஜ்ஞாநமும், மத்யமபதத்திற்சொல்லுகிற அப்ரதிஷேதமுமிறே வேண்டுவது.

சூக. இப்படியன்றிக்கே, பலஸாதநமாக இவனும் சில செய்யவேணுமென்றால், வருந்தீங்கென் என்ன வருளிச்செய்கிறார், (அல்லாத) என்று துடங்கி. (அல்லாதபோது) என்றது - இவ்வளவன்றிக்கே பலஹேதுகமாக இவன் சில செய்யவேண்டும்போதென்றபடி; (பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையா)கையாவது- இவனுடையரக்ஷணம் தன் பேறாம்படியான

ஆ.—ணுகையும், அவள் ஸ்வரக்ஷணார்த்தமாக யத்நம்பண்ணுகையும், ஸம்பந்த்தபூர்த்திகளுக்குக் கொத்தையாகாதிராதிறே.

சூ௨. ஆகில் அநிஷ்டநிவ்ருத்த்யர்த்தமாகவாகிலும் சிறிது யத்நிக்கவேண்டாவோவென்ன, அப்படிசெய்யில் அவ்வநிஷ்டமநிவ்ருத்த்தமாய்விடுமென்கிறார், (ஆபத்தை) இத்யாதியால். ஆமஜ்வரத்தை யாற்றக் கோலி ஆற்றிலே முழுகத்தேடுவாரைப்போலே, ஸம்ஸாரமாகிற மஹாபத்தை ஸ்வயத்நத்தாலே மறுவலிடாதபடி போக்கிக்கொள்ளுகிறோமென்று விபரீதஜ்ஞாநத்தாலே ப்ரமித்து, ஸ்வயத்நநிவர்த்யமல்லாத வந்தவாபத்தை, ஸ்வயத்நமாகிற வபத்யஸேவையாலே சததாகமாகவிளைத்துக்கொள்ளாதே, அந்த ப்ரமத்தை விட்டு, ஸ்வயத்நநிவ்ருத்தனாயிருக்கையே தன்னிவ்ருத்திக்கு வேண்டுவது. அநிஷ்டநிவ்ருத்தியில் இவன் கைமுடங்கவே, தந்நிவர்தகன் கை நிமிருமிறே.

சூ௩. ஆகில் ரக்ஷணத்துக்கு வேண்டுவதேதென்ன, அவன் திருவுள்ளத்தைப் பின்செல்லுகையே வேண்டுவதென்கிறார், (ரக்ஷணத்துக்கு) இத்யாதியால். நிருபாதிகரக்ஷகன் பண்ணும் ரக்ஷணத்துக்கு பக்ஷபாதி

சூ௨. ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று ப்ரமித்து அத்தை விளைத்துக்கொள்ளாதொழிகையே வேண்டுவது.

சூ௩. ரக்ஷணத்துக்கபேக்ஷிதம் ரக்ஷ்யத்வாநுமதியே.

ஜீ.—அவனுடைய நிருபாதிகசேஷித்வத்துக்கும், இவனுடைய ப்ரவ்ருத்தியிலொன்றையுமபேக்ஷியாத நிரபேக்ஷோபாயத்வத்துக்கும் அவத்யமாய்த் தலைக்கட்டுகை.

சூ௨. ஆனாலும் அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரஸாகரத்தில் அழுந்திக் கிடந்தலைகிற தன்னுபத்தையுணர்ந்தால், ஆபத்ஸகனானவீச்வரனை ஸ்வப்ரபத்தியாலே வசீகரித்து, தத்ப்ரஸாதத்தாலே இத்தைக் கழித்துக்கொள்ள வேண்டாவோ வென்ன வருளிச்செய்கிறார், (ஆபத்தை) என்று துடங்கி. அதாவது - ஸர்வேச்வரன் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி, ஸம்ஸாரமாகிற (ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோமென்று) தான் பண்ணுகிற ப்ரபத்தியாலே, தன் (ஆபத்தைப்போக்கிக்கொள்ளுகி) றோமாக (ப்ரமித்து), ததேகபாரதந்த்ர்யரூபஸ்வரூபஹாநியாகிற ஆபத்தை (விளைத்துக்கொள்ளாதொழிகையே) தந்நிவ்ருத்திக்கு இவன் செய்ய வேண்டுவதென்றபடி. ஓராபத்தைப் பரிஹரிக்கப்புக்கு ஓராபத்தை விளைத்துக்கொள்ளாதே, இவன் ஸ்வயத்நத்தில் நிவ்ருத்தனாயிருக்கவே எம்பெருமான் தானே ரக்ஷிக்குமென்று கருத்து. (அத்தை) என்றது - ஆபத்ஸாமாந்யத்தைப்பற்ற; அல்லது ப்ரக்ருதாபத்துதன்னையே பராமர்சித்தபடியன்று.

சூ௩. ஆனாலும் "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" "ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்று ரக்ஷகனான ஸர்வேச்வரன், ரக்ஷ்யபூதனான இச்சேதநனுடையவபேக்ஷையைப் பார்த்திருக்குமென்கையாலே, அவன்பண்ணும்ரக்ஷணத்துக்கு இவனுடைய வபேக்ஷையும் வேண்டியன்றோ யிருக்கிறதென்ன வருளிச்செய்கிறார், (ரக்ஷணத்துக்கு) என்றுதுடங்கி. அதாவது - நிருபாதிகரக்ஷகனானவன் பண்ணும் ரக்ஷணத்துக்கு இச்சேதநன்பக்கல் வேண்டுவது, நீ யெனக்கு ரக்ஷ்யமென்றால் அல்லேனென்னாதே, தன்னு

ஆ'—யாகாமைக்கபேக்ஷிதம், நீ யெனக்கு ரக்ஷ்யமென்றால் ஒக்குமென்று அநுமதிபண்ணுமென்றிவ்வளவே வேண்டுவது. அதில்லமையிறே அநாதி காலமிழந்ததும்.

கூச. இவ்வநுமதிதான் ஸாதநமாகாதோவென்னவொண்ணுதென்கிறார் மேல் (இதுதான்) இத்யாதியால். இந்த ரக்ஷ்யத்வாநுமதிதான் ஸாத்யஸித்தரூபமான எல்லாவுபாயங்களுக்கும் வித்யநுஷ்டாந த்வாரேண பொதுவாகையாலும், ஸ்வரூபதர்மமான சைதந்யத்தின் ஆகாராந்தரமான பரேச்சாநுவிதாநரூபகார்யமாகையாலும், வரணதசையளவன்றிக்கே ப்ராப்யப்ராப்திதசையிலும் "அது நமது விதிவகையே" என்றநுமதிமுன்னாக ப்ராபிக்கவேண்டி யநுவர்திக்கையாலும், சேஷமாய் பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு சேஷ்யதிசயகரியாய் தச்சித்தாநுவிதாநம் பண்ணிக்கொண்டு ஸ்வரூபத்தை யதிரேகித்திருப்பதொன்றல்லாமையாலும், சைதந்யாதாரமல்லாத அசித்வ்யாவர்தகையான சைதந்ய

கூச. எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகையாலும், சைதந்யகார்யமாகையாலும், ப்ராப்திதசையிலு மநுவர்திக்கையாலும், ஸ்வரூபாதிரேகியல்லாமையாலும், அசித்வ்யாவ்ருத்தவேஷத்தை ஸாதநமாக்கவொண்ணாது.

ஜீ.—டைய ரக்ஷ்யத்வத்தை இசையுமிவ்வளவேயென்கை. "[illegible]" "ரக்ஷாபேக்ஷாம்" என்கிறவிடத்தில் சொல்லுகிறவபேக்ஷை, ரக்ஷ்யத்வாநுமதித்யோதகமித்தனை என்று கருத்து. "[illegible] மதி:" "யாச்ஞா ப்ரபத்தி: ப்ரார்த்தநாமதி:" என்கிற ஸ்வீகாரத்தை அப்ரதிஷேதத்யோதகமென்றிறே இவர் தாமருளிச்செய்தது.

கூச. இப்படி அநுமதிஸாபேக்ஷனாய் ரக்ஷிக்குமாகில் இவ்வநுமதிதான் ஸாதநமாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (எல்லாம்) என்றுதுடங்கி. (எல்லாவுபாயத்துக்கும் பொதுவாகை)யாவது - போகமோக்ஷோபாயங்களில் ஏதேனுமொன்றிலே யதிகரிக்குமவனுக்கும், நீ யிவ்வுபாயத்தை யநுஷ்டியென்றால் அப்படியே செய்கிறேன் என்னுமநுமதிபூர்வகமாக அதிலிழியவேண்டுகையாலே, ஸகலோபாயஸாதாரணமாயிருக்கை. இத்தாலோரிடத்திலும் இவ்வநுமதிக்கு அதிகாரிவிசேஷணத்வமொழிய, பலஸாதநத்வமில்லாமை காட்டப்பட்டது. (சைதந்யகார்யமாகை)யாவது ரக்ஷ்யத்வம் சேதநாசேதநஸாதாரணமாயிருக்கச்செய்தே, ஜ்ஞாநசூந்யமாகையாலே அவ்வாகாரத்தை அறிகைக்கு யோக்யமல்லாத வசேதநம்போலன்றிக்கே, ஜ்ஞாநாச்ரயபூதனாகையாலே அத்தை யறிகைக்கு யோக்யனாயிருக்கிற இச்சேதநன்பக்கலுண்டானவநுமதி, இவனுடைய ஜ்ஞாநகார்யமாய்க்கொண்டு வந்ததாயிருக்கை; இத்தாலிவ்வநுமதி சேதநனுடைய ஸ்வரூபத்தைப்பற்ற வந்ததாகையாலே, ஸாதநகோடியிலந்வயியாதென்றபடி. (ப்ராப்திதசையிலுமநுவர்திக்கை)யாவது உபாயதசையளவிலன்றிக்கே உபேயதசையிலும், அவன் வ்யாமோஹாநுகுணமாகக் கொள்ளும் விநியோகவிசேஷங்களில், திருவுள்ளமானபடி கொண்டருளவேணுமென்னுமநுமதி இவனுக்கு நடந்துசெல்லுகை. இத்தால் ஸாதனமாகில் பலஸித்தியளவிலே மீளவேணுமென்று கருத்து. (ஸ்வரூபாதிரேகியல்லாமை)யாவது, சேஷிசெய்யுமதுக்குடன்பட்டிருக்கை சேஷத்வபாரதந்த்ர்யகார்யமாகையாலே, இவ்வநுமதி ஸ்வரூபத்துக்குப்புறம்பன்றிக்கே

ஆ—வேஷாநுமதியை, பொதுவன்றியே ஸ்வதந்த்ரமாய் சேதநதர்மமல்லாததாய் ஸ்வதசையளவிலே நிற்பதாய் ஸ்வரூபாதிரேகியான ஸாதநகோடியிலே ஒதுக்கவொண்ணாது. (இதுதான்) என்றது ப்ரபத்தியென்று கொள்ளும்போது, ஸக்ருத்க்ருதையான வித்தை, தசாந்தரத்திலநுவர்திக்குமென்னக்கூடாது.

௬௫. இவன் தன்னுடைய அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநமின்னதென்கிறார் மேல், பகவச்சேஷமான ஜ்ஞாதாநந்தைகரூபையான (அசித்வ்யாவ்ருத்திக்கு) அநுரூபமான (ப்ரயோஜநம்), பரமசேதநமான ஸித்தோபாயத்தின்பக்கல் "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமேதந்தாய்" என்கிற (உபகாரஸ்ம்ருதியும்), நித்யசேஷிவிஷயநித்ய கைங்கர்யமாகிற (உபேயத்தில்) "உகந்து பணிசெய்து" என்கிற(உகப்பும்) ஸ்ம்ருதிப்ரீதியோக்யதையற்ற அசித்திற்காட்டில் தநுபயயோக்யதையிறே இவன் சேதநனானவற்றால் பெற்றபலம்.

௬௬. ஈத்ருசனான இவனுக்கு ப்ராப்த்யுபாயமாயிருவது இன்னதுஎன்கிறார்மேல், ("உன் மனத்தால்") இத்யாதியால். "குவளையங்கண்ணி" என்கிறஜ்ஞாநமும், "கொள்ளியம்பாவை" என்கிற பாரதந்த்ர்யமும், "நின்

---

௬௫. அசித்வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம், உபாயத்திலுபகாரஸ்ம்ருதியும் உபேயத்திலுகப்பும்.

௬௬. "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்" என்கிறபடியே ப்ராப்திக்குபாயம் அவன்னினைவு.

ஜீ.—ஸ்வரூபமாயிருக்கை; இத்தால் ஸாதநமாகில் ஸ்வரூபாதிரேகியாயிருக்கவேணுமென்றுகருத்து. (அசித்வ்யாவ்ருத்தவேஷ)மாவது ஜ்ஞாத்ருத்வத்தாலே ஜ்ஞாநசூந்யமானவசித்தில் வேறுபட்டிருக்கிற ஆத்மாவினுடைய ஆகாரம்; இவ்விடத்தில் அவ்வாகாரமாவது - ஜ்ஞாநகார்யமான அநுமதி; இத்தை (ஸாதநமாக்கவொண்ணாது) என்றது - இப்படி இதினுடைய அஸாதநத்வஹேதுக்களநேகமுண்டாகையால் இத்தை ஸாதநமாகக் கற்பிக்கப்போகாதென்றபடி. (அசித்வ்யாவ்ருத்திவேஷம்) என்று பாடமாகில், ஜ்ஞாநசூந்யமான வசித்திற்காட்டில் ஆத்மாவுக்குண்டான ஜ்ஞாத்ருத்வரூபவ்யாவ்ருத்தியின் வேஷமானவநுமதியை என்று சப்தார்த்தம்.

௬௫. ஆனால் இவ்வசித்வ்யாவ்ருத்திதனக்கொருப்ரயோஜநம் வேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார், (அசித்வ்யாவ்ருத்திக்கு) என்றுதுடங்கி. (உபாயத்திலுபகாரஸ்ழ்ருதி)யாவது "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும்மனமேதந்தாய்" என்கிறபடியே ஸித்தோபாயமானவெம்பெருமான் தனதிறததில் பண்ணினவுபகாரங்களை யநுஸந்திக்கை. (உபேயத்திலுகப்)பாவது- அவன் திருவடிகளில் தான் பண்ணுங்கைங்கர்யங்களில் "உகந்துபணிசெய்து" என்கிறவுகப்பும், அத்தாலவனுக்கு விளைகிற ப்ரீதியைக்கண்டு தனக்கு விளைகிற ப்ரீதியும்.

௬௬. இப்படி இவன்பக்கலுள்ளதொன்றுமுபாயமன்றாகில், இவனுக்கு தத்ப்ராப்த்யுபாயந்தானேதென்ன வருளிச்செய்கிறார், ("உன் மனத்தால்") என்றுதுடங்கி. அதாவது இத்தலையிலுள்ளதொன்றும் பேற்றுக்கு உபாயமல்லாமையாலே, "உன்மனத்தாலென்னினைந்திருந்தாய்"

ஆ.—தாள்நயந்த" என்கிற ஸ்வரூபாநுரூபபக்தியும், அங்கீகாரஹேதுவன்றியே இவற்றைப் பார்த்து கைவிடவோ, உன்னையேபார்த்து கைக்கொள்ளவோ, ஏது திருவுள்ளம் என்கிற திருமங்கையாழ்வார் திருவுள்ளக் கருத்தின்படியே, பரதந்த்ரனாய் ஸ்வம்மானவிவன் ஸ்வதந்த்ரனாய் ஸ்வாமியானவவனை ப்ராபிக்கைக்குபாயமாயறுவது, நினைத்தபடிசெய்து தலைக்கட்டவல்லனுமாய், ப்ராப்தனுமான அவனுடைய இவனை யுஜ்ஜீவிப்பிக்கவேணுமென்னும் சலனமற்ற (நினைவு).

சூஎ. ஆகில் இன்னாள்வரை யவனுக்கின்னினைவுண்டாய்த்தில்லையோ வென்ன வருளிச்செய்கிறார், (அதுதான்) இத்யாதியால். ப்ராப்த்யுபாயமாயற்றவவன்னினைவுதான், இவனவனைப்பிரிந்து திரிகிறவகாதிகாலமே பிடித்து (எப்போதுமுண்டு).

சூஅ. ஆகில் இன்னாள்வரை பலியாதொழிவானேன் என்ன வருளிச் செய்கிறார், (அது பலிப்பது) இத்யாதி. அநாதியைப்பிடித்துண்டான வவன் நினைவு இவனுக்கு ப்ராப்திஸாதநமாய் பலிப்பது, தன்னநுமதியளவாக தத்ப்ராப்திஸாதநமென்று ப்ரமிக்கிற இந்த அஜ்ஞசேதநனுடைய ப்ரதிபந்தகமான ஸ்வரக்ஷணநிமித்தமான நினைவு, அவன் நினைவே தஞ்சமென்னும்படி அவன்தன்னினைவாலே ஸ்வாஸகமாகவற்றதாகில்.

சூகூ. ப்ராப்தியிலிவன்னினைவு குலையவேணுமென்னுமிதுக்கு சிஷ்டவசநங் காட்டுகிறார், (அந்திமகாலம்) இத்யாதியால். அழகியமணவாளப் பெருமாள் பட்டருடைய வந்திமதசையிலே நஞ்சீயரெழுந்தருளி வினவி

சூஎ. அதுதானெப்போதுமுண்டு.

சூஅ. அது பலிப்பது இவன்னினைவு மாறினால்.

சூகூ. "அந்திமகாலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சமென் என்கிற நினைவு குலைகை" என்று ஜீயரருளிச்செய்வர்.

ஜீ.—என்று கைகழிந்தவற்றுக்கும் ஒருபோக்கடிபார்த்திருக்கக்கடவவுன் திருவுள்ளத்தால் நினைத்திருந்ததென் என்று, ஹிதைஷியானவவன்நினைவே வுபாயமென்று ஆழ்வாரநுஸந்தித்தபடியே, அவனைப் ப்ராபிக்கைக்குபாயம், ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் ப்ராப்தனாய் பரமதயாளுவாயிருக்கிறவவனுடைய, இச்சேதநோஜ்ஜீவநார்த்தமான நினைவென்றபடி.

சூஎ. அந்நினைவுதானவனுக்கு எப்போதுண்டாவதென்ன வருளிச் செய்கிறார், (அதுதானெப்போதுமுண்டு) என்று. (எப்போதும்)என்றது - இவன் "யாதானும்பற்றி நீங்கித்திரிகிறகாலத்தோடு இன்றோடு வாசியற ஸர்வகாலத்திலுமென்றபடி.

சூஅ. ஆனால் அதிந்நாள்வரை பலியாதிருப்பானேன் என்னவருளிச்செய்கிறார், (அது பலிப்பதிவன்னினைவுமாறினால்) என்று. அதாவது- அவன்னினைவு இவனுக்கு கார்யகரமாவது, இவனுடைய ஸ்வரக்ஷணசிந்தை மாறினகாலத்திலென்றபடி.

சூகூ. இவ்வர்த்தத்தினுடைய ஆப்தயர்த்தமாக நஞ்சீயர் வார்த்தையை யருளிச்செய்கிறார், (அந்திமகாலத்துக்கு) என்றுதுடங்கி. அதாவது-நஞ்சீயர், தம்முடைய ஸ்ரீபாதத்திலேயுள்ளாரொரு ஸ்ரீவைஷ்ணவரை

ஆ.—யருள, அவரும் ஜீயா அந்திமகாலத்துக்குத் தஞ்சமேதென்ன, இப்போது தஞ்சமென் என்கிறநினைவு குலைகையே காணும் தஞ்சம்; "అహం స్మరామి" "அஹம் ஸ்மராமி" என்றதசையில் அவன் வாய்புகுசோறுகாணுமென்று ஜீயருளிச்செய்தாரென்று இவ்வர்த்தத்தை ஸ்த்ரீகரிக்கிறார். ஆக இவன் பேறிழவு தன்னுதாம்படியான பந்தவிசேஷமுள்ள ஸ்வதந்த்ரஸ்வாமியான அவன்னினைவே பேற்றுக்குடலாய், தத்ப்ரதிபந்தகமான இவன்னினைவிழவுக்குடலாய்விடுமென்றதாய்த்து.

எ௦. இப்படி ப்ராப்திப்ரதிபந்தகமான நினைவுடைய இவனுக்கு ப்ராப்த்ருத்வமில்லை, ப்ராப்தாவல்லாதவனுக்கு ப்ராபகாபேக்ஷையில்லை, ப்ராபகமில்லாதவனுக்கு ப்ராப்தியால் வரும் ப்ரீதிப்ராப்தியுமில்லை, ஆனபின்பிவ்விடத்திலே ப்ராப்த்ருத்வாதிகளுடையவனாரென்ன, அவையெல்லாமவனே யென்கிறார், (ப்ராப்தாவும்)இத்யாதியால். தன் ஸ்வத்தை ப்ராப்தியுடன் ப்ராபிக்குமவனுந்தான், இவனை ப்ராபிக்குமிடத்து ப்ராபகனும், இவனை ப்ராபித்துகப்பானும், ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனாய் சேஷியானவவனே; அவதாரரூபேணவும் ஸ்வஸங்கல்பரூபேணவும் ப்ரதாநபலித்வரூபேணவும் உக்தத்ரயமுந்தானேயாகையால், ஈச்வரலாபம்ஆத்மாவதன்றியே ஆத்மலாபம் ஈச்வரனதென்னுமுபயஸம்பந்தவிசேஷார்த்தம் சொல்லப்பட்டது.— அன்றியே பராதீநப்ராப்யத்வமடியாக (ப்ராப்தாவும்) அவனேயென்று ஸமாநாதிகரித்து, இவனுடைய ப்ராப்திகர்த்ருத்வம் மூச்சறுத்தும், ஸ்வதந்த்ரப்ராபகத்வமடியாக (ப்ராபகனும்) அவனே யென்று

எ௦. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே.

ஜீ.—நோவறிகைக்காகச் சென்றெழுந்தருளியிருக்கிறவளவிலே, அந்த ஸ்ரீவைஷ்ணவர், "அடியேனுக்கந்திமகாலத்துக்குத் தஞ்சமாயிருப்பதொன்றருளிச்செய்யவேணும்" என்ன, "அந்திமகாலத்துக்குத் தஞ்சம், நமக்கிப்போது தஞ்சமென் என்கிற தன்னுடைய ஸ்வரக்ஷணசிந்தை குலைகைகாணும்" என்றருளிச்செய்தவார்த்தை. ஆகையாலே, ஈச்வரனிவ்வாத்மோஜ்ஜீவநத்துக்குறுப்பாகப்பண்ணும் சிந்தனை பலிப்பது இவனுடைய ஸ்வரக்ஷணசிந்தை மாறினாலென்றதாய்த்து.

எ௦. ப்ராபகன் ஈச்வரனானாலும், ப்ராப்தாவும் ப்ராப்திக்குகப்பானுமிவனன்றோ, ஆனபின்பிவன்னினைவை இப்படி நோக்கத்துடைக்கலாமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ராப்தாவும்)என்றுதுடங்கி.—அன்றிக்கே இச்சேதநன்கையிலுள்ளவற்றில்உபாயத்வகந்தமறத்துடைத்து, ஈச்வரனேயுபாயமென்று நிஷ்கர்ஷித்தபோதே, ப்ராப்த்ருத்வமும் ப்ராப்தியில் வருமுகப்பும்இவனதன்றிக்கே, உபாயபூதனான ஈச்வரனதேயாய் பலித்துவிடுகை; ஆகையால் (ப்ராப்தாவும்ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே) என்று நிகமித்தருளுகிறாராகவுமாம். (ப்ராப்தா) அவனாகையாவது-"స్వత్వ మాత్మని సఞ్జాతం స్వామిత్వం బ్రహ్మణి స్థితమ్" "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ராஹ்மணிஸ்த்திதம்"என்கிற ஸ்வதஸ்ஸித்தமான ஸ்வஸ்வாமித்வஸம்பந்தமடியாக, உடைமையைப் ப்ராபிக்குமுடையவனைப் போலே இவ்வாத்மாவைப் ப்ராபிப்பான் தானாயிருக்கை. (ப்ராபகன்)அவனாகையாவது - தானிவனைப் ப்ராபிக்குமிடத்தில் ப்ராப்திக்குமுபாயமும், ஸர்வஜ்ஞத்வஸர்வசக்தித்வஸத்யஸங்கல்பத்வாதிகுணவிசிஷ்டனாய் நிரங்குசஸ்வதந்த்ரனான தானாயிருக்கை. (ப்ராப்திக்குகப்பா)னவனாகையாவது-ஸ்வத்தினுடைய லாபத்திலே தத்போக்தாவான ஸ்வாமிஹ்ருஷ்டனுமாப்போலே, இவனைப்

ஆ- ஸ்வயத்நத்தில் மூச்சறுத்தும், பராதீனப்ரயோஜநபோக்த்ருத்வ ரூப போக்யத்வமடியாக (உகப்பானுமவனே) என்று ஸ்வார்த்தபோக்த்ருத்வம் மூச்சறுத்தும், இப்படியிவனுடைய பரப்ரேரிதத்வ பரைகரக்ஷ்யத்வ பரைகார்த்தத்வரூப பாரதந்த்ர்ய சேஷத்வ ஸித்தியைச் சொல்லுகிறதென்று மருளிச்செய்வர்.

எக. உக்தார்த்த விசேஷங்களுக்கு ப்ரயோஜநங்களையருளிச் செய்கிறார், (ஸ்வயத்ந) இத்யாதியால். (ப்ராப்தாவும் ப்ராபகனும்)அவனே என்கிற (ஸ்வயத்நநிவ்ருத்தி), பரேச்சாதீந ஸ்வரூபஸ்த்திதியுடையனாகையாகிற (பாரதந்த்ர்ய)த்தின் ஸ்வஸத்தாஸ்த்திதிரூப(பலம்);(ப்ராப்திக்குகப்பானுமவனே) என்கிற (ஸ்வப்ரயோஜநநிவ்ருத்தி),. பரைக ப்ரயோஜநத்வமாகிற (சேஷத்வ)த்தின் ஸ்வரூப ஸித்தித்திரூப(பலம்); பாரதந்த்ர்யசேஷத்வங்கள் ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜநத்வங்கள் நடையாடில், கிட்டந்தின்னமாணிக்யம்போலே தன்னுரு கெடுத்து வைத்துக்கொண்டு, அவை நிவ்ருத்தங்களாகவே, தெளியக்கடைந்த மாணிக்யம்போலே பாளம் செய்யுமிறே. தத்த்வய நிவ்ருத்தியும் தததுபயபலமாயிருக்கு மென்றதாய்த்து

எஉ. இந்த பாரதந்த்ர்யஜ்ஞாநம் பிறந்து பின்னுமிவனுக்குண்டாம் ஸ்வயத்நங்களில் ஸ்வப்ரயோஜநமில்லை என்கிறார்மேல்,(பரப்ரயோஜநம்)

எக. ஸ்வயத்நநிவ்ருத்தி பாரதந்த்ர்யபலம்; ஸ்வப்ரயோஜநநிவ்ருத்தி சேஷத்வபலம்

எஉ. பரப்யோஜநப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம்;

ஜீ- ப்ராபித்தால், ப்ராபிக்கப்பெற்றோமே! என்றுகப்பானும், இவ்வாத்மாவுக்கு நித்யபோக்தாவானதானாயிருக்கை. இவைமூன்றும் (அவனே) என்கிற அவதாரணத்தாலே இவற்றிலிவனோடந்வயிப்பதொன்று மில்லை யென்கை, இதில் (ப்ராப்தாவும் ப்ராபகனும்)அவனேயென்கையாலே, இவனுக்கு ஸ்வயத்நத்தில் அந்வயமில்லையென்னுமிடமும், (ப்ராப்திக்குகப்பானுமவனே) என்கையாலே, ஸ்வப்ரயோஜநத்திலந்வயமில்லை யென்னுமிடமும் ஸித்தமாய்த்து

எக. ஆனால், ஜ்ஞாத்ருத்வகார்யமான கர்த்ருத்வபோக்த்ருத்வங்களை உடையவனாகையாலே, ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜநங்களுக்கர்ஹனாயிருக்க, இவை யிரண்டினுடையவும் நிவ்ருத்தியிவனுக்கெவ்வழியாலே வருகிறதென்கிற சங்கையிலே அத்தையருளிச்செய்கிறார், (ஸ்வயத்நநிவ்ருத்தி) இத்யாதி வாக்யத்வயத்தாலே, அதாவது- ஜ்ஞாத்ருத்வநிபந்தநமான கர்த்ருத்வமுண்டாயிருக்கச் செய்தே பகவத்ப்ராப்திக்குத் தானொரு யத்நம்பண்ணாமலிருக்கையாகிற இந்த ஸ்வயத்நநிவ்ருத்தி, “பராதீந ஸ்வரூபஸ்த்தித்யாதிமத்த்வமாகிற பாரதந்த்ர்யத்தின் கார்யம்; அப்படியே, போக்த்ருத்வ முண்டாயிருக்கச்செய்தே, அத்தலையை ரஸிப்பிக்குமதொழிய தனக்கென்ன ஒன்றில் ரஸமின்றிக்கேயிருக்கையாகிற ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி, பராதிசயாதாயகத்வமே வடிவாயிருக்கையாகிற சேஷத்வத்தின் கார்யம். இத்தால் - பாரதந்த்ர்ய சேஷத்வங்களிரண்டும் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலே, அவ்வாகாரங்களை யறியவே இவையிரண்டும் தன்னடையேவருமென்றதாய்த்து.

எஉ. ஆனால் இப்படி ஸ்வயத்ந ஸ்வப்ரயோஜநங்களில் அந்வயமற்றிருக்குமாகில். இவனுடைய ப்ரயத்நத்துக்கும் சைதந்யத்துக்கும் ப்ரயோஜந

ஆ.இத்யாதியால் இந்த நிவ்ருத்த்யதிகாரிக்கு அவச்யகரணீயங்களான ஊர்த்த்வபுண்ட்ர தாரண த்வயோச்சாரண மாலாகரண தீபாரோபணாதி சிஷ்டா சாரரூபஸ்வப்ரயத்நத்துக்குப்பலம், ப்ரயத்ந விஷயபூதனுமாய் ப்ரேரகனுமான பரனுக்கு ப்ரீதிவர்த்தகமாய்க்கொண்டு தத்ப்ரயோஜநமான ப்ரவ்ருத்தி விசேஷ மாயிருக்குமத்தனை. அது ஸ்வப்ரயோஜந ப்ரவ்ருத்தியாகாமையால் பாரதந் த்ர்ய விரோதியாகாது.

சேதநனானவிவன் சைதந்யபலமின்னதென்கிறார்மேல், (தத்விஷயம்) இத்யாதி, தான்செய்யும் சேஷவ்ருத்தியைக்கண்டு அத்யந்த ப்ரீதனான வந்த விலக்ஷணசேஷியை விஷயீகரித்து ப்ராப்தப்ரீதியுடையனாகை, இவன் சேதந னாகையால் பெற்றபலம். அன்றியே ததநுபவத்திலுண்டானப்ரீதி இவனுக்கு மன்றியே அவனுக்கேவிஷயமாயிருக்கை சைதந்ய பலமென்றருளிச்செய்வர்.

இவனுக்குண்டாம் ப்ரீதி அவனுக்கேயாகவேண்டுவானென் என்ன, இவனுக்கு சேஷத்வமே அந்தரங்க நிரூபகமாகையாலென்கிறார், (அஹமர்த் தம்) இத்யாதியால். ப்ரத்யக்காய்க்கொண்டு ஸ்வயம்ப்ரகாசமாய் அஹம் சப்தார்த்தமான ஸ்வருபத்துக்கு, ப்ரகாசத்வாநுகூலத்வா

தத்விஷயப்ரீதி சைதந்ய பலம்.
எங.அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள்
தடஸ்த்தமென்னும்படி தாஸ்யமிறே

ஜீ - மென்னென்ன வருளிச்செய்கிறார். (பரப்ரயோஜந) இத்யாதி வாக்யத்வயத் தாலே, அதாவது "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" "வழுவிலா அடிமை செய்ய வேண்டும்" "உனக்கே நாமாட்செய்வோம்" என்கிறபடியே பரனுக்கு ப்ரயோஜநமாகப் பண் ணும் கைங்கர்ய ரூபப்ரவ்ருத்தி, இவனுடைய ப்ரவ்ருத்தயுத்யோகரூபமான ப்ரயத்நத்துக்குப் ப்ரயோஜநம்"நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்கிற படியே அத்தலையிலுகப்புக்குறுப்பாகத் தான் பண்ணுகிற கைங்கர்யத்தாலே அத்யந்தஹ்ருஷ்டனாயிருக்கிறவந்தபரனை விஷயமாகவுடைத்தான ப்ரீதி, இவனுடைய அசித்வ்யாவ்ருத்திரூபமான சைதந்யத்துக்குப் ப்ரயோஜந மென் கை. "படியாய்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்னக்கடவதிறே. இத்தால் பாரதந்த்ர்யசேஷத்வங்களாலே பலித்த ஸ்வயத்நஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி களையுடையனான சேதநனுடைய ப்ரயத்ந சைதந்யங்களுக்கு, பாரதந்த்ர்ய சேஷத்வாநுகுணமாக ப்ரயோஜநங்கள் சொல்லிற்றாய்த்து.

எங. சேஷத்வாதிகளும் ஜ்ஞாத்ருத்வாதிகளும் ஆத்மதர்மங்களா யிருக்கச் செய்தே, சேஷத்வாதிகளைப் ப்ரதாநமாக்கி ஜ்ஞாத்ருத்வாதிகளை ததநுகுணமாக யோஜிக்கைக்கு நியாமகமேது, மற்றைப்படி தானானாலோ வென்ன வருளிச்செய்கிறார், (அஹமர்த்தத்துக்கு) என்று துடங்கி, (அஹ மர்த்த) மாவது ப்ரத்யக்த்வேநாஹம்புத்திவ்யவஹாரார்ஹமானவாத்ம வஸ்து(ஜ்ஞாநாநந்தங்க) ளாவன- தத்கதமான ப்ரகாசத்வாநுகூலத்வங்கள்: "ஜ்ஞாநாநந்தமயஸ்த்வாத்மா" "ஸ்வரூபாமணுமாத்ரம் ஸ்யாத் ஜ்ஞாநா

ஆ.—காரத்தையிட்டுப் பிரித்து வ்யவஹரிக்கும் ஸ்வநிரூபகஜ்ஞாநாநந்தங்க
ளும் பஹிரங்கமாய்க்கொண்டு புறவிதழென்னும்படி, பராதிசயகரத்வமே வே
ஷமான தாஸ்யமேயிறே, தன்னைப் புறவிதழாக்கும் ஸ்வநிரூபகாந்தரமற்று,
அந்தரங்கமாய்க்கொண்டு ஸ்வரூபத்தையுள்ளபடி நிரூபிக்கும் நிரூபகவிசே
ஷம். நித்யவிசேஷ்யசேஷிக்கு நித்யவிசேஷணமான சேஷமாயிறே யிவ்
வஹமர்த்தஸத்பாவமிருப்பது; இதரவ்யாவர்த்தகமாய்வருமவையிறே மற்
றுள்ளவை. இப்படி சேஷத்வஜ்ஞாநமே நிரூபகமும் நிரூப்யமுமான ஸ்வரூ
பத்துக்கு, ஸ்வப்ரயோஜநாந்வயம் கூடாதென்றபடி.

௭௪. லோகத்தில் வந்தேறியாயிருப்பதன்றோ தாஸ்யம் என்ன, அன்
றென்கிறார்; ஸ்வரூபநிரூபகமான விந்த தாஸ்யந்தான் ஸ்வதஸ்ஸித்தமாகை

அந்தரங்கநிரூபகம்.

௭௪. இதுதான் வந்தேறியன்று.

ஜ்.—நந்தைகலக்ஷணம்" என்றிவற்றையிட்டிறே வஸ்துவை நிரூபிப்பது;
(தடஸ்த்தமென்னும்படி) என்றது பஹிரங்கநிரூபகதயா புறவிதழென்னும்
படியென்றபடி; (தாஸ்ய) மாவது சேஷத்வம். இது (அந்தரங்கநிரூபக)மா
கையாவது, பகவத்ஸ்வரூபத்துக்கு ப்ரகாரதயா சேஷமாய்க்கொண்டு
தன் ஸத்தையாம்படி இருக்கும் வஸ்துவாகையாலே, ப்ரதமம் சேஷத்வத்
தையிட்டு நிரூபித்துக்கொண்ட மற்றுள்ள ஆகாரங்களையிட்டு நிரூபிக்க
வேண்டும்படியிருக்கை. இத்தால், (நிரூபக)மாகையாவது, வஸ்துவை
வஸ்த்வந்தரத்திற்காட்டில் வ்யாவர்த்திக்குமதாகையாலே, தாஸ்யம்
ஈச்வரவ்யாவர்த்தகமாய், ஜ்ஞாநாநந்தங்கள் அசித்வ்யாவர்த்தகங்களா
யிருக்கும்; இப்படி நிரூபகத்வயமும் வஸ்துவுக்கபேக்ஷிதமாயிருக்கச்செய்
தே, பகவத்ப்ரகாரதயா லப்தஸத்தாகமான வஸ்துவுக்கு, அசித்திற்கா
ட்டிலுண்டானவாசியை யறிவிக்கிறமாத்ரமான ஜ்ஞாநாநந்தங்கள் புறவித
ழாம்படி ப்ரகாரத்வப்ரயுக்தமான சேஷத்வமே அந்தரங்கநிரூபகமாயிரு
க்குமென்றதாய்த்து. (இறே) என்றிவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி.
ப்ரதமம் சேஷத்வத்தையிட்டு வஸ்துவை நிரூபித்துக்கொண்டு, பின்னை
ஜ்ஞாநாநந்தலக்ஷணமுமாய் ஜ்ஞாநகுணகமுமாய் அசித்வ்யாவ்ருத்தமு
மாயிருக்குமென்னுமிடத்தை த்ருதீயபதத்தாலே நிரூபிக்கிற ப்ரணவமும்,
ஸமஸ்தவஸ்துக்களும் ஸர்வேச்வரனுக்கு ப்ரகாரமென்னுமத்தை ப்ர
பாதிக்கிற நாராயணபதமும், முதலானவை இதில் ப்ரமாணம்; "దాసభూ-
తాస్స్వతస్సర్వే హ్యాత్మానః పరమాత్మనః । నాన్యథా లక్షణం తేషాం బన్ధే మోక్షే తథైవ చ"
"தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந:. பரமாத்மந: । நாந்யதா
லக்ஷணம் தேஷாம் பந்தே மோக்ஷே ததைவ ச" இத்யாதிகளுமுண்டிறே.
"அடியேனுள்ளான்" என்றாரிறேயாழ்வார். திருக்கோட்டியூர்நம்பி
ஸ்ரீபாதத்திலே ஆழ்வானாறுமாஸம் ஸேவித்துநின்று மஹாநிதியாகப்பெ
ற்றவர்த்தமிறேயிது. இப்படி சேஷத்வம் அந்தரங்கநிரூபகமாகையாலே
நிரூபிதஸ்வரூபவிசேஷங்களான ஜ்ஞாத்ருத்வாதிகளையே ததநுகுணமாக
யோஜிக்கவேணுமென்று கருத்து.

௭௪. இது ஸ்வரூபநிரூபகமாகில், ஆத்மாவுள்ளவன்றே தொடங்கி
யுண்டாய்ப்போரவேண்டாவோ, இதுக்கு முன்பின்றிக்கே யிப்போதுண்டா
கையாலும், லோகத்திலிதுதான் ஔபாதிகமாய்நடக்கக்காண்கையாலும்,
தாஸ்யமாத்மாவுக்கு வந்தேறியன்றோவென்ன வருளிச்செய்கிறார் (இது
தான் வந்தேறியன்று) என்று. (இதுதான்) என்று ப்ரக்ருதமான தாஸ்
யத்தைப் பராமர்சிக்கிறது; (வந்தேறி) யாவது ஆகந்துகம்; (அன்று)

ஆ.—யாலே வந்தேறியன்று, "ఆత్మదాస్యం హరేస్స్వామ్యం స్వభావం చ సదా స్మర" "ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர" "நானுமுனக்குப் பழவடியே"னிறே.

எரு. ஆகில் வந்தேறியாய்ப்போவதேதென்ன, பகவத்பாரதந்த்ர்ய விரோதியான ஸ்வ(ஸ்வாதந்த்ர்யமும்)பகவச்சேஷத்வவிரோதியான(அந்யசேஷத்வ)மாய்த்து ஆகந்துகமாய்க்கொண்டு பற்றிக் கழியுண்ணுமதென்கிறார். ஸத்தாப்ரயுக்தம் நித்யஸித்தம், உபாதிப்ரயுக்தம் ஆகந்துகம்.

எசு. இந்த சேஷத்வப்ரகாசவிரோதியாய்ப் போந்ததென், என்ன, ஸாமாந்யசேஷத்வஸத்பாவவிரோதியாயிருக்கும் ஸ்வஸ்வாதந்த்ர்யம் என்கிறார்.

அந்த ஸ்வாதந்த்ர்யம்போய் சேஷத்வத்துக்கிசைந்தபின் பகவச்சேஷத்வப்ரகாசவிரோதியாயிருப்பதேதென்ன, நிருபாதிகசேஷிக்கு நிருபாதிகசேஷமாகையாகிற தச்சேஷத்வத்தை ப்ரகாசிக்கவொட்டாமல் மறைக்கும் ப்ரபலவிரோதி, மாதாபித்ருதேவதாந்தரமாகிற ததிதரசேஷத்வ ப்ரதீதியென்கிறார். (ஸ்வாதந்த்ர்ய)ாந்ய (சேஷத்வ)ங்கள் அயதாசேஷத்வ ப்ரதீதி யதாவஸ்த்திதசேஷத்வப்ரகாசத்துக்கும் நிரோதகங்கள்; இந்த ஸ்வாதந்த்ர்யம் குலையவே அயதாசேஷத்வப்ரமத்திலிசைவுபிறக்கும், அந்த ப்ரமம் குலையவே யதாசேஷத்வப்ரகாசமுண்டாம்.

எரு. ஸ்வாதந்த்ர்யமும் அந்யசேஷத்வமும் வந்தேறி.

எசு. சேஷத்வவிரோதி ஸ்வாதந்த்ர்யம்; தச்சேஷத்வ விரோதி ததிதரசேஷத்வம்.

ஜீ.—என்கையாலே ஸ்வாபாவிகமென்றபடி. "స్వోజ్జీవేచ్ఛా యది తే స్వసత్తాయాం స్పృహా యది। ఆత్మదాస్యం హరేస్స్వామ్యం స్వభావం చ సదా స్మర" "ஸ்வோஜ்ஜீவேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி। ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர" "நானுமுனக்குப்பழவடியேன்" என்னக்கடவதிறே.

எரு. ஆனால் வந்தேறியாக விவக்ஷிதங்கள் தானெவையென்ன, இதுக்கு விரோதிகளானவை யென்றருளிச்செய்கிறார், (ஸ்வாதந்த்ர்யமும்) என்று துடங்கி. (ஸ்வாதந்த்ர்ய)மாவது - நானெனக்குரியனென்றிருக்கை; (அந்யசேஷத்வ) மாவது பகவதந்யவிஷயங்களிலே தொண்டுபட்டிருக்கை; இவற்றை (வந்தேறி) என்கிறது - இவனுடைய அவித்யாதிகளடியாக வந்தவையாகையாலே.

எசு. இவை இதுக்கு விரோதிகளானமையை உபபாதிக்கிறார் மேல் (சேஷத்வவிரோதி) என்று துடங்கி. (சேஷத்வவிரோதி ஸ்வாதந்த்ர்யம்) என்றது - நானெனக்குரியேனென்றிருக்குமளவில், ஒருவிஷயத்திலும் சேஷத்வமில்லாமையாலே ஸ்வாதந்த்ர்யம் சேஷத்வத்தையுதிக்கவொட்டாதென்றபடி.

(தச்சேஷத்வ விரோதி ததிதரசேஷத்வம்) என்றது - ஸ்வாதந்த்ர்யம் குலைந்து சேஷத்வத்துக்கிசைந்தாலும், பகவத்வ்யதிரிக்தவிஷயங்களிலே ஒன்றுக்குத் தன்னை சேஷமென்றிருக்குமது, நிருபாதிகசேஷியானவவன்பக்கல் சேஷத்வத்தைத் தலையெடுக்கவொட்டாதென்றபடி.

ஆ.—எஎ. இப்படி பகவதேகசேஷத்வமேவடிவான ஸ்வரூபத்துக்கு, ஆகந்துகமாலிந்யமறவே சேஷத்வமே நித்யநிரூபகம் என்கிறார், (அஹங்காரம்) இத்யாதியால். ப்ரக்ருதிஸம்பந்தநிபந்தநமான தேஹாத்மாபிமாநம் ஸ்வஸ்வாதந்த்ர்யாபிமாநம்என்கிற(அஹங்காரமாகிற) ஸ்வரூபப்ரகாசதிரோதாயகமாய்க்கொண்டு வந்தேறியான (ஆர்ப்பை) ஆசார்யன் ஜ்ஞாநக்கையாலே பற்றறத் (துடைத்தால்) சேஷத்வமேஸ்வரூபமான நிர்மலாத்மாவுக்கு, தேவத்வமநுஷ்யத்வாதிகள்போலழியுமதன்றிக்கே, ஸம்ஸாரதசையோடு மோக்ஷதசையோடு வாசியற ஒன்றாலும்(அழியாதபேர்), "குலதொல்டியேன்" "அடியானிவனென்று" "அடியவர்கள் தம்மடியான்" என்னுமதிறே; ஸ்வரூபத்தை மறைக்கும் அஹங்காரமாலிந்யமறவே, விளக்கினமாணிக்கக்கண்ணாடிபோல் நிர்மலசேஷத்வமே நிரூபகமாயிருக்கும்.

எஅ, எகூ. இப்படி பகவச்சேஷத்வமே ஸ்வரூபநித்யநிரூபகமென்று சிக்ஷித்த பரமைகாந்திக்கு, தேஹாநுபந்தியான (க்ராமகுலாதிகளால்

எஎ. அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால்
ஆத்மாவுக்கழியாதபேர் அடியானென்றிறே.
எஅ. க்ராமகுலாதிகளால் வரும்பேர் அநர்த்தஹேது.

ஜீ.—எஎ. (இதுதான் வந்தேறியன்று) என்றுதுடங்கி உபபாதித்த அர்த்தத்தை மூதலிக்கிறார் மேல், (அஹங்காரம்) என்றுதுடங்கி. அஹங்காரந்தான் தேஹாத்மாபிமாநரூபமாயும் ஸ்வாதந்த்ர்யரூபமாயும் இரண்டுவகைப்பட்டிறே யிருப்பது; அதில் இங்கு ஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது; (ஆர்ப்)பு என்கையாலே அதினுடைய திரோதாயகத்வமும் ஆகந்துகத்வமும் தோற்றுகிறது; அத்தை (துடை)க்கையாவது - ஸதாசார்யோபதேசாதிகளாலே ஸவாஸநமாகப் போக்குகை. (ஆத்மாவுக்கழியாத பேர்அடியான்) என்றது-ஔபாதிகமான ஜாதிவர்ணாச்ரமாதிகளாலே வந்தழிந்துபோம் நாமங்கள்போலன்றிக்கே, யாவதாத்மாநுவர்த்தியான நாமம் தாஸனென்னுமதென்றபடி; (இறே) என்றிவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தி; "దాసభూతా స్స్వతః" "தாஸபூதாஸ்ஸ்வதः" "ఆత్మదాస్యమ్" "ஆத்மதாஸ்யம்" இத்யாதிகளிவ்விடத்தில் விவக்ஷிதங்கள்; ஆகையால் ஸ்வாதந்த்ர்யாதிகள் ஔபாதிகம், தாஸ்யம் ஸ்வாபாவிகமென்னக் குறையில்லையென்று கருத்து.

எஅ. அதுவென், க்ராமகுலாதிகளால் வரும் வ்யபதேசமன்றோ நடந்து போருகிறது என்னவருளிச்செய்கிறார், (க்ராம) இத்யாதியால். அதாவது - க்ராமகுலாதிவ்யபதேசம் அஹங்காரஜநகமாகையாலே ஸ்வரூபஹாநிரூபாநர்த்தகரமென்றபடி; ஆகையாலவற்றாலிவன் வ்யபதேஷ்டவ்யனல்லனென்று கருத்து.

எகூ. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணங்காட்டுகிறார் மேல், ("ఏకాన్తీ వ్యపదేష్టవ్యః") ("ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யः") என்று. "ఏకాన్తీ వ్యపదేష్టవ్యో నైవ గ్రామకులాదిభిః। విష్ణునా వ్యపదేష్టవ్య స్తస్య సర్వం స ఏవ హి" "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபிः। விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ்தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி". இத்தால் பகவதேகபரனாயிருக்குமவன் க்ராமகுலாதிஸம்பந்தங்களையிட்டுச்சொல்லப்படுமவனல்லன், பகவத்ஸம்பந்தத்தையிட்டு சொல்லப்படுமவன்; அவனுக்கந்த க்ராமகுலாதிகளெல்லாம் பகவானேயிறே என்கிறது. (ப்ராப்தாவும்) இத்யாதி வாக்யத்திலே இச்சேதநனுடைய ஸ்வ

ஆ.—வரும்) வ்யபதேசம், சேஷத்வரூபஸ்வரூபஹாநியாகிறமஹாநர்த்தஹேதுவென்றருளிச்செய்து "ఏకాన్తీ వ్యపదేష్టవ్యో నైవ గ్రామకులాదిభిః । విష్ణునా వ్యపదేష్టవ్యస్తస్య సర్వం స ఏవ హి" "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபிः । விஷ்ணுநா வ்யபதேஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி" என்றதுக்கு ப்ரமாணோபாதாநம் பண்ணுகிறார்.

(ஆறு ப்ரகரணங்களில் இரண்டாமதான)

உபாயவைபவப்ரகரணம் முற்றிற்று.

௭௰௯. "ఏకాన్తీ వ్యపదేష్టవ్యః" "ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யः".

(ஆறு ப்ரகரணங்களில் இரண்டாமதான)

உபாயவைபவப்ரகரணம் முற்றிற்று.

ஜீ.—யத்நநிவ்ருத்த்யாதிகள் தோற்றினபடியாலே, இவற்றுக்கு நிதாநமின்னதென்றும், ஏவம்பூதனுடைய ப்ரயத்நசைதந்யப்ரயோஜநமும் சேஷத்வாதிப்ராதாந்யஹேது ஆத்மஸ்வரூபத்தினுடைய தாஸ்யாந்தரங்கநிரூபகத்வமென்றும், இப்படியிருக்கிறவிது ஸ்வாபாவிகம், ஏதத்விரோதிகள் ஔபாதிகமென்றும், தந்நிவ்ருத்தியிலாத்மாவுக்கு தாஸ்யமே நித்யநிரூபகமாயிருக்குமென்கையாலே இவ்வர்த்தத்தை ஸூசிப்பித்தும், க்ராமகுலாதிகளாலிவன் வ்யபதேஷ்டவ்யனல்லனென்றும், உக்தார்த்தத்தில் ப்ரமாணமும் சொல்லுகையாலே (ஸ்வயத்நநிவ்ருத்தி) இத்யாதிவாக்யம் துடங்கி யிவ்வளவும் ப்ராஸங்கிகம்.

ஆக இப்ப்ரகரணத்தால் ப்ரபத்திக்கு தேசாதிநியமங்களில்லை, விஷயநியமமேயுள்ளதென்னுமிடமும், அவ்விஷயந்தானின்னதென்னுமிடமும், அவ்விஷயத்தினுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகளுடைய வைலக்ஷண்யமும், அதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகளுடைய த்ரைவித்யமும், ப்ரபத்தியை யுபாயமாக்கினால் வருமவத்யமும், ப்ரபத்திதன்னுடைய ஸ்வரூபாதிகளும், ப்ரபத்தவ்யனே வுபாயமென்னுமிடமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

(ஆறு ப்ரகரணங்களில் இரண்டாமதான)

உபாயவைபவப்ரகரணம் முற்றிற்று.

அதிகாரிநிஷ்டாப்ரகரணம்.

ஆ.—அ௦. ஆகஇப்படி அஹங்காரகர்ப்பமான வ்யபதேசமகர்த்தஹேது, அதற்ற சேஷத்வவ்யபதேசமுஜ்ஜீவகஹேது, இந்தபகவச்சேஷத்வாந்ய சேஷத்வவிரோதிகளான அந்யசேஷத்வஸ்வஸ்வாதந்த்ர்யங்கள் ஆகந்துகங்கள், பகவச்சேஷத்வமே அந்தரங்கநித்யநிரூபகம், சேஷபூததசைதந்ய தத்கார்யபலம் தத்விஷயப்ரீதிப்ரயோஜநங்கள், ஸ்வப்ரயோஜநஸ்வயத்ந நிவ்ருத்தி தச்சேஷத்வபாரதந்த்ர்யபலம், சேஷத்வபாரதந்த்ர்யவஸ்துப்ராப்திப்ரீதிகர்த்ருத்வங்கள் சேஷியான ஸ்வதந்த்ரஸ்வாமியது, அத ஏவ ப்ராப்திதசையில் நினைவுமவனது, ப்ராப்த்யுபாயமாயிருப்பதும்அவன்னினைவு, அது அநாதிஸித்தமாயிருக்க இவன் ஸ்வார்த்தநினைவுமாறினபோது உபாயமாமென்று ஸிம்ஹாவலோகநந்யாயேந ப்ராஸங்கிகமானவர்த்தத்தை தலைக்கட்டி, ப்ரஸ்துதமான வுபாயோபேயங்களினதிகாரிகளிருக்கும்படியையருளிச்செய்கிறார்மேல், (உபாயத்தில் [துக்கு]) இத்யாதியால். ஸ்வதந்த்ரனே ஸித்தோபாயமென்கிறவத்யவஸாயரூபமானவுபாயத்தில், “తత్ స్య సదృశం భవేత్” “தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்” என்று ஸ்வசக்தியைவிட்டு பாரதந்த்ர்யத்தைநோக்கி, லங்காபவநத்திலேபெருமாள்வரவுபார்த்திருந்த (பிராட்டியை)ப்போலே, உபாயாதிகாரியும் ஸ்வரக்ஷணார்த்தவ்யாபாரசக்தியைவிட்டு, ஸ்வயத்நாநர்ஹஸ்வரூபத்தையே நோக்கி துஸ்ஸஹமானஸம்ஸாரத்திலே ஸ்வதந்த்ரனுடைய அங்கீகாரகாலத்தைப்பார்த்திருக்கவேணும்; ஸபாமத்த்யே ஸ்த்ரீத்வப்ரயுக்தலஜ்ஜையைவிட்டு, பர்த்தாக்கள்ரக்ஷகரென்னும் ப்ரதிபத்தியையும்விட்டு, க்ருஷ்ணனே ஆபத்ரக்ஷகனென்றத்யவஸித்து, சரணாகதையாய்நின்ற (த்ரௌபதியை)ப்போலே, லௌகிகஸந்நிதியில் தத்ஸங்க்ரஹப்ரவ்ருத்தித்யாகலஜ்ஜையைவிட்டு, உபாயாந்தரங்களிலுபாயத்வப்ரதிபத்தியைவிட்டு, ஸுலபஸ்வாமியே உபாயமென்றத்யவஸித்துக்கொண்டு ப்ரபந்நனாயிருக்கவேணும்; ஒருசேவகன் ஒருசேவகன்வாசலிலே நாயை

அதிகாரிநிஷ்டாப்ரகரணம்.

அ௦. உபாயத்துக்கு, பிராட்டியையும் த்ரௌபதியையும் திருக்கண்ணமங்கையாண்டானையும்போலே யிருக்கவேணும்; உபேயத்துக்கு, இளையபெருமாளையும்

அதிகாரிநிஷ்டாப்ரகரணம்.

ஜீ.—அ௦. அநந்தரம் அதிகாரிசோதநம்பண்ணுகிறது:—உபாயமுபேயார்த்தமாகையாலும், (உபேயத்திலுகப்பும்) என்றும், (பரப்ரயோஜநப்ரவ்ருத்தி ப்ரயத்நபலம், தத்விஷயப்ரீதி சைதந்யபலம்) என்றும் உபேயாதிகாரமும் கீழ் ப்ரஸக்தமாகையாலும், த்வயநிஷ்டனான வதிகாரிக்கு உபயமுமபேக்ஷிதமாகையாலும், உபாயோபேயாதிகாரங்களில் இச்சேதநன் இன்னவின்னபடி யிருக்கவேணுமென்னுமத்தை தத்தந்நிஷ்டரை

ஆ.—யடிக்க அதுபொருமல் அவனைத்ரிவர, இருவரும் பொருதுபட்டுக்கிடக்கிறபடியைக்கண்டு, ஒருக்ஷத்ரசேதநன் தன்னபிமாநத்திலே யொதுங்கினதென்னுமிவ்வளவுக்காக தன்னையழியமாறினபடி கண்டால், பரமசேதநன் திருவாசலிலே யொதுங்கினால் அவனென்படுமோவென்று தண்டியில் குதித்து திருக்கண்ணமங்கையில் பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே ''நாயேன்வந்தடைந்தேன்'' என்று அப்படியே பாவித்து பரவ்யாபாரமே ஸ்வவ்யாபாரமாம்படி கண்வளர்ந்தருளின (திருக்கண்ணமங்கையாண்டானை)ப்போலே, ஸ்வவ்யாபாரயோக்யஜாதிஸ்மரணமற்று ''காம்பரத்தலைசிரைத்துன்கடைத்தலை யிருந்துவாழும் சோம்ப''ராகவேணுமென்கிறார். ஸித்தோபாயபலமான பகவத்கைங்கர்யரூபமாயும் தத்விஷயவிக்ரஹமாயுமிருக்கிற உபேயத்தில், கைங்கர்யாபிநிவேசியான (இளையபெருமாளையும்), ஸ்ரீகார்யநிமித்தமாக தம்மையழியமாறின (பெரியவுடையாரையும்), எம்பெருமான் திருமேனியிலே நெருப்புப்படில் செய்வதேதென்னும் பயத்தாலே ஸகுடும்பமாக வணைத்துக்கொண்டு திருமேனியை த்யஜித்த (பிள்ளை திருநறையூரரையரையும்), திருக்குழலோசைகேட்டோடுகிறபோது பர்த்தா கையில் ப்பிடித்துத் தகைய, உன்னெச்சில் சரக்கைக்கொள்ளலாகாதோவென்று சரீரத்தைவிட்டு, க்ருஷ்ணன் திருவடியைக்கிட்டின (சிந்தயந்தியையும்போல)வும், உபேயாதிகாரி கைங்கர்யாபிநிவேசியாய் தத்ததீயப்ரேமாந்தத்தையாலே ஸ்வசரீரத்தை யழியமாறும்படி ப்ரேமாதிகனாயிருக்கவேணுமென்கிறார். பாசமயிகளிட்ட தீ திருநாராயணபுரத்தெம்பெருமான் திருமேனியை ஸ்பர்சியாதபடி, திருநறையூரரையர் தழுவிக்கொண்டு ஸகுடும்பமாக திருநாட்டுக்கெழுந்தருளினாரென்றருளிச்செய்வர்.

அக. உபாயாதிகாரிகளுக்கு நிதர்சநபூதரானாரில், அந்யபரையான (த்ரௌபதி)யில் அநந்யபரையான (பிராட்டிக்கு) நிவ்ருத்த்யதிகாரத்தில் (வாசி), விரோதிவர்கத்தை பஸ்மீகரிக்கவல்ல (சக்தி)யுண்டாகையும், (பிரா

பெரியவுடையாரையும் பிள்ளை திருநறையூரரையரையும் சிந்தயந்தியையும்போலே யிருக்கவேணும்.

அக. பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி, சக்தியும் அசக்தியும்.

ஜீ.—நிதர்சநமாக்கிக்கொண்டருளிச்செய்கிறார், (உபாயத்துக்கு) இத்யாதி வாக்யத்வயத்தாலே. (உபாயத்துக்கு) என்றது - உபாயத்துக்கதிகாரியாம் போதென்றபடி; உபாயாதிகாரத்துக்கென்னவுமாம்; இப்படியே (உபேயத்துக்கு) என்றதுவும். (உபாயத்தில்) என்று பாடமானபோது உபாயவிஷயத்திலென்றபடி; இப்படியே மற்றையதுவும்.

அக. அவர்களைப்போலே யிருக்கவேணுமென்றதின் கருத்தை தர்சிப்பிக்கைக்காக, அவர்கள் தங்கள் படிகளை அடைவே யருளிச்செய்கிறார் மேல்; அதில் பிராட்டியுடையவும் த்ரௌபதியுடையவும் படிகளை யருளிச்செய்கைக்குடலாக, ப்ரதமத்திலே யுபயர்க்கும் வாசியையருளிச்செய்கிறார், (பிராட்டிக்கும்) என்றுதுடங்கி. அதாவது "తత్తస్య సదృశం భవేత్" "தத்தஸ்ய ஸத்ருசம் பவேத்" என்றிருந்த பிராட்டிக்கும், "రక్ష మాం" "ரக்ஷ மாம்" என்ற த்ரௌபதிக்கும் தம்மில் வாசி, "శీతో భవ" "சீதோ பவ" என்று நெருப்பை நீராக்கினப்போலே, "దగ్ధో భవ" "தக்த்தோ பவ" என்று விரோதிவர்கத்தை பஸ்மமாக்கி தன்னை ரக்ஷித்துக்கொள்ளவல்ல

ஆ.—ட்டி) யில் (த்ரௌபதிக்கு—ஸாசி), உரியுண்கிற சேலையை விடுக்க மாட்டாத(அசக்தி) யுண்டாகையும்.

அ௨. இப்படி சக்தாசக்தைகளாயிருவர்கள் செய்ததேதென்ன, நாயகசக்தியையேநோக்கும்(பிராட்டி) ஸ்வபாரதந்த்ர்யஹாநியைப் பிறப்பிக்கும் ஸ்வரக்ஷணஹேதுவான(ஸ்வசக்தியை) மறுவவிடாதபடி(விட்டாள்); ஸ்வசக்தித்யாகம் பரசக்த்யாலம்பகஸூசகம். ஆபத்ஸகன் க்ருஷ்ணனென்று விச்வஸித்து, (த்ரௌபதி) ஸபாமத்யே யிருகையையும் விட்டு, பரமபுருஷனை சரணம்புக்கு ஸ்த்ரீத்வப்ரயுக்தமான (லஜ்ஜையை) பிற்காலியாமல் (விட்டா)ளென்கிறார்; ஸ்வஸ்வபாவத்யாகம் ஸ்வவிச்வாஸவிசேஷபலமாய் வந்ததிவளுக்கு. ஜாத்யாதிகளிலுத்க்ருஷ்டனான (திருக்கண்ணமங்கையாண்டான்), ஸ்வஜாதிஸ்வவர்ணாநுரூபமான(ஸ்வவ்யாபாரத்தை) வாஸநாருசியுடன்(விட்டான்);பரசக்தியைப்பற்றி ஸ்வசக்தியை விடுகையும், பரரக்ஷகத்வத்தைப்பற்றிஸ்வரக்ஷணாபிமாநத்தை விடுகையும், பரவ்யாபாரத்தைப் பற்றி ஸ்வவ்யாபாரத்தை விடுகையும், உபாயாதிகாரிக்ருத்யமென்றபடி.

அ௨. பிராட்டி ஸ்வசக்தியைவிட்டாள்; த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்; திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தைவிட்டான்.

ஜீ.—சக்தியுண்டாகையும்; ஸ்வயத்நத்தாலே விரோதிகளைத் தள்ளி தன்னை நோக்கிக்கொள்ளப் பார்த்தாலும், நோக்கிக்கொள்ளுகைக்கீடான சக்தி தனக்கில்லாமையும் என்கை.

அ௨. ஏவம்பூதரானவர்கள் செய்தவைதன்னை யருளிச்செய்கிறார், (பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள், த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்) என்று. (ஸ்வசக்தியைவி)டுகையாவது - நாயகரான பெருமாள் ரக்ஷிக்குமத்தனையல்லது, நம்முடைய சக்தியால் நம்மை ரக்ஷித்துக்கொள்ளுகை நம் பாரதந்த்ர்யத்துக்கு நாசகமென்று ஸ்வசக்தியைக்கொண்டு காரியங்கொள்ளாதொழிகை. "అసన్దేశాత్తు రామస్య తపసశ్చానుపాలనాత్ । న త్వాం కుర్మి దశగ్రీవ భస్మ భస్మార్హ తేజసా" "அஸந்தேசாத் து ராமஸ்ய தபஸஶ்சாநுபாலநாத் । ந த்வாம் குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா" என்றாளிறே. (லஜ்ஜையைவி)டுகையாவது- துச்சாஸநன் ஸபாமத்யே துகிலை யுரிகிறவளவில், லஜ்ஜாவிஷ்டையாய்க்கொண்டு தானிருந்து தலையிடுக்குகையன்றிக்கே, இரண்டுகையும் விடுகை. பேரளவுடைப்பிள்ளாகையாலே பிராட்டிக்கு பெருமாளே ரக்ஷகரென்று விச்வஸித்து ஸ்வசக்தியை விட்டிருக்கலாம்; அத்தனையளவன்றிக்கே யிருக்கச்செய்தே, மஹாபத்தசையிலே இவ்வளவில் க்ருஷ்ணனே ரக்ஷகனென்று மஹாவிச்வாஸம்பண்ணிமஹாஸபாமத்யே இவள் லஜ்ஜையை விட்டதிறே யரிது. (திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வவ்யாபாரத்தை விட்டான்), அதாவது - ஸ்வரக்ஷணஹேதுவான ஸ்வவ்யாபாரங்களை விட்டானென்றபடி; ஒருசேவகனுடைய நாயை ஒருசேவகன் அடிக்க, அவன் அது பொறாமல் அடித்தவனோடெதிர்த்துப் பொருது அவனையுங்கொன்று தானும் குத்திக்கொள்வதாகயிருக்கிற படியைக்கண்டு, ஒரு க்ஷுத்ரசேதநன் தன்னபிமாநத்திலே யொதுங்கினதென்னுமிவ்வளவுக்காக தன்னை யழிய மாறினபடி கண்டால், பரமசேதநனபிமாநத்திலே யொதுங்கினால்அவனென்படுமோவென்று ஸ்வரக்ஷணவ்யாபாரங்களை யடையவிட்டு, அநந யோபாதியாகத்தம்மையநுஸந்தித்துக்கொண்டு, அப்போதேவந்து திருக்கண்ணமங்கையில் பத்தராவி திருவாசலில் கைப்புடையிலே புகுந்து கண் வளர்ந்தாரென்று ப்ரஸித்தமிறே.

ஆ.—அநு. உபேயாதிகாரிக்ருத்யவிசேஷங்களை யருளிச்செய்கிறார், (பசியர்) இத்யாதியால். பெரும்பசியராய் சோறுசமைவதெப்போதோவென்று துடித்துக்கொண்டாகாங்க்ஷித்திருப்பார் ஊர்க்க(ட்ட சோறுமுண்ணவேணும்) நாட்டுக்க(டுகிற சோறுமுண்ணவேணுமென்று) மநோரதிக்குமாப்போலே, நாட்டுக்குக் கட்டினகாப்பே காட்டுக்காம்படி கொடியகாட்டுக்கு பித்ருவசநபரிபாலகராய் பெருமாள் முகமலர்ந்து போகிறபோது, "బాల్యాత్ప్రభృతి సుస్నిగ్ధః" "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த்த:"என்று பால்யம் துடங்கி திருத்தொட்டிலிணைத்தீண்டவேண்டும்படி ஸுஸ்நிக்த்தரான இளையபெருமாள் "న చ సీతా త్వయా హీనా న చాహమపి రాఘవ । ముహూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ" "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்று பிராட்டிபோல(பிரியில்) ஸ்வஸத்தை (தரியாமையை முன்னிட்டு)ப் பின்சென்று "భవాంస్తు సహ వైదేహ్యా గిరిసానుషు రంస్యతే । అహం సర్వం కరిష్యామి జాగ్రతస్స్వపతశ్చ తే । పరవానస్మి కాకుత్స్థ త్వయి వర్షశతం స్థితే । స్వయం తు రుచిరే దేశే క్రియతామితి మాం వద" "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே। அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே। பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி

அநு. பசியராயிருப்பார் அட்டசோறுமுண்ணவேணும் அடுகிற சோறுமுண்ணவேணுமென்னுமாப்போலே, காட்டுக்குப் போகிறபோது இளையபெருமாள் பிரியில் தரியாமையை முன்னிட்டு, அடிமைசெய்யவேணும் எல்லாவடிமையும்

ஜீ.—அநு. இனி உபேயாதிகாரிகளில் ப்ரதாநரான இளையபெருமாள்படியை விஸ்தரேண வருளிச்செய்கிறார், (பசியர்) என்று துடங்கி. அதாவது- (பசியராயிருப்பார்) தங்கள் பசியின் கனத்தாலே, இதுக்குமுன்பாக்கின சோறும் இப்போதாக்குகிற சோறும் எல்லாம் நாமே உண்ணவேணுமென்று மநோரதிக்குமாப்போலே, பெருமாள் காட்டுக்கெழுந்தருளுகிறபோது, "பால்யாத்ப்ரப்ருதிஸுஸ்நிக்த்த"ரான இளையபெருமாள்,படைவீட்டில் நின்றும் புறப்படுவதற்குமுன்னே கூடப்போவதாக உத்யோகிக்கிறபடியைக் கண்டு, நீர் நில்லுமென்று நிர்பந்தித்தருள, "కురుష్వ మామనుచరం వైధర్మ్యం నేహ విద్యతే । కృతార్థోఽహం భవిష్యామి తవ చార్థః ప్రకల్పతే" "குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே। க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே" என்றும், கங்கைகடந்தேறினவன்று மீளவிடுகைக்குறுப்பாக அவர் அநேகமருளிச்செய்ய, "న చ సీతా త్వయా హీనా న చాహమపి రాఘవ। ముహూర్తమపి జీవావో జలాన్మత్స్యావివోద్ధృతౌ" "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ। முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்றும் சொல்லுகையாலே பிரியில் தாமுளராகமாட்டாமையை முன்னிட்டு "కురుష్వ మామ్" "குருஷ்வ மாம்" என்றவநந்தரத்திலே, "ధనురాదాయ సగుణం ఖనిత్రపిటకాధరః । అగ్రతస్తే గమిష్యామి పన్థానమనుదర్శయన్ । ఆహరిష్యామి తే నిత్యం మూలాని చ ఫలాని చ । వన్యాని యాని చాన్యాని స్వాహారాణి తపస్వినామ్" "தநுராதாய ஸகுணம் கநித்ரபிடகாதர:। அக்ரதஸ்தே கமிஷ்யாமி பந்த்தாநமநுதர்சயந்॥ ஆஹரிஷ்யாமி தே நித்யம் மூலாநி ச பலாநி ச। வந்யாநி யாநி சாந்யாநி ஸ்வாஹாராணி தபஸ்விநாம்" என்கையாலே ஸ்வசேஷத்வாநுகுணமாக வடிமை செய்யவேணுமென்றும், தத நந்தரத்திலே "భవాంస్తు సహ వైదేహ్యా గిరిసానుషు రంస్యతే । అహం సర్వం కరిష్యామి జాగ్రతస్స్వపతశ్చ తే" "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்

ஆ.—வர்ஷசதம் ஸ்த்திதே। ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத" என்று சேஷத்வம்நிலைநிற்கும்படி சேஷவ்ருத்தியான வடிமைசெய்யவேணும்; அதில் இன்னதுசெய்வன் இன்னதுசெய்யேன் என்னாதே, சேஷிக்கபிமதமான எல்லாவடிமையும் செய்யவேணும்; செய்யுமிடத்து ஸ்வாதந்த்ர்ய விஷம் தட்டாதபடி, ஸ்வதந்த்ரசேஷி ஏவிக்கொள்ளவும் வேணுமென்று ப்ரார்த்தித்தார்; "ஸுக்ரீவமாருதிவிபீஷணபுண்யபாதஸஞ்சார"த்தாலே சோஷணதாஹகப்லாவகம் பண்ணின திருப்படைவீட்டிலே, பெருமாள் காசியாருடன் பெருமழியோடே நாடுகளிக்கப்புக்குப் புகுந்தபோது, அடிமைக்குக் கூட்டுப்படுவாரொருவருமற்ற காட்டிலே, தாமேயான தனியிடத்துத் தாமேயடிமைசெய்கையாகிற ஸ்வயம்பாகத்திலே, கைங்கர்யாபிநிவேசமாகிற வயிற்றை, பதினாலாண்டு அமைவுதலறப் பெருக்கினபடியாலே, ஸ்ரீபரதாதிகளுடன் பகுந்தடிமைசெய்கையாகிற (ஒப்பூணுண்ணமாட்டாதே)

செய்யவேணும் ஏவிக்கொள்ளவும்வேணும் என்றார்; படைவீட்டில் புகுந்தபின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப்பெருக்கினபடியாலே,

---

ஜீ.—யா கிரிஸாநுஷு ரம்ஸ்யஸே। அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ்ஸ்வபதச்ச தே" என்கையாலே- அதுதன்னிலும் இன்னவின்னவடிமையென்று ஒருநியதியின்றியே எல்லாவடிமையும் செய்யவேணுமென்றும்; பஞ்சவடியிலே எழுந்தருளினபோது, நீரும்நிழலும் வாய்த்திருப்பதொருப்ரதேசத்தைப்பார்த்து பர்ணசாலையைச் சமையும் என்ன, "ఏవముక్తస్తు రామేణ లక్ష్మణస్సంయతాంజలిః। సీతాసమక్షం కాకుత్‌స్థమిదం వచనమబ్రవీత్" "ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணஸ்ஸம்யதாஞ்ஜலி:। ஸீதாஸமக்ஷம் காகுத்ஸ்த்தமிதம் வசநமப்ரவீத்" என்று - நந்தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்தபோதே பெருமாள் நம்மைக்கைவிட்டாரென்று விக்ருதராய், பிராட்டி முன்னிலையாகக் கையுமஞ்ஜலியுமாய்நின்று, "పరవానస్మి కాకుత్‌స్థ త్వయి వర్షశతం స్థితే। స్వయం తు రుచిరే దేశే క్రియతామితి మాం వద" "பரவாநஸ்மி காகுத்ஸ்த்த த்வயி வர்ஷசதம் ஸ்த்திதே। ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத" என்கையாலே- அடிமை செய்யுமளவில் ஸ்வாதந்த்ர்யமாகிற தோஷம் கலசாதபடி யுசிதகைங்கர்யங்களிலே ஏவிக்கொள்ளவேணுமென்றும் ப்ரார்த்தித்தாரென்கை. (படைவீட்டில்) இத்யாதி.- திருப்படைவீட்டிலே யெழுந்தருளிவந்து புகுந்து திருவபிஷேகம் பண்ணியருளினபோது, தம்மோடுகூட வடிமைசெய்கைக்கொருவருமில்லாததொரு தனிக்காட்டிலே தாமே யடிமைசெய்து கைங்கர்யாபிநிவேசத்தைப் பெருக்குகையாலே, ஸ்வயம்பாகத்திலே வயிற்றைப் பெருக்கினவன் ஒப்பூணுண்ணமாட்டாதாப்போலே, ஸ்ரீபரதாழ்வான் தொடக்கமானவர்களோடொக்கத் தாமுமோரடிமை செய்துநிற்கமாட்டாதே, திருவெண்கொற்றக்குடையை யெடுக்கை, திருவெண்சாமரம் பரிமாறுகையாகிற இரண்டடிமையை ஏககாலத்தில் செய்தாரென்கை. இந்த வ்ருத்தாந்தந்தான் ஸ்ரீராமாயணத்திலில்லை. "ఛత్రచామరపాణిస్తు లక్ష్మణో౽నుజగామహ" "சத்ரசாமரபாணிஸ்து லக்ஷ்மணோ௨நுஜகாமஹ" என்கிறது ஸ்ரீராமாயணமன்றோவென்னில், காட்டுக்கெழுந்தருளுவதற்குமுன்னே திருவபிஷேகார்த்தமாக வலங்கரித்து, தம்முடைய திவ்யாந்த:புரத்தில் நின்றும் புறப்பட்டு, சக்ரவர்த்தித்திருமாளிகையைநோக்கி திருத்தேரிலேயேறி பெருமாளெழுந்தருளுகிறபோது, இளையபெருமாள் செய்த வ்ருத்தாந்தமாக திருவயோத்யாகாண்டத்திலே சொல்லப்பட்டதாகையாலே, இவ்விடத்துக்கது

ஆ.—"ఛత్రచామరపాణిస్తు లక్ష్మణో ఽనుజగామహ" "சத்ரசாமரபாணிஸ்து லக்ஷ்மணோऽநுஜகாமஹ" என்று மற்றைத் திருக்கைக்குக் கூறுகொடுக்கமாட்டாத (ஒருதிருக்கையாலே) தம்முடைய ஆகாராந்தரமான (திருவெண்கொற்றக்குடையையும்) அத்தை தரிக்க ஆசைப்பட்டிலிற (ஒருதிருக்கையாலே) ஸ்வாகாராந்தரமான (திருவெண்சாமரத்தையும்) சேதநஸமாதியான வவற்றுடன், ப்ரயோஜக கர்த்தாவாய்நின்று (தரித்து) பலர் செய்யுமடிமையைத் தாமொருவரே செய்தார்.

அசு. ஒழிந்த உபேயாதிகாரிகள் மூவரும் செய்ததேதென்ன, அவர்

ஒப்பூணுண்ணமாட்டாதே, ஒருதிருக்கையாலே திருவெண்கொற்றக்குடையையும், ஒருதிருக்கையாலே திருவெண்சாமரத்தையும், தரித்தடிமைசெய்தார்.

அசு. பெரியவுடையாரும் பிள்ளை திருநறையூரரையரும் உடம்

ஜீ.—சோது. ஆனால் இவரென்கொண்டிப்படியருளிச்செய்தாரென்னில்; பாத்மபுராணப்ரக்ரியையாலே யருளிச்செய்தார். "అథతస్మిన్దినే పుణ్యే శుభలగ్నే శుభాన్వితే । రాఘవస్యాభిషేకార్థం మఙ్గళం చక్రిరే జనాః" "அத தஸ்மிந் திநே புண்யே சுபலக்நே சுபாந்விதே । ராகவஸ்யாபிஷேகார்த்தம் மங்களம் சக்ரிரே ஜநா:" என்று துடங்கி பரக்கச் சொல்லிக்கொண்டுவந்து, "మన్త్రిపూతజలైశ్శుద్ధైర్మునయస్సంశితవ్రతాః । జపన్తో వైష్ణవాన్ సూక్తాన్ చతుర్వేదమయాన్ శుభాన్ ॥ అభిషేకం శుభం చక్రుః కాకుత్స్థం జగతాం పతిమ్ । తస్మిన్ శుభతమే లగ్నే దేవదున్దుభయో దివి ॥ నేదుః పుష్పవర్షాణి వవర్షుశ్చ సమన్తతః । దివ్యామ్బరైర్భూషణైశ్చ దివ్యగన్ధానులేపనైః ॥ పుష్పైర్నానావిధైర్దివ్యైర్దేవ్యా సహ రఘూద్వహః । అలఙ్కృతశ్చ శుశుభే మునిభిర్వేదపారగైః ॥ ఛత్రంచ చామరం దివ్యం ధృతవాన్ లక్ష్మణస్తథా । పార్శ్వే భరతశత్రుఘ్నౌ తాలవృన్తే వివేజతుః ॥ దర్పణం ప్రదదౌ శ్రీమాన్ రాక్షసేన్ద్రో విభీషణః । దధార పూర్ణకలశం సుగ్రీవో వానరేశ్వరః ॥ జామ్బవాంశ్చ మహాతేజాః పుష్పమాలాం మనోహరామ్ । వాలిపుత్రస్తు తామ్బూలం సకర్పూరం దదౌ ప్రియాత్ ॥ హనూమాన్ దీపికాం దివ్యాం సుషేణస్తు ధ్వజం శుభమ్ । పరివార్య మహాత్మానం మన్త్రిణస్సముపాసిరే" "மந்த்ரபூதஜலைச்சுத்தைர் முநயஸ்ஸம்ஸிதவ்ரதா: । ஜபந்தோ வைஷ்ணவாந் ஸூக்தாந் சதுர்வேதமயாந் சுபாந் ॥ அபிஷேகம் சுபம் சக்ரு: காகுத்ஸ்தம் ஜகதாம் பதிம் । தஸ்மிந் சுபதமே லக்நே தேவதுந்துபயோ திவி ॥ நிநேது: புஷ்பவர்ஷாணி வவர்ஷுச்ச ஸமந்தத: । திவ்யாம்பரைர் பூஷணைச்ச திவ்யகந்தாநுலேபநை: ॥ புஷ்பைர் நாநாவிதைர் திவ்யைர் தேவ்யா ஸஹ ரகூத்வஹ: । அலங்க்ருதச்ச சுசுபே முநிபிர் வேதபாரகை: ॥ சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந் லக்ஷ்மணஸ்ததா । பார்ச்வே பரதசத்ருக்நௌ தாலவ்ருந்தே விவேஜது: ॥ தர்பணம் ப்ரததௌ ஸ்ரீமாந் ராக்ஷஸேந்த்ரோ விபீஷண: । ததார பூர்ணகலசம் ஸுக்ரீவோ வாநரேச்வர: ॥ ஜாம்பவாம்ச்ச மஹாதேஜா: புஷ்பமாலாம் மநோஹராம் । வாலிபுத்ரஸ்து தாம்பூலம் ஸகர்பூரம் ததௌ ப்ரியாத் ॥ ஹநுமாந் தீபிகாம் திவ்யாம் ஸுஷேணஸ்து த்வஜம் சுபம் । பரிவார்ய மஹாத்மாநம் மந்த்ரிணஸ்ஸமுபாஸிரே" என்று பாத்மபுராணத்தில் உத்தரகண்டத்தில் நாற்பத்தொன்பதாமத்த்யாயத்திலே சொல்லப்பட்டதிறே. "ఛత్రంచ చామరం దివ్యం ధృతవాన్" "சத்ரஞ்ச சாமரம் திவ்யம் த்ருதவாந்" என்றது தோற்றவிறே (திருவெண்கொற்றக்குடையையும் திருவெண்சாமரத்தையும் தரித்து) என்றருளிச்செய்தது.

அசு. (பெரியவுடையாரும் பிள்ளை திருநறையூரரையரும் உடம்பையுபேக்ஷித்தார்கள்).-ஸ்ரீஜடாயுமஹாராஜரைப் பெரியவுடையாரென்றும் த்து

ஆ.—களில் மிதுநவிச்லேஷத்தில் தம்மையழியமாறும்பெரியவுடையாரும், அச்சேர்த்தி நித்யமாகவேணுமென்று மங்களாசாஸநம்பண்ணும் பிள்ளை திருநறையூரரையரும், ப்ரேமபாரவச்யத்தாலே கைங்கர்யோபகரணமான திருமேனியை அழிவுக்கிட்ட சரக்காக்கி உபேக்ஷித்தார்கள்; "చిన్తయన్తీ జగత్సూతిం పరబ్రహ్మస్వరూపిణమ్। నిరుచ్ఛ్వాసతయా ముక్తిం గతాన్యా గోపకన్యకా" "சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம் । நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்று பர்தாவரத் தகைவுபட்ட சிந்தயந்திக்கு, அப்போதே க்ருஷ்ணாநுபவம் பண்ணப்பெறாமல் துவண்ட வுடம்பு, இவளுபேக்ஷித்து விடவேண்டாதபடி, க்ருஷ்ணவிக்ரஹஸ்நேஹமாத்மாவை யிருஞ்சிக்

டையுபேக்ஷித்தார்கள்; சிந்தயந்திக்குடம்பு தன்னடையே போய்த்து.

ஜீ.—நம்முதலிகளருளிச்செய்வது. இவர்தாம், பஞ்சவடியிலே பெருமாளெழுந்தருளித் தம்மையங்கீகரித்து "ఇహ వత్స్యామి సౌమిత్రే సార్ధమేతేన పక్షిణా" "இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேந பக்ஷிணா" என்றவன்றுதுடங்கி திருவடிகளுக்குமிகவும்பரிவராய், பெருமாளெழுந்தருளியிருக்கிற திவ்யாச்ரமத்துக்கு ஆஸந்நமாக வர்த்தியாநிற்கச்செய்தே, அசிந்திதமாக ராவணன்வந்து பிராட்டியைப் பிரித்துக் கொண்டுபோக, அப்போது பிராட்டி இவரையொரு வ்ருக்ஷத்தின்மேலேகண்டு "என்னையிவனிப்படி யபஹரித்துக்கொண்டு போகாநின்றான்" என்று இவர் பேரைச்சொல்லிக்கூப்பிட, உறங்குகிறவிவர் அந்த ஆர்த்தத்வநியைக்கேட்டுணர்ந்து, ராவணன்கொண்டுபோகிறபடியைக்கண்டு "உனக்கிது தகாதுகாண்" என்று தர்மோபதேசம்பண்ணினவளவில் அவன்கேளாமையாலே, "நம் ப்ராணனோடே துகண்டிருக்கக்கடவோமல்லோம் யுத்தம்பண்ணிமீட்குதலில்லையாகில் முடிதல்செய்யக்கடவோம்" என்றத்யவஸித்து அதிபலபராக்ரமராகையாலே அவனோடே மஹாயுத்தத்தைப்பண்ணி, அவன்கையாலேயடிபட்டுவிழுந்து தம் திருமேனியை விட்டாரிறே.—பிள்ளை திருநறையூரரையர் ஸகுடும்பமாக திருநாராயணபுரத்தில் வேதநாராயணப்பெருமானை ஸேவிக்கச் சென்று புகுந்தவளவிலே, பரஸமயிகள் அந்தக்கோயிலிலே அக்நிப்ரக்ஷேபத்தைப் பண்ண, உள்ளுநின்றவர்களெல்லாரும்புறப்பட்டோடிப்போகச் செய்தே, அந்த வெம்பெருமான் திருமேனிக்கழிவு வருகிறபடியைக்கண்டு ஸஹிக்கமாட்டாத ப்ரேமாதிசயத்தாலே தாமுமொக்கமுடிவதாக வத்யவஸித்து இவர்நிற்கையாலே பிள்ளைகளுமிவரைவிட்டுப்போகோமென்றுநிற்க, அவர்களும் தாமும் கூட வதுக்குள்ளே நின்று திருமேனியை விட்டாரென்று ப்ரஸித்தமிறே. (சிந்தயந்திக்குடம்பு தன்னடையே போய்த்து) - அதாவது:—"కాచిదావసథస్యాన్తే స్థిత్వా దృష్ట్వా బహిర్గురుమ్। తన్మయత్వేన గోవిన్దం దధ్యౌ మీలితలోచనా॥ తచ్చిత్తవిమలాహ్లాదక్షీణపుణ్యచయా తదా। తదప్రాప్తిమహాదుఃఖవిలీనాశేషపాతకా॥ చిన్తయన్తీ జగత్సూతిం పరబ్రహ్మస్వరూపిణమ్। నిరుచ్ఛ్వాసతయా ముక్తిం గతాన్యా గోపకన్యకా" "காசிதாவஸதஸ்யாந்தே ஸ்தித்வா த்ருஷ்ட்வா பஹிர்குரும் । தந்மயத்வேந கோவிந்தம் தத்த்யௌ மீலிதலோசநா ॥ தச்சித்தவிமலாஹ்லாதக்ஷீணபுண்யசயா ததா । ததப்ராப்திமஹாதுஃகவிலீநாசேஷபாதகா ॥ சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம் । நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா" என்கிறபடியே திருக்குரவையினன்று திருக்குழலோசையைக் கேட்டு, ஸ்ரீப்ருந்தாவநத்தேறப் போவதாகப்புறப்பட்டவளவிலே, குருதர்சநத்தாலேபோகமாட்டாமல் நின்று க்ருஷ்ணனை த்யாநம்பண்ணி, தத்கதசித்தையாகையாலே வந்த நிர்மலஸுகத்தாலும் ததப்ராப்திநிபந்தநமான நிரவதிக

ஆ.—கொண்டு அவன் திருவடிகளிலே சேர்க்கக் கொள்வதாய், நினைவறத் தன்னையே விட்டுப்போய்த்து.

அரு. இந்த வுபயவித்ராதிகாரிகள் அநுஷ்டாநதாத்பர்யத்தை யருளிச்செய்கிறார், (உபாயத்துக்கு) இத்யாதியால். ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபப்ரபத்த்யுபாயத்துக்கு ஒருவனதிகாரியாம்போது, நிதர்சநமான மூவரையும்போலே ஸ்வரக்ஷணஹேதுவான ஸ்வயத்நசக்தியும், த்யாகஸ்வீகாரங்களில் பிற்காலிக்கப் பண்ணும் லஜ்ஜையும், ஸ்வபாரதந்த்ர்யவிருத்தமான யத்நமும், தத்ததகந்தஸ்பர்சமற உபாயசக்த்யா குலையவேணும்; அநுரூபமான வுபேயத்துக்கதிகாரியாம்போது, நிதர்சநமான நால்வரையும்போலே கைங்கர்யப்ரேமமும், ப்ரேமத்தாலே தன்னுடம்பைப் பேணாமையும், விச்லேஷாநுபவம் பெறாவிடில் முடியும்படி தரியாமையும், உபயவைலக்ஷண்யப்ரகாசத்தாலே யுண்டாகவேணும்; இப்படி செய்யாவிடில் தத்தததிகாரிபூர்த்தியில்லை.

அசூ. பிள்ளைதிருநறையூரரையர் வலிய திருமேனியை த்யஜிக்கை சாஸ்த்ரவிருத்தமன்றோவென்ன பரிஹரிக்கிறார்மேல், (இவனுக்கு) இத்யாதியால். பகவத்ப்ரேமாந்தனான இவனுக்கு, "ఇదం శరీరం" "இதம் குர்

அரு. உபாயத்துக்கு, சக்தியும் லஜ்ஜையும் யத்நமும் குலையவேணும்; உபேயத்துக்கு, ப்ரேமமும் தன்னைப்பேணாமையும் தரியாமையும் வேணும்.

அசூ. இவனுக்கு வைத்தமாய் வருமதிறே த்யஜிக்கலாவது,

ஜீ.—துக்கத்தாலும் ப்ரக்ஷீணசேஷபுண்யபாபையாய், தத்ஸ்மரணம்செல்லாநிற்க, தத்ப்ராப்த்யலாபக்லேசத்தாலே தரிக்கமாட்டாமல் மூச்சடங்குகையாலே, இவளுக்குத்தானுபேக்ஷிக்கவேண்டாதபடி தேஹம் தன்னையே விட்டுக்கொண்டு நின்றதென்கை.

அரு. ஆக, இப்படி நிதர்சநபூதர்படிகளைச்சொல்லி, இனி யிவர்களைப்போலே யிருக்கவேணுமென்றதின் கருத்தை யருளிச்செய்கிறார், (உபாயத்துக்கு) இதியாதிவாக்யத்வயத்தாலே. அதாவது - உபாயத்துக்கதிகாரியாம்போது, தன்னுடைய ரக்ஷணம்தானே பண்ணிக்கொள்ளுகைக்குறுப்பான சக்தியும், தான் பரிக்ரஹிக்கிற வுபாயத்துக்கு விரோதிகளானவற்றை விடுமளவில், கர்ட்டார் சிரிக்குமதுக்குக் கூசும் லஜ்ஜையும், தன் பாரதந்த்ர்யவிரோதியான ஸ்வயத்நமும் கைவிடவேணும்; உபேயத்துக்கதிகாரியாம்போது, சேஷியைப்பிரியாதேநின்று எல்லாவடிமையுமவனே விணபடி செய்யவேணுமென்னும் ப்ரேமமும், அத்தலைக்கொரு தீங்குவரில் அதுகண்டாற்றமாட்டாமல் தன்னுடம்பை யுபேக்ஷிக்கையும், தத்விச்லேஷாநுபவாலாபத்தில் தரித்திருக்கமாட்டாமல் மூச்சடங்கும்படியாகையும் வேணுமென்றபடி.—ஆகையாலே, அவர்களைப்போலே யிருக்கையாவது இவ்வதிகாரங்களை யுடையராகை யென்று கருத்து.

அசூ. "విష్ణోః కార్యం సముద్దిశ్య దేహత్యాగో యదా కృతః। తదా వైకుంఠమాసాద్య ముక్తో భవతి మానవః" "விஷ்ணோঃ கார்யம் ஸமுத்திச்ய தேஹத்யாகோ யதா க்ருதঃ। ததா வைகுண்டமாஸாத்ய முக்தோ பவதி மாநவঃ" என்று ஆக்நேயபுராணத்திலும், "దేవకార్యపరో భూత్వా స్వాం తనుం యః పరిత్యజేత్। ప్రయాతి విష్ణుసాయుజ్యమపి పాతకకృన్నరః" "தேவகார்யபரோ பூத்வா ஸ்வாம் தநும் யঃ பரித்யஜேத்। ப்ரயாதி விஷ்ணுஸாயுஜ்யமபி பாதகக்ருந்நரঃ" என்று வாயவ்யத்திலும், "రజ నార్థం సమాశ్రిత్య దేహత్యాగం కరోతి యః। తస్య లం శ్రే మృత్యుః స్వర్గే గచ్ఛన్త్యతో నృ కం భ్రయమ్"

ஆ.—யாத்" என்கிற விதிப்ரயுக்தமாய் கோபாதிஹேதுகமாய்வரும் நிஷித்தமான சரீரத்யாகத்தையிறே வித்யதிக்ரமபீதியாலே வருந்தித் த்யஜிக்கலாவது; ப்ராப்தவிஷயராகப்ராப்தமாய் வித்யநுஸாரம்பண்ணவொட்டாத ராகப்ரேரித ஸ்வசரீரத்யாகத்தை வருந்தியும் த்யஜிக்கவொண்ணாதிறே. ஸ்வதோஷத்தாலே வருமதிலே தோஷம் வருமித்தனையல்லது, ப்ராப்தராகத்தால் வருமதில் தோஷப்ரஸங்கமே யில்லையென்றபடி; 'మన్నిమిత్తకృతం పాపమపి ధర్మాయ కల్పతే। మామనాదృత్య ధర్మోఽపి పాపం స్యాన్మత్ప్రభావతః'' "மந்நிமித்தக்ருதம் பாபமபி தர்மாய கல்பதே। மாமநாத்ருத்ய தர்மோऽபி பாபம் ஸ்யாந்மத்ப்ரபாவத:" என்றுநின்றதிறே.

அஎ. ஸ்வசரீரத்யாகரூபஸ்வ்யத்நம் பாரதந்த்ர்யதூஷணமாகாதோவென்ன, உபாயாதிகாரிக்காம் அல்லது உபேயாதிகாரிக்கு தூஷணமாகாதென்கிறார், (உபாயத்வ) இத்யாதியால். ஸ்வதந்த்ரவஸ்துவே வுபாயமென்று பரதந்த்ரவஸ்து வநுஸந்திக்கிற வுபாயத்வாநுஸந்தாநம், தன்னை து

ர்ராகப்ராப்தமாய் வருமது த்யஜிக்கவொண்ணாதிறே.

அஎ. உபாயத்வாநுஸந்தாநம் நிவர்த்தகம்; உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்.

ஜீ.—"ரங்கநாதம்ஸமாச்ரித்ய தேஹத்யாகம் கரோதிய:। தஸ்யவம்சே ம்ருதாஸ்ஸர்வே கச்சந்த்யாத்யந்திகம் லயம்" என்று வாமநீயத்திலும் சொல்லுகையாலும், விசேஷித்து ஆச்வமேதிகபர்வத்தில் வைஷ்ணவதர்மசாஸ்த்ரத்தில் பஞ்சமாத்யாயத்திலே: "అగ్నిప్రవేశం యశ్చాపి కురుతే మద్గతాత్మనా। స్యాదగ్నిప్రకాశేన విమానేన మమాలయమ్॥ ప్రాణం సంత్యజతి యో మర్త్యో మాం ప్రపన్నో ఉప్యనాశకమ్। బాలసూర్యప్రకాశేన వ్రజేద్యానేన మద్గృహమ్" "அக்நிப்ரவேசம் யச்சாபி குருதே மத்கதாத்மநா। ஸ்யாத்யக்நிப்ரகாசேந விமாநேந மமாலயம்॥ ப்ராணம் ஸ்த்யஜதி யோ மர்த்யோ மாம் ப்ரபந்நோ உப்யநாசகம்। பாலஸூர்யப்ரகாசேந வ்ரஜேத் யாநேந மத்க்ருஹம்" என்று பகவான் தானே யருளிச்செய்கையாலும், இப்படி மோக்ஷஸாதநமாகச்சொல்லப்படுகிற பகவதர்த்தமான ஸ்வதேஹத்யாகம் அநந்யஸாதநனான இவனுக்கு த்யாஜ்யமன்றோ, ப்ரபந்நராயிருக்கிறபிள்ளை திருநறையூரரையர் இத்தையநுஷ்டிப்பானென் என்ன வருளிச்செய்கிறார், (இவனுக்கு) என்று துடங்கி. அதாவது "ఇదం కుర్యాత్" 'இதம் குர்யாத்' என்று ஒருவிதிப்ரயுக்தமாய் வருமதிறே ப்ராப்தாப்ராப்தவிவேகம் பண்ணி யிவனுக்குக் கைவிடலாவது; அங்ஙன்றிக்கே, தன்விரஹத்திலாற்றப்போகாதபடி போக்யமுமாய் ப்ராப்தமுமான விஷயத்தில்ராகப்ரயுக்தமாய் வருமது வருந்தியும் கைவிடப்போகாதிறேயென்கை,

அஎ. வைதமாய் வருமளவில் ஸுத்யஜமாய், ராகப்ராப்தமாய் வருமளவில் துஸ்த்யஜமாவானென் என்ன வருளிச்செய்கிறார், (உபாயத்வ) இத்யாதியாலே. (உபாயத்வாநுஸந்தாநம் நிவர்த்தகம்) என்றது—வைதமாய் வரும் தசையில் தேஹத்யாகரூபப்ரவ்ருத்தியில் உபாயத்வாநுஸந்தாநம் நடக்கையாலே, அவ்வநுஸந்தாநமிவனை ஸாதநதயா ஸம்ப்ரதிபந்நமான இத்தேஹத்யாகரூப ப்ரவ்ருத்தியினின்றும் மீளுவிக்குமென்றபடி. (உபேயத்வாநுஸந்தாநம் ப்ரவர்த்தகம்) என்றது—ராகப்ராப்தமாய் வரும்தசையில், இவ்விஷயத்துக்கு ஹாநிவரக்கண்டிருப்பதில் முடிகையே நல்லது என்று தேஹத்யாகந்தன்னை புருஷார்த்தமாக வநுஸந்திக்கையாலே, அவ்வநுஸந்தாநமிவனை யதிலே மூளுவிக்குமென்றபடி.—அன்றிக்கே, வைதமாய் வரும்போது, பகவத்விஷயத்திலுபாயத்வாநுஸந்தாநம் இதுக்கு நிவர்த

ஆ.—ரும்பு நறுக்கவொட்டாதபடி ஸ்வயத்நநிவர்த்தகமாயிருக்கும்; நித்ய சேஷவிக்ரஹமே நித்யோபேயமென்கிற தத்விக்ரஹவைலக்ஷண்யஜ்ஞா நாநுரூபமான உபேயத்வாநுஸந்தாநம், துரும்பெழுந்தாடும்படி தன்னை ஸ்வயத்நத்திலே ப்ரவர்த்திப்பிக்கும். ஸ்வதந்த்ர நித்யோபாயோபேயாநுஸந் தாநம் நிவ்ருத்திப்ரவ்ருத்திநிஷ்டையைப் பிறப்பித்து, உபாயாதிகாரத் தையும் நிலைப்பிக்குமென்றபடி.

அஅ. ப்ரவர்த்தகமான துர்நிவார தத்ப்ராவண்யம் ஏது செய்வியா தென்கிறார் மேல், (அப்ராப்த) இத்யாதியால். ஸ்வரூபநாசகமாய்க்கொ ண்டு அப்ராப்தமான ஹேயவிஷயங்களிலே, ஒன்றாலும்மீளாதபடி ஸக்தனா வன், அவ்விஷயந்தனக்கு வருந்தியும் லபிக்கவேணுமென்று அதிஸாஹ ஸங்களைக்கோலி தன்னையழியமாறியிராநின்றால், ஸ்வரூபவர்த்தகமாய்க் கொண்டு ப்ராப்தமாய் நிரதிசயபோக்யமான பகவத்விஷயத்தை லபிக்க வேணுமென்னும் அநிவாரிதப்ராவண்ய பரவசனான வுபேயாதிகாரிக்கு, தன்னையழியமாறும்படியான ப்ரவ்ருத்தி விசேஷமுண்டாமென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமிறே யென்கிறார். ஒருவேச்யாஸக்தன் அவளுக்கு வ்யாதியாற ப்ரார்த்தித்து ஒருதேவதைக்கு தன்தலையறுத்துக் கொடுத் தானென்றருளிச்செய்வர்.

அகூ. இந்தப்ரேமகார்யப்ரவ்ருத்தி, உபாயாதிகாரிக்குப்போல வுபா யாந்தர்கதமாகாதென்கிறார் மேல், (அநுஷ்டாநமும்) இத்யாதியால்.

அஅ. அப்ராப்தவிஷயங்களிலே ஸக்தனானவன் அதுலபிக் கவேணும் என்றிராநின்றால், ப்ராப்தவிஷயப்ரவண னுக்குச் சொல்லவேண்டாவிறே.

அகூ. அநுஷ்டாநமுமநநுஷ்டாநமுமுபாயகோடியிலந் வயியாது.

ஜீ.—கமாம்; ராகப்ராப்தமாய்வரும்போது, அவ்விஷயத்திலுபேயத்வாநு ஸந்தாநமிதுக்கு ப்ரவர்த்தகமாமென்னவுமாம்.

அஅ. இப்படியொரு ஸாதநபுத்த்யாவன்றிக்கே, தத்விஷயப்ராவண் யாதிசயத்தாலே ஸ்வதேஹத்தை விடும்படியான நிலைவிளையக்கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார், (அப்ராப்த) இத்யாதியாலே. அதாவது-ஸ்வ ரூபப்ராப்தமல்லாத ஹேயவிஷயங்களிலே ப்ரவணனானவன், தன்னை யழிய மாறியாகிலுமவ்விஷயத்தை லபிக்கவேணுமென்று ஸ்வதேஹத்யாகத் திலே ப்ரவர்த்தியாநின்றால், ஸ்வரூபப்ராப்தமான விலக்ஷணவிஷயத்திலே ப்ரவணனானவனுக்கு, அவ்விஷயத்தைப்பற்ற தன்னை யழியமாறுகையா கிற விது கூடுமென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தமன்றோவென்கை.—ஒரு வேச்யையளவிலே ஒருவன் அதிஸக்தனாய்க்கொண்டுபோருமவனாய், அவ ளுக்கு வ்யாதிகனக்க வந்தவளவிலே, ''இவளாறியெழுந்திருந்தவாறே நா னென் தலையை யரிந்துதருகிறேன்'' என்று ஒருதைவத்துக்கு ப்ரார்த் தித்து; பின்பு தன்தலையையரிந்துகொடுப்பதும் செய்தானென்று ப்ரஸித் தமிறே.

அகூ. உபாயோபேயாதிகாரங்களுக்குடலாக மற்றும் சொன்ன வநு ஷ்டாநங்கள்போலன்றிக்கே, உபாயதயா சாஸ்த்ரஸித்தமாகை யாலே, அநந்யஸாதநனுக்கு அநுஷ்டாநமானவிந்தேஹத்யாகம் ராகப் ராப்தமாகையாலே துஸ்த்யஜமாயிருந்ததேயாகிலும், உபாயகோடியிலே அந்வயித்தன்றி நில்லாதே யென்ன வருளிச்செய்கிறார், (அநுஷ்டாந மும்) என்றுதுடங்கி. அதாவது-அநுஷ்டாநமாகச்சொன்ன ஸ்வசக்திக்

ஆ.—பூர்வாதிகாரிகளுக்குண்டான ஸ்வசக்தித்யாகாதிவிசிஷ்டாநுஷ்ட்டாநம் உத்தராதிகாரிகளில் ஒருவருக்குண்டான ஸ்வசரீரத்யாகமாகிற பூமரத்ருஷ்ட்யா தோன்றுகிற அநநுஷ்ட்டாநமும், ஸ்வதந்த்ரக்ருத்யமான வுபாயகோடியி லொருபடியாலுமந்வயியாது; ஸ்வரூபத்திலும் ப்ராப்யத்திலுமந்வயிக்குமித்தனை.

௯௦. இப்ப்ராவண்யம் விசிஷ்டவேஷவிரோதியிலே மூட்டுகிறவளவேயோ, நிஷ்க்ருஷ்டவேஷ விரோதிகளிலும் மூட்டுகிறதில்லையோ வென்கிறார், (அநந்யோபாயத்வமும்) இத்யாதியால். "நாராயணனே.... பறைதருவான்" என்கிற வநந்யோபாயத்வமும் குலையும்படியான "நோற்கின்ற நோன்பினைக்குறிக்கொள்" என்கிற வுபாயாந்தரப்ரவ்ருத்தியும், "உனக்கே நாமாட்செய்வோம்" "உனக்கேயாளாய்த்திரிகின்றோம்" என்கிற வநந்யோபேயத்வமும் குலையும்படியான "யாமணிவோம்" "நமக்கே நலமாதலில்" என்று ஸ்வாரஸத்வாந்வயமாகிற உபேயாந்தர ப்ரவ்ருத்தியும், "தேவர்திதே

---

௯௦. அநந்யோபாயத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதைவத்வமும் குலையும்படியான ப்ரவ்ருத்தி காணாநின்றோமிறே.

ஜீ.—யாகாதிகளும் ப்ரேமாதிகளும் உபாயோபேயாதிகாராந்தர்ப்பூதமாகையாலே உபாயகோடியிலந்வயியாதாப்போலே, அநநுஷ்ட்டாநமாகச்சொன்னஸ்வதேஹத்யாகமும், உபாயபுத்த்யாவநுஷ்ட்டிதமன்றிக்கே ராகப்ராப்தமாகையாலே உபாயகோடியில் அந்வயியாது; உபேயாதிகாரத்திலே யந்தர்ப்பவிக்குமத்தனையென்கை. உபாயதயா சாஸ்த்ரஸித்தமேயாகிலும், உபாயபுத்த்யாவநுஷ்ட்டிதமானதுக்கேயிறே உபாயத்வமுள்ளது: அங்ஙனன்றாகில்ப்ரபந்நனானவன் உபாயபுத்தியற உபேயபுத்த்யா பண்ணுகிற புண்யக்ஷேத்ரவாஸாதிகளுமுபாயகோடியிலே அந்வயிக்கவேணுமிறே.

௯௧. அன்றிக்கே, இந்த ப்ரபத்திதான் உபாயகோடியிலே அந்வயித்ததாகிலும் அநந்யோபாயத்வத்துக்குக் குலைத்தல் வருமித்தனையிறே; அது ப்ரேமபரவசர்க்கவத்யமன்றென்கைக்காக ப்ரேமபரவசர்ப்ரவ்ருத்தியை தர்சிப்பிக்கிறார், (அநந்யோபாயத்வமும்) என்று துடங்கி. அநந்யோபாயத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - "திருந்தவே நோற்கின்றேன்" "நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்" "குதிரியாய் மடலூர்தும்" "ஒரு காமம்" "ஊராதொழியேன் நான் - வாரார்பூம்பெண்ணை மடல்" "உலகறிய வூர்வன்நான் - மன்னிய பூம்பெண்ணை மடல்" என்று-நோன்புநோற்கை, மடலெடுக்கை முதலான வ்யாபாரங்களிலே யிழிகை. அநந்யோபேயத்வம் குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - அத்தலைக்கதிசயத்தை விளைக்கையே புருஷார்த்தமென்றிருக்கை தவிர்ந்து, "நமக்கேநலமாதலில்" என்றும், "தாமலர்தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்" என்றும் தனக்கதிசயந்தேடத்துடங்குகை. அநந்யதைவத்வம்குலையும்படியான ப்ரவ்ருத்தியாவது - "காமதேவா வுன்னையுமும்பியையும் தொழுதேன்" "பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான்" என்று-காமன்பக்கலிலே தேவதாபுத்திபண்ணி யாராதிக்கை. (காணாநின்றோமிறே) என்றது - ப்ராப்யவஸ்துவில் ப்ராவண்யாதிசயத்தாலே பேரளவுடையவர்கள்பக்கலிலுமுண்டாகக் காணாநின்றோமிறே யென்கை. முன்பு சொன்ன ப்ரவ்ருத்திக்குபாயகோட்யந்வயம் வஸ்துகத்யா வருமென்று கொள்ளுகிறமாத்ரமிறே; அங்ஙனன்றிக்கே, நேரேவுபாயபுத்த்யா

ஆ.-வனைச் ... சேவி" க்கையாகிற வநந்யதைவத்வமுங்குலையும்படியான் "உன்னையுமும்பியையும்தொழுதேன்" என்கிற வநந்யசேஷத்வ விருத்தப்ரவ்ருத்தியும், உபேயப்ராவண்யமடியாக "மயர்வறமதிநலமருள" ப்பெற்றுத்தெளியக்கண்டவர்களுக்குமுண்டாகக் காணாநின்றோமிறே.

௯௧. பாரதந்த்ர்யபோகத்வாநந்யார்ஹத்வபஞ்ஜகங்களான விநதப்ரவ்ருத்திகள், ஹேதுபேதத்தைப்பற்ற ச்லாக்யங்களாயிருக்குமென்கிறார், (ஜ்ஞாநவிபாகம்) இத்யாதியால். ஸாக்ஷாத்காரஜ்ஞாநத்தின் விசேஷபரிபாகரூபபக்திகார்யமாய் கர்தவ்யாகர்தவ்யவிவேகநிரோதாயகபாரவச்யரூபமானவஜ்ஞாநத்தாலே, பக்திபாரவசர்க்கு ஸ்வசரீரத்யாககாமபஜநாதியாய்வருமவையான வ்ருத்திவிசேஷங்களெல்லாம், ச்லாக்யங்களுமாய ப்ரார்த்தநீயங்களுமாகையாலே (அடிக்கழஞ்சுபெறும்). ஜ்ஞாநதசையில் வருமஜ்ஞாநகார்யங்களாய்த்து ஸ்வரூபஹாநியைப் பிறப்பிக்குமத்தனையல்லது, பக்திபாரவச்யதசையில் வருமஜ்ஞாநகார்யம் ஸ்வரூபவர்த்தகமத்தனை யென்றபடி.

௯௨. இந்த பக்திப்ரேரிதவ்ருத்திகள், பூர்வபாவியான வுபாயப்ரதிபந்தகங்களாகாதென்கிறார் மேல், (உபாயபலம்)இத்யாதியால். உபாயஜ்ஞாநாநந்தரபாவியான உபேயப்ராவண்யகார்யங்களாய்க்கொண்டு இவையுண்

---

௯௧. ஜ்ஞாநவிபாககார்யமான வஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சுபெறும்.

௯௨. உபாய பலமாய் உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமது உபாயப்ரதிபந்தகமாகாது.

ஜீ.—வநுஷ்டிதமானவையிறே யிவை; ஆகையால் ப்ரேமபாவசர்க்கிது அவத்யமன்றென்று கருத்து.

௯௧. இத்தனையும் சலக்கத்தாலே வந்தவையிறே, அஜ்ஞாநமூலமாய வருமவையொன்றுமாதரணீயமன்றேயென்ன வருளிச்செய்கிறார், (ஜ்ஞாந)இத்யாதியாலே. (ஜ்ஞாநவிபாக)மாவது—"ஞானங்கனிந்தநலம்" என்கிறபடியே ஜ்ஞாநத்தினுடைய பரிபாகரூபையானபக்தி; அதின்கார்யமான (அஜ்ஞாந)மாவது அந்தபக்த்யதிசயத்தாலே வரும் ப்ராப்தாப்ராப்தவிவேகாபாவம்; அத்தாலேவரும் ப்ரவ்ருத்திவிசேஷங்களெல்லாம் (அடிக்கழஞ்சுபெறும்) என்றது அதி ச்லாக்யங்களாயிருக்குமென்றபடி. கர்மநிபந்தநமான வஜ்ஞாநத்தாலே வருமவையே ஹேயங்களென்று கருத்து.

௯௨. ஆனாலும், இவ்வதிப்ரவ்ருத்தி இத்தலையில் ப்ரவ்ருத்தியிலொன்றையும் ஸஹியாதஸித்தோபாயத்தின் கார்யகரத்வத்துக்குப்ரதிபந்தகமாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (உபாய). இத்யாதியாலே. (உபாய பலம்) என்றது-ஸித்தோபாயமான வவன்பண்ணின க்ருஷிபலமென்றபடி. "மயர்வறமதிநலமருளினன்" "பேரமர்காதல்கடல்புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்" என்றும் ஏவம்பூதப்ரவ்ருத்திஹேதுவான பக்திக்கு உத்பாதகனும் வர்த்தகனுமவனேயிறே; ஆகையாலே, பக்திபாரவச்யநிபந்தநமான விப்ரவ்ருத்தியை உபாயபலமென்கிறது (உபேயாந்தர்ப்பூதமாயிருக்குமது) என்றது ப்ராப்யத்வரையின் முறுகுதலாலே கண்ணஞ்சுழலையிட்டு இத்தலை படுகிற வல்லமாப்பெல்லாம் நம்மை யாசைப்பட்டிப்படிபடப் பெறுவதே என்று அவன்முகமலருகைக்குறுப்பாகையாலே, மடலெடுக்கை துடக்கமான விந்த ப்ரவ்ருத்திகள் அவன் முகமலர்த்திக்காகப் பண்ணும் கைங்கர்யத்தோபாதியாய்க்கொண்டு, உபேயத்திலே

ஆ.—டாகையாலே, உபாயத்தின் பலமாய், உபாயஸ்வீகாராநந்தரபாவிகளான ஆநுகூல்யாதிகள்போலே, பகவத்கைங்கர்யரூபோபேயத்திலே அந்தர்ப்பூதமாயிருக்கிற கர்மபஜநாதியான விவைதனக்கு, பூர்வபாவியான வுபாயத்துக்கு அந்யதயாபாதகப்ரதிபந்தகமாகாது சேஷிக்கதிசயகரங்களாகையாலே கைங்கர்யரூபஸித்தஸாத்யஸமாநமென்கிறார்.

௯௫. தத்ப்ராப்த்யர்த்தமாக வருமிவற்றுக்கு ஸாதநத்வந்தான் வரில் தட்டென் என்கிறார், (விளம்பாஸஹம்) இத்யாதியால். பலவிளம்பத்தை ஸஹியாதென்றன்றோ ஸித்தஸாதநந்தனக்கு உபாயாந்தரங்களைப்பற்ற ஏற்ற முண்டாகிறது ; அத்தைப்பற்றவும் விளம்பாஸஹத்வமிவற்றுக்கே யதிசயித்திருக்கையால், இவைதானும் ஸித்தோபாயவிசேஷங்களானால் வரும்தட்டென் என்றுகருத்து. இவன் இவற்றிலே முயல்வதற்குமுன்னே, அவனை த்வரித்துக்கொண்டுவரப்பண்ணுமவையிறே யிவை. ஆனால் ஸித்தோபாய த்வித்வம் வாராதோவென்னவேண்டா, ஒன்று ஜ்ஞாநதசையிலும் ஒன்று பக்திதசையிலும் வருகையால் ; ஏகதசையில் வரில்லிறே ஸமவிகல்பம்வருவது.—அன்றிக்கே, சேஷிக்கதிசயகரமாகையாலே ஸாத்யமான

௯௫. ஸாத்யஸமாநம் விளம்பாஸஹமென்றிறே ஸாதநத்

ஜீ.—அந்தர்ப்பூதமாயிருக்கை. (உபாயப்ரதிபந்தகமாகாது) என்றது - ஏவம்ப்பூதமானது உபாயத்தினுடைய கார்யகரத்வத்துக்கு விலக்காகாதென்றபடி.

ஆ.—போகமடங்க வுள்ளபடிநிரூபித்தால் து:க்கப்ராயமாகையாலே, தத்ஸாதனமடங்க ஹிம்ஸையாமென்றே முமுக்ஷுக்களுக்குத் தோற்றுகையால்; பகவத்பாரதந்த்ர்யத்தின் மிடத்தையுருக்கும் ஸ்வாதந்த்ர்யப்ரமகாரணமான ஸ்வர்காதிஸாதநப்ரவ்ருத்தியை, ஸ்வரூபஜ்ஞர் பரஹிம்ஸையென்றேயிறே நினைத்திருப்பது.

கங௦. இப்படி விதேயமானவித்தை மீண்டும் நிஷேதிக்கிறதென் என்ன வருளிச்செய்கிறார் மேல், (இதுதான்) இத்யாதியால். பரஹிம்ஸாநிவர்த்தகத்வேந விஹிதமானவிதுதான், நாஸ்திகரான தம:ப்ரசுரரைப் பற்ற விதிக்கப்பட்டு சாஸ்த்ரவிச்வாஸமுடைய ரஜ:ப்ரசுரரான ஆஸ்திகரைப்பற்ற நிஷேதிக்கப்படுகிற பூர்வவிஹிதஹிம்ஸையாகிற வபிசாரகர்மம்போலே, அந்யசேஷத்வமற்ற வாத்மாக்களைப்பற்ற "𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃" "நிதித்த்யாஸிதவ்ய:" என்றுவிதிக்கப்பட்டு, பாரதந்த்ர்யஜ்ஞாநம்பிறந்த பரமஸாத்த்விகரைப்பற்ற "𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯" "பரித்யஜ்ய" என்று இந்த வுபாஸநம் நிஷேதிக்கவும்படத் தட்டில்லை.

கஙக. நிஷேத்த்யங்களான விவற்றையேதுக்காக விதித்ததென்ன வருளிச்செய்கிறார்மேல் (அத்தை) இத்யாதியால். க்ரூரகர்மமான வந்த வபி

கங௦. இதுதான் பூர்வவிஹிதஹிம்ஸைபோலே
விதிநிஷேதங்களிரண்டுக்கும் குறையில்லை.
கஙக. அத்தை சாஸ்த்ரவிச்வாஸத்துக்காக விதித்தது;

ஜீ.—சித்துப்பண்ணும் பச்வாலம்பநாதியுக்தகாம்யகர்மம்விசேஷஜ்ஞர்க்கு பரஹிம்ஸாப்ராயமென்னலாம்படி அத்யந்தநிக்ருஷ்டமாயிருக்கையாலே, இவ்வாகாரத்தையிட்டு அதுதன்னை பரஹிம்ஸையென்றருளிச்செய்தாராகவுமாம். சாஸ்த்ரவிஹிதமுமாய் பகவதேகவிஷயமுமாயிருக்கிற ப்ராபகாந்தரத்தை, ஜ்ஞாநிகளுக்கபாயமென்றவோபாதி, இதுவுமதிகாரிவிசேஷத்தையிட்டுச் சொல்லலாமிறே. "𑌅𑌥 𑌪𑌾𑌤𑌕𑌭𑍀𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌂" "அத பாதகபீதஸ்த்வம்" என்று-உபாயாந்தரத்தை பாதகமாகச்சொல்லிற்றிறே தர்மதேவதையும். புபுக்ஷுவுக்குபாதேயமான புண்யந்தானே முமுக்ஷுவுக்கு பாபசப்தவாச்யமாகாநின்றதிறே. ஆக, எல்லாவற்றாலும் - இவ்விடத்தில் காம்யகர்மத்தையே சொல்லுகிறது. இப்படிதான் யோஜிக்கிறது உபாஸநவிதிக்கு நிவர்த்யம் காம்யகர்மமாக இவர்தாமே பரந்த ரஹஸ்யத்திலே யருளிச்செய்கையாலே.

கங௦. ஆனாலிப்படி விதித்தத்தைப் பின்னை நிஷேதிக்கிறதென் என்ன வருளிச்செய்கிறார், (இதுதான்) என்றுதுடங்கி. (இதுதான்) என்கிறது - கீழ்ச்சொன்ன உபாஸநத்தை. (பூர்வவிஹிதஹிம்ஸை)யாவது - "𑌶𑍍𑌯𑍇𑌨𑍇𑌨𑌾𑌭𑌿𑌚𑌰𑌨𑍍 𑌯𑌜𑍇𑌤" "ச்யேநேநாபிசரந் யஜேத" என்று ப்ரதமத்திலே விதிக்கப்பட்ட அபிசாரகர்மம்; அது தம:ப்ரசுரராய் நாஸ்திகராயிருப்பாரைப்பற்ற விதிக்கப்பட்டு, ஆஸ்திகராய் காரீர்யாதிகாம்யகர்மங்களிலே யிழிகைக்கு யோக்யரான ரஜ:ப்ரசுரரைப்பற்ற நிஷேதிக்கப்படுகிறப்போலே, இவ்வுபாஸநமும் ஸ்வாதந்த்ர்யாந்யசேஷத்வநிவ்ருத்திபூர்வகமாக பகவச்சேஷத்வத்திலே யூன்றுவிக்கைக்கு யோக்யரான ஸத்த்வப்ரசுரரைப்பற்ற விதிக்கப்பட்டு, பாரதந்த்ர்யஜ்ஞாநம் பிறந்து பகவதேகோபாயத்வத்திலே யூன்றுகைக்கு யோக்யரான பரமஸத்த்வநிஷ்டரைப்பற்ற நிஷேதிக்கப்படவும் குறையில்லை.

கஙக. இப்படி நிஷேதிக்கப்படுமவையான விவைதன்னை அடியிலே யெதுக்காக விதித்ததென்ன வருளிச்செய்கிறார், (அத்தை)என்றுதுடங்கி.

ஆ.—சாரகர்மத்தை, சாஸ்த்ரமில்லை யென்றிருக்கும் நாஸ்திகனுக்கு, சாஸ்த்ரவிச்வாஸமுண்டாகைக்காக விதித்தது; அஹங்காரகர்ப்பமான வைதபக்த்யுபாயத்தை, அந்யசேஷமென்று ப்ரமித்த வந்யதாஜ்ஞாநிக்கு, ஸ்வரூபம் பகவச்சேஷமென்று விச்வஸித்து ஸத்தைபெறுகைக்காக விதித்தது. சாஸ்த்ரவிச்வாஸஜநகமானவது தத்ப்ரவர்த்தகஸ்வரூபஜ்ஞாநஜநகமாகமாட்டாதாப்போலே, ஸ்வரூபவிச்வாஸஜநகமானவிதுவும் தத்யாதாத்ம்யவிச்வாஸஜநகமாகமாட்டாதென்று கருத்து. அத்தை விதித்து மீள நிஷேதிக்கைக்கடி ஹிம்ஸாரூபமாய்க்கொண்டு பாபஹேதுவாகையாலே; இத்தை விதித்து மீள நிஷேதிக்கைக்கடி அஹங்காரகர்ப்பமாய்க்கொண்டு ஸ்வரூபநாசகமாகையாலே.

௧௯௨. இவை யிவனுக்கு விரோதிகளென்னுமிடமொத்திருந்ததே யென்ன, அதிலுமிது கொடிதென்கிறார்மேல், (அது) இத்யாதியால். விசிஷ்டவேஷவிரோதியான வைதவபிசாரம் துக்காநுபவஸாதநங்களான சிலதேஹங்களை பரிக்ரஹிப்பித்து ஆத்மஸ்பர்சியாகாமல் தோல்புரையானதேஹத்தளவிலே போய்விடும். நிஷ்க்ருஷ்டவேஷவிரோதியான வைதஸ்வயத்நப்ரவ்ருத்த்யஹங்காரம் சேஷத்வவேஷமானஸ்வரூபஸ்பர்சியாய்க்கொண்டு தந்நாசகமாய் ப்ராப்யாநுபவமளவாகத் துடரும் மர்மஸ்பர்சி.

௧௯௩. அவ்வளவேயன்று, ஸ்வரூபவிரோதியான விதுதான் காயக்லேசகரகர்மஸாத்த்யமாகையாலே, எலியெலும்பனானவிவனால் செய்துதலைக்கட்டவொண்ணாதபடி துஷ்கரமுமாய், முகங்கொள்ள வரிதாயிருக்கும்.

இத்தை ஸ்வரூபவிச்வாஸத்துக்காக விதித்தது.

௧௯௨. அது தோல்புரையேபோம்; இது மர்மஸ்பர்சி.

௧௯௩. இதுதான் கர்மஸாத்த்யமாகையாலே துஷ்கரமுமாயிருக்கும்.

ஜீ.—அதாவது—"శ్యేనచిత్రశాస్త్రవశతో ఉపాయో ఽభిచారశ్రుతిః" "சடசித்தசாஸ்த்ரவசதோ உபாயோ உபிசாரச்ருதி:" என்கிறபடியே அபிசாரகர்மத்தைவிதித்தது சாஸ்த்ரத்தை யில்லையென்றிருக்கும் நாஸ்திகனுக்கு சாஸ்த்ரவிச்வாஸம்பிறக்கைக்காக; உபாஸநத்தை விதித்தது தன்னைஸ்வதந்த்ரனென்றும் அந்யசேஷபூதனென்றும் ப்ரமித்துப்போந்த சேதநனுக்கவையிரண்டும்வந்தேறி, பகவச்சேஷத்வமே நிலைநின்றவேஷம் என்று தன் ஸ்வரூபத்தில் விச்வாஸம் பிறக்கைக்காக வென்கை.

௧௯௨. இப்படி வேறோவிச்வாஸத்துக்காக விதித்து நிஷேதித்தமை ஒத்திருந்ததாகிலும், இவ்வுபாஸநத்தை விடாமல் பற்றிநின்றால் அபிசாரகர்மம்போலே க்ரூரமன்றேயிதுவென்ன, அதிலுங்காட்டில் க்ரூரமென்கிறார், (அது) என்று துடங்கி. பரஹிம்ஸாரூபமான வைதவபிசாரகர்மம், தேஹாத்மாபிமாநிசெயலாய் விசிஷ்டவேஷவிரோதியாய், அத்தால்வரும் பலமும் சில துக்காநுபவமாத்ரமாய்க்கொண்டு மேலெழப் போகையாலே (தோல்புரையேபோம்) என்கிறது; அஹங்காரகர்ப்பமான வைதவுபாஸநம், ஆத்மஜ்ஞாநம் பிறந்தவன்செயலாய் நிஷ்க்ருஷ்டவேஷவிரோதியாய் பகவதேகபாரதந்த்ர்யரூபஸ்வரூபநாசகமாகையாலே (மர்மஸ்பர்சி) என்கிறது.

௧௯௩. இவ்வளவேயன்று, இதுதான் துஷ்கரமுமென்கிறார், (இதுதான்) இத்யாதியாலே. இப்படி ஸ்வரூபவிரோதியாயிருக்கிற விவ்வுபாஸநந்தான் "యజ్ఞేన దానేన తపసా నాశకేన బ్రాహ్మణా వివిదిషన్తి" "అవిద్యయా మృత్యుం తీర్త్వా విద్యయాఽమృతమశ్నుతే" "సర్వాపేక్షా చ" "యజ్ఞాదిశ్రుతేరశ్వవత్" "కషాయప

ஆ.—ஆக துஷ்கரமுமாய் மர்மஸ்பர்சியுமாய் நிஷித்தமுமாய் க்ஷுத்ரமுமாய் அஹங்காரமிச்ரமுமாய் சோகபயஜநகமுமாய் அபாயமுமாய் ஸ்வரூபவிரோதியுமான ப்ராபகாந்தரங்களை, ஸ்வரூபத்துக்கப்ராப்தமென்றே விடவேணுமென்று கீழோடே ஸம்பந்தம்.

கஙச. ஆகில், ஜ்ஞாநவிசேஷமாய்க்கொண்டு தத்வத்ரிக்தோபாயமான ப்ரபத்திக்கும் உக்ததோஷணம்வருமென்று சங்கிக்கவேண்டா வென்கிறார்மேல், (ப்ரபத்திக்கு) இத்யாதியால். பகவச்சரணாரவிந்தசரணவரணரூபமான ப்ரபத்த்யுபாயத்துக்கு, அபாயத்வாதிதுஷ்கரத்வாந்தமாக உபாயாந்தரங்களுக்குச்சொன்ன ஸ்வரூபவிரோதிகளான விக்குற்றங்களொன்றுமில்லை; வரணம் ஸ்வகதமாய்நின்று ஸ்வரூபயாதாத்ம்யமான பாரதந்த்ர்யவிரோதியாம் குற்றமே யுள்ளது.

கஙரு. இதுக்கு அக்குற்றமற்றமையைத் தோற்றுவிக்கிறார்மேல், (ஆத்மயாதாத்ம்ய) இத்யாதியால். ஆத்மாவின் பாரதந்த்ர்யத்தை யுணருகையாகிற ஆத்மயாதாத்ம்யத்தின் கார்யமான ஸ்வயத்நநிவ்ருத்திரூப

கஙச. ப்ரபத்த்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை.

கஙரு. ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநகார்யமாகையாலே,

ஜீ.—కర్మాణి జ్ఞానస్తు పరమా గతిః । కషాయే కర్మభిః పక్వే తతో జ్ఞానం ప్రవర్తతే" "జన్మాన్తర సహస్రేషు తపోజ్ఞానసమాధిభిః । నరాణాం క్షీణపాపానాం కృష్ణే భక్తిః ప్రజాయతే" "யஜ்ஞேந தாநேந தபஸாநாசகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி" "அவித்யயா ம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமச்நுதே" "ஸர்வாபேக்ஷா ச, யஜ்ஞாதிச்ருதேரச்வவத்" "கஷாயபக்திः கர்மாணி ஜ்ஞாநம் து பரமா கதிः । கஷாயே கர்மபிः பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரவர்த்ததே" "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபிः । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்திः ப்ரஜாயதே" இத்யாதிகளிற்சொல்லுகிறபடியே காயக்லேசகரமான கர்மாநுஷ்டாநத்தாலே ஸாதிக்கப்படுமதாகையாலே, அசக்தனுனைவிவனால்செய்து தலைக்கட்டவுமரிதாயிருக்குமென்கை.—ஆக, (ப்ராபகாந்தரபரித்யாகத்துக்கும்) என்றுதுடங்கி இவ்வளவாக, உபாயாந்தரதோஷம் விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது.

கஙச. இப்படி ப்ராபகாந்தரத்துக்கு அநேகம் குற்றங்களை ப்ரதிபாதித்தீர், ப்ரபத்த்யுபாயத்துக்கொரு குற்றமுந்தானில்லையோ வென்னவருளிச்செய்கிறார், (ப்ரபத்த்யுபாயத்துக்கு) என்றுதுடங்கி. (இக்குற்றங்கள்) என்று-ஸ்வரூபவிரோதம்முதலாக துஷ்கரத்வபர்யந்தமாகச் சொன்னவையெல்லாவற்றையும் பராமர்சிக்கிறது. (ஒன்றுமில்லை) என்றது - ஒருதோஷமும் இதின்பக்கலில்லை யென்றபடி.—(இக்குற்றங்களொன்றுமில்லை) என்கையாலே - மற்றொரு குற்றமுண்டென்னுமிடந்தோற்றுகிறது; அதாவது - வஸ்துதः உபாயத்வம் தனக்கின்றிக்கே யிருக்கச்செய்தே, ஆபாதப்ரதீதியிலே உபாயப்ரதிபத்த்யர்ஹமாம்படி யிருக்கை.

கஙரு. இக்குற்றங்களிதுக்கில்லையென்னுமத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, இதினுடைய ஸ்வரூபோசிதத்வஸௌகரத்வங்களை யருளிச்செய்கிறார், (ஆத்மயாதாத்ம்ய) இத்யாதியாலே. இப்ப்ரபத்தி (ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநகார்யமாகை)யாவது - திருமந்த்ரத்தில் மத்யமபதத்திற்சொல்லுகிறபடியே, ஆத்மாவினுடைய யதாவஸ்த்திதவேஷமான பகவதத்யந்தபாரதந்த்ர்யத்தை யுணருகையாலே வந்ததாயிருக்கை. (ஸ்வரூபத்துக்குசிதமாகை)யாவது - அந்த பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபத்துக்கநுரூபமா

ஆ.—மாயிருக்கையாலே, பரதந்த்ரஸ்வரூபத்துக்குசிதமாய், "சிற்றவேண்டா" சிற்றுதல்-சிதறுதலாய், பரக்க ஆயாஸிக்கவேண்டாவென்று சொல்லுகிறபடியே, ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தியாலே ஸாதிக்கப்படுமதாகையாலே, காயக்லேசதுஷ்கரமின்றியே, முகங்கொள்ளும்படி ஸுகரமுமாயிருக்கும். இத்தால் பரதந்த்ரஸ்வரூபத்துக்கநுசிதமாய் துஷ்கரமுமான வுபாயாந்தரத்துக்குள்ள குற்றமிதுக்கில்லை யென்றதாய்த்து.

கஙகூ. அத்யவஸாயஜ்ஞாநவிசேஷமான விதுவே யமையுமோ வவனைப் பெறுகைக்கென்ன, இவ்வளவல்லதவனுக்கிவனால் செய்யலாவதில்லையென்கிறார், (பூர்ணவிஷயம்) இத்யாதியால். ஸ்வப்ராப்யபூதன் அவாப்தஸமஸ்தகாமனான பரிபூர்ணவிஷயமாகையாலே, அபரிச்சிந்நமான வவன் பெருமைக்கீடாக அவனை த்ருப்தனாக்கும் பச்சை, அபரிபூர்ணனாய் அதிக்ஷுத்ரனான விவனால் வருந்தியு மிடவொண்ணாது.

ஸ்வரூபத்துக்கு உசிதமுமாய், "சிற்ற வேண்டா" என்கிறபடியே நிவ்ருத்திஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும்.

கஙகூ. பூர்ணவிஷயமாகையாலே பெருமைக்கீடாகப் பச்சையிட வொண்ணாது.

ஜீ.—மிருக்கை. ("சிற்றவேண்டா") என்றது-சிற்றுதல்-சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. அதாவது-ஒரு வ்யாபாரம்பண்ணவேண்டா வென்றபடி. (நிவ்ருத்திஸாத்யமாகையாலே ஸுகரமுமாயிருக்கும்) என்றது- "భగవత్ప్రవృత్తివిరోధిస్వప్రవృత్తినివృత్తిః ప్రపత్తిః" "பகவத்ப்ரவ்ருத்திவிரோதிஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி: ப்ரபத்தி:" என்கிறபடியே - ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தியாலே ஸாதிக்கப்படுமதாகையாலே, எளிதாகச்செய்யலுமாயிருக்குமென்கை.—இவை இரண்டையும்சொல்லவே, கீழ்ச்சொன்ன தோஷங்களொன்று மிதுக்கில்லையென்னுமிடம் ஸித்தித்தபடியென் என்னில்; அபாயத்வபயஜநகத்வ சோகஜநகத்வாஹங்காரமிச்ரதயாகிஷித்தத்வாவத்யகரத்வங்கள் ஸ்வரூபவிரோதித்வத்தைப்பற்றிவருகிறவையாகையாலும், பலவிஸத்ருசத்வம் இது பலஸாதநமன்றிக்கே ஸித்தோபாயமே பலஸாதநமாய் இது தத்வரணமாத்ரமாய் அதிகாரிவிசேஷணமாயிருப்பதொன்றாகையாலே இதின்பக்கல் வருகைக் கவகாசமில்லாமையாலும், இவ்வாறுதோஷமுமிதுக்கில்லாமை (ஸ்வரூபத்துக்குசிதம்) என்றதிலே ஸித்தமாமிறே; கர்மஸாத்யதயா வரும் துஷ்கரத்வமில்லையென்னுமிடம், (நிவ்ருத்தி ஸாத்யமாகையாலே ஸுகரம்) என்றதிலே ஸுஸ்பஷ்டமிறே. ஆகையால், ஸ்வரூபௌசித்யஸுகரத்வங்களாகிற விவையிரண்டு மிதுக்குண்டென்னவே, கீழ்ச்சொன்ன தோஷங்களொன்று மிதுக்கில்லையென்னுமிடம் ப்ரகாசிதமாய்த்து.

கஙகூ. இப்படி உபாயம் அவனென்று அத்யவஸித்து ஸ்வப்ரவ்ருத்தியில் நிவ்ருத்தனாயிருந்துவிட வமையுமோ, தத்ஸந்தோஷார்த்தமாக விவன் சிலபச்சையிட வேண்டாவோவென்னவருளிச்செய்கிறார், (பூர்ணவிஷயம்) என்றுதுடங்கி. அதாவது - லோகத்தில் பச்சையிடுவார் அவ்வோவிஷயங்களின் தரத்துக்கீடாகவிறே யிடுவது; இங்கும் பச்சையிடப்பார்க்கில் அப்படியிடவேணுமிறே; அவன் அவாப்தஸமஸ்தகாமதயா பரிபூர்ணனாயிருக்குமவனாகையாலே, அவனுடைய வைபவத்துக்கநுகுணமாக இவனாலொரு பச்சையிடப்போகாதென்கை.

ஆ.—௧௩௭. இவன் சிறிது பச்சையிடாதிருக்க அவனுக்கு ஸந்தோஷம் விளையுமோவென்ன வருளிச்செய்கிறார் மேல்; அநாதிகாலமேபிடித்து விமுகனாய்ப்போந்த விவனுடைய வாபிமுக்யத்தை ஸூசிப்பிக்குமதான வைமுக்யத்தின் அபிஸந்திவிராமமாத்ரத்திலே, விமுகனாய்க்கொண்டே போரக்கடவோமென்ற நினைவுகுலையப் பெற்றோம், இனி யிவன் நமக்கு செய்யவேண்டுவதென் என்று அவன் திருவுள்ளத்திலே அநவரதாபரிமித ஸந்தோஷம் பல்பர்யந்தமாக விளையும்.

௧௩௮. ஆனாலும் பூர்ணவிஷயத்தை அபூர்ணன் வந்துகிட்டப்போமோவென்ன, 'இவனுக்கு ஜநகனான் வவன்பூர்தி, அந்யனென்று கைவாங்காதே நம் ஜநகனானவிவன்பூர்தியெல்லாம் நமதன்றோவென்று களித்து மேல்விழுகைக்கு ஹேதுவித்தனை; தேங்கி பிற்காலிடுகைக்கு ஹேது வன்றென்கிறார்.

௧௩௯. இப்படி அல்பஸந்துஷ்டனுமிதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார், ("పత్రం పుష్పమ్" "பத்ரம் புஷ்பம்.") இத்யாதியால்: "పత్రం పుష్పం ఫలం

---

௧௩௭. ஆபிமுக்யஸூசகமாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும்.

௧௩௮. பூர்தி கைவாங்காதே மேல்விழுகைக்கு ஹேதுவித்தனை.

௧௩௯. "పత్రం పుష్పమ్" "பத்ரம் புஷ்பம்"

ஜீ.—௧௩௭; ஆனால் அவனுக்கிவனளவில் ஸந்தோஷம்விளையும்படியென் என்ன் வருளிச்செய்கிறார்; (ஆபிமுக்ய) இத்யாதியாலே, அதாவது-அநாதிகாலம் "யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை" யே நிட்டுக்கொண்டு தன்பக்கல் விமுகனாய்ப்போந்த விவன், அந்நினைவு குலைந்து தன்பக்கலபிமுகனானமைக்கு ஸூசகமானதொரு வ்யாபாரம்பெற்றவளவிலே, இத்தனை காலம் விமுகனாய்ப்போந்தவன் இன்று அபிமுகனாகப்பெறுவதே யென்று அவன் திருவுள்ளம் மிகவுமுகக்குமென்றபடி.

௧௩௮. அவனப்படியிருந்தாலும், அவன்பூர்தியானது, அகிஞ்சநரான நம்மாலவனை யுகப்பிக்கவொண்ணுகப்போகாதென்று இவன் கைவாங்கும்படி பண்ணாதோ வென்ன, வருளிச்செய்கிறார்,-(பூர்தி) என்று துடங்கி. அதாவது - அவனுடைய அவாப்தஸமஸ்தகாமத்வம், ஆச்ரயணோந்முகனான விவன் நம்மாலவனை யொருபடியாலும் ஸந்தோஷிப்பிக்கப்போகாது என்று ததாச்ரயணத்திலின்றும் மீளுகையன்றிக்கே, நாமிட்டதுகொண்டு த்ருப்தனாகவேண்டாத பரிபூர்ணனாகையாலே, நம்பக்கல்பெற்றது கொண்டு ஸந்தோஷிக்குமென்று அபிநிவேசித்துப் பற்றுகைக்குடலாமித்தனை யென்கை. அன்றிக்கே அவன்பூர்தி அவனை இப்படி ஸந்தோஷிக்கவொட்டுமோ, உபேக்ஷித்துக் கைவாங்கப்பண்ணாதோவென்ன, (பூர்தி) இத்யாதியாலே யருளிச்செய்கிறாராகவுமாம். அதாவது அவனுடையபூர்தியானது, இவன் பச்சையிட்டிலன் என்று அநாதரித்து அங்கீகாரத்தினின்றும் கைவாங்காதே, ஆபிமுக்யஸூசகமாத்ரத்துக்குமேற்பட நமக்கிவன் சில செய்யவேண்டுவதுண்டோ" என்று விரும்பிக் கைக்கொள்ளுகைக்குடலாமித்தனை யென்கை.

௧௩௯. இப்படி யவன் அல்பஸந்துஷ்டனென்னுமதுக்கு ப்ரமாணமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார்மேல், ("పత్రం పుష్పమ్" "பத்ரம் புஷ்பம்") என்று துடங்கி. "పత్రం పుష్పం ఫలం తోయం యో మే భక్త్యా ప్రయచ్ఛతి|తదహం

ஆ.—తోయం యో మే భక్త్యా ప్రయచ్ఛతి । తదహం భక్త్యుపహృతమశ్నామి ప్రయతాత్మనః” “பத்ரம் புஷ்பம்பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்ச்சதி। ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந:” என்று பக்திபாரவச்யத்தாலே இவனடைவுகெடக்கொடுக்குமாப்போலே, நானும் ஸ்நேஹபாரவச்யத்தாலே அடைவுகெடஸ்வீகரிப்பன். “అన్యత్పూర్ణాదపాం కుమ్భాదన్యత్పాదావనేజనాత్ । అన్యత్కుశలసమ్ప్రశ్నాన్న చేచ్ఛతి జనార్దనః.” “அந்யத் பூர்ணாதபாம் கும்பாதந்யத் பாதாவநேஜநாத்। அந்யத் குசலஸம்ப்ரச்நாந் நசேச்ச்சதி ஜநார்தந:” என்று தனக்கென்றுவேறுகட்டிவைத்த தண்ணீரைக்காட்டுதல், திருவடிகளை நனைத்தல், உதவின வின்சொற்சொல்லுதல் செய்யுமிவ்வளவாயிற்று அவன்பெறுகைக்காசைப்படுவது. “நன்னீர்தூய்ப் புரிவதுவும் புகை பூவே”—அநந்யப்ரயோஜநனைக்கொண்டு பக்திபாரவச்யத்தாலே ப்ரயோஜநாந்தரஸ்பர்சமற்ற திருமஞ்சனத்தை அக்ரமமாகவிரைத்து, போரப் பொலியக் கொடுப்பது

“అన్యత్పూర్ణాత్” “அந்யத் பூர்ணாத்.” “புரிவதுவும் புகைபூவே.”

ஜீ.—భక్త్యుపహృతమశ్నామి ప్రయతాత్మనః” “பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்ச்சதி। ததஹம் பக்த்யுபஹ்ருதமச்நாமி ப்ரயதாத்மந:” என்று பத்ரத்தையாகவுமாம், புஷ்பத்தையாகவுமாம், பலத்தையாகவுமாம், ஜலத்தையாகவுமாம், யாவனொருவன் எனக்கு பக்தியாலே தருகிறான், அநந்யப்ரயோஜநனையாகிற சுத்தியோடே கூடினமநஸ்ஸையுடையனானவனுடைய அப்படிப்பட்ட பக்தியோடே தரப்பட்ட அத்தை, அவாப்தஸமஸ்தகாமனாயிருக்கிற நான், அவன் ப்ரேமத்தாலேகலங்கித்தருமாப்போலே, வ்யாமோஹத்தாலேகலங்கிஅடைவுகெடவிநியோகம்கொள்ளுவன் என்றுதானேயருளிச்செய்தானிறே. “అన్యత్పూర్ణాదపాం కుమ్భాదన్యత్పాదావనేజనాత్ । అన్యత్కుశలసమ్ప్రశ్నాన్న చేచ్ఛతి జనార్దనః” “அந்யத்பூர்ணாதபாம் கும்பாதந்யத்பாதாவநேஜநாத்। அந்யத் குசலஸம்ப்ரச்நாந் நசேச்ச்சதி ஜநார்தந:”—அதாவது—ஸ்ரீதூதெழுந்தருளுகிறபோது, த்ருதராஷ்ட்ரன் பாண்டவபக்ஷபாதியாயிருக்கிற க்ருஷ்ணன் வாராநின்றான்; அவனுக்குச் சிலநாட்டையுங்கொடுத்து பொன்னையுங்கொடுத்து நமக்காக்கிக்கொள்ளுகிறோம் என்றாப்போலே சிலவற்றைச்சொல்ல; நினைவும் செயலுமொத்திராத வஞ்சகனானவவன் கருத்தையறிந்த ஸஞ்ஜயன், வருகிறவனங்ஙனொத்தவனல்லகாண், அவனுக்கு வேண்டுவதிவ்வளவு என்கிறான்.—அதாவது—தான் குடிக்குந்தண்ணீரையொருகுடத்திலே நிறைத்துக் குளிர வைக்கக்கடவனே, அத்தையவன் வருகிற வழியிலே வாசலிலேவைக்கவமையும், அதுக்கு மேலொன்றும் வேண்டா; தன் க்ருஹத்திலே அதிதிவந்து புகுந்தால் காலைக்கழுவுவதாக ஸாமாந்யசாஸ்த்ரம் விதித்துவைத்ததிறே, அவ்வோபாதியவன் திருவடிகளை விளக்கவமையும், அவனுனவாசிக்கு விசேஷித்தொன்றும் செய்யவேண்டா; நெடுந்தூரம் வந்தவனை குசலப்ரச்நம் பண்ணக்கடவதிறே, அவ்வோபாதி ஓர்இன்சொல் சொல்லவமையும், ஏற்றமாகவொன்றும்வேண்டா; இவ்வளவுகளையொழிய மற்றொன்றையிச்ச்சியான்காண் அவனென்கை.—இத்தால், நீ கொடுக்கநினைக்கிற நாட்டையும் பொன்னையும் அவனொருசரக்காக நினைத்திருக்குமோ; வல்லியாகிலுன் ஆபிமுக்க்யஸூசகமாக இவ்வளவுகளைச் செய்யப்பாரென்றபடி. “பரிவதிலீசனை” என்றுதுடங்கி (“புரிவதுவும்புகைபூவே”) என்று “ஹேயப்ரத்யநீகனை ஸர்வேச்வரனை ஸம்ஸாராந்முக்தராயநுபவித்து, அவ்வநுபவஜநிதப்ரீதியாலே “ఏతత్సామ గాయన్నాస్తే”

ஆ.—மேதேனுமொரு புகை ஏதேனுமொரு பூவாகவுமாம்; பாவசுத்தி பார்க்குமல்லது பதார்த்தவைஷம்யம்காணக்கண்ணில்லை யவனுக்கு; இன்று இவனிட்டதுகொண்டு த்ருப்தனும் என்னுமிடம் ப்ரபலப்ரமாணஸித்தம்.

கசு௦. இப்படி யிவன் செய்யுமதும் ஸ்வரூபமாய் அத்தால் பலஸாதநமாயுறுவதேதென்ன வேறில்லை யென்கிறார், (புல்லைக்காட்டி) இத்யாதியால். கறவைக்குக்காட்டி யழைப்பதும் கட்டியிடுவதும் புல்லானாப்போலே, பலஸாதநமான திருவடிகள்தானே ஸாத்யமான பலமுமாயிருக்கையாலே, ஸாத்யஸாதநங்களிரண்டுக்கும் வஸ்துபேதமில்லை; அநுஸந்தாநபேதமே யுள்ளது.

கசுக. இப்படி நிரதிசயபோக்யமான ஸாத்யமே நிரபாயஸாதநமாகையாலே, தச்சரணவரணரூபப்ரபத்தியும் ஸ்வயத்நநிவ்ருத்திரூபமாய்க்கொண்டு, பாதந்த்ராத்மாநுகூலமான ஸ்வரூபமாயிருக்குமென்கிறார்.

ஆக, இப்ப்ரகரணத்தால் அபாயத்வாதிதோஷதுஷ்டங்களான ஸாத

கசு௦. புல்லைக்காட்டியழைத்துப் புல்லையிடுவாரைப்போலே பலஸாதநங்களுக்கு பேதமில்லை.

கசுக. ஆகையாலே ஸ்வரூபமாயிருக்கும்.

ஜீ.—“ஏதத் ஸாம காயந்நாஸ்தே” என்கிறபடியே பாடி விஸ்த்ருதராகையைப்பெறவேண்டியிருப்பீர், உபகரணங்களில் குறைவுபார்த்தகலுகைதவிர்ந்து, அஸம்ஸ்க்ருதமான ஜலத்தையேதேனுமொருபடி ப்ரயோகித்து, பின்னையவனுக்கு அருள்கொடையாகக்கொடுப்பதுவுமேதேனுமொருபுகையும் ஏதேனுமொரு பூவும், இவ்வளவும் அமையும் கிடீகோளவனுக்கு.” என்று அவனுடைய ஸ்வாராதநதையை ஸுஸ்பஷ்டமாக ஆழ்வாரருளிச்செய்தாரிறே.

கசு௦. (பூர்ணவிஷயம்) என்றுதுடங்கி இவ்வளவும் ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வந்தவித்தனையிறே; ப்ரபத்திவைலக்ஷண்யமிறே கீழ்ச்சொல்லப்பட்டது, ஆகையாலே யதுக்கின்னமுமொரு வைலக்ஷண்யம் சொல்லுகைக்காக, ஸித்தோபாயத்துக்கும் பலத்துக்குமுண்டான ஐக்யத்தை முந்துறவருளிச்செய்கிறார், (புல்லைக்காட்டி)என்றுதுடங்கி. அதாவது—கோவை வரவழைத்துப் பின்னையதுக்கு தாநகாதிகளையிட்டு நோக்க நினைப்பார், தத்போக்யமான புல்லுதன்னையே தத்வசீகாரஸாதநமாக முன்னிட்டழைத்துக்கொண்டு, அதுதன்னையே மேலுமிடுமளவில் பலஸாதநங்களுக்கு பேதமில்லாதாப்போலே, விலக்ஷணகுணவிக்ரஹவிசிஷ்டனானதானே முந்துற விவனைச்சேர்த்துக்கொள்ளுகைக்குபாயமாய், பின்னையென்றுமொக்க விவனுக்குபேயமாயிருக்கையாலே, பலஸாதநங்களிரண்டும் ஏகவஸ்துவாயிருக்குமென்கை.

கசுக. இத்தால் ப்ரபத்திக்கு வைலக்ஷண்யம் பலித்தபடியை யருளிச்செய்கிறார், (ஆகையாலே) என்றுதுடங்கி. அதாவது—ஸாத்யவஸ்துதானே ஸாதநமாகையாலே, தத்வரணரூபமானவிது தேவையாயிராதே ஸ்வரூபமாயிருக்குமென்றபடி.—அன்றிக்கே, இன்னமும் ப்ரபத்திக்கொரு வைலக்ஷண்யமருளிச்செய்கிறார், (புல்லை) இத்யாதியாலே. அதாவது—புல்லைக்காட்டி தேநுவை யழைத்துக்கொண்டு பின்னை அப்புல்லையே யிடுமளவில் பலஸாதநங்களுக்கு பேதமில்லாதாப்போலே, “సకృత్ప్రణీ ఉత్తమః” “నమశ్చక్రుర్జనార్దనమ్” “ஸக்ருத்க்ருதோஞ்ஜலி:”. “நமச்சக்ருர்ஜநார்தநம்” இத்யாதிகளிற்சொல்லுகிறபடியே அஞ்ஜல்யாதிரூபையான ப்ரபத்

ஆ.—நாந்தரங்கள் ஸ்வரூபவிரோதித்வேந த்யாஜ்யங்கள், தத்த்யாகாங்கி யாய்தத்தோஷமற்ற ப்ரபத்த்யுபாயம் ஸ்வரூபோசிதத்வாதிகுணவிலக்ஷண மென்றதாயிற்று; இதில் (ப்ரபத்த்யுபாயம்) துடங்கி மேல் ப்ராஸங்கிகம்.

கசஉ. இனிமேல் (இவனவனை) துடங்கி (இடைச்சியாய்ப்பெற்றுவி டுதல்செய்யு) மளவாக, ஸித்தோபாயநிஷ்டர் வைபவத்தை யருளிச் செய்கிறார். கீழ்ச்சொன்ன ப்ரபத்தியேயோ இவனவனைப் பெறுகைக்குபா யமாய்த்ததென்ன, இதுவுமன்றென்கிறார், (இவன்) இத்யாதியால். பரத ந்த்ரனான இவன் ஸ்வதந்த்ரனான அவனைத்தான் பலியாய்ப் பெற நினைக்கும் போது, ஸ்வரூபாநுரூபையான இந்த ப்ரபத்தியும் அவனைப்பெறுவிக்கு முபாயமன்று; அவனை யிழப்பிக்கு மபாயமத்தனை.

கசந. ஸ்வதந்த்ரஸ்வாமியான அவன் பரதந்த்ரனானவிவனை ஸ்வேச் ச்சையாலே பெற நினைக்கும்போது, இவன் அநாதிகாலமேபிடித்து புத்தி பூர்வகமாகப் பண்ணிப்போந்த வநேகமஹாபாதகமுமவனைப் பெறுகைக்கு விலக்கன்று. இவன் பலியானபோது ஸ்வகதமான ஸ்வரூபாநுரூபமான

கசஉ. இவனவனைப்பெற நினைக்கும்போது இந்தப்ரபத்தியு முபாயமன்று.

கசந. அவனிவனைப்பெற நினைக்கும்போது பாதகமும்

ஜீ.—நிலையைமுன்னிட்டு ஈச்வரனைவசீகரித்தால் பின்னை யவனுக்குகப்பாகச் செய்யுமடிமையும், "బద్ధాఞ్జలిపుటా హృష్టా నమ ఇత్యేవ వాదినః" "பத்தாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:" "கைகளாலாரத்தொழுது தொழு துன்னை" இத்யாதிகளிற்சொல்லுகிறபடியே தன் ஸ்வரூபாநுரூபமான அஞ்ஜல்யாதி வ்ருத்திவிசேஷங்களாகையாலே, பலஸாதநங்களுக்கு பேத மில்லை. இப்படி பலமானது தானே ஸாதநமாகையாலே, இப்ப்ரபத்திதான் தேவையாயிராதே, இவனுக்கு ஸுகரூபமாயிருக்குமென்கை. ஆக, (ப்ர பத்த்யுபாயத்துக்கு) என்றுதுடங்கி இவ்வளவாக, ப்ரபத்தியினுடைய தோஷராஹித்யமும் குணஸாஹித்யமும் சொல்லப்பட்டது.

கசஉ. இப்படி ப்ரஸ்துதையான ப்ரபத்தியினுடைய வநுபாயத்வத்தை யும் தத்ப்ரதிகோடியான பரகதஸ்வீகாரோபாயத்வத்தையும், (இதுதன்னை ப்பார்த்தால்) இத்யாதியாலும், (ப்ராப்திக்குபாயம் அவன் நினைவு) இத்யாதி யாலும், கீழருளிச்செய்தபடியன்றியே, முகாந்தரேண வருளிச்செய்கிறார் மேல். அதில் இப்படி ஸ்வரூபாநுரூபமானவித்தை ஸாதநமாக்கிக்கொண்டு ஸ்வதந்த்ரனானவவனை யிவன்பெறப்பார்க்குமன்று, அவன்நினைவுகூடாதாகில் இது விபலிக்குமென்கிறார், (இவனவனை) என்றுதுடங்கி. அதாவது-உடமை யை உடையவன்சென்று கைக்கொள்ளுமாப்போலே, ஸ்வாமியானவவன் றானே வந்து அங்கீகரிக்கக்கண்டிருக்கக்கடவ பரதந்த்ரனான இச்சேதநன், தான் பலியாய் தன்ஸ்வீகாரத்தாலே ஸ்வதந்த்ரனானவ்வவனைப் பெற நினை க்குமளவில், அவன்நினைவுகூடாதாகில், இப்படி விலக்ஷணையாயிருக்கிற ப்ரபத்தியும் தல்லாபஸாதநமாகாதென்றபடி.

கசந. இனி அவனே ஸ்வீகரிக்குமளவில் உள்ளவாசி சொல்லுகிறார், (அவனிவனை) என்றுதுடங்கி. அதாவது - ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனான அவன், ஸ்வம்மாய் பாரதந்த்ரனாயிருக்கிற இவனை ஸ்வேச்சையாலே பெற நினைக்குமளவில், பாபங்களில் ப்ரதாநமாக வெண்ணப்படும் பாதகமும் ப்ரதி பந்தகமாகமாட்டாதென்கை. இவையிரண்டாலும் ஸ்வகதஸ்வீகாராநு பாயத்வமும், பரகதஸ்வீகாரோபாயத்வமும், காட்டப்பட்டது. "పశ్యఃపరస

ஆ.—துவும் பலஹேதுவாகாது; அவனே பலியானபோது அபாயமான துவும் பலப்ரதிபந்தகமாகாது.

௧௪௪. இப்படி ஸ்வகதமானது விபலமாய் பரகதமானதுவே ஸபலமாகக் கண்டவிடமுண்டோ வென்ன காட்டுகிறார், (இவை இரண்டும்) இத்யாதியால். ஸ்வகதவைபல்யமும் பரகதஸாபல்யமுமென்கிற விவை யிரண்டும் "శేష్యే పురస్తాచ్ఛాలాయాం యావన్మే న ప్రసీదతి" "சேஷ்யே புரஸ்தாச்சாலயாம் யாவந்மே ந ப்ரஸீததி" என்று மீண்டருளவேணுமென்று பெருமாளை ப்ரபத்திபண்ணின வுறவுள்ள ஸ்ரீபரதாழ்வான்பக்கலிலும், "ஏழை யேதலன் கீழ்மகனென்றுதிரங்கி" என்று தோஷமே பச்சையாகப் பெருமாளுறவுகொண்ட ஸ்ரீகுஹப்பெருமாள்பக்கலிலும் அநுஷ்டாநசேஷமாகக் காணலாம்.

௧௪௫. தான் பலியாய் ப்ரபத்திபண்ணின ஸ்ரீபரதாழ்வானுக்கு, ப்ரபதநமாகிற நன்மைதானே பெருமாள் திருவுள்ளங்கன்னி யவ்வருகே போம்படிபண்ணும் தீமையாயிற்று; பெருமாளே பலியாய்ச்சென்று கைக்கொண்ட ஸ்ரீகுஹப்பெருமாளுக்கு "ஏழை யேதலன் கீழ்மகன்" என்கிற வஜ்ஞாநாதிதீமைதானே அங்கீகாரஹேதுவான நன்மையாயிற்று.

விலக்கன்று.

௧௪௪. இவையிரண்டும், ஸ்ரீ பரதாழ்வான்பக்கலிலும் ஸ்ரீகுஹப்பெருமாள்பக்கலிலும் காணலாம்.

௧௪௫. ஸ்ரீபரதாழ்வானுக்கு, நன்மைதானே தீமையாய்த்து; ஸ்ரீ குஹப்பெருமாளுக்கு, தீமைதானே நன்மையாய்த்து.

ஜீ.—"చిన్తాభే ప్రపత్తిరపి సోపధిః। విపర్యయే తు నైవాస్య ప్రతిషేధాయ పాతకమ్" "சிந்தாப ரமசில்லாபே ப்ரபத்திரபி ஸோபதி:। விபர்யயே து நைவாஸ்ய ப்ரதிஷேதாய பாதகம்" என்னக்கடவதிறே.

௧௪௪. இப்படி யிவை யிரண்டும் காணலாமிடமுண்டோ வென்ன வருளிச்செய்கிறார், (இவை) என்றுதுடங்கி.

௧௪௫. அவர்கள் தங்கள்பக்கலிவை கண்டபடி யென் என்னவருளிச்செய்கிறார், (ஸ்ரீபரதாழ்வானுக்கு) இத்யாதிவாக்யத்வயத்தாலே. அதாவது-பெருமாளை மீட்டுக்கொண்டுவந்து திருவபிஷேகம்பண்ணுவித்து தன் ஸ்வரூபாநுரூபமான வடிமையைப்பெற்று வாழ்கைக்காக, "ఏభిశ్చ సచివైస్సార్థం" "ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம்" இத்யாதிப்படியே வழியே பிடித்து மநோரதித்துக்கொண்டுசென்று பெரிய ஆர்தியோடே அவர் திருவடிகளிலே ப்ரபத்திபண்ணின ஸ்ரீபரதாழ்வானுக்கு, அப்படிபண்ணின ப்ரபத்தியாகிற நன்மைதானே, சரண்யரான பெருமாள் திருவுள்ளத்துக்கநிஷ்டமாகையாலே தீமையாய்விட்டது.—"ஏழை யேதலன்" இத்யாதிப்படியே பெருமாள் தாமே வந்தங்கீகரிக்கப்பெற்ற ஸ்ரீகுஹப்பெருமாளுக்கு, தோஷமே பச்சையாக வங்கீகரிக்கையாலே, பாதகமாகிற தீமைதானே நன்மையாய்விட்டதென்கை.—"యత్త్వత్ప్రియం తదిహ పుణ్యమపుణ్యమన్యత్" "யத்த்வத்ப்ரியம் ததிஹ புண்யமபுண்யமந்யத்" என்றிறே புண்யபாபலக்ஷணம்; ஆகையாலிவர்கள்பக்கலிலே காணலாமென்கை.

ஆ.—கசசு. இப்படி இவன்பண்ணும் ப்ரபத்தி பொறுப்பித்துக்கொள்ள வேண்டுமபராதமாய்த் தோற்றித்திறே உடையவர்க்கென்கிருர், (ஸர்வாபராதம்) இத்யாதியால். பகவதபசாராதிஸர்வாபராதங்களுக்கும், அவற்றைக்கண்டு சீறுகிற ஸர்வேச்வரன் திருவுள்ளத்தை யாறவிடும் ப்ராயச்சித்தமான "త్వత్పాదారవిన్దయుగళం శరణమహం ప్రపద్యే" "த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே" என்று பூர்வகத்யத்திற்பண்ணின ப்ரபத்திதானும், ஸ்வகதையாமென்னும்பீதியாலே, பகவதபசாராதியான வபராதகோடியிலே யொன்ருகவே திருவுள்ளம்பற்றி "పితేవ పుత్త్రస్య సఖేవ సఖ్యుః ప్రియః ప్రియాయార్హసి దేవ సోఢుమ్" "பிதேவ புத்த்ரஸ்ய ஸகேவ ஸக்ய்யு: ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும்" என்று புத்த்ராதிகளில் குற்றத்தை பித்ராதிகள் பொறுக்குமாப்போலே, ப்ரபத்தியில் ஸ்வப்ரவ்ருத்தியாகிற குற்றத்தைப்பொறுத்தருளவேணுமென்று, ப்ரபத்தவ்யனை க்ஷமிப்பிக்கவேண்டும்படி மஹாபயஹேதுவாய் நில்லாநின்றதிறே.

கசசு. ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்திதானும் அபராதகோடியிலேயாய் க்ஷாமணம்பண்ண வேண்டும்படி நில்லாநின்றதிறே.

ஜீ.—கசசு. இவன்பண்ணும் ப்ரபதநம் சரண்யஹ்ருதயாநுஸாரியல்லாதபோது அபராதகோடிகடிதமாமென்னுமிடமருளிச்செய்தார்கீழ்; இதுதானிவனுடைய பூர்வவ்ருத்தத்தைப்பார்த்தாலும் அபராதகோடியிலேயாயிருக்குமென்னுமிடத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக பாஷ்யகாரருடைய வநுஷ்டாநப்ரகாரத்தை யருளிச்செய்கிருர் மேல், (ஸர்வாபராதங்களுக்கும்) என்றுதுடங்கி. அதாவது - "అహమస్మ్యపరాధానామాలయః" "அஹமஸ்ம்யபராதாநாமாலய:" என்கிறபடியே, அபராதங்களுக்கெல்லாம் கொள்கலமாயிருக்கிற விச்சேதநன் ப்ரபத்திபண்ணவே, "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்ப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்னும்படி இவனளவில் ஸர்வேச்வரன் திருவுள்ளம் ப்ரஸந்நமாய்விடுகையாலே, ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமாயிறே ப்ரபத்திதானிருப்பது; இப்படியிருந்துள்ள ப்ரபத்தியை, "త్వత్పాదారవిన్దయుగళం శరణమహం ప్రపద్యే" "த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே" என்று பண்ணியருளின பாஷ்யகாரர்க்கு, ஸ்வபூர்வவ்ருத்தத்தை யநுஸந்தித்தவாறே அதுதானுமபராதகோடியிலேயாய், "త్వమేవ మాతా చ" "த்வமேவ மாதாச" என்றுதுடங்கி, இத்தலையிலபராதத்தைப் பொறுக்கைக்குறுப்பான ஸம்பந்தவிசேஷங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்துகொண்டு, "తస్మాత్ప్రణమ్య" "தஸ்மாத் ப்ரணம்ய" இத்யாதியாலே இப்படி திருமுன்பே கூசாமல் வந்துநின்று ப்ரபத்தி பண்ணின விவ்வபராதத்தைப் பொறுத்தருளவேணுமென்று க்ஷாமணம் பண்ணவேண்டும்படி நில்லாநின்றதிறே யென்கை. ஆகையால், இவ்வழியாலுமிது அபராதகோடிகடிதமாயிருக்குமென்கை. அநாதிகாலமபராதத்தைப் பண்ணி பின்பொருநாளிலே ஆபிமுக்க்யம் பண்ணினனேயாகிலும், "రిపూణామపి వత్సలః" "యది వా రావణస్స్వయమ్" "ரிபூணாமபி வத்ஸல:" "யதிவா ராவணஸ்ஸ்வயம்" என்றிருக்கு மீச்வரஹ்ருதயத்தைப்பார்த்தால், அவன் கைக்கொள்ள வொரு குறையில்லை. அவனப்படி யிருந்தானேயாகிலும், தன் பூர்வவ்ருத்தத்தை யுணர்ந்தால் இவனித்தை யபராதமாகவே நினைத்து க்ஷாமணம்பண்ணவேண்டும்படியாயிறே யிருப்பது.

ஆ.—கசஎ. இந்த ஸம்ஸாரிசேதநன் பண்ணும்ப்ரபத்தி அவன் திருவுள்ளம் சிறுகைக்குடலாய்விடுமென்னுமிடத்தை, த்ருஷ்டாந்தமுகேந வருளிச்செய்கிறார், (நெடுநாள்) இத்யாதியால். ஒருநாளிரண்டுநாளன்றியே நெடுநாளேபிடித்து பர்தாவற்றிய அந்யபரையாய், அவன் விட்டிருக்க அவன் முகத்திலிட்டேறமாட்டாமலொதுங்கிப்போந்த வந்யபரையான பார்யை, இப்படி யிருந்த நாம் அவனருகே செல்லும்படியென்! என்கிற லஜ்ஜையும், அருகேசெல்லில் சித்ரவதைப்படுத்துமவனென்னும் பயமுமின்றியே, தன் துச்சரிதத்தைக்கண்டு கேட்டுக் கிளர்ந்திருக்கிற ஸ்வதந்த்ரபர்தாவினருகே யெதிரே சென்று, துடை நடுங்காமல் நின்று வாய்விட்டு என்னை யங்கீகரிக்கவேணுமென்று அவன் காலிலே கூசாமல்விழுந்தபேக்ஷிக்குமாப்போலே, அதிஸாஹஸமாயிருப்பதொன்றிறே அநாதிகாலமேபிடித்து தனக்கு நிருபாதிகரக்ஷகனான வெம்பெருமானற்றியவே அந்யபரனாய், அவன் ஸம்ஸாரத்திலே விட்டிருக்க அவன்முகம்பெறாமல் நித்யஸம்ஸாரியாய்ப்போருகிற பரதந்த்ரசேதநன், நாமென்கொண்டு அவர் முன்னில் போவோம் வருந்தி நின்றாலெப்பாடு படுவுதோமென்னுமிவை யிரண்டுமின்றியே, தன்குற்றம் கணக்கிட்டு "[illegible]" "க்ஷிப்பாமி" என்று மிகவும் சீறின ஸ்வதந்த்ரஸ்வாமிமுன்னே பிற்காலியாமல் நின்று திருவடிகளிலேவிழுந்து பண்ணும் சரணவரணப்ரபத்தியுமென்கிறார். ஆக பலித்வாபிமாநித்வமற்ற பரதந்த்ரன் பண்ணும் ப்ரபத்தி உபாயமாகமாட்டாது; பலியுமாய் அபிமாநியுமான ஸ்வதந்த்ரன் தானே ஸ்வீகரிக்குமதுவே உபாயமாமித்தனை யென்றதாய்த்து.

கசஎ. நெடுநாள் ந்யபரையாய்ப்போந்த பார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே பர்த்ருஸகாசத்திலே நின்றுஎ ன்னையங்கீகரிக்கவேணுமென்றபேக்ஷிக்குமாப்போலே யிருப்பதொன்றிறே யிவன்பண்ணும் ப்ரபத்தி.

ஜீ.—கசஎ. இவன் பண்ணும்ப்ரபத்தி ஸ்வபூர்வவ்ருத்தத்தை யநுஸந்தித்தால்அபாராதகோடியிலேயாயிருக்குமென்னுமத்தைத்ருஷ்டாந்தமுகேந தர்சிப்பிக்கிறார் மேல்,(நெடுநாள்) என்றுதுடங்கி. அதாவது-நெடுங்காலம் பர்தாவோடேட்டற்று பரபுருஷகாமிநியாய் தந்நிக்ரஹபாத்ரமாய்ப் போந்தாளொரு பார்யை, இப்படிப்பட்டநாம்அவன் ஸந்நிதியிலே கூசாமல் சென்று நிற்கும்படியென்! என்கிறலஜ்ஜையும், இத்தனைகாலமும் நாம் செய்து திரிந்ததெல்லாம் கண்டிருக்கிறவன், இப்போது நம்மை வந்திப்படி யபேக்ஷிப்பதே யென்று தண்டிக்கில் செய்வதென்! என்னும் பயமுமின்றிக்கே, அவன்முன்னேசென்றுநின்று என்னையங்கீகரிக்கவேணும் என்றபேக்ஷிக்குமளவில் எத்தனை யபராதமுண்டு; அப்படியேயிருப்பதொன்றிறே பகவதநந்யார்ஹனாய்வைத்து அநாதிகாலமவனுடன் பற்றின்றிக்கே அந்யபரனாய்ப்போந்தவிவன், ஸ்வபூர்வவ்ருத்தாநுஸந்தாநத்தால் வரும் லஜ்ஜையும் ஸ்வதந்த்ரனானவவன் தண்டிக்கில் செய்வதென் என்னும் பயமுமின்றிக்கே, தத்ஸந்நிதியிலே சென்றுநின்று தன்னையங்கீகரிக்கவேணுமென்று பண்ணுகிற சரணவரணமென்கை. ஆக, இவ்வளவும் ஸ்வகதஸ்வீகாரா நுபாயத்வமும் பரகதஸ்வீகாரோபாயத்வமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

ஆ.—௧௪௮. மேல் அவனிவனை ஸ்வீகரிக்கும் ப்ரகாரமிரண்டு, அதிலொன்று ப்ரபலமென்கிறார், (க்ருபையாலே) இத்யாதியால். "జీవే దుఃఖాకులే విష్ణోః కృపా కాప్యుపజాయతే" "ஜீவே து:க்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே" என்று தனக்கு ப்ரகாரதயா சேஷபூதனான இவன் ஸம்ஸாரசக்ரத்திலே சுழன்று து:க்கிக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி, நம்மையநுபவித்து ஸுகிக்கவிட்டுப்பிறந்த இவனிப்படி து:க்கிப்பதே யென்னும் க்ருபாபரதந்த்ரனாய், இவனைக் கடாக்ஷித்தங்கீகரிக்குமதிற்காட்டில், இத்தலையில் ஸுகது:க்கங்களொன்றும் பாராதே ஸ்வேச்சாகாரித்வமாகிற நிரங்குசஸ்வாதந்த்ர்யபாரதந்த்ரனாய், பட்டத்துக்குரியவானை யுகந்தாரொருவனைத் தலையிலே வைத்துக்கொள்ளுமாப்போலே, செருக்காலே தானே மேல்விழுந்தங்கீகரிக்குமதே ப்ரபலமென்கிறார். க்ருபாபாரதந்த்ர்யம்போல் மற்றொன்றால் தகைவுபடாமல் து:க்கதர்சநஸாபேக்ஷமாய், குணாந்தரமடியாக தோற்றவேண்டாமல் கடாக்ஷப்ரேரகமாமளவன்றிக்கே, தான் மேல்விழுந்தங்கீகரிக்குமதான ஸ்வாதந்த்ர்யபாரதந்த்ர்யமேயிறே ப்ரபலம். சிறையிட்டவனே சிறைவெட்டி விடுமாப்போலே ஸம்ஸரிப்பித்த ஸ்வாதந்த்ர்யந்தானே இவனை முக்தனாக்குகை தகுதிதமென்றருளிச்செய்வர். க்ருபாபரதந்த்ரனாகையாவது - ஸ்வேச்சாநுரூபக்ருபாவிகாஸவிசிஷ்டனாகை; ஸ்வாதந்த்ர்யபரதந்த்ரனாகையாவது - ஆகாராந்தராபங்கஸ்வாதந்த்ர்யவிகாஸவிசிஷ்டனாகை. அல்லது ஸ்வதந்த்ரஸ்வரூபம் ஸ்வபாரதந்த்ரமான குணபாரதந்த்ரமாகாதிறே.

௧௪௯. இந்த ஸ்வாதந்த்ர்யாங்கீகாரமாகிற துர்லபமான இவ்வர்த்தத்தை "తస్యైష ఆత్మా వివృణుతే తనూం స్వామ్" "தஸ்யைஷ ஆத்மா விவ்ரு

---

௧௪௮. க்ருபையாலே வரும் பாரதந்த்ர்யத்திற் காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம்.

௧௪௯. இவ்வர்த்தத்தை வேதபுருஷனபேக்ஷித்தான்.

ஜீ.—௧௪௮. இனி, இவன் ஸ்வீகாரம் கண்டிரங்கி அவனிவனுக்கு பரதந்த்ரனாவதிலும், தன் ஸ்வாதந்த்ர்யத்தால் வந்து பாதந்த்ரனாவதே ப்ரபலமென்கிறார், (க்ருபையாலே) என்றுதுடங்கி. அதாவது ஆர்த்தராய் அநந்யசரணராய் தன் திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தவர்களளவில் தனக்குண்டான க்ருபையாலே அவர்கள் சொன்னதே செய்யும்படி பாதந்த்ரனாகையும், பட்டத்துக்குரிய வானையு மரசும்போலே தன் நிரங்குசஸ்வாதந்த்ர்யத்தாலே நிர்ஹேதுகமாகச் சிலரை யங்கீகரித்துத் தன்னை யவர்களிட்டது வழக்காக்கி வைக்கையும் இரண்டுமீச்வரனுக்குள்ளதொன்று; இதில் முற்பட்டது ஒரோ தசைகளிலே ஸ்வாதந்த்ர்யநிருத்தமாய் விபலிக்கவுங்கூடும்; பிற்பட்டது அப்ரதிஹதமாகையாலே ஒருக்காலும் கண்ணழிவில்லை. ஆகையாலே, அதிலுங்காட்டிலிது ப்ரபலமென்கை.

௧௪௯. இவ்வர்த்தந்தான் வேதாபிமதமென்கிறார் மேல், (இவ்வர்த்தத்தை) என்றுதுடங்கி. (இவ்வர்த்தம்) என்கிறது-கீழ் ப்ரபலமாகச்சொல்லப்பட்ட பரகதஸ்வீகாரத்தை; (வேதபுருஷனித்தை யபேக்ஷித்தான்) என்றது "నాయమాత్మా ప్రవచనేన లభ్యః న మేధయా న బహునా శ్రుతేన యమేవైష వృణుతే తేన లభ్యః తస్యైష ఆత్మా వివృణుతే తనూం స్వామ్" "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: ந மேதயா ந பஹுநா ச்ருதேந யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்

ஆ.—ஹுதே தநூம் ஸ்வாம்” என்று பரமபுருஷார்த்தத்தின் சீர்மையறியும் வேதபுருஷன், அலப்யலாபமாகையாலே யபேக்ஷித்தான்.

கூ௦. அவனபேக்ஷித்ததொழிய மற்றொருவர்க்கும் இதுண்டாகப் பெற்றதில்லையே யென்ன, இந்த அபேக்ஷாநிரபேக்ஷமாக திர்யக்ஜந்மமான திருவடிக்கும், நீழ்மகனான ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும், ஸ்வாதந்த்ர்யாங்கீகாரமானவிது நிலைவற வுண்டாய்த்தென்கிறார்.

கூக. இப்படி ஸ்வதந்த்ரனாய் இவர்களை யங்கீகரிக்கிறவிடத்தும், ஸ்வஸங்கல்பாநுகுணமாக இளையபெருமாளையும் பிராட்டியையும் முன்னிட்டாப்போலே, மற்றும் புருஷகாரத்தை முன்னிட்டங்கீகரித்தவிடம் கண்டதுண்டோ வென்ன காட்டுகிறார் மேல், (இவன் முன்னிடும்) இத்யாதியால். ஆச்ரயணோந்முகனான விச்சேதநன், ஸ்வாபராதபயநிவ்ருத்த்யர்த்தமாக முன்னிடும் புருஷகாரபூதரை, ஆச்ரயணீயனான வுபாயபூதனும் முன்னிட்டே கைக்கொள்ளுமென்னுமிந்த புருஷகாரவைபவம், “అభయం సర్వభూతేభ్యో దదామ్యేతద్వ్రతం మమ” “அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம் மம” என்று ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கபயப்ரதாநம் பண்ணுகிறவிடத்திலும், “సర్వలోకశరణ్యాయ రాఘవాయ మహాత్మనే। నివేదయత మాం క్షిప్రం విభీషణముపస్థి

கூ௦. அபேக்ஷாநிரபேக்ஷமாக திருவடிக்கும் ஸ்ரீ குஹப்பெருமாளுக்கும் இதுண்டாய்த்து.

கூக. இவன் முன்னிடுமவர்களை யவன் முன்னிடுமென்னு

ஜீ.—யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்” என்று கடவல்லியிலும் முண்டோபநிஷத்திலும் சொல்லுகையாலே ஆதரித்தானென்கை. அஸக்ருத் கீர்த்தநமபேக்ஷாகார்யமிறே.

கூ௦. இத்தலையிலபேக்ஷையின்றிக்கே யிருக்க, இவ்விஷயீகாரம் ஸித்திக்கப் பெற்றவர்களுண்டோவென்ன வருளிச்செய்கிறார், (அபேக்ஷாநிரபேக்ஷமாக) என்று தொடங்கி. அதாவது - தந்தாம்பக்கலபேக்ஷையின்றிக்கே யிருக்கச்செய்தே, பம்பாதீரத்திலும் கங்காகூலத்திலும் பெருமாள் தாமே சென்றங்கீகரிக்கப்பெற்ற திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும், இந்த பரகீதஸ்வீகாரமுண்டாய்த்தென்கை.

கூக. இப்படி ஸ்வதந்த்ரனாய் இவர்களை யங்கீகரிக்கிறவிடத்திலும், “తమభ్యభాష సౌమిత్రే సుగ్రీవసచివం కపిమ్” “தமப்யபாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவஸசிவம் கபிம்” “மாழைமான் மடநோக்கி யுன்தோழியும்பியெம்பி” என்று இளையபெருமாளையும் பிராட்டியையும் முன்னிட்டாப்போலே, மற்றும் புருஷகாரத்தை முன்னிட்டங்கீகரித்தவிடம் காணலாமோ வென்ன வருளிச்செய்கிறார், (இவன்) என்று தொடங்கி. அதாவது - இச்சேதநன் தான் ஆச்ரயிக்கிறபோது புருஷகாரமாக முன்னிடுமவர்களை, அவனுமங்கீகரிக்கும்போதும் முன்னிடுமென்னுமிடம், திருவடியையும் ஸ்ரீ குஹப்பெருமாளையும் அங்கீகரித்த ஸ்தலங்கள் மாத்ரமன்றிக்கே, ஸ்ரீ விபீஷணாழ்வானை யங்கீகரித்த ஸ்தலத்திலும் காணலாமென்கை. எங்ஙனே யென்னில்; “సోహం పరుషిత స్తేన దాసవచ్చావమానితః। త్యక్త్వా పుత్రాంశ్చ దారాంశ్చ రాఘవం శరణం గతః” “ஸோऽஹம் பருஷிதஸ்தேந தாஸவச்சாவமாநிதஃ। த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கதஃ” என்று சரணம்புகுந்து, “సర్వలోకశరణ్యాయ రాఘవాయ మహాత్మనే। నివేదయత మాం క్షిప్రం విభీషణముపస్థితమ్” “ஸர்வலோகசரண்யாய ராகவாய மஹாத்மநே। நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்த்திதம்” என்று நின்ற

ஆ.—சுமே'' ''ஸர்வலோகசரண்யாய ராகவாய மஹாத்மநே। நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்த்திதம்'' என்று ஸ்ரீவிபீஷணப்பெருமாள் முன்னிட்ட மஹாராஜப்ரப்ருதிகளை, ''ఆనయైనం హరిశ్రేష్ఠ దత్తమస్యాభయం మయా। విభీషణో వా సుగ్రీవ యది వా రావణస్స్వయమ్'' ''ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட்ட தத்தமஸ்யாபயம் மயா। விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவணஸ்ஸ்வயம்'' என்று பெருமாளும் முன்னிட்டு அவனை யங்கீகரிக்கையாலே ஸுஸ்பஷ்டமாகக் காணலாமென்கிறார். ப்ரீதாநரை முன்னிடவே அப்ரீதாநருமந்தர்கதரிறே.

கருஉ. ஆச்ரயிக்கிற சேதநனமையாதோ இருவரும் முன்னிடவேண்டுகிறதென்னென்ன, ஆச்ரயணோந்முகனும் ஆச்ரயணீயனும் புருஷகாரபூதரை முன்னிடுகிறது, அநாதிகாலவைமுக்யம் அநாதிகாலோபேக்ஷையாகிற தந்தாங்குற்றங்களைத் தந்தாமுக்கிடாக ஸமிப்பிக்கைக்காக, இந்நாள்வரை புருஷீகரியாமையாலுபேக்ஷித்தோமதத்தனையென்று ஈச்வரனும் தன் குற்றம் ஸமிப்பிக்க முன்னிடும்.

மிடம் அபாப்ரதாநத்திலும் காணலாம்.

க௫௨. இருவர் முன்னிடுகிறதும் தந்தாம் குற்றங்களை ஸமிப்பிக்கைக்காக.

ஜீ.—ஸ்ரீவிபீஷணாழ்வானை அப்பப்ரதாநபூர்வகமாகவங்கீகரிக்கிறவிடத்தில், ''ఆనయైనం హరిశ్రేష్ఠ దత్తమస్యాభయం మయా। విభీషణో వా సుగ్రీవ యది వా రావణస్స్వయమ్'' ''ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட்ட தத்தமஸ்யாபயம் மயா। விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவணஸ்ஸ்வயம்'' என்று முதலிகளுக்கெல்லாம் மூலபூதரான மஹாராஜரை முன்னிட்டிறே யங்கீகரித்தது. திருவடியையும் ஸ்ரீவிபீஷணாழ்வானையு மங்கீகரிக்கிறவிடத்தில் பிராட்டி ஸந்நிதியில்லாமையாலே யவளை முன்னிட்டமை தோற்றிற்றில்லையேயாகிலும்; பிராட்டி லங்கைக்கெழுந்தருளும்போது மஹாராஜரும் திருவடியும் நிற்கிறவிடத்திலே திருவாபரணங்களையும் பொகட்டு கடாக்ஷித்து வைத்துப் போகையாலும், லங்கையிலே யெழுந்தருளினபின்பு ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பெருமாள் திருவடிகளிலே வரும்படி கடாக்ஷித்தருளுகையாலும், பெருமாளிருவரையு மங்கீகரிக்கிறவிடத்தில் பிராட்டியையும் முன்னிட்டே யங்கீகரித்தாரென்று கொள்ளவேணும். பாரதந்த்ரையான வவளுக்கித்தலையில் நினைவொழியத் தனித்தொரு ப்ரவ்ருத்திகூடாதிறே. ஆகையாலேயிறே ப்ரகதஸ்வீகாரம் சொல்லுகிறவிடத்திலே ஸ்ரீவிபீஷணாழ்வானை யங்கீகரித்ததையு மிவர் ஸஹபடித்தது.

கருஉ. இவன் நிருபாதிகசேஷபூதனாய் அவன் நிருபாதிகசேஷியாயிருக்கையாலே, அவ்யவதாநேந யாச்ரயிக்கவு மங்கீகரிக்கவும் அமைந்திருக்க, இப்படி யிருவரும் புருஷகாரத்தைத முன்னிடுகிறதெதுக்காகவென்ன வருளிச்செய்கிறார், (இருவர்) என்று துடங்கி. சேதநனுக்குக் குற்றமாவது-அநாதிகாலமவன்பக்கல் விமுகனாய் அந்யவிஷயப்ரவணனாய் ததாஜ்ஞாதிலங்கநமே பண்ணி கூடுபூரித்து வைத்த வபராதம்; ஈச்வரனுக்குக் குற்றமாவது - அவர்ஜநீயமான ஸம்பந்தமுண்டாயிருக்க அபராதத்தையே கணக்கிட்டு அநாதிகாலமிவனை யகலவடித்திருந்தவித்து. இவன்றன் குற்றத்தை ஸமிப்பிக்கையாவது-இத்தைப்பார்த்து ஈச்வரன் சீறாதபடி பண்ணுகை; அவன்றன் குற்றத்தை ஸமிப்பிக்கையாவது - இத்தை நினைத்து சேதநன் வெருவாதபடி பண்ணுகை.

ஆ.—கருரு. அவ்வளவே யல்ல ரக்ஷ்யமாயும் ரக்ஷித்தும்போருகிற சேதநேச்வரஸ்வரூபஸித்தியும்; ரக்ஷிப்பிக்குமிந்த புருஷகாரத்தாலே. ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தம் நித்யமாகிலும், ரக்ஷணப்ரேரகை யிவளிறே.

கருசு. ஆகில்லவன் ஸ்வதந்த்ர ரக்ஷணத்துக்கும் இவன் ததேகரக்ஷ்யத்வரூபபாரதந்த்ர்யத்துக்கும் கொத்தையாகாதோவென்ன, உபயர்க்கும் ஔபாதிகபுருஷகாரபாரதந்த்ர்யமுண்டாகையாலே கொத்தையாகாதென்கிறார். (ஔபாதிகம்) இத்யாதியால். ப்ரணயித்வநிபந்தநமாக வருகையாலே. ஔபாதிகமுமாய், ப்ரணயிப்ரணயிநீஸம்பந்தமடியாக வருகையாலே நித்யமுமான ப்ரணயித்வபாரதந்த்ர்யமும், ததீயத்வநிபந்தநமாய் வருகையாலே ஔபாதிகமுமாய், தத்ததீயஸம்பந்தமபுங்குரமாகையாலே நித்யமுமான ததீயபாரதந்த்ர்யமும், நிரங்குசஸ்வதந்த்ரன் ததேகபரதந்த்ரனென்கிற இருவர்க்கும் ஸ்வஸ்வரூபாநுகுணமாகவுண்டிறே. ஏவம்விதபாரதந்த்ர்ய மிருவர்க்குமுண்டாகையால் இருவர்களுடைய புருஷகாரஸாபேக்ஷரக்ஷகத்வரக்ஷ்யத்வங்கள், நிருபாதிகஸம்பந்தஸித்தஸ்வாதந்த்ர்யபாரதந்த்ர்யங்களுக்கும் கொத்தையாகாதென்றபடி. ஆக, ஈச்வரனுக்கு நிருபாதிகமுமாய் நித்யமுமான ஸ்வதஸ்ஸித்தவேஷம் ஸ்வாதந்த்ர்யம்; ஔபாதிகமுமாய் நித்யமுமான வேஷம் ப்ரணயித்வபாரதந்த்ர்யம்; சேதநனுக்கு நிருபாதிகமுமாய் நித்யமுமானவேஷம் பகவத்பாரதந்த்ர்யம்; ஔபாதிகமுமாய் நித்யமுமான வேஷம் ததீயபாரதந்த்ர்யம்; ப்ரணயித்வததீயபாரதந்த்ர்யங்களுக்கு ப்ரதமவிஷயம் பிராட்டி சரமவிஷயம் ததீயர்.

கருரு. ஸ்வரூபஸித்தியுமத்தாலே.

கருசு. ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ர்யம் இருவர்க்குமுண்டிறே.

ஜீ.—கருரு. இவ்வளவேயன்றுஇன்னமிதுக்கொரு ப்ரயோஜநமுண்டென்கிறார், (ஸ்வரூப) இத்யாதியாலே, ஸ்வரூபமாவது-இவனுக்கு ததீயபாரதந்த்ர்யம்; அவனுக்கு ஆச்ரிதபாரதந்த்ர்யம். "தேவும் தன்னையும்" என்று ஆச்ரிதபாரதந்த்ர்யத்தையிறே யவனுக்குத்தானான தன்மையாக ஆழ்வாரருளிச்செய்தது. இவையிரண்டு மிருவர்க்கும் ஸித்திப்பது புருஷகாரபுரஸ்கரணத்தாலே யென்கை.

கருசு. கீழே (ஸ்வரூபம்) என்று சொன்னத்தை யுபபாதிக்கிறார், (ஔபாதிகமுமாய்)என்று துடங்கி. அதாவது - சேதநனுக்கிவ்விஷயத்தில் பாரதந்த்ர்யம் ததீயத்வப்ரயுக்தமாகையாலே ஔபாதிகமுமாய், அவ்வுபாதிதான் நித்யமாகையாலே நிருபாதிகபகவத்பாரதந்த்ர்யத்தோபாதி நித்யமுமாயிருக்கும்; ஈச்வரனுக்கிவ்விஷயத்தில் பாரதந்த்ர்யம் ஆச்ரிதத்வப்ரயுக்தமாகையாலே ஔபாதிகமுமாய், அவ்வுபாதி நித்யமாகையாலே அதுதானும் நித்யமாயிருக்குமென்கை. (இருவர்க்குமுண்டு)என்னாதே, (உண்டிறே) என்றது - இவ்வர்த்தத்தில் ப்ரமாணப்ரஸித்தியைத் தோற்றுவிக்கைக்காக.

ஆ.—௩௫௫. ஈத்ருசபுருஷகார மூபயருடையவுமாகந்துகபாரதந்த்ர்யத்தைக் குலைத்து, உபயஸ்வபர்வத்தைத நிலைப்பிக்குமென்கிறார் மேல்; புருஷீகரிப்பிக்கக் குலைகையாலே யநித்யமாய், தான்பண்ணின கர்மந்தானே யநுபவிக்கிறான் நாம் செய்வதென்னென்று கர்மத்தின் தலையிலே ஸ்வாதந்த்ர்யத்தை வைத்து தன்னைக்கொண்டு நழுவுகையாகிற வீச்வரனுடைய கர்ம்பாரதந்த்ர்யமும், ஸர்வநியந்தாவான தேவரையொழிய கர்மத்துக்கொரு மூச்சுண்டோ, கண்ணழியாதே கைக்கொண்டருளீரென்று புருஷீகரித்து திருத்துமிந்த புருஷகாரத்தாலே குலையும். புருஷகாரபூர்வகஸித்தோபாய விநாச்யமாகையாலே யநித்யமாய் நெடுங்காலமேபிடித்து கர்மமிட்டவழக்காய் ஸம்ஸரிக்கையாகிற சேதநனுடைய கர்மபாரதந்த்ர்யமும், பகவத்பரதந்த்ரனான விவன் கர்மபரதந்த்ரனாய் காலங்கழிப்பதேயென்று நினைத்து திருத்தும் புருஷகாரத்தாலே குலையும். இது கீழ்ச்சொல்லப்பட்டதேயாகிலும் நித்யப்ரதியோகியான விதின் அநித்யத்வமிங்கு விசேஷித்துச் சொல்லுகையால் பௌநருக்த்யதோஷமில்லை.

௩௫௬. இப்புருஷகாரத்தால் பலித்த ஸாத்யவிசேஷத்தை யருளிச்செய்கிறார் மேல் (ஸஸாக்ஷிகம்) இத்யாதியால் ஏவம்விதபுருஷகாரமாகிற வுபயாநுமதஸாக்ஷியோடே கூடியிருக்கையாலே, சேதநேச்வரர்களுடைய ஸ்வதஸ்ஸித்தரக்ஷ்யரக்ஷகஸம்பந்தத்தை, ரக்ஷக

---

௩௫௫. அநித்யமான விருவர் பாரதந்த்ர்யமும் குலைவதும் அத்தாலே

௩௫௬. ஸஸாக்ஷிகமாகையாலே இப்பந்தத்தை யிருவராலு மில்லைசெய்யப்போகாது.

ஜீ.—௩௫௫. இவ்வளவன்று, இன்னமிதுக்கொரு ப்ரயோஜநமுண்டென்கிறார், (அநித்யமான) என்றுதுடங்கி. அநித்யமான பாரதந்த்ர்யமாவது கர்மபாரதந்த்ர்யம். அதில் சேதநனுக்கு கர்மபாரதந்த்ர்யமாவது - அவச்யமநுபோக்தவ்யங்களான சுபாசுபகர்மங்களின் வசத்திலே யிழுப்புண்டு ஸம்ஸரிக்கை; ஈச்வரனுக்கு கர்மபாரதந்த்ர்யமாவது - தான்செய்த கர்மம் தானனுபவிக்கிறானாகில் நாம் செய்வதென்னென்று இவன் செய்த கர்மத்தையே ப்ரதாநமாக்கி, அதுக்கீடாகவே நிர்வஹித்துக்கொண்டு போருகை. இது நடப்பது "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்னுமளவுமாகையாலே, இத்தை யநித்யமென்கிறது. இவை புருஷகாரபுரஸ்கரணத்தாலே குலைகையாவது - இவன் முன்னிடுமளவில் அத்தலையைத் திருத்தியும், அவன் முன்னிடுமளவில் இத்தலையைத் திருத்தியும், இரண்டுதலையும் ரக்ஷ்யரக்ஷகபாவேந சேரும்படி பண்ணுகையாலே இவை தன்னடையே நிவ்ருத்தமாகை.

௩௫௬. அநாதிகாலம் ஸ்வதந்த்ரனாய் யாதானும்பற்றி நீங்கித் திரிந்த விவன் இன்றிறே ஆபிமுக்க்யம்பண்ணிற்று, ப்ரக்ருதியோடே யிருக்கையாலே துர்வாஸனை மேலிட்டு, ஆச்ரயணாங்கீகாரங்களாலே உத்பூதமான விந்த ரக்ஷ்யரக்ஷகபந்தத்தை யில்லைசெய்து பழையபடியே போகப்பார்க்குதல், நிரங்குசஸ்வதந்த்ரனாய் கர்மாநுகுணமாக விவனை லீலையிலே யநாதிகாலம்விநியோகம்கொண்டுபோந்த வீச்வரன்தான் இப்பந்தத்தைத் யில்லைசெய்து முன்புபோலே யிவனை கர்மாநுகுணமாக நிர்வஹிக்கப் பார்க்குதல் செய்யிலோவென்ன வருளிச்செய்கிறார், (ஸஸாக்ஷிகம்) என்றுதுடங்கி. அதாவது - இந்த ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தம் இரண்டுதலை

ஆ.—னான வவனாலும் ரக்ஷ்யமான விவனாலும், ரக்ஷியாமல் அநுக்கிலக்காகாமல் இல்லை செய்யவொண்ணாது.

௧௫௭. இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணம் காட்டுகிறார், (என்னைநெகிழ்க்கிலும்) இத்யாதியால். நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக நித்யஸூரிகள் நடுவே யென்னை யங்கீகரித்தபின்பு, ஸர்வசக்தியான தானும் கைவிடமாட்டானென்னும் பிராட்டிபக்கலுண்டான பரிவு அவள் பரிக்ரஹமான வென்னளவும் வந்ததென்றிறே இந்த திவ்யஸூக்திகள் சொல்லுகிறன. முற்பட்டஸூக்தியில் ஸம்பந்தத்தின் அசைதில்யமும், பிற்பட்டதில் அதின் புருஷகாரபூர்வகத்வமும் தோற்றுகிறது.

௧௫௮. அத்தை யில்லைசெய்யவொண்ணாமைக்கடியான வுபயருடைய ஸாக்ஷிபாரதந்த்ர்ய விசேஷத்துக்கு ப்ரமாணத்தை ஸ்மரிப்பிக்கிறார், (கர்மணி) இத்யாதியால். "𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍" "ஸ்ரீமந்" என்கிற ஆதிமபதத்தில் "𑌶𑍍𑌰𑍀𑌯𑌤𑍇" "ஸ்ரீயதே" என்கிற கர்மணிவ்யுத்பத்தியிலே, சேதநன் மிதுநசேஷத்வமாகிற ஸ்வரூபத்தாலும், ஈச்வரன் ப்ரணயித்வபாரதந்த்ர்யமாகிற குணத்தாலும், ஸ்வஸ்வாநுகுணமாக வருகிறவளுடைய ஸேவா கர்தாக்களல்லாதாரில்லாமையாகிற கர்த்ருஸங்கோசராஹித்யத்தை, இவ்விடத்தே வுபயருடைய புருஷகாரபாரதந்த்ர்யநிர்ணயார்த்தமாக நினைப்பதென்கிறார். ஆக ஸ்வோந்மேஷிதபந்தத்தை உபயரும் சிதிலீகரிக்க

---

௧௫௭. "என்னைநெகிழ்க்கிலும்" "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய."

௧௫௮. கர்மணி வ்யுத்பத்தியில் ஸ்வரூபகுணங்களால் வருகிற

ஜீ.—யும் அறிந்ததாக வந்ததன்றிக்கே, புருஷகாரரூபஸாக்ஷிஸஹிதமாக வந்ததாகையாலே, இத்தை யிருவராலு மழியமாறப் போகாதென்கை.

௧௫௭. இதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார்மேல், ("என்னை") என்றுதுடங்கி. நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக நித்யஸூரிகள் நடுவே யென்னை யங்கீகரித்தபின்பு ஸர்வசக்தியானதானும் கைவிடமாட்டானென்கையாலே, "என்னைநெகிழ்க்கிலும்" என்கிற பாட்டு அவனாலேயிப்பந்தத்தை யில்லைசெய்யப் போகாமைக்குப்ரமாணம். பெரியபிராட்டியார்க்கு ஸ்நேஹியாகையாலே அவள் பரிக்ரஹமான வென்பக்கலிலே யதிஸ்நேஹியாய், அரியன செய்துவந்தென்னோடே கலந்த வுன்னைப் பெற்று வைத்து இனி நழுவ விடுவேனோ வென்கையாலே "கோலமலர்ப்பாவைக்கு" என்கிறபாட்டு புருஷகாரம் முன்னாகவந்த விப்பந்தத்தை சேதநனாலு மில்லைசெய்யப்போகாதென்னுமதுக்கு ப்ரமாணம்.

௧௫௮. (ஸஸாக்ஷிகமான விப்பந்தத்தை... இல்லைசெய்யப்போகாது)என்றது-ஸாக்ஷியான புருஷகாரவிஷயத்திலிருவர்க்குமுண்டான நித்யபாரதந்த்ர்யத்தைப் பற்றவாகையாலே. இருவர்க்கு மிவ்விஷயத்திலுண்டான நித்யபாரதந்த்ர்யத்தில் ப்ரமாணம் காட்டுகிறார் மேல், (கர்மணி) என்றுதுடங்கி. (கர்மணிவ்யுத்பத்தி)யாவது "𑌶𑍍𑌰𑌿𑌞𑍍 - 𑌸𑍇𑌵𑌾𑌯𑌾𑌮𑍍" "ஸ்ரீங் - ஸேவாயாம்" என்கிற தாதுவில் "𑌶𑍍𑌰𑍀𑌯𑌤𑍇" "ஸ்ரீயதே" என்கிற வ்யுத்பத்தி; இதுக்கர்த்தம் ஸேவிக்கப்படாநின்றாளென்றிறே; இவ்வ்யுத்பத்தியில் (ஸ்வரூபகுணங்களால் வருகிற கர்த்ருஸங்கோசராஹித்ய)மாவது - சேஷத்வமாகிற ஸ்வரூபத்தாலும் ப்ரணயித்வமாகிற குணத்தாலும் வருகிற சேதநபரமசேதநர்களாகிற ஸேவாகர்தாக்களுக்கு ஸங்கோசமில்லாமை; அதாவது இரண்டுதலைக்குமிவள்விஷயத்திலுண்டான ஸேவை யவிச்ச

ஆ.—வொண்ணாதபடி உபயபஹுமந்தவ்யஸம்பந்தம் இப்புருஷகாரத்துக்குண்டென்றபடி.

கருக. ப்ரபத்த்யதிகாரிகளாமவர்களுக்கு இப்புருஷகாரம் அதிகாரிஸித்த்யர்த்தமாக வவச்யம் வேணுமென்கிறார் மேல்; அஜ்ஞாநாதிப்ரபத்த்யதிகாரித்ரயத்துக்கும், அபராதபயநிவர்த்தகமான புருஷகாரம், ஸ்வாதிகாராந்வயநியதபூர்வபாவித்வேநாவர்ஜநீயமாயிருக்கும். பக்திநிஷ்டருக்குப்போல் தோஷம் ப்ராயச்சித்தவிநாச்யமன்றியே புருஷகாரவிநாச்யமாகையாலும், இத்தையொழிய ஸித்தோபாயவிசேஷம் பலியாமையாலும், ப்ரபத்த்யதிகாரிகளானாரெல்லார்க்கும், புருஷகாரத்தையொழிய ஸ்வாதிகாராந்வயஸித்தி யில்லை. (அதிகாரித்ரயம்) என்கிற ஸாமாந்யோக்தியைக்கொண்டு ஐச்வர்யகைவல்யபகவச்சரணார்த்திகளைக் கொள்ளுகை யப்ரஸ்துதமாகையாலும், அவர்கள் ஸ்வஸ்வஸாதநங்களில் அந்வ

கர்த்ருஸங்கோசராஹித்யத்தை நினைப்பது.

கருக. அதிகாரித்ரயத்துக்கும் புருஷகாரமவர்ஜநீயம்.

ஜீ.—சிந்நமாய்ச் செல்லுகை; இத்தை(நினைப்பது)என்றது-இப்படியிவ்விஷயத்திலிரண்டு தலைக்குமுண்டான பாரதந்த்ர்யத்தை ஸ்மரிப்பதென்றபடி.

கருக. இப்படி யிருக்கையால் இப்புருஷகாரம் ப்ரபத்த்யதிகாரிகளெல்லார்க்கு மவச்யாபேக்ஷிதமென்கிறார்மேல், (அதிகாரி) இத்யாதியாலே. (அதிகாரித்ரய)மாவது - அஜ்ஞர், ஜ்ஞாநாதிகர், பக்திவிவசர் என்கிற மூன்றதிகாரிகளும்; இவர்களுக்கு (புருஷகாரமவர்ஜநீயம்) என்றது—குற்றத்தைசமிப்பிக்கை முதலானவற்றுக்கு புருஷகாராந்வயம் வேண்டுகையாலே ஸர்வதா கைவிடவொண்ணாதென்கை.—அதவா இப்புருஷகாரந்தான் அநந்யப்ரயோஜநராய் ப்ரபத்திபண்ணுமவர்களுக்கேயோ, ப்ரயோஜநாந்தரபரராய்ப் பண்ணுமவர்க்கும் வேணுமோவென்ன வருளிச்செய்கிறார், (அதிகாரி)இத்யாதியாலே. (அதிகாரித்ரயம்) என்கிறது ஐச்வர்யகைவல்யபகவச்சரணார்த்திகளை; இவர்கள் மூவர்க்கும் (புருஷகாரமவர்ஜநீயம்) என்றது - ஸ்வஸ்வாபிலஷிதஸித்திக்கு ஈச்வரனை யுபாயமாக ஸ்வீகரிக்குமளவில் இவர்களபராதங்களைப் பொறுத்து அவனங்கீகரிக்கும்படி பண்ணுகைக்கு புருஷகாரம் அவச்யாபேக்ஷிதமென்கை. பூர்வவாக்யத்தில் புருஷகாரபூர்வகமானவுபாயவரணம் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் பொதுவாகையாலே யிறே, உத்தரவாக்யத்தாலே யநந்யப்ரயோஜநத்வத்தை ப்ரகாசிப்பிக்க வேண்டுகிறது; பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதிதமான ஸாதநவிசேஷம் பலசதுஷ்டயஸாதாரணமாயிறே யிருப்பது; அதிலிவ்வதிகாரிக்கு அபிலஷிதமான பலவிசேஷமின்னதென்னுமிடத்தை ப்ரகாசிப்பிக்கிறது இவ்வாக்யமென்று பரந்தபடியிலும்; கீழ்ச்சொன்ன ஸாதநம் பலசதுஷ்டயஸாதாரணமாயிருக்கையாலே, இவனுக்கபேக்ஷிதமான பலவிசேஷத்தைச் சொல்லுகிறதென்று ச்ரிய:பதிப்படியிலும்; உத்தரவாக்யத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது, ப்ராப்யாந்தரத்துக்கன்றென்கை. இத்யாதியாலே முமுக்ஷுப்படியிலு மிவர்தாமே யருளிச்செய்தாரிறே; "திருமாலைக் கைதொழுவர்" "அடியாரைச் சேர்தல் தீர்க்கும்திருமாலை" என்கிறபடியே புருஷகாரம் முன்னாகப்பற்றி ப்ரயோஜநங்களைக் கொண்டகலாதே அவற்றையொழிந்து 'உண்டோடியாள் திருமகளு'மவனுமானசேர்த்தியிலடிமையைப் பேறென்று கீழ்ச்சொன்ன வுபாயபலத்தைக் காட்டுகிறது பிற்கூறென்றிறே, இவர் திருத்தம்பியாரும் அருளிச்செயல் ரஹஸ்ய

ஆ.—யிக்குமிடத்து தத்ததநுகுணப்ராயச்சித்தமொழிய புருஷகாராச்ரயணம் வேண்டாமையாலும்,(நாலாமதிகாரிக்கு ப்ராயச்சித்தவிநாசம்)என்று இவர்தாம் விசேஷிக்கையாலும், ச்ரிய:பதியை யுபாஸிப்பர்களென்னுமளவுகொண்டு புருஷகாரபாவம் வாராமையாலும் சேராது. ஆக ஸ்வாதந்த்ர்யத்தால் அங்கீகரிக்குமிடத்திலும் ஏவம்விதபுருஷகாரத்தை முன்னிட்டங்கீகரிக்குமென்று கீழே ஸம்பந்தித்திருக்கிறது.

கசுo. கீழே ஸ்ரீபரதாழ்வானுக்கு ஸ்வகதையான ப்ரபத்தி தீமையானாப்போலே, ஸ்வகதமான ஸ்வரூபாந்தரங்ககுணங்களும் தீமையாய்விடுமென்கிறார், (தனக்குத்தான்) இத்யாதியால். இஷ்டவிநியோகார்ஹசேஷத்வமேவடிவான தனக்கு, ஸ்வரூபாநுரூபம் சேஷத்வமென்று ப்ரமிக்கிற

கசுo. தனக்குத்தான் தேடும் நன்மை

ஜீ.—த்திலருளிச்செய்தது.—ஆக, (இவனவனை) என்றுதுடங்கி. இவ்வளவாக ஸ்வகதஸ்வீகாராநுபாயத்வமும்,பரகதஸ்வீகாரோபாயத்வமும், தத்ப்ராபல்யமும், அவனே ஸ்வீகரிக்குமளவிலும் புருஷகாரம்முன்னாகவே ஸ்வீகரிக்கும்படியையும், இருவருமிப்புருஷகாரத்தை முன்னிடுகிறதுதனக்கு ப்ரயோஜநமின்னதென்னுமிடமும், ப்ரபத்த்யதிகாரிகளெல்லார்க்கும் புருஷகாரமவர்ஜநீயமென்னுமதுவும் சொல்லப்பட்டது. ப்ரதமப்ரகரணத்திலே புருஷகாரவைபவகதநமுகேந "శ్రీమత్" "ஸ்ரீமத்"பதார்த்தத்தையும், உபாயவைபவகதநமுகேந "నారాయణచరణౌ శరణమ్" "நாராயணசரணௌ சரணம்" என்கிற பதங்களிலர்த்தங்களையும் ப்ரதிபாதித்தவநந்தரம், (ப்ரபத்திக்கு தேசநியமமும்)என்றுதுடங்கி. "ప్రపద్యే" "ப்ரபத்யே" என்கிற பதத்தால் சொல்லப்பட்ட ப்ரபத்தியினுடைய தேசாதிநியமாபாவத்தையும், அதுக்கு விஷயநியமம் சொல்லுகைக்காக (குணபூர்தியுள்ளவிடமே விஷயமாகை)என்றுதுடங்கி முக்தகண்டமாக மீளவும் "నారాయణ" "நாராயண" பதார்த்தத்தையும், (இதில் ப்ரபத்திபண்ணுமதிகாரிகள் மூவர்) என்று உத்தமனாலே ஆக்ஷிப்தனான வதிகாரியையும், ப்ரபத்தியில் ஸாதநத்வமில்லாமையையும், ப்ரபத்த்யதிகாராபேக்ஷிதமான சக்திலஜ்ஜாபயநிவ்ருத்திசமதமாதிசயம் முதலானவற்றையும், ப்ரபத்த்யங்கதயா த்யாஜ்யமான உபாயாந்தரத்தினுடைய தோஷபூயஸ்தையையும், தத்ப்ரதிகோடிதயாப்ரபத்தியினுடைய நைர்தோஷ்யாதிகளையும், ப்ரபத்திப்ரஸங்கத்தாலே முகபேதேந ஸ்வகதஸ்வீகாராநுபாயத்வத்தையும், பரகதஸ்வீகாரோபாயத்வத்தையும், தத்ப்ராபல்யத்தையும், அவனேஸ்வீகரிக்குமளவிலும் புருஷகாரத்தைமுன்னிட்டே ஸ்வீகரிக்குமென்னுமிடத்தையும்,உபயரும் புருஷகாரத்தை முன்னிடுமதுக்குண்டான ப்ரயோஜநவிசேஷங்களையும், அதிகாரித்ரயத்துக்கும் புருஷகாரமவர்ஜநீயமென்னுமத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, இவ்வளவும் பூர்வகண்டார்த்தத்தை யருளிச்செய்தாராய்த்து.

கசுo. இப்ப்ரகரணாதியிலே (உபாயத்துக்கு) என்றுதுடங்கி. உபேயாதிகாரமும் சில சொல்லிற்றேயாகிலும் அது ப்ராஸங்கிகமித்தனை, இனி உபேயாதிகாரபரமான ப்ரகரணசேஷத்தாலும் உத்தரகண்டார்த்தத்தை யருளிச்செய்கிறார். அதுசெய்கிறவிடத்தில், பாஷ்யகாரர்கத்யத்ரயத்தில் உத்தரகண்டார்த்தமநுஸந்தித்தருளினக்ரமத்திலே, "నమః" "நமச்"சப்தார்த்தம்முன்னாகவருளிச்செய்கிறார். அதில் இந்நமஸ்ஸு தான் ப்ராப்யவிரோதிநிவ்ருத்திப்ரதிபாதகமாகையாலே, ப்ராப்யவிரோதிகளானவற்றை தர்சிப்பிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் அவற்றிலே யொன்றை யருளிச்செய்கிறார்;(தனக்குத்தான்)என்றுதுடங்கி. கீழே(ஸ்ரீபரதாழ்வானுக்கு

ஆ.—தான், சேஷியழித்து விநியோகிக்குமிடத்து நம்சேஷத்வமழியவொண்ணுதென்று பிற்காலித்து ஆர்ஜிக்கிற ஸ்வார்ஹசேஷத்வமாகிற நன்மை, அநாதிகாலார்ஜித அக்ருத்யகரணாதிகளான தீமைகளோபாதி, சேஷியின் போகாநுரூபவிநியோகத்துக்கு விலக்காயிருக்கும்.

௧௬௧. அதென்போலவென்ன நாயகனுகக்குமழுக்கிட்ட சட்டை, போகதசையில் அவனணைக்கைக்கு விரோதியாய் கழற்றிவைக்கவேண்டினப்போலே, சேஷியுகக்கும் ஆத்மாலங்காரமான சேஷத்வம், போகாநுரூபமல்லாவிடில் விரோதியாய்க் கழற்றி வைக்கவேண்டிவருமிறே.

௧௬௨. அபிமதாபரணமும் தசாவிசேஷத்தில் அநபிமதமாமென்னுமிடத்துக்கு அநுஷ்டாநப்ரமாணம் காட்டுகிறார் மேல்; "హారోఽపి నార్పితః కణ్ఠే స్పర్శసంరోధభీరుణా। ఆవయోరన్తరే జాతాః పర్వతాస్సరితో ద్రుమాః" "ஹாரோऽபி நார்பிதః கண்டே ஸ்பர்சஸம்ரோதபீருணா। ஆவயோரந்தரே ஜாதாః பர்வதாஸ்ஸரிதோ த்ருமாః" என்று ஸ்பர்சவிரோதியாமென்று நாயகிதிருக்கழு

தீமையோபாதி விலக்காயிருக்கும்.

௧௬௧. அழுக்கிட்டசட்டை அணைக்கைக்கு விரோதியாமாப்போலே.

௧௬௨. "హారోఽపి" "ஹாரோऽபி."

ஜீ.—நன்மைதானே தீமையாய்த்து)என்று ஸ்வகதப்ரபத்தி சரண்யஹ்ருதயாநுஸாரியல்லாதபோது தீமையாய்த்தலைக்கட்டும்படி சொன்னவித்தாலே, உபாயதசையில் தனக்குத்தான் தேடும் நன்மை தீமையாமென்னுமிடமருளிச்செய்தாராய், இப்ப்ரஸங்கத்திலே உபேயதசையிலும் தான் தனக்குத் தேடும் நன்மை தீமையாமென்னுமிடமருளிச்செய்கிறாரென்று கீழோடிதுக்குஸங்கதி, (தனக்கு) இத்யாதி. அதாவது-சேஷியானவன் போகதசையில் தன் வ்யாமோஹத்தாலே "ஆருயிர்பட்டதென துயிர்பட்டது" என்னும்படி தன் திறத்தில் மிகவும் தாழநின்று பரிமாறுமளவில், நாம் சேஷபூதரன்றோ நம் சேஷத்வத்தை நோக்கவேண்டாவோவென்று ஸ்வவசைசயாநுஸந்தாநத்தாலே பிற்காலித்து, தனக்குத்தான் தேடுகிற சேஷத்வமாகிற நன்மை, அநாதிகாலம் "స్వతన్త్రోఽహమ్" "ஸ்வதந்த்ரோऽஹம்" என்றிருந்த தீமையோபாதி அவன்போகத்துக்கு ப்ரதிபந்தகமாயிருக்குமென்கை. (தீமை) என்று அக்ருத்யகரணாதிகளைச் சொல்லவுமாம்.

௧௬௧. சேஷியினுடைய விருப்பத்துக்குடலாய் ஆத்மாவுக்கலங்காரமாயிருக்கிற சேஷத்வம், போகவிரோதியாகிறபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார், (அழுக்கிட்ட சட்டை) என்றுதுடங்கி. அதாவது-ஸ்த்ரீக்கு அழுக்கிட்டசட்டை நாயகனுகப்புக்கு விஷயமுமாய் அவளுக்கலங்காரமாயிருந்ததேயாகிலும், போகதசையில் ஆலிங்கநவிரோதியாமாப்போலே, இதுவும் போகவிரோதியாமென்றபடி.

௧௬௨. அழுக்குடலானது அநுபவவிரோதியாமென்னுமிடம், சேஷிவசநத்தாலே தர்சிப்பிக்கிறார்மேல், ("హారోఽపి", "ஹாரோऽபி") என்றுதுடங்கி. "హారోఽపి నార్పితః కణ్ఠే స్పర్శసంరోధభీరుణా। ఆవయోరన్తరే జాతాః పర్వతాస్సరితో ద్రుమాః" "ஹாரோऽபிநார்பிதఃகண்டே ஸ்பர்சஸம்ரோதபீருணா। ஆவயோரந்தரே ஜாதாః பர்வதாஸ்ஸரிதோ த்ருமாః" என்று ஸம்ச்லேஷதசையில் ஸ்பர்சவிரோதியாமென்னுமச்சத்தாலே பிராட்டி திருக்கழுத்திலொரு முத்துவடமுட்படப் பூண்பதில்லை என்றாரிறேபெருமாள்; "భీరుణా"

ஆ—த்திலொரு முத்துத்தாவடமுட்படப் பூண்பதில்லை யென்னரே பாம போகியான பெருமாள்.

௧௬௩. இப்படி போகாநுரூபமல்லாத சேஷத்வம் விரோதியாமாப் போலே, போகாநுரூபமல்லாத பாரதந்த்ர்யமும் ஸ்வதந்த்ரஸ்வாமியான பரனுடைய வநுபவத்துக்குத் துராலான விலக்காயிருக்கும், அநாதிகாலார்ஜிதபுண்யம் மோக்ஷத்துக்கு விலக்கடியாமாப்போலேயென்கிறார். ஆக, ஸ்வாதீநசேஷத்வபாரதந்த்ர்யங்கள் புண்யபாபவத் பரித்யாஜ்யங்கள், போகாதீநமானவை போகோபகரணவத் உபாதேயங்கள், தத்போகாநுருபமான சேஷித்வஸ்வாதந்த்ர்யங்களும் பராதிசயத்வேந சேஷத்வபாரதந்த்ர்யபராகாஷ்ட்டையாய்விடும்; ஆகையால் போகாநுரூபமாகையே ஓடவைத்த ஸ்வரூபமென்றபடி.

௧௬௪. ஸ்வகதமானவிவை ஸ்வரூபவிருத்தப்ரவ்ருத்திபோலே விருத்தமாய்விடுமென்கிறார்மேல், (குணம்போலே தோஷநிவ்ருத்தி) என்று. அநாதிகாலம் ஆர்ஜிதமான தோஷத்தின் ஸ்வாதீநநிவ்ருத்தி தத்ப்ரவ்ருத்தியைப்பற்றவும், பரதந்த்ரஸ்வரூபவிரோதியாமாப்போலே, ஸ்வகதாந்தரங்குணங்களும் விரோதிகளாய்விடுமென்கிறரென்று, [தோஷநிவ்ருத்தி

௧௬௩. புண்யம்போலே பாரதந்த்ர்யமும் பராநுபவத்துக்கு விலக்கு.

௧௬௪. குணம்போலே தோஷநிவ்ருத்தி.

ஜீ.—"பிருணு"என்கிற லிங்கவ்யத்யயமார்ஷம்.—அன்றிக்கே அழுகுக்கிட்டது அணைக்கைக்கு விரோதியாமென்னு மிடமறிவிக்கையே ப்ரயோஜநமாக்கி, லிங்காநுகுணமாக பெருமாள் தம்மளவிலே யோஜிக்கவுமாம்.

௧௬௩. ஆனல் பின்னை பாரதந்த்ர்யமேயோ நல்லதென்ன வருளிச்செய்கிறார்மேல்,(புண்யம்போலே) என்றுதுடங்கி. (புண்யம்)என்கிறது-கீழ்(நன்மை) என்கிற சொல்லாலே சொன்ன சேஷத்வத்தை; அது கீழ்ச்சொன்னபடியே ஸ்வசைச்யாநுஸந்தாநத்தாலே யிருக்கைக்குறுப்பாய்க்கொண்டு யாதொருபடி போகவிரோதியாகாநிற்கும், அப்படியே, போகதசையில் அவனுக்கெதிர்விழிகொடாதே அசித்துப்போலே கிடக்கைக்குறுப்பான கேவலபாரதந்த்ர்யமும், எதிர்விழிஸாபேக்ஷனை வீச்வரனுடைய போகத்துக்கு மிடறுபிடியாமென்றபடி.—அன்றிக்கே, (புண்யம்) என்கிறது - ஸத்கர்மத்தையாய், அது யாதொருபடி பாபத்திற்காட்டில் வ்யாவ்ருத்தமாயிருக்கச் செய்தே பகவத்ப்ராப்திப்ரதிபந்தகமாகாநிற்கும், அப்படியே யிருக்கைக்குறுப்பான சேஷத்வத்திற்காட்டில், அசித்துப்போலே யெதிர்த்தலையிட்டதுவழுக்கர்யிருக்கைக்குறுப்பாகையாலே வ்யாவ்ருத்தமான பாரதந்த்ர்யமும், எதிர்விழிகொடுக்கைக்குறுப்பல்லாமையாலே பரனுடையவநுபவத்துக்கு ப்ரதிபந்தகமாமென்னவுமாம். இத்தால்-கேவலசேஷத்வமும் கேவலபாரதந்த்ர்யமும் ஓரோராகாரங்களாலே போகவிரோதியாகாநிற்கும்; பாரதந்த்ர்யத்தோடேகூடின சேஷத்வமே உத்தேச்யமென்கை.

௨௨௯. பெரியவுடையார்க்கு பெருமாள் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம்பண்ணி யருளினர்.

௨௩௦. தர்மபுத்ரர் அசரீரிவாக்யத்தையும் ஜ்ஞாநாதிக்யத்தை

ஜீ.—மமதத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்" என்றுராக்ஷஸருடைய பலாபல மிருக்கும்படி நமக்குச்சொல்லுமென்கையாலே இவனை ராக்ஷஸஜாதீயனாக நினையாதே திருத்தம்பிமாரோபாதியாக அபிமானித்து வார்த்தையருளிச்செய்தாரென்கை. இவ்வாக்யத்திலே ராவணன் பரித்யஜித்தமையும் பெருமாள் பரிக்ரஹித்தமையும் சொல்லுகையாலே, பகவதாநுகூல்யமுண்டாகவே ப்ராக்ருதர் இவன் நமக்குடலல்லனென்று கைவிடுமவர்களென்னுமிடமும், பகவான் விரும்பி மேல்விழுந்து பரிக்ரஹிக்குமென்னுமிடமும் சொல்லப்பட்டது.

௨௨௯. இப்படி உக்திமாத்ரத்தாலன்றிக்கே பாகவதவைபவத்தை வ்ருத்தியாலும் பெருமாள் வெளியிட்டபடியை யருளிச்செய்கிறார், (பெரியவுடையார்க்கு) என்றுதுடங்கி. "మర్యాదానాంచలోకస్య కర్తాకారయితాచసః" "மர்யாதாநாம்சலோகஸ்ய கர்தாகாரயிதாசஸ:" என்கிறபடியே லோகமர்யாதாஸ்த்தாபநார்த்தமாக வவதரித்து பித்ருவசநபரிபாலநாதிகளாலே ஸாமாந்யதர்மஸ்த்தாபநசீலராயிருப்பாரொருவரிறே பெருமாள்; ஏவம்ப்பூதரானவர் பிராட்டிபிரிவுகண்டு பொறுக்கமாட்டாமை தம்மையழியமாறின பெரியவுடையார்க்கு, ஜந்மவ்ருத்தாதிகளால் உத்க்ருஷ்டரானவர்களுக்கு தத்புத்ரசிஷ்யர்கள் பண்ணும் ப்ரஹ்மமேதஸம்ஸ்காரத்தை, அவருடையப்ரேமாதிக்யமே ஹேதுவாக திருத்தம்பியாரும் கூடநிற்கச் செய்தே தாமே ஸாதரமாகப்பண்ணி யருளினரிறே. இத்தால் ஜந்மாத்யுத்க்ருஷ்டரானவர்கள் அவற்றால்குறைந்திருக்கும் விலக்ஷண பாகவத விஷயத்தில் புத்ரக்ருத்யமநுஷ்டிக்கலாமென்னுமிடம் காட்டப்பட்டது.

௨௩௦. இவ்வர்த்தத்தை தர்யபுத்ராநுஷ்டாநத்தாலும் தெளிவிக்கிறார், (தர்மபுத்ரர்) என்றுதுடங்கி. பெருமாள் பரார்த்தமாக ஸாமாந்யதர்மத்தைப் பண்ணிப்போந்தாரேயாகிலும் விசேஷதர்மத்திலே திருவுள்ளமொத்திருக்கையாலே யவர்க்குச்செய்யலாம்; இவர்செய்ததிறேயரியது; ஸ்வவர்ணதர்மத்தையே உத்தேச்யமாகநினைத்து ஸர்வாவஸ்த்தையிலு மதுக்கொரு நழுவுதல்வாராதபடி ஸாவதாநமாக நடத்திக்கொண்டுபோருமவரிறே யிவர்; இப்படியிருக்கிற விவர் ஸ்ரீவிதுரரை ஸம்ஸ்

ஆ.—ஜ்ஞாநாதிகரான ஸ்ரீவிதுரரை வைதிகமான ப்ரஹ்மமேதத்தாலே கூச்சமற ஸம்ஸ்கரித்தார். இத்தால் வர்ணதர்மிகளும் ஜ்ஞாநாதிகரை வர்ணாபகர்ஷம்பாராம லநுவர்திக்கவேணுமென்றபடி.

உருக. விசிஷ்டவேஷதர்சிகளாய் மந்த்ரத்ரஷ்டாக்களான ருஷிகள், மந்த்ரச்ரவணயோக்யதையற்ற தர்மவ்யாதன் வாசலிலே நெடுநாள் துவண்டு, ச்ரேயஸ்ஸாதநங்களான தர்மங்களினுடைய அயதாப்ரதிபத்திரூபஸந்தேஹங்களை, யதார்த்தோபதேசச்ரவணங்களாலே சமிப்பித்துக்கொண்டு நிஸ்ஸம்சயதர்மஜ்ஞரானார்கள். ஒருவ்ருக்ஷமூலத்தே நின்று தபஸ்ஸுபண்ணுகிற ஒருப்ராஹ்மணன் மேலே யெச்சமிட்டதொரு பக்ஷியைச்சுடப்பார்க்க, அது வெந்து நீறாய்ப்பறக்கக்கண்டு விஸ்மிதனாய், அருகணைந்ததொரு க்ராமத்திலே பிக்ஷைவரவுதாழ்த்ததென்று ஒரு

யும்கொண்டு ஸ்ரீவிதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார்.

உருக. ருஷிகள் தர்மவ்யாதன்வாசலிலே துவண்டு தர்மஸந்தே

ஜீ.—கரிக்கிறதசையில் அவருடையவர்ணத்தைப்பார்ப்பதுஜ்ஞாநாதிக்யத்தைப்பார்ப்பதாய் என்செய்யக்கடவோமென்று வ்யாகுலப்படாநிற்கச்செய்தே "ధర్మరాజస్తుతత్త్రైనం సంచిస్కారయిషుస్తదా । తత్త్రకామోఽభవద్విద్వానథాకాశేవచోఽబ్రవీత్ ॥ భోభోరాజన్నదగ్ధవ్యమేతద్విదురసంజ్ఞకమ్ । కలేబరమిహైతత్తే నైషధర్మస్సనాతనః ॥ లోకావైలక్షణోనామ భవిష్యత్యస్యపార్థివ । యతిధర్మమవాప్తోఽసౌనశోచ్యభరతర్షభ" "தர்மராஜஸ்துதத்ரைநம் ஸஞ்சிஸ்காரயிஷுஸ்ததா । தத்த்துகாமோऽபவத்வித்வாநதாகாசேவசோऽப்ரவீத் ॥ போபோ ராஜந்நதக்த்தவ்யமேதத்விதுரஸம்ஜ்ஞகம் । கலேபரமிஹைதத்தே நைஷதர்மஸ்ஸநாதந: ॥ லோகவைலக்ஷணோநாம பவிஷ்யத்யஸ்யபார்த்திவ । யதிதர்மமவாப்தோऽஸௌநசோச பரதர்ஷப" என்றிவர் ப்ரஹ்மமேதஸம்ஸ்காரார்ஹரென்று சொன்ன அசரீரிவாக்யத்தாலும் ஸம்ப்ரதிபந்நமான இவருடைய ஜ்ஞாநாதிக்யத்தாலும் ஸந்தேஹமற்று, வைதிகாக்ரேஸரருக்குச் செய்யக்கடவ ப்ராஹ்மமேதஸம்ஸ்காரத்தாலே ஸம்ஸ்கரித்தாரிறே.

உருக. அநந்தரம் ஜந்மாத்யுத்க்ருஷ்டரானருஷிகள் நிதபக்ருஷ்டன் பக்கலிலே தர்மச்ரவணம்பண்ணினபடியை யருளிச்செய்கிறார், (ருஷிகள்) என்றுதுடங்கி. சதுர்வேததரராய் ஸர்வோத்க்ருஷ்டராயிறே ருஷிகளிருப்பது; ஏவம்பூதரானவர்கள் வேதச்ரவணயோக்யதை யில்லாதகுலத்திலே பிறந்துள்ளவனாய், ஜாதிஸ்ம்ருதியோடே ஜாதனாகையாலே பூர்வஜந்மஸித்தமான ஜ்ஞாநத்தில் ப்ரம்சமில்லாமையாலும் மாதாபித்ருசுச்ருஷாவிசேஷத்தாலும் ஸகலதர்மஸூக்ஷ்மஜ்ஞாநனாயிருக்கும் தர்மவ்யாதன் வாசலிலேசென்று, மாதாபித்ருசுச்ருஷைகபரனாயிருக்கிறவவனவஸரம்பார்த்துத்துவண்டு ஜ்ஞாதவ்யங்களானதர்மங்களில் தங்களுக்கு ஸந்திக்தங்களானவையெல்லா மவன்பக்கலிலேகேட்டு அதில் ஸந்தேஹங்களைப் போக்கிக்கொண்டார்களென்கை. "కశ్చిద్ద్విజాతిప్రవరో వేదాధ్యాయీ తపోధనః । తపస్వీ ధర్మశీలశ్చ కౌశికో నామ భారత ॥ సాఙ్గోపనిషదాన్ వేదానధీతే ద్విజసత్తమః । స వృక్షమూలే కస్మింశ్చిద్వేదానుచ్చారయన్ స్థితః ॥ ఉపరిష్టాచ్చ వృక్షస్య బలాకా సంన్యలీయత । తయా పురీషముత్సృష్టం బ్రాహ్మణస్య తదోపరి" "கச்சித்த்விஜாதிப்ரவரோ வேதாத்யாயீ தபோதந: । தபஸ்வீ தர்மசீலச்ச கௌசிகோநாமபாரத ॥ ஸாங்கோபநிஷதாந்வேதாநதீதேத்விஜஸத்தம: । ஸவ்ருக்ஷமூலேகஸ்மிம்ச்சித் வேதாநுச்சாரயந்ஸ்த்தித: ॥ உபரிஷ்டாச்சவ்ருக்ஷஸ்ய பலாகாஸந்ந்யலீயத ।

ஆ.— பதிவ்ரதையைச்சுடப்பார்க்க, அவளும்பகவத்ஸமாராதநம்பண்ணும் பர்த்ருசிச்ருஷண பரையாய் தாழ்த்தேனத்தனைகாணும், அந்தப்பக்ஷியை ப்பார்த்தாப்போலே யென்னையும் பார்க்கலாமென்றிருந்தீரோ, பிக்ஷைக்கு வந்துகோபியாமல்போமென்ன, அவனும்திகைத் தநுதாபப்பட்டு இதுக்கு ப்ராயச்சித்தமநுக்ரஹிக்கவேணுமென்ன, அத்தை தர்மவ்யாதன்பக்கலிலே கேட்டுக்கொள்வதென்ன, பின்பு தர்மவ்யாதனிருக்கிறவிடத்தே சென்று அவன் மாம்ஸவிக்ரயம் பண்ணிக்கொண்டிருக்கிறபடியைக்கண்டு சங்கித்துக்கொண்டுநிற்க அவனுமிவனைக்கடைக்கணித்து பக்ஷியைக்கொன்ற பாபப்ராயச்சித்தமென் பக்கலிலே கேட்கச்சொல்லி அப்பதிவ்ரதைவரவிடு

ஹங்களைச் சமிப்பித்துக்கொண்டார்கள்.

ஜீ.—தயாபுரீஷமுத்ஸ்ருஷ்டம் ப்ராஹ்மணஸ்ய ததோரஸி” என்றுதுடங்கி, கௌசிகனென்று பேரையுடையனாய் அதீதஸாங்கஸசிரஸ்கஸகலவேதனா யிருப்பானொருப்ராஹ்மணோத்தமன், ஒருவ்ருக்ஷமூலத்திலே வேதங்களையு முச்சரித்துக்கொண்டு நிற்கச்செய்தே, அதின் மேலே யிருந்த தொரு கொக்கெச்சமிட்டதுதன் மார்பிலேவந்து பட்டவாறே, க்ருத்த்தனாய்ப்பார்த்தபார்வையிலே அதுபட்டுவிழ, அத்தைக்கண்டு தப்தசித்தனாய் கனக்கசோகித்து ராகத்வேஷபலாத்க்ருதராய்க்கொண்டு அக்ருத்யத்தைதச்செய்தோமென்று பலகாலும்சொல்லிக்கொண்டு, ஆஸந்நமானதொருக்ராமத்திலே பிக்ஷார்த்தமாகப்போய், ப்ரதமமொரு க்ருஹத்திலேசென்று “భిక్షాం దేహి” “பிக்ஷாம்தேஹி” என்று யாசித்தவளவிலே; அந்தக்ருஹிணியானவள் நில்லும் வருகிறேனென்றுசொல்லி க்ருத்யாதிகள்பண்ணி பிக்ஷைகொண்டுவருவதாக உத்யோகியா நிற்கச்செய்தே, பர்த்தாவானவன் அதிவக்ஷுதார்த்தனாய்வந்துபுகிற, அவள்பதிவ்ரதையாகையாலே பிக்ஷைகொண்டுவருகிறத்தைவிட்டு பாத்யாசமநீயாஸநப்ரதாநாதிகளாலே யவனைசிச்ருஷிக்கிற பராக்கிலே ப்ராஹ்மணர் நிற்கிறத்தை மறந்து நெடும்போது நின்று பின்னையவன் நிற்கிறத்தைக்கண்டு நடுங்கி பிக்ஷையைக்கொண்டுவந்தவளவிலே, என்னை நிற்கச்சொல்லி இத்தனைபோது நீபுறப்படாதிருப்பானென்னென் றவன்குபிதனானவாறே, அவளவனை ஸாந்த்வநம்பண்ணி இத்தைப்பொறுக்க வேண்டிக்கொண்டு நான்பர்த்தாவேதெய்வமென் றிருப்பாளொருத்தி, அவனிளைத்துவருகையாலே தச்சிச்ருஷைபண்ணிநின்றேனித்தனையென்ன, உனக்குபர்த்தாவேயன்றோ ஸத்கரிக்கவேண்டுவது ப்ராஹ்மணரளவில் கௌரவப்ரதிபத்தியில்லையேயென்று வ்யங்க்யமாகச்சொல்லி, க்ருஹதர்மத்திலே வர்த்திக்கிற நீ ப்ராஹ்மணரை யிப்படியவமதிபண்ணலாகாதுகாணென்ன, நானொருக்காலும் ப்ராஹ்மணரை யவமதிபண்ணேன் ப்ராஹ்மணருடைய வைபவமெல்லாம் நன்றாகவறிவனென்று பரக்கச்சொல்லிக்காட்டி, இவ்வபராதத்தைப் பொறுக்கவேணும் பர்த்தாவேதெய்வமென் றிருக்கையாலே தச்சிச்ருஷையிலே பரவசையாய்நின்றேனித்தனை, என்னுடைய பதிசிச்ருஷையினுடைய பலத்தைப்பாரீர் உம்முடையரோஷத்தாலே யந்தகொக்கு யாதொருபடி தக்த்தமாயிற்று அதுவுமெனக்கு விதிதம்காணுமென்றுசொல்லி “క్రోధశ్శత్రుశ్శరీరస్థో మనుష్యాణాం ద్విజోత్తమ । యః క్రోధమోహౌ త్యజతి తం దేవా బ్రాహ్మణం విదుః” “க்ரோதச்சத்ருச்சரீரஸ்த்தோ மநுஷ்யாணாம் த்விஜோத்தம ! யஃக்ரோதமோஹௌ த்யஜதி தம்தேவாப்ராஹ்மணம் விதுஃ” என்று துடங்கி. காமக்ரோதாதிகள் ப்ராஹ்மணனுக்காகாது,

ஆ.—வன்றேவந்தீர், என்வ்ருத்திகண்டு சங்கிக்கவேண்டாகாணும், ஜாதியிதுவாகையாலே இந்த விக்ரயமாத்ரத்தால்வந்தகொத்தாரம்கொண்டு இங்ஙனே வர்த்திப்பனித்தனை, ஒன்றையும் ஹிம்ஸிப்பதில்லையென்று, அவன் தத்ப்ராயச்சித்தமின்னதென்ன, தத்தர்சகஸம்பாஷணமாத்ரத்தாலே இவனும் பூதனாய் பலதர்மஸந்தேஹங்களும் சமிப்பித்துக்கொண்டு போனான். இன்னமிங்ஙனேபல இதிஹாஸங்களுண்டென்றருளிச்செய்வர். இத்தால் ஜ்ஞாநாதிகனே தர்மச்ரவணம்பண்ணுவார்க்கு அதிகவிஷயமென்றபடி.

ஜீ.—ஸத்யார்ஜவாதிகளுண்டாகவேணுமென்று விஸ்தரேண தான் ப்ரதிபாதித்து, "భవానపిచధర్మజ్ఞస్స్వాధ్యాయనిరతశ్శుచిః । నతుతత్త్వేనభగవన్ ధర్మాన్ వేత్సీతి మేమతిః॥ మాతాపితృభ్యాంశుశ్రూషుస్సత్యవాదీజితేన్ద్రియః । మిథిలాయాంవసన్ వ్యాధఃసతేధర్మాన్ ప్రవక్ష్యతి॥ తత్రగచ్ఛస్వభద్రంతే యథాకామం ద్విజోత్తమ। వ్యాధఃపరమధర్మాత్మా సతేఛేత్స్యతిసంశయాన్" "பவாநபிச தர்மஜ்ஞஸ்ஸ்வாத்யாயநிரதச்சுசி: । நதுதத்த்வேநபகவந் தர்மாந்வேத்ஸீதிமேமதி: ॥ மாதாபித்ருப்யாம்சுச்ருஷுஸ்ஸத்யவாதீஜிதேந்த்ரிய: । மிதிலாயாம்வஸந்வ்யாத: ஸதே தர்மாந் ப்ரவக்ஷ்யதி ॥ தத்ரகச்சஸ்வபத்ரம்தே யதாகாமம் த்விஜோத்தம। வ்யாத:பரமதர்மாத்மா ஸதேசேத்ஸ்யதி ஸம்சயாந்" என்று நீரும் தர்மஜ்ஞர் வேதாத்த்யநநிரதர் சுத்தர், ஆயிருக்கச்செய்தேயும் தர்மங்களையுள்ளபடி யறியீரென்றெனக்கு நினைவு; மாதாபித்ருசுச்ருஷுவாய் ஸத்யவாதியாய் ஜிதேந்த்ரியனாய்க்கொண்டு, மிதிலையிலேயிருக்கிற வ்யாதனுமக்குதர்மங்களைச்சொல்லக்கடவன் அங்கேபோம், உமக்கு நன்மையுண்டாவுதாக, பரமதர்மாத்மாவாயிருக்கிற அந்தவ்யாதன் வேண்டினபடியும்முடையஸம்சயங்களையெல்லாம் போக்கக்கடவனென்ன, அவன் ப்ரீதனாய் இவனைநமக்கஸ்தோத்ரம்பண்ணி, அங்குநின்றும் மிதிலையிலேசென்று, "పఞ్చైతానిపవిత్రాణి శిష్టాచారేషునిత్యదా । ఏతన్మహామతే వ్యాధ ప్రబ్రూహియథాతథమ్" "பஞ்சைதாநிபவித்ராணி சிஷ்டாசாரேஷு நித்யதா । ஏதந்மஹாமதேவ்யாத ப்ரப்ரூஹியதாததம்" என்று சிஷ்டாசாரங்களிலே யெப்போது முளவாயிருக்கிற பவித்ரங்களஞ்சுளவை? மஹாமதியானவனே யத்தைச்சொல்லவேணுமென்ன, "యజ్ఞోదానంతపోవేదాః సత్యంచ ద్విజసత్తమ। పఞ్చైతానిపవిత్రాణి శిష్టాచారేషునిత్యదా" "யஜ்ஞோதாநம் தபோவேதா ஸ்ஸத்யம்ச த்விஜஸத்தம । பஞ்சைதாநி பவித்ராணி சிஷ்டாசாரேஷு நித்யதா" என்று யஜ்ஞமும் தானமும் தபஸ்ஸும் வேதங்களும் ஸத்யமுமாகிற பவித்ரங்களான விவையைந்தும் சிஷ்டாசாரங்களிலே யெப்போதுமுளவாயிருக்குமென்று இத்யாதியாலே அவனித்தை யுபதேசிக்க, மேல்மேலும் தனக்கு ஸம்சயமானவையெல்லாமிவன் கேட்க உபதேசமுகத்தாலே ஸகலதர்ம ஸம்சயங்களையும் தர்மவ்யாதனறுத்த ப்ரகாரத்தை தர்மபுத்ரர்க்கு மார்க்கண்டேயனநுக்ரஹித்ததாக ஆரண்யபர்வத்திலே யிருநூறுமத்த்யாயம் தொடங்கி பதிமூன்றத்த்யாயத்தாலேபரக்கச் சொல்லப்பட்டதிறே. இன்னமுமிப்படி பலருமிவன்வாசலிலேதுவண்டு தர்மஸந்தேஹங்கள் சமிப்பித்துக்கொண்டமை பலவிடங்களிலுமுண்டு. இத்தால் ஜந்மாத்யுத்க்ருஷ்டரானவர்கள் ஜ்ஞாநாதிகராயிருக்கில் அவர்கள் வாசலிலேதுவண்டு ஜ்ஞாதவ்யார்த்தங்கள் கேட்கக்குறையில்லையென்னுமிடம் காட்டப்பட்டது.

ஆ.—உகூஉ. தர்மஸம்ஸ்த்தாபகனனக்ருஷ்ணன் "భీష్మద్రోణావతిక్రమ్య మాం చైవ మధుసూదన" "பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாம்சைவமதுஸூதந" என்னும்படி உத்க்ருஷ்டவர்ணவ்ருத்தராய் பார்த்துக்கொண்டிருக்கிற பீஷ்மத்ரோணாதிகளுடைய வலங்க்ருதமான க்ருஹங்களைக் கடைக்கணியாமல் புறக்கணித்துவிட்டு, வர்ணாத்யுத்கர்ஷமுமின்றியே யெழுந்தருளக் கூடுமென்னும் நினைவுமில்லாத ஸ்ரீவிதுரருடைய ஆநந்தாச்ருபங்கிலமாய் ஸஸம்ப்ரம ந்ர்த்தஸமுத்தததூளிதூஸரிதமுமாய் ஸந்தோஷாதிசயத்தாலே பெருத்த திருமாளிகையிலே, "భుక్తవత్సు ద్విజాగ్రేషు నిషణ్ణః పరమాసనే। విదురాన్నాని బుభుజే శుచీని గుణవన్తి చ" "புக்தவத் ஸு த்விஜாக்ரேஷு நிஷண்ண: பரமாஸநே। விதுராந்நாநிபுபுஜே சுசீநிகுணவந்திச" என்றுபாவநத்வபோக்யத்வ பரிமளஸாரஸ்யம் திருப்பவளத்திலும் திருவுள்ளத்திலுமூற்றெழும்படி யமுதுசெய்தான்.

உகூஉ. க்ருஷ்ணன் பீஷ்மத்ரோணாதி க்ருஹங்களைவிட்டு ஸ்ரீ விதுரர் திருமாளிகையிலே யமுதுசெய்தான்,

---

ஜீ.—உகூஉ. அநந்தரம் "యద్యదాచరతి శ్రేష్ఠః" "யத்யதாசரதிச்ரேஷ்ட:" என்று க்ருஷ்ணனுசரித்தபடியை யருளிச்செய்கிறார்; (க்ருஷ்ணன்) என்று துடங்கி. தர்மஸம்ஸ்த்தாபநார்த்தமாக வவதரித்தருளி "లోకసంగ్రహమేవాపి సంపశ్యన్ కర్తుమర్హసి" "லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பச்யந் கர்துமர்ஹஸி" என்று ஜ்ஞாநியானாலும் லோகஸங்க்ரஹத்தைப்பார்த்து வர்ணாச்ரமதர்மங்கள் நன்றாகவநுஷ்டிக்க வேணுமென்றுபதேசித்தும், "యది హ్యహం న వర్తేయం జాతు కర్మణ్యతన్ద్రితః। మమ వర్త్మానువర్తన్తే మనుష్యాః పార్థ సర్వశః" "யதிஹ்யஹம்நவர்தேயம் ஜாதுகர்மண்யதந்த்ரித:। மமவர்த்மாநுவர்தந்தே மநுஷ்யா: பார்த்தஸர்வச:" என்றொருக்கால் கர்மத்தில் சோம்பாதே நான் ப்ரவர்த்தியேனாகில் மநுஷ்யரெல்லா மென்வழியைப்பின்செல்லு மென்றபடியே பரார்த்தமாகத்தான் குறிக்கொண் டநுஷ்டித்தும் போரும் ஸ்வபாவனிறேக்ருஷ்ணன்; ஏவம்பூதனானவன் ஸ்ரீதூதெழுந்தருளினபோது "భీష్మద్రోణావతిక్రమ్య మాం చైవ మధుసూదన। కిమర్థం పుణ్డరీకాక్ష భుక్తం వృషలభోజనమ్" "பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாம்சைவமதுஸூதந। கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம்வ்ருஷலபோஜநம்" என்னும்படி உத்க்ருஷ்டவர்ணவ்ருத்தராய் இங்கேயெழுந்தருளுவரென்று பார்த்துக்கொண்டிருந்த பீஷ்மாதிகளுடைய க்ருஹங்களையுபேக்ஷித்து, வர்ணாத்யுத்கர்ஷரஹிதராய் அத்தாலே யிங்கேயெழுந்தருளுவரென்னும் நினைவுமற்றிருந்த ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே ஸாதரமாகச்சென்றுபுக்கு "సంభ్రమైస్తుష్య గోవిన్ద ఏతన్నః పరమం ధనమ్" "ஸம்ப்ரமைஸ்துஷ்யகோவிந்த ஏதந்ந:பரமம்தநம்" என்று பக்திபரவசரான அவர்பண்ணின ஸம்ப்ரமங்களையெல்லாம் கண்டுகந்து, "విదురాన్నాని బుభుజే శుచీని గుణవన్తి చ" "விதுராந்நாநிபுபுஜே சுசீநி குணவந்திச" என்கிறபடியே அஹங்காரோபஹதமல்லாமையாலே பரமபாவநமாய், பக்த்யுபஹ்ருதமாகையாலே பரமபோக்யமாயிருக்கிறவன்னத்தை, அந்த பாவநத்வபோக்யத்வங்களடியாக அத்யாதரம்பண்ணி யமுதுசெய்தானிறே.

ஆ.—உருங. பாவநபதார்த்தவாசியறியும் பெருமாள் "ஶபர்யாபூஜிதஸ்ஸம்யக் ராமோதஶரதாத்மஜ:" "சபர்யா பூஜிதஸ்ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:" என்று ஜ்ஞாநாதிகையாய் பரிவையான ஸ்ரீசபரியின் ஜலஸ்பர்சமில்லாத திருக்கையாலே முன்பு தான் பரீக்ஷித்து த்விஜஸ்பர்சமுள்ள தித்தித்த வற்றைத் திருப்பவளத்திலேகொடுக்க, துறைவாசியறிந்து விடாய்கெட வமுதுசெய்தருளினர். இத்தால் தூரபிமாநமற்ற ஜ்ஞாநாதிகபக்திமான்களுடைய வபிமாநஸ்பர்சமுள்ளது, துறைவாசியறியும் விசிஷ்டர்க்குப் பாவநமுமாய் பரமபோக்யமுமாய் ப்ரார்த்தநீயமுமா யிருக்குமென்றபடி.

உருச. மாறனேரிநம்பி பெரியநம்பிமடியிலே திருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது புரோடாசத்தை நாய்க்கிடாதேகிடீர், நானின்னபடியின்னபடிசொன்னேனாகில் நீருமின்னபடியின்னபடிசெய்யும், நானொருபடியும் சொல்லிற்றிலேனாகில் நீருமொருபடியும் செய்யாதிருமென்று ஒன்றுமருளிச்செய்யாமல் திருநாட்டுக்கெழுந்தருள; நம்பியு மவரை ப்ரஹ்மமேதத்தாலே பள்ளிபடுத்தி யருளிச்செய்தபடியே செய்தருள; இவரை வினவவெழுந்தருளினவுடையவர் ஜீயா லோகம்சிலுகிடாதபடி யடியேனொருவழியிலே யடைத்துக்கொண்டுவர தேவரீர் ஒருவழியே பிரித்தருளாநின்றது தேவரீர் செய்தருள வேண்டிற்றோவென்ன, ஆளிட்டந்தி தொழுவோ நான் பெருமாளில் தர்மபுத்ரனில் பெரியனோ, இவர்பெரியவுடையாரில் ஸ்ரீவிதுரரில் தண்ணியரோ, காட்டாரோடியல்வொழிந்தநமக்கு அவர்கள்சிலுகால்வரும் தாழ்வேது,பயிலும்சுடரொளி,நெடுமாற்கடிமையி லாழ்வாரருளிச்செய்த ததீயசேஷத்வத்திலிங்கவயியாமல் எங்கேபோய்ப் பின்னைகொள்ளலாமென்

உருங. பெருமாள் ஸ்ரீசபரிகையாலே யமுதுசெய்தருளினர்.

உருச. மாறனேரி நம்பி விஷயமாக பெரியநம்பி உடையவர்க்

ஜீ.—உருங. ஏதத் பூர்வாவதாரத்திலு மிப்படி யநுஷ்ட்டித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார், (பெருமாள்) என்றுதுடங்கி. அதாவது ரகுகுலதிலகரா யாசாரப்ரதாநரான பெருமாள், "ஶபர்யாபூஜிதஸ்ஸம்யக் ராமோதஶரதாத்மஜ:" "சபர்யாபூஜிதஸ்ஸம்யக்ராமோதசரதாத்மஜ:" என்னும்படி வேடுவிச்சியாய்வைத்தே குருசிச்ருஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய், தன்நாவுக்கு இனிதாயிருந்த பலமூலாதிகளெல்லாம் இங்குத்தைக்கென்று ஸஞ்சயித்துக்கொண்டு வரவுபார்த்திருந்த ஸ்ரீசபரி, தன்னுதாரநுகுணமாகத் தன்கையாலே யமுதுசெய்யப்பண்ண அதிஸந்துஷ்டராயமுது செய்தாரென்கை. இத்தா லபிஜநாதிகளால் வரு மபிமாநகந்தமற்ற ஜ்ஞாநப்ரேமாதிகருடைய வபிமாநஸ்பர்சமுள்ளவை ஆத்மகுணகதர்சிகளான விசேஷஜ்ஞர்க்கு அதீவ பாவநபோக்யங்களாயிருக்குமென்னுமிடம் காட்டப்பட்டது.

உருச. இப்படி ஸ்ரீராமாயண மஹாபாரத ஸித்தமான சிஷ்டாசாரங்களாலே பாகவத்வைபவத்தை ப்ரகாசிப்பித்தார்கீழ்; இன்னமு மிவ்வர்த்தவிஷயமாக பூர்வாசார்யவசநத்தை ஸ்மரிப்பிக்கிறார், (மாறனேரிநம்பி) என்றுதுடங்கி, அதாவது அபிமாநஹேதுவான ஜந்மவ்ருத்தாதிகளன்றிக்கே ஆளவந்தார் ஸ்ரீபாதத்தையுடையராய் அத்யாத்மஜ்ஞாநபரிபூர்ணராயிருக்கிற மாறனேரிநம்பி, தம்முடையவந்திமதசையிலே ஆளவந்தாரபிமானித்தருளின வித்தேஹத்தை ப்ரக்ருதிபந்துக்கள் ஸ்பர்சிக்கில்செய்வதென்னென்றதிசங்கை பண்ணி, ஸப்ரஹ்மசாரிகளான பெரியநம்பியைப்பார்த்து புரோடாசத்தை நாய்க்கிடாதேகிடீரென்றருளிச்செய்து

ஆ:—றிருந்தீரோவென்ன, உடையவருமுகந்து வித்தராய்நிற்க, இவரொன்று மருளிச்செய்யாம லெழுந்தருளினதுக்கு காரணமென்னென்ன, ச்லோகத்வயம் காணும் அப்போதிவர்க்கநுஸந்தாநமென்ன, அதுபெண் கண்ட பிச்சின் வார்த்தையன்றோவென்ன, இப்பெண்ணினுடைய நித்ய யோகத்தை யநுஸந்தித்தருளவேண்டாவோ வென்ன, நம்பியுமுகந்து அப்போது விசேஷகடாக்ஷம் பண்ணியருளினாரென்கிற சரமாதிகாரியான மாறனேரி நம்பிவிஷயமாக சரமார்த்த நிஷ்டரான பெரியநம்பி ச்ரோதாவானவுடையவர்க்கு மறையாமலருளிச்செய்த தஞ்ஜமானவார்த்தையைபரமரஹஸ்யமாகையாலே ஸூசித்து(ஸ்மரிப்பது)என்கிறார். ஆகஜாத்யாதிநிகர்ஷம்பாராமல்ஜ்ஞாநாதிக்யத்தையேபார்த்துததீயரையாதரித்தநுவர்த்திக்க வேணுமென்னுமிடம் ததீயாநுஷ்டாநஸித்தமென்றதாயிற்று.

௨௫௫. இனி பகவத்ஸாஜாத்யாதிகள்போல் ததீயஸாஜாத்யாதிகளும் ச்லாக்யங்கள், அபாகவதருடைய வித்யாத்யுத்கர்ஷமடங்க கர்ஹ்யங்களென்று மருளிச்செய்கிறார், (“ప్రాదుర్భావైః”)(“ப்ராதுர்ப்பாவை:”) இத்யாதியால். “ప్రాదుర్భావైః సురనరసమో దేవదేవస్తదీయా జాత్యావృత్తైరపిచ గుణతస్తాదృశో నాత్రగర్హా । కింతు శ్రీమద్భువనభవనత్రాణతో ఽన్యేషు విద్యావృత్తప్రాయో భవతి విధవాకల్పకల్పః ప్రకర్షః” “ப்ராதுர்ப்பாவை ஸ்ஸுரநரஸமோ தேவதேவஸ்ததீயா ஜாத்யாவ்ருத்தை ரபிச குணதஸ்தாத்ருசோநாத்ரகர்ஹா । கிந்து ஸ்ரீமத்புவநபவநத்ராணதோ உந்யேஷு வித்யாவ்ருத்தப்ராயோபவதிவிதவாகல்பகல்ப: ப்ரகர்ஷ:”

கருளிச்செய்தவார்த்தையை ஸ்மரிப்பது.

௨௫௫. “ప్రాదుర్భావైః” “ப்ராதுர்ப்பாவை:” இத்யாதி

ஜீ.—திருநாட்டுக்கெழுந்தருள பெரியநம்பியுமப்படியே பிறர்கையில்காட்டிக்கொடாதே தாமேபள்ளிபடுத்துவந்தெழுந்தருளியிருக்க, இத்தையுடையவர்கேட்டருளி; பெரியநம்பி ஸ்ரீபாதத்திலேவிழுந்து, ஜீயா மர்யாதை கிடக்கக் காரியம்செய்யவேண்டாவோ, தேவரீர்செய்தருளவேண்டிற்றோ வென்ன, ஆளிட்டந்திதொழுவோ; நான் பெருமாளில்காட்டி லுத்க்ருஷ்டனோ; இவர் பெரியவுடையாரில்காட்டி லபக்ருஷ்டரோ, பயிலும் சுடரொளி நெடுமாற்கடிமை கடலோசையோபாதியோ, ஆழ்வாருளிச்செய்தவர்த்தத்தைச் சிறிதுகுறையவாகிலு மாசரிக்கவேண்டாவோ வென்றருளிச்செய்தவார்த்தை.

௨௫௫. இனி பாகவதஜந்மாதி ச்லாக்யதாகதநபூர்வகமாக அபாகவதோத்கர்ஷ நிந்த்யதையை ப்ரகாசிப்பிக்கிறார், “ప్రాదుర్భావైః”)(“ப்ராதுர்ப்பாவை:”) இத்யாதி என்று. “ప్రాదుర్భావైః సురనరసమో దేవదేవస్తదీయా జాత్యావృత్తైరపిచగుణతస్తాదృశో నాత్రగర్హా । కింతు శ్రీమద్భువనభవనత్రాణతో ఽన్యేషు విద్యావృత్తప్రాయోభవతి విధవాకల్పకల్పః ప్రకర్షః” “ப்ராதுர்ப்பாவைஸ்ஸுரநரஸமோ தேவதேவஸ்ததீயா ஜாத்யாவ்ருத்தைரபிசகுணதஸ்தாத்ருசோநாத்ரகர்ஹா । கிந்து ஸ்ரீமத்புவநபவநத்ராணதோ உந்யேஷுவித்யாவ்ருத்தப்ராயோபவதி விதவாகல்பகல்ப:ப்ரகர்ஷ:” இத்தால் அயர்வறுமமரர்களதிபதியானவன் ப்ராதுர்ப்பாவங்களாலே ஸுரநரஸஜாதீயனாகிற்கும், ததீயரும் ஜாதியாலும் வ்ருத்தங்களாலும் குணத்தாலு மப்படியே யிதரஸமராயிருப்பர்கள், இதில் கர்ஹையில்லை, ச்லாகையேயுள்ளது; உபயரு மிப்படி நிற்கிறது இந்தலோகரக்ஷணம் நிமித்தமாக; இனி அபாகவதர் பக்கலுண்டான வித்யாவ்ருத்தபாஹுள்யரூபமான வுத்கர்ஷம் விதவாலங்காரம்போலே நிந்த்யமாகா நின்றதென்கிறது.

ஆ.—௨௬௬. பாகவதரன்றென்ன அதிகரித்த வேதவித்யை நிஷ்பலமாமோவென்ன ஆமென்றுப்ரமாணம் சொல்லாநின்றதேயென்கிறார்மேல், (பாகவதன்) இத்யாதியால். “చతుర్వేదధరో విప్రో వాసుదేవం నవిన్దతి । వేదభారభరాక్రాన్తస్సవై బ్రాహ్మణగర్దభః” “சதுர்வேததரோவிப்ரோ வாஸுதேவம் நவிந்ததி। வேதபாரபராக்ராந்த ஸ்ஸவைப்ராஹ்மணகர்தப:” என்று வேதத்தினுட்பொருளான பகவத்ஸம்பந்தியான ஜ்ஞாநாநுஷ்டாநமின்றியே புறப்பொருளான ஜ்ஞாநாநுஷ்டாநமுடைய ஸ்தூலதர்சியானவன், தத்ததீயபோக்யமான வேதபரிமள த்ரவ்யபாரத்தைக் கினிய பரித்தினைத்து அதில் போக்யதாசுவடறியாத ப்ராஹ்மணக்கழுதையென்று ப்ரமாணம் தாக்ஷிண்யமறச்சொல்லாநின்றதிறே யென்கிறார். “అవైష్ణవో వేదవిద్యో వేదహీనశ్చవైష్ణవః । జ్యాయాంసమనయోర్విద్ధి యస్యభక్తిస్త్రిరామయి” அவைஷ்ணவோ வேதவித்யோ வேதஹீநச்சவைஷ்ணவ: । ஜ்யாயாம்ஸமநயோர்வித்தி யஸ்யபக்தி: ஸ்த்ரிராமயி” என்று வேதமோதாதவைஷ்ணவனில் ஓதியுமவைஷ்ணவனானவன் தண்ணியனென்னாநின்றதிறே.

௨௬௭. பகவத்ஸம்பந்தமற்ற வைதிகஜந்மம் ஸத்கர்ஹிதமாமாப்போலே, தத்ஸம்பந்தமுள்ள திர்யகாதிஜந்மமும் ஸத்ப்ரார்த்தநீயமாயிருக்குமென்கிறார் மேல் (ராஜாவான) இத்யாதியால். ரமணீயமானவற்றை யாசைப்படும்ராஜாவான ஸ்ரீகுலசேகரப்பெருமாள் “கோனேரிவாழும்

---

௨௬௬. பாகவதனன்றிக்கே வேதார்த்தஜ்ஞாநாதிகளை யுடையவன் குங்குமம்சுமந்த கழுதையோபாதியென்று சொல்லாநின்றதிறே.

௨௬௭. ராஜாவான ஸ்ரீகுலசேகரப்பெருமாள் திர்யக்ஸ்தாவர

ஜீ.—௨௬௬. பாகவதர்களன்றென்று அவர்களுக்குண்டான வேதவித்யாதிகள் வ்யர்த்தமாமோவென்ன அப்படிப்ரமாணம் சொல்லாநின்றதிறேயென்கிறார் (பாகவதனன்றிக்கே) என்றுதுடங்கி. அதாவது - “చతుర్వేదధరో విప్రో వాసుదేవం నవిన్దతి । వేదభారభరాక్రాన్తస్సవై బ్రాహ్మణగర్దభః” “சதுர்வேததரோவிப்ரோ வாஸுதேவம்நவிந்ததி। வேதபாரபராக்ராந்த ஸ்ஸவைப்ராஹ்மணகர்தப:” என்று வேததாத்பர்யமான பகவத்ஜ்ஞாநாதிகளில்லாமையாலே பாகவதனன்றிக்கே வேதாத்யயநத்தோடே அதில் ஸ்தூலார்த்தஜ்ஞாநாதிகளை யுடையனாயிருக்குமவன், போகிகளாயிருப்பார் விரும்பும் பரிமளத்ரவ்யமான குங்குமத்தைச்சுமந்து திரியாநிற்கச்செய்தே அதின் வாசியறியாதகழுதைபோலே, பூர்வோத்தரபாகங்களாலே ஆராதநஸ்வரூபத்தையு மாராத்யஸ்வரூபத்தையும் ப்ரதிபாதியாநின்றுகொண்டு பகவதேகபரமாயிருக்கிற வேதமாகிற விலக்ஷணவஸ்துபாரத்தைக்கினியச்சுமந்துகொண் டிருக்கச்செய்தே, அதின் சுவடறியாத ப்ராஹ்மணக்கழுதையென்று வேதோபப்ரும்ஹணமான ப்ரமாணம் சொல்லாநின்றதிறேயென்கை.

௨௬௭. பகவத்ஸம்பந்தரஹிதமான ஜந்மாதிகள் ஸத்கர்ஹிதமென்னுமத்தை தர்சிப்பித்தார்க்கீழ்; தத்ஸம்பந்தமான திர்யகாதிஜந்மமும் ஸத்ப்ரார்த்த்யமென்னுமத்தை தர்சிப்பிக்கிறார்மேல்,(ராஜாவான) என்று துடங்கி. அதாவது த்விதீயவர்ணரான ஏற்றத்தையுடைய ஸ்ரீகுலசேகரப்பெருமாள், திர்யக்ஸ்தாவரஜந்மங்களானவை “వాచికైః పక్షిమృగతాం” “வாசிகை:பக்ஷிம்ருகதாம்” இத்யாதிகளாலே பாபயோநிகளாகச்சொல்லப்படாநிற்கச்செய்தே “வேங்கடத்துக்கோனேரிவாழும் குருகாய்ப்பிற

ஆ.—குருகாய்ப்பிறப்பேனே” “செண்பகமாய்நிற்கும் திருவுடையேனாவேனே” என்றித்யாதியாலே திருமலையாழ்வாரோடு ஸம்பந்தமுள்ள திர்யக்ஸ்தாவரஜந்மங்களை அலப்யலாபமாக வாசைப்பட்டார்.

௨௧௮. உத்க்ருஷ்டஜந்மத்தை யாசைப்படவேண்டாதபடி ப்ராஹ்மணோத்தமரான வேண்டியவேதங்களோதி வேதார்த்தஸ்தாபநம் பண்ணும் பெரியாழ்வாரும், வேதமனைத்துக்கும் வித்தானமழலைச் சொல்லுடைய பிஞ்ஜில்பழுத்த விவர் திருமகளாரான வாண்டாளும் தாங்களவதரித்தவர்ணத்துக்கு நீசமானமூன்றும் வர்ணமாய் அறிவொன்றுமில்லாத கோபஜந்மத்தை “நான்மெலிந்தேன் நங்காய்” “என்மகன் கோவிந்தன்” இத்யாதிகளாலும் “ஆய்ப்பாடிச்செல்வச்சிறுமியர்காள்” “நாமும் நம்பாவைக்கு” இத்யாதிகளாலும் இடையர்படி வடிவிலே துடைகொள்ளலாம்படி தானவனாகமீளாதபடி யாஸ்த்தாநம்பண்ணினார்கள். ஆக தத்தீய ஸம்பந்தமுள்ள ஜந்மமேவுத்க்ருஷ்டம், இதரமபக்ருஷ்டமென்றதாயிற்று.

௨௧௯. இப்படி ஸ்ரீகோபிமாராக பாவிக்குங்காட்டில் ததவஸ்தை பிறக்கப்போகிறதோவென்ன, தத்ஸ்வாமிநியான பிராட்டி யவஸ்தையும் பிறவாநின்றால் ததவஸ்தைபிறக்கச்சொல்லவேணுமோவென்கிறார் மேல்,

---

ஜந்மங்களை யாசைப்பட்டார்.

௨௧௮. ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோபஜந்மத்தை யாஸ்த்தாநம் பண்ணினார்கள்.

௨௧௯. கந்தல்கழிந்தால் ஸர்வருக்கும் நாரீணாமுத்தமை

ஜீ.—ப்பேனே” “மீனாய்ப்பிறக்கும்விதியுடையேனாவேனே” “செண்பகமாய்நிற்கும் திருவுடையேனாவேனே” “தம்பகமாய்நிற்கும் தவமுடையேனாவேனே” என்று திருமலையாழ்வாரோடு ஸம்பந்தமுடைய திர்யக்ஸ்தாவரஜந்மங்களைப் பெறுப்பேறாக வாசைப்பட்டாரென்றபடி.

௨௧௮. இப்படி யாசைப்பட்டவளவன்றிக்கே தாழ்ந்த ஜந்மத்தை யாஸ்த்தாநம்பண்ணினவர்களை யருளிச்செய்கிறார், (ப்ராஹ்மணோத்தமர்) என்றுதுடங்கி. அதாவது இனி யிதுக்குமேலில்லை யென்னும்படியான வர்ணத்திலே யவதரித்து வித்யாமாஹாத்ம்யாதிகளாலே தஜ்ஜாதீயஸகலலோகோத்தமரான. பெரியாழ்வாரும் வேதப்பயன்கொள்ளவல்லவவர் தம்மைப்போலே பேதைப்பருவத்திலே வேதஸாரார்த்த வித்தமையாயிருக்குமவர் திருமகளான வாண்டாளும், க்ருஷ்ணாவதாராநுபவத்தில் அபிநிவேசாதிசயத்தாலே “மிடுக்கிலாமையால் நான்மெலிந்தேன் நங்காய்” “என்மகன் கோவிந்தன்” “பன்னிருதிங்கள் வயிற்றில் கொண்டவப்பாங்கினால்” இத்யாதியாலும் “ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள்” “நாமும் நம்பாவைக்கு” “ஆய்க்குலத்துன்றன்னைப்பிறவிபெறுந்தனை புண்ணியம்யாமுடையோம்” இத்யாதியாலும், தானவளாகப்பேசும்படி தாங்களவதரித்தவர்ணத்துக்கு மூன்றாம்வர்ணமாகையாலே தண்ணிதாயிருந்துள்ள அறிவொன்றுமில்லாத கோபஜந்மத்தைப் புரையற ஏறிட்டுக்கொண்டார்களென்கை.

௨௧௯. இப்படி யாசைப்படுகையும் ஆஸ்த்தாநம்பண்ணுகையுமொழிய, கந்தல்கழிந்தால் ஸ்வரூபமிருக்கும்படி தானென்னென்ன வருளிச்செய்கிறார், (கந்தல்கழிந்தால்) என்றுதுடங்கி.—, அன்றிக்கே இப்படி விசிஷ்டவேஷப்ரயுக்தமான தாரதம்யாவஸ்தைகளன்றிக்கே, கந்தல்

ஆ.—(கந்தல்) இத்யாதியால். அநாதியேபிடித்து ஸ்வரூபத்தைத்துருப்பற்றினஸ்வாதந்த்ர்யகந்தல் தத்ப்ரஸாதத்தாலே ஸவாஸநமாகக் கழிந்தால், பாரதந்த்ர்யமேவடிவான ஸர்வாத்மாக்களுக்கும் "సర్వలక్షణసమ్పన్నా నారీణాము త్తమావధూః" "ஸர்வலக்ஷணஸம்பந்நா நாரீணாமுத்தமாவதூ:" என்று ஸமீசீநலக்ஷணவதிகளான நாரிகளெல்லார்க்கும் தன்னபிமாநத்தாலே நல்லக்ஷணம்பெறவேண்டும்படி யுத்தமையான நாச்சியாருடைய நிரதிசய ப்ரேமாவஸ்த்தை தன்னடையேவரக்கடவதாயிருக்கும்.

உச0. ஏதத³வஸ்த்தை யிவர்களுக்குண்டாகைக்கடியென்னென்ன, அநந்யார்ஹசேஷத்வம் அநந்யசரணத்வம் அநந்யபோகத்வம் ஸம்ச்லேஷத்தில் தரிக்கை விச்லேஷத்தில் தரியாமை ததேகநிர்வாஹ்யத்வமென்கிற சேஷபரதந்த்ர ஸ்வரூபசேதந ஸ்வரூபாநுரூபமானவாறு ப்ரகாரத்தாலே ஸ்வாதந்த்ர்யகந்தமற்று, பரிசுத்தமான ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்துக்கு கடிமாமலர்ப்பாவையோடுண்டான ஸ்வபாவஸாம்யம் ஸ்வதஸ்ஸித்தமாக வுண்டு; அதாயிற்றவ்வவஸ்த்தை யுண்டாகைக்கடியென்கிறார். இப்படி பிராட்டியுடைய ஸ்வபாவமுட்பட வுண்டாகைக்கிட்டுப்பிறந்த ஸ்வரூபமுடையவர்களுக்கு, அவரபிமாநத்திலே யொதுங்கின ஸ்ரீகோபிமார் ஸ்வபாவமுண்டாகச் சொல்லவேணுமோவென்று கிமுஸம்பந்தம்.

உசக. ப்ராஹ்மணோத்தமரானவர்கள் உத்க்ருஷ்டப்ராஹ்மஜந்மத்தை யுபேக்ஷித்து கோபஜந்மத்தை யாதரிப்பானென்னென்ன, அவற்றினஹங்காராநஹங்காரத்தாலேயென்கிறார், (த்ருஷ்டத்தில்) இத்யாதியால்.

யுடைய வவஸ்த்தை வரக்கடவதாயிருக்கும்.

உச0. ஆறுப்ரகாரத்தாலே பரிசுத்தாத்ம ஸ்வரூபத்துக்கு தத்ஸாம்ய முண்டாயிருக்கும்.

உசக. த்ருஷ்டத்தி லுத்கர்ஷமஹங்காரத்தாலே;

ஜீ.—கழிந்தால் ஸகலாத்மாக்களுக்கும்வரு மவஸ்த்தைதானேதென்ன வருளிச்செய்கிறாராகவுமாம், (கந்தல்கழிந்தால்) இத்யாதி அதாவது ஆத்மஸ்வரூபத்தை யுள்ளபடிப்ரகாசியாதபடி அநாதிகால மநுபவித்துப் போந்தவஹ்தேறியானவவித்யாதிதோஷம், பகவத்ப்ரஸாதவிசேஷத்தாலே பின்னுட்டாதபடி ஸவாஸநமாகப்போனால், ஸகலாத்மாக்களுக்கும் "సర్వలక్షణసమ్పన్నా నారీణాము త్తమావధూః" "ஸர்வலக்ஷணஸம்பந்நா நாரீணா முத்தமாவதூ:" என்கிறபடியே ஸ்த்ரீத்வலக்ஷணங்களெல்லாவற்றாலும் குறைவற்று, ஸ்வேதரஸகலஸ்த்ரீணா முத்தமையாயிருக்கும் பெரியபிராட்டியாருடையநிலை தன்னடையேவரக்கடவதா யிருக்குமென்கை.

உச0. அதெங்ஙனேயென்னு மபேக்ஷையிலே யத்தையுபபாதிக்கிறார், (ஆறுப்ரகாரத்தாலே) என்றுதுடங்கி. அதாவது அநந்யார்ஹசேஷத்வ மநந்யசரணத்வ மநந்யபோக்யத்வம் ஸம்ச்லேஷத்தில் தரிக்கை விச்லேஷத்தில் தரியாமை ததேகநிர்வாஹ்யத்வமாகிற வாறுப்ரகாரத்தாலே, நிச்சேஷநிவ்ருத்தாவித்யாதிதோஷதயா பரிசுத்தமானவாத்மஸ்வரூபத்துக்கு, ப்ரகாராஷ்டக பரிபூர்ணையான பிராட்டியோடு ஸாம்ய்ம நைஸர்கிகமாக வுண்டாயிருக்குமென்கை. இந்தஸாம்ய ஷட்கத்தை நினைத்திறே "கடிமாமலர்ப்பாவை யொப்பாள்" என்றாழ்வாருளிச்செய்தது. ஆக இவ்விரண்டுவாக்யமும் ப்ராஸங்கிகம்.

உசக. இனி யவர்களுத்க்ருஷ்டமான ஜந்மங்களையுபேக்ஷித்து நிக்ருஷ்டமான ஜந்மங்களை விரும்புவானென்னென்ன வருளிச்செய்கிறார் (த்ரு

ஆ.—விசிஷ்டவேஷமாகிற த்ருஷ்டத்தில் அபக்ருஷ்டரைப்பற்ற ஒருவனு க்கு வருமுத்கர்ஷம், அதி லுத்க்ருஷ்டாகாரத்தைப்பற்றி வருமஹங்கார த்தாலே யுண்டாம்; நிஷ்க்ருஷ்டவேஷமாகிற வத்ருஷ்டத்தில் ஸ்வேதரரைப்பற்ற ஒருவனுக்கு வருமுத்கர்ஷம், அதி லுத்க்ருஷ்டாகாரத்தைப்பற்றிவரு மஹங்காரராஹித்யத்தாலே யுண்டாம். அஹங்காரஹேதுவான வர்ணாதிகளில் வருமுத்கர்ஷம் விசிஷ்டவேஷாபிமாநமாகிற வஹங்காரத்தாலே நிற்கும்; அஹங்காரராஹித்யஹேதுவான சேஷத்வாதிகளில் வருமுத்கர்ஷம் நிஷ்க்ருஷ்டவேஷாநுகுணமான ததாவிதாஹங்காரராஹித்யத்தாலே நிற்குமென்றபடி. உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ஜந்மங்களிலுபேக்ஷாபேக்ஷக்கடி அஹங்காராநஹங்கார கார்யமான த்ருஷ்டாத்ருஷ்டோத்கர்ஷஹேதுவாகையாலே என்று கீழேலஸம்பந்தம்.

உசஉ. இந்த வஹங்காராநஹங்காரங்கள் பேறிழவுகளையுண்டாக்கும்படியை மூதலித்துக்காட்டுகிறார் மேல் (ப்ரஹ்மாவாய்) இத்யாதியால். "ద్విపరార్ధావసానేమాం ప్రాప్తుమర్హసి పద్మజ" "த்விபரார்த்தாவஸாநேமாம் ப்ராப்துமர்ஹஸிபத்மஜ" "கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான்" என்கிறபடியே த்விபரார்த்தகாலாவஸாநத்தளவும் அஹங்கார கார்யத்ருஷ்டத்தி லுத்கர்ஷாதிசயமுடைய ப்ரஹ்மாவாய், ஸர்வஸுலபனான கண்ணனடிக்கமலத்தை யிழந்தகர்த்தப்பட்டுப்போதல்; "ముక్తిం గతాన్యా గోపకన్యకా" "முக்திம்கதாந்யாகோபகந்யகா" என்றஹங்காரராஹித்யகார்யமான வத்ருஷ்டத்தி லுத்கர்ஷாதிசயமுடைய இடக்கையும் வலக்கையுமறியாத இடைச்சி சிந்தயந்தியாய் கண்ணன் கழலிணை நண்ணிவாழ்ந்துவிடுதல் செய்யும்படியிறே அஹங்காராநஹங்காரஸ்வபாவ மிருக்கும்படியென்கிறார். அண்டாதிபத்யத்தால்வந்தவஹங்காரமளவிறந்து அதடங்க விட்டுப்பற்றவேண்டுமருமையுண்டவனுக்கு; ஒரு குடிசிலைப்பற்றி வருமஹங்காரமும் திருக்குழலோசையாலடியறுகையால் வருத்தமறக் கடுகென்பெறலா

அத்ருஷ்டத்தி லுத்கர்ஷம்ஹங்கார ராஹித்யத்தாலே.

உசஉ. ப்ரஹ்மாவா யிழந்துபோதல் இடைச்சியாய்ப்பெற்று விடுதல் செய்யும்படியா யிருக்கும்.

ஜீ.—ஷ்டத்தில்) என்றுதுடங்கி. அதாவது ஆபிஜாத்யாதிகளுமைச்வர்யமுமாகிற த்ருஷ்டபுருஷார்த்தத்தில் ஒருவனுக்குள்ளவுயர்த்தி விச்வாமித்ராதிகளைப்போலே தான்நின்ற நிலைக்குமேலே உத்கர்ஷம் தேடப்பண்ணுமஹங்காரத்தாலேயுண்டாம்; சேஷத்வாதிகளும் கைங்கர்யஸம்பத்துமாகிற அத்ருஷ்டபுருஷார்த்தத்தில் ஒருவனுக்குண்டாமுயர்த்தி இவற்றினுடைய வபிவ்ருத்தியி லாசையினாலே நிலைக்குநிலை தாழ்ப்போம்படியான வஹங்காரராஹித்யத்தாலே யுண்டாமென்கை.

உசஉ. இவ்வஹங்கார தத்ராஹித்யங்கள் இழவுபேறுகளுக்குடலாம்படியை யருளிச்செய்கிறார், (ப்ரஹ்மாவாய்) என்றுதுடங்கி. அதாவது த்ருஷ்டோத்கர்ஷாதிசயத்துக்குத்தக்க வஹங்காராதிகனான ப்ரஹ்மாவாய் "ద్విపరార్ధావసానేమాం ప్రాప్తుమర్హసి పద్మజ" "த்விபரார்த்தாவஸாநேமாம்ப்ராப்துமர்ஹஸிபத்மஜ" என்றும் "கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக்கமலந்தன்னை யயன்" என்றும் சொல்லுகிறபடியே யிழந்துபோதல்; அஹங்காரஹேதுக்க ளொன்று மில்லாமையாலே தத்ராஹித்யையாய் இடக்கை வலக்கையறியாத யிடைச்சியான சிந்தயந்தியாய் "ముక్తిం గతాన్యా గోపకన్యకా" "முக்திம்கதாந்யா கோபகந்யகா"

ஆ:—மிவனுக்கு. ஆக, பகவல்லாபாலாபத்துக்கடி, அஹங்காரா கஹங்கார ப்ராவண்யமென்றதாயிற்று. ஆக இப்ரகரணத்தால் பக்வதங்கீகார விசேஷாபேக்ஷித புருஷகாரபலமும், ததங்கீக்ருத குணவ்ருத்தி துர்ஷகாஹங்காராதி கார்யாபசாரகோரதையும், நிரஹங்காராதி ஜந்மாத்யுத்க்ருஷ்டததீயப்ரஸித்த வைபவவிசேஷமும், அஹங்கார கார்யஜந்மாதி தோஷ துஷ்டதையும் சொல்லப்பட்டது.

உசாங. மேல் (இப்படி) என்று துடங்கி, (உபேயவிரோதிகளுமாயிருக்குமளவாக.) உக்தவைபவவிசிஷ்டப்ரபந்நதிகசர்யா நுஸந்த்தர்கா நுஷ்ட்டாக ப்ரகாரவிசேஷத்தை யருளிச்செய்கிறார், (இப்படி) என்று - அஹங்கார விஷயங்களின் பூர்வோக்த தோஷவிசேஷ ஸ்மரணம்பண்ணுகிறார்; ஸ்வரூபேண முடித்தும் பாகவதவிரோதத்தைவிளைத்து முடித்தும் ப்ராப்ய ப்ரதிபந்த்தகமாயும் போருகிற ஸர்வப்ரகாரத்தாலும், அஸத்ஸாம்யாபத்திரூப ஸ்வரூபவிநாசஹேதுவான சரீராத்மாக்களைப் பற்றிவரு மூப்யவிதமான வஹங்காரத்துக்கும், தேஹாத்மாபிமான ரூபமான வஹங்காரத்தின் கார்யமாய் விஹித நிஷித்தரூப விஷயப்ராவண்யத்துக்கு மூதபத்தி விவ்ருத்திஹேதுவான விளைநிலம்; அஹங்கார விஷயப்ராவண்ய காரணமான ஹேயதேஹவிசிஷ்டனை தானுகையாலே, சத்ருசதேஹ விசிஷ்டனும் அஹங்கார விஷயரதிக்ரஹக்ரஸ்தனுய்க்கொண்டு பகவத்

உசாங: இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாசஹேதுவான் வஹங்காரத்துக்கும்; அதினுடையகார்யமான விஷயப்ராவண்யத்துக்கும், விளை நிலம்தானுகையாலே, தன்னைக் கண்டால் சத்ருவைக்கண்டாப்போலேயும்; அவற்றுக்கு

ஜீ:—என்னும்படியவன் திருவடிகளைப்பெற்று விடுதல்செய்யும்படியாயிருக்கு மிவ்வஹங்கார தத்ராஹித்யங்களின் ஸ்வரூபமென்கை. இப்படி யஹங்கார தத்ராஹித்யங்கள் இவனையிழக்கைக்கும் பெறுகைக்குமுடலாகையாலே, ஸ்ரீகுலசேகரப்பெருமாள் முதலானவர்கள் அஹங்கார்ஹேதுவாக ஜந்மங்களை யநாதரித்து தத்ரஹித ஜந்மங்களை யாதரித்தார்களென்று கருத்து.

உசாங. (தன்னைத்தானேமுடிக்கை) யாவது என்றுதுடங்கி இவ்வளவாக அஹங்காராதிகளின்தோஷமுபபாதிக்கப்பட்டது; அநந்தரம் ப்ராப்ய ப்ராபகங்க ளிரண்டுமவனேயென்றிருக்கும் ப்ரபந்நாதிகாரியுடைய திநசர்யாவிசேஷம் சொல்லப்படுகிறது, (இப்படி ஸர்வப்ரகாரத்தாலும்) என்றுதுடங்கி (ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டுபோரக்கடவன்) என்னுமளவாக. (இப்படி) என்று - கீழுக்தமான ப்ரகாரத்தைப் பராமர்சிக்கிறது; (ஸர்வப்ரகாரத்தாலும் நாசஹேதுவாகை) யாவது - ஸ்வரூபேண முடித்தும் பாகவதவிரோதத்தை விளைத்து முடித்தும் பகவல்லாபவிரோதியாய்ம் எல்லாப்படியாலும் "அஸந்நேவ" "அஸந்நேவ" என்கிறபடியே அஸத்கல்பமாம்படி ஸ்வரூபத்தை யுருவழியப்பண்ணுமதாயிருக்கை; அஹங்காரம்தான் தேஹாத்மாபிமாநரூபமாயும் தேஹாதிரிக்தாத்மவிஷயத்தில் ஸ்வாதந்த்ர்யாபிமாந ரூபமாயுமிரண்டுவகைப்பட்டிறே யிருப்பது, இவ்விடத்தி லவையிரண்டும் சேரச்சொல்லப்படுகிறது; (அதினுடையகார்யமான விஷயப்ராவண்யத்துக்கும்) தேஹாத்மாபிமாநமும் ஸ்வாதந்த்ர்யாபிமாநமுமே விஷயங்களை ஸ்வபோக்யத்வேந விரும்புகைக்கு மூலமாகையாலே விஷயப்ராவண்யத்தை யஹங்கார கார்யமென்கிறது; விஷயசப்தத்தாலே கீழநுகூலமாகவும்

ஆ.—விமுகனாய்ப்போந்த தன்னை ச்ரவணமநந தர்சநங்களாலே யுள்ளபடி
கண்டால், உருவினவாளும் எரிந்தவிழியும் இறுக்கினபல்லும் தானுமாய்
வெட்டத்துடரும் சத்ருவைக்கண்டாப்போலே யேங்கி நமக்கு நாசகமென்
றே நினைத்தும், அஹங்காராதி வர்த்தகராய்க்கொண்டு தத்வசீக்ருதராய்
த்திரியும் ஸம்ஸாரிகளைக் காணுக்கண்ணென்றிருக்கிறதான், காதாசித்
கமாகக் கண்டால் சீறி முனைந்தெதிர்ந்துவரும் துஷ்டஸர்பத்தை நினை
வறக்கண்டாப்போலே வெருவிப் பிற்காலித்து நமக்கு பாதகரென்றே நினை
த்தும், அஹங்காராதிகளின் தோஷதர்சநத்தைப்பண்ணிவித்து அவற்
றின்பேர்சொல்ல கருக்குலையும்படி ஸவாஸநமாக அவற்றுக்கு நிவர்த்தக
ரானததுபய ஸ்பர்சகந்தமற்ற விலக்ஷணவிசிஷ்ட ஸ்ரீ வைஷ்ணவர்களை
“ஈட்டம்கண்டிடக்கூடுமேல்” என்று கண்குளிரக்கண்டால், நெடுநாள்
தூரதேசாந்தரம்போய்வந்தவாப்தரானபந்துக்களை சத்ருஸர்ப்பமத்யே
பயம்கெடக் கண்டாப்போலே மேல்விழுந்துகந்து அபிமதமரென்றேநினை
த்தும், அந்தஸ்ரீவைஷ்ணவர்கள் முன்னாகப்பற்றுமர்ச்சாவதார ஸுலபனை

வர்த்தகரான ஸம்ஸாரிகளைக்கண்டால் ஸர்ப்பத்தை
க்கண்டாப்போலேயும்; அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீ
வைஷ்ணவர்களைக்கண்டால் பந்துக்களைக் கண்டாப்
போலேயும்; ஈச்வரனைக்கண்டால் பிதாவைக்கண்டாப்

ஜீ.—ப்ரதிகூலமாகவும் சொல்லப்பட்ட விஹிதநிஷித்தநுபவிஷயத்வயத்
தையும் சொல்லுகிறது; (வினைநிலம் தானாகையாலே) என்றது-இவ்விர
ண்டுக்கும் ஜந்மபூமிபகவத்ஸ்வரூப திரோதாநாதிகளைப் பண்ணக்கடவ
குணத்ரயாத்மக ப்ரக்ருதிபரிணாமரூபமாய் ஸ்வகர்ம விசேஷாரப்த்தமா
யிருக்கிற சரீரவிசிஷ்டனை தானாகையாலே யென்றபடி; கர்மாநுகுணமாக
ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கவடிக்கும் சரீரவிசிஷ்டதையாலே மதிம
யங்கி, தானல்லாத தேஹத்தைத தானாகவும் தனக்குரிய னல்லாத தன்னை
ஸ்வதந்த்ரனாகவு மபிமானிப்பது தனக்கநர்த்தகரமான விஷயங்களிலே அ
த்யாதரத்தைப் பண்ணுவதா மவன்தானேயிறே; (தன்னைக்கண்டால்)இத்
யாதி. இப்படி யநாதிகாலம்போந்தவனாய் இப்போது மதுக்குயோக்யமான
சரீரவிசிஷ்டனாயிருக்கிற தன்னை தர்சித்தால், கொன்றல்லது விடேனென்று
ஸாயுதராய்ப் பல்கவ்வித்திரியும் சத்ருவைக்கண்டாப்போலே குடல்கரித்து
தனக்குநாசகனாக நினைத்தும், தங்களுடைய வுக்திவ்ருத்திகளாலே துர்
வாஸனையைக்கிளப்பி அஹங்காராதிகளை மேல்மேலும் வளரும்படிபண்
ணும் தது பயவச்யரான ஸம்ஸாரிகளைக் கண்ணெதிரேகண்டால், அனு
கில் மேல்விழுந் தள்ளிக்கொள்ளு மதிக்ரூரமான ஸர்ப்பத்தைக்கண்டாப்
போலேயும் அஞ்சி நடுங்கி பிற்காலித்து நமக்கு பாதகரென்றே நினைத்
தும், தங்களுடைய வுபதேசாநுஷ்டாநங்க ளிரண்டாலும் அஹங்கா
ராதிகளின் தோஷதர்சநத்தைப்பண்ணிவித்து, தத்ப்ரஸங்கத்திலே பீத
பீதனும்படிபண்ணி ஸவாஸநமாக வவற்றை நிவர்த்திப்பிக்கும் மத்யம
பத நிஷ்டரான ஸ்ரீ வைஷ்ணவர்களைக் காணப்பெற்றால், தன்னுடைய
வநர்த்தாப்யுதயங்களிரண்டும் தங்களதாய் தீயது விலக்கி நல்லதில்மூட்டி
ரக்ஷிக்குமாப்தபந்துக்களைக் கண்டாப்போலே அத்யாதரம்பண்ணி நம
க்கு நற்றுணையானவர்களென்று நினைத்தும், அடியிலே கரணகளேபரங்
களைத்தந்து அவற்றைக்கொண்டு வ்யபிசரியாமல் நல்வழி நடக்கும்படி

ஆ.—ஈச்வரனை "காண்பதெஞ்ஞான்றுகொலோ" என்றபிநிவேசித்தபடியே விடாய்கெடக்கண்டால், ஹிதபரவர்த்தகனான பிதாவைக்கண்டாப்போலே ஸ்நேஹப்யமிரண்டுமுடையனாய் ஸ்வதந்த்ரஸ்வாமியென்றே நினைத்தும்; அந்த ஈச்வரனை கையிற்கனியென்னக்காட்டும் ஸதாசார்யனை த்ருஷ்ணையுடன் கண்டபோதெல்லாம், பெரும்பசியன்கைப்பட்ட சேர்ப்பால்சோற்றைக்கண்டாப்போலே அபிநிவேசத்துடன் மேல்விழுந் தநுபவித்து போக்யபூதனென்றே நினைத்தும்; ஆசார்யஸேவையாலே பழுத்தஜ்ஞாநாநுஷ்டாநபூர்ணனான ஸச்சிஷ்யனை அன்புடன்கண்டால், தானுகந்தவபிமதவிஷயத்தைக் கண்டாப்போலே சேஷத்வபாரதந்த்ர்யாதியான வாத்மபூஷணங்களைப்பூட்டி வைராக்யமாகிறகட்டுக்குள்ளே அந்யத்ருஷ்டிபடாதபடி மறைத்து பகவத்குணாநுஸந்தாநரூபபோகவிஷயமாக்கி நிரந்தரம் கெடுநோக்குக்கொள்ளும் விஷயமென்று நினைத்தும்; விரோதிநிவர்த்தக ஸ்வரூபவிஷயத்தில் பாதகப்ரதிபத்தியும், தந்நிவர்த்தகவிஷயத்தில் ஸ்வரூபவர்த்தக ப்ரதிபத்தியும், ஸ்வதந்த்ரசேஷிபக்கல் ஹிதைஷித்வப்ரதிபத்தியும், பாரதந்த்ரசேஷிபக்கல் ப்ராப்யைகப்ரதிபத்தியும் தத்பாரதந்த்ரர் பக்கலாதரணீய ப்ரதிபத்தியுமுடையனாய், ஸம்ஸாரஹேதுவாய்க்கொண் டநர்த்தகரமான வஹங்காராதிகள் மூன்றில், ஆச்ரயாசி

போலேயும், ஆசார்யனைக்கண்டால் பசியன்சோற்றைக்கண்டாப்போலேயும்; சிஷ்யனைக்கண்டா லபிமதவிஷயத்தைக்கண்டாப்போலேயும் நினைத்து; அஹங்காரார்த்தகாமங்கள் மூன்றும்,

ஜீ.—சாஸ்த்ரங்களைக்காட்டி அக்ருத்யகரணாதிகளில் சிக்ஷித்துஸர்வாவஸ்த்தையிலும் தன்னுடைய ஹிதமேபார்த்துப் போருமீச்வரனை அர்ச்சாஸ்த்தலங்களிலே கண்களாரக்கண்டால், உத்பாதகனாய் வித்யாப்ரதனாய் அபதேப்ரவ்ருத்தனாகாதபடி நியமித்து நடத்திக்கொண்டுபோரும் ஹிதைஷியான பிதாவைக்கண்டாப்போலே ஸ்நேஹஸாத்வஸவிநயங்களை யுடையனாய்க்கொண்டு நமக்கு ஹிதபரனென்று நினைத்தும். அநாதிகாலம் "அஸந்நேவ" "அஸந்நேவ" என்னும்படி கிடந்ததன்னை பகவத்ஸம்பந்தத்தை யறிவித்து ஸத்தாவானாக்கி மேன்மேலும் தன்னுபதேசத்தாலே ஜ்ஞாநவைராக்யபக்திகளை விளைத்து கையிற்கனியென்ன பகவத்விஷயத்தைக்காட்டித்தரும் மஹோபகாரகனாய் "உன்சீரே யுயிர்க்குயிராய்" என்றும் "உன்றன்மெய்யிற் பிறங்கிய சீரன்றிவேண்டிலன்" என்றும் சொல்லும்படி குணவிக்ரஹங்களாலே தனக்கு தாரகபோக்யனாயிருக்குமாசார்யனைக் கண்ணுக்கிலக்காம்படி கண்டால், கண்ணுஞ்சுழலையிடும் பெரும்பசியன் தாரகமுமாய் போக்யமுமான சோற்றைக்கண்டாப்போலே அத்யபிநிவேசத்தோடே யநுபவித்து நமக்குதாரகபோக்யவிஷயமென்றேநினைத்தும். ஸாத்யாந்தரநிவ்ருத்யாதி ஸமஸ்தஸ்வபாவ ஸம்பந்நதயா ஸம்யக்ஜ்ஞாநப்ரேமவானாயிருக்கும் ஸச்சிஷ்யனைக்கண்டால், தனக்காநந்தாவஹமான வபிமதவிஷயத்தைக் கண்டாப்போலே பகவத்குணாநுஸந்தாநதசையில் நாம்சொல்லுகிற பகவத்குணங்களை யாதரித்துக்கேட்பது அநுபாஷிப்பது வித்தனவதாமாகாரங்களினாலே நமக்காநந்தாவஹனென்று நினைத்தும். (அஹங்காரார்த்த காமங்கள் மூன்றும்) இத்யாதி இவைமூன்றிலும் வைத்துக்கொண்டு அஹங்காரமநுகூலர்பக்கல் அநாதரத்தைப்பிறப்பிக்கும், அதாவது சேஷத்வத்தை தன் ஸந்நிதியில் ஜீவிக்கவொட்டாதபடியிறே யஹங்காரத்தின் பலமிருப்பது, அஹங்காரி

ஆ.—யானவஹங்காரம் ஸ்வரூபவர்த்தகராய்க்கொண்டு அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கல் ஸ்வாதிக்யஸாம்யபுத்தியால் வரும் ஸ்வநாசகரமான அநாதரத்தைப் பிறப்பிக்குமென்று கருக்குலைந்தும்; அர்த்தகரமானவர்த்தம் ஸ்வரூபநாசகரமாய்க்கொண்டு ப்ரதிகூலரான ஸம்ஸாரிகள் பக்கல் ஒரு இட்டாக்காசைநச்சப்பண்ணு மாத்மநாசகரப்ராவண்யத்தைப் பிறப்பிக்குமென்று நடுங்கியும்; அப்ராப்தவிஷயகாமம் தன்கால்மேல் விழுவதைத் துத்தள்ளிப் பருஷித்து முகம்காட்டாமலுபேக்ஷிக்கும் விமுகஸ்த்ரீகள்பக்கல், இப்படி நம்மையுபேக்ஷித்தாகிலும் காலாலேஸ்பர்சித்து முகம்பார்த்து வையப்பெறுவேர்மேயென்றும் அபஹாஸ்யநிஷித்தாபேக்ஷையைப் பிறப்பிக்குமென்றஞ்சியும்; இப்படி ஆதரணீயவிஷயத்திலநாதரத்தையும் அநாதரணீயவிஷயத்திலாதரத்தையும் உபேக்ஷாவிஷயத்தி

அநுகூலர்பக்கலநாதரத்தையும் ப்ரதிகூலர்பக்கல் ப்ராவண்யத்தையும் உபேக்ஷிக்குமவர்கள் பக்கலபேக்ஷையையும் பிறப்பிக்குமென்றஞ்சி,

ஜீ.—யானவன் "ந மேயம் க்ருதஜ்ஞ", "நமேயம் க்ருதஜ்ஞக" என்றிருக்கும் தொழிய வொருவிஷயத்திலும் தலைதாழ்க்கவிசையானே, ஆகையாலே அஹங்காரம் மேலிடுமாகில் ஸ்வரூபவர்த்தகராய்க்கொண்டு அநுகூலராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் நம்முடையசேஷிகளென்று துடை நடுங்கி யெழுந்திருந்து ப்ரணாமாதிபூர்வகமாக வநுவர்த்தநங்களைப்பண்ணவொட்டாதே, தன்னையவர்களிலதிகனாகவாதல் அவர்களைத் தன்னோடு ஸமராகவாதல் புத்திபண்ணி யநாதரித்திருக்கும்படி பண்ணுமென்கை; அர்த்தம் ப்ரதிகூலர்பக்கல் ப்ராவண்யத்தைப் பிறப்பிக்கும், அதாவது ஆரேயாகிலும் சென்றநுவர்த்தித்து ஒருகாசுபெற்றாய்விடவேணுமென்னும்படியிறே அர்த்தராகமிருக்கும்படி, ஆகையாலது ஸ்வரூபநாசகத்வேந ப்ரதிகூலரான ஸம்ஸாரிகளைக்கண்டால் வெருவியோடிப்போகவேண்டியிருக்க, ஒருகாசை நச்சி யவர்களோடே யுறவுபண்ணி யவர்களிருந்தவிடங்களிலே பலகாலம்செல்லுவது அவர்களையழைத்து விருந்திடுவது அவர்கள்குணகீர்த்தநம்பண்ணுவதரம்பிடி அவர்கள் விஷயத்திலே ப்ராவண்யத்தை யுண்டாக்குமென்கை; காமம் உபேக்ஷிக்குமவர்கள் பக்கலபேக்ஷையைப் பிறப்பிக்கும், "காம்யத இதி காம:", "காம்யத இதிகாம:" என்கிறபடியே காமசப்தத்தாலே விஷயஸம்போகஸுகத்தைச் சொல்லுகிறது, அது "ஈசிபோமின்" இத்யாதிப்படியே தாரித்ர்ய வர்த்தகாதிகளடியாகத் தன்னை முகம்பாராமல்தள்ளிக் கதவடைத்து உபேக்ஷாவர்த்தம்பண்ணும் ஸ்த்ரீகள் பக்கலிலே "ஏழையர் தாமிழிப்பச்செல்வர்" என்கிறபடியே அவர்களுபேக்ஷாவர்த்தம் முதலானவை தன்னையே யுத்தேச்யமாகக்கொண்டு செல்லும்படி விலக்ஷணர் கேட்டால் சிரிக்கும்படியான ஹேயாபேக்ஷையை விளைக்குமென்கை; ஆகவிப்படி அஹங்காராதிகள் மூன்றும் ஸ்வரூபவர்த்தகரை யநாதரிக்கும்படியும் ஸ்வரூபநாசகரை யாதரிக்கும்படியும் ஸ்வரூபநாசகதையோடே யுபேக்ஷகருமாயிருக்குமவர்களை யபேக்ஷிக்கும்படியும் பண்ணுமென்று அவற்றின்கொடுமைகளை யநுஸந்தித்து என்செய்யத்தேடுகிறதோவென்றஞ்சி;—, (அர்த்தகாமாபிமாநங்கள் மூன்றும்) என்று பாடமானாலும் "ஸர்வோऽபிமாநோऽஹங்கார:", "கர்வோऽபிமாநோऽஹங்கார:" என்கிறபடியே அபிமாநசப்தத்தாலே அஹங்காரத்தைச் சொல்லுகிறதாகையாலே (அநுகூலர்பக்கல்) இத்யாதியை நிரைநிரயாக்காதே யதா

ஆ.—லபேக்ஷையையும் பிறப்பிக்கு மஹங்காராதிகளின் கொடுமையை நினைத்து குடல்குழைந்து; சமதமாத்யாத்மகுணங்கள் அநாத்மகுண பூர்ணரான நம்மாலு முள்ளவாத்மகுணங்களையும் கெடுத்து இல்லாத வநாத்மகுணங்களையு முண்டாக்கு மநாத்மகுணபூர்ணரான பிறராலும் வருந்தியும் பிறப்பித்துக்கொள்ளவொண்ணாது; ஸகலாத்மகுண ஸம்பூர்ணனுன ஸதாசார்யனுடைய நிர்ஹேதுகப்ரஸாதமடியாக இவ்வநாத்ம குணபூர்ணனு யுஜ்ஜீவித்திடுகவென்கிற ஜ்ஞாநாதி குணபூர்ண பகவத்ப்ரஸாதத்தாலே வருத்தமறப்பிறக்குமத்தனையென்று நிச்சலசித்தனுய்த் துணிந்தும்; குளித்துண்டுடுத்து பூசிப்புலர்த்திமதர்த்துத் திரிகையாகிற வஹங்காரவிஷயப்ராவண்ய வர்த்தகையான தேஹயாத்ரையில், ஹேயமான வித்ததேஹத்துக்கு இவையேதுக்கென்று கடைக்கணியாத வுபேக்ஷையும்; ஸத்துக்களுடன்சேர்ந்து ஸதாசார்யஸேவைபண்ணி தத்த்வார்த்தச்ரவணம்பண்ணி தத்ததீயகைங்கர்யதத்பரனுய் ஸம்ஸார நிவ்ருத்திபூர்வக ப்ராப்ய தேசப்ராப்தி லபிப்பதெப்போதோ வென்னுமாத்ம

ஆத்மகுணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக்கொள்ளவொண்ணாது, சதாசார்ய ப்ரஸாதமடியாகவருகிற பகவத்ப்ரஸாதத்தாலே பிறக்கு மத்தனையென்று துணிந்து, தேஹயாத்ரையி லுபேக்ஷையும் ஆத்மயாத்ரையிலபேக்ஷையும் ப்ராக்ருதவஸ்துக்களில் போக்யதாபுத்தி நிவ்ருத்தியும், தேஹதாரணம் பரமாத்ம ஸமாராதநஸமாப்திப்ரசாத ப்ரதிபத்தியென்கிறபுத்தி

ஜீ.—யோகம்கொண்டு கீழ்ச்சொன்ன ப்ரகாரத்திலே யோசிக்கக்கடவது; (ஆத்மகுணங்கள்) இத்யாதி. சமதமாத்யாத்மகுணங்கள் அநாதிகால மஹங்காராதிகளுக்கு விளைநிலமாய் அநாத்மகுணங்களைக் கூடுபூரித்துக் கொண்டு கர்மபாதந்த்ரராயிருக்கிற நம்முடைய யத்நத்தாலும், ஆத்மகுணேதயவிரோதிகளான வஹங்காராதிகளுக்கு வர்த்தகராய் அநாத்ம குணபரிபூர்ணராய் கர்மவச்யராயிருக்கிற பிறருடைய யத்நத்தாலும் பிறப்பித்துக்கொள்ளவொண்ணாது; ஆத்மகுணங்களுக்கெல்லாம் கொள்கலமாய் அடியிலேதன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலே நம்மையங்கீகரித்தருளி நமக்காத்மகுண முண்டாவதெப்போதோவென்று பலகாலும் கரைவது பகவானை யர்த்திப்பதாய்க்கொண்டுபோரும் ஸதாசார்யனுடைய ப்ரஸாதமடியாக வருகிற நம்முடைய வாத்மகுணேதயவிரோதிபாபக்ஷயம் பண்ணி அமலங்களாகவிழிக்கும் பகவானுடைய பரிபூர்ண ப்ரஸாதத்தாலே பிறக்குமத்தனை யென்றத்யவஸித்து; (தேஹயாத்ரையி லுபேக்ஷை) யாவது - தேஹரக்ஷணார்த்தமான வ்யாபாரத்தில் விருப்பமற்றிருக்கை; (ஆத்மயாத்ரையிலபேக்ஷை) யாவது - சேஷத்வமேவடிவான வாத்மாவுக்கு தாரகாதிகளான குணநுபவகைங்கர்ய ப்ரவ்ருத்தியில் பெற்றவளவால் த்ருப்தனுயிராதே மேன்மேலுமாசைப்படுகை; (ப்ராக்ருதவஸ்துக்களில் போக்யதாபுத்திநிவ்ருத்தி) யாவது - அசநாச்சாதநங்களுக்குறுப்பான ப்ராக்ருத பதார்த்தங்களி லாதரத்துக்கடியான போக்யத்வ புத்திதவிருகை; (தேஹதாரணம்) இத்யாதி. அதாவது - அந்த ப்ராக்ருதவஸ்துக்களில் தேஹம் தரிக்கைக்குத் தக்கவளவுபுஜிக்கை; பரமாத்மாவான ஸர்வேச்வரனுடைய ஸமாராதநத்தின் ஸமாப்திருபையான ப்ரஸாதப்ரதிபத்தி யென்கிற புத்திவிசேஷமுமென்கை;—அன்றிக்கே (பரமாத்ம ஸமாராதநஸமாப்தி) என்கிற புத்திவிசேஷமும்,

Released by Maran's Dog ,Toronto, Canada

ஆ.—யாத்ரையி லநவரதாபேக்ஷையும்; அங்கபாகீய க்ருதக்ஷீரவஸ்த்ர சந்தநகுஸுமதாம்பூலாதி ப்ராக்ருதவஸ்துக்களில் ராகத்ருஷ்ணாவர்த்த கையான போக்யதாபுத்தியின் ஸவாஸநநிவ்ருத்தியும்; ப்ராக்ருதவஸ்துக் களா லுண்டாம் தேஹதாரணம், "పరమాత్మాచ సర్వేషామ్" "பரமாத்மாச ஸர்வேஷாம்" என்றந்தர்யாமியான பரமாத்மாவினுடைய ஸமாராதந த்தின் ஸமாப்தியான ப்ரஸாதப்ரதிபத்தி யென்கிற புத்திவிசேஷமும்; —, அன்றிக்கே தேஹதாரணத்தில் பரமாத்மஸமாராதநப்ரதிபத்தி தத் ஸமாப்திப்ரதிபத்தி ததீயப்ரஸாதப்ரதிபத்தி என்கிற பாகாநுகுண புத்திவிசேஷமும்; முமுக்ஷுவான தனக்கு அர்த்தபுத்ரதாரவியோகா தியானக்லேசம் நினைவறவுண்டானால் இது அநுபவவிநாச்யமான ப்ராரப்த் தகர்மத்தின்பலம் ஒன்றொன்றாக ப்ராப்திப்ரதிபந்தகம் கழியப்பெறா நின் றோம்; ப்ராப்திகாலமணித்தணித்தாக வாராநின்றதென்றுதல் வருத்திப் பிறக்கும் ப்ரீதியும் ஸ்வரூபநாசகர கர்வஹேதுவான விவற்றைப்போக்கி அஹங்காரத்தைத் தலைசாயப்பண்ணி ஸம்ஸாரத்தை யடியறுத்து ரக்ஷி க்கிற பகவத்க்ருபையின் பலமன்றோவிதென்றுதல் வருத்தமறப்பிறக்கும் ப்ரீதியும்;—,அன்றியே பகவத்ஸமாச்ரயணம் பண்ணின நமக்கு கேடுவரு வதே யென்றத்தலையிலே குறையேறிடாதபடி இதுக்கடியாக நடுவே யொருகர்மமுண்டாகப் பெற்றோமேயென்னுமது கர்மபலப்ரீதியென்றும்;

விசேஷமும்தனக்கொரு க்லேசமுண்டானால் கர்மபல மென்றுதல் க்ருபாபலமென்றுதல் பிறக்கும் ப்ரீதியும்,

---

ஜீ.—(தத்ப்ரஸாதப்ரதிபத்தியென்கிற புத்திவிசேஷமும்) என்னவுமாம்; (தனக்கு) இத்யாதி. அதாவது முமுக்ஷுவாய் ப்ரபந்நனானாலும் ப்ராரப்த்த சரீரமிருக்குமளவும் தாபத்ரயம்வருகை தவிராதிறே, ஆகையாலே இச் சரீரத்தோடே யிருக்கிற தனக்கு தாபத்ரயங்களிலேதேனுமொரு க்லே சமுண்டானால் இது அநுபவ விநாச்யமான ப்ராரப்த்தகர்மபலமன்றோ, ஏவம்பூதகர்மங்களுள்ளவை கழியுமளவன்றோ, இச்சரீரத்தோடு நம்மை யெம்பெருமான் வைக்கிறது ப்ராப்திப்ரதிபந்தகங்களிலே யொன்றாகி லும் கழியப்பெற்றோமேயென்கிற வநுஸந்தாநத்தாலே யாதல், — துர் வாஸநையாலே யிவ்வுடம்பை விடவிசையாமல் ப்ராக்ருதபதார்த்தங்களை யும் ஜீவித்துக்கொண்டு ஸம்ஸாரத்துக்குள்ளே பொருந்தியிருக்கிற நம்மை துஃக்கதர்சநத்தைப் பண்ணிவித்து இதில் பற்றறுத்துக்கொண்டுபோக நினைக்கிற ஸர்வேச்வரனுடைய க்ருபையின் பலமன்றோ இதென்கிற வநு ஸந்தாநத்தாலே யாதலுண்டாகக்கடவ ப்ரீதியுமென்கை. பூர்வாகம் உத்தராகம் ப்ராரப்த்தகண்டம் எல்லாங்கழிக்கிறவனுக்கு வர்த்தமான சரீரத்தி லநுபாவ்யகர்மமித்தனையுங் கழிக்கையரிதன்றிறே; கர்மபலமான துஃக்கபரம்பரைகளை யநுபவியாநின்றாலு மித்தேஹத்தைவிடவென்று விசையாதவிவனை, நிர்துஃக்கனாக்கிவைப்போமாகில் இச்சரீரத்தோடே நெடு ங்காலமிருக்க விச்சிக்குதல் இன்னமொருசரீரந்தன்னை யிச்சிக்குதல் செய்யுமாகையா லிச்சரீரத்துக்குள்ளகர்ம மநுபவித்தே யிருக்கக்கடவ னென்றிறே வைக்கிறது; ஆனபின்பு மற்றுண்டான கர்மங்களெல்லாம் கழித்தது ஸம்ஸாரத்தில்நின்று மிவனைக்கடுகத்திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளுகையிலுண்டான க்ருபையாலே யானப்போலே, இத்தனையுங் கழியாமல் வைத்ததும் க்ருபையாலேயிறே; அநாதிகாலம் பரிக்ரஹித்த சரீரங்தோறு மநுபவித்ததுஃக்கம் பகவந்நிக்ரஹபலம், இதவனநுக்ரஹபலம் "యస్యానుగ్రహమిచ్ఛామి తస్యవిత్తం హరామ్యహమ్" "யஸ்யாநுக்ரஹமிச்சாமி

ஆ.—கர்மபலபுத்தியில் சரீராவஸாநத்தளவும் ப்ராரப்த்தகர்ம மநுவர்த்திக்குமென்னும்நினைவு; க்ருபாபலபுத்தியில் பகவத்ஸமாச்ரயணவேளையிலே ஸர்வகர்மமும் நசிக்கும், ததிச்சாஹேதுக சரீரவாஸநாதோஷங்களை ச்சமிப்பிக்கும் க்லேசத்தையுண்டாக்குகை க்ருபாபலமென்னும் நினைவு; ப்ரபந்நத்வாநுகுணமான த்வயாநுஸந்த்தாநாதி ஸாத்த்யாந்தர்கத ஸ்வாநுஷ்ட்டாநத்தில் மோக்ஷஸாதநத்வ புத்த்தியின் ஸவாஸந நிவ்ருத்தியும்; வ்யாவ்ருத்தஜ்ஞாநபக்திவைராக்யங்களால் விலக்ஷணரான பூர்வாசார்யதத்ஸத்ருசருடைய நிர்மலசரமஜ்ஞாநாநுஷ்ட்டாநங்களில் நிரந்தரமுண்டாம் நித்யவாஞ்ச்சையும்; ஜங்கமாஜங்கமமான வுகந்தருளின நிலங்களில் பரமபதாதிகளி லதிசயித்த வாதராதிசயமும்; அவ்வுகந்தருளின நிலங்களை விரும்பும் தத்ததீயவிஷயத்தில் ஸௌகுமார்ய நிபந்த்தநமங்களாசாஸநமும்; ததிதரஹேயவிஷயங்களில் தோஷபூயஸ்த்வாப்ராப்தத்வஹேதுக ஜுகுப்ஸாரூபையான வருசியும்; இதரவிஷய ஸக்திஹேதுவான தேஹஸ்த்திதி அடிச்சுட்டு ப்ராப்யவிளம்பாஸஹத்ருஷ்ணைவிளைந்து துடித்துக்கூப்பிடுகிற வார்த்தியும்; தத்ததீய விஷயத்தில் நீசோக்திவிநயாஞ்சலிகளால் அநுவர்த்திக்கு மநுவர்த்தநத்தை ப்ராக்ருதர்பக்கல்

ஸ்வாநுஷ்ட்டாநத்தில் ஸாதநத்வபுத்த்தி நிவ்ருத்தியும்; விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்ட்டாநங்களில் வாஞ்ச்சையும் உகந்தருளின நிலங்களி லாதராதிசயமும், மங்களாசாநஸமும், இதரவிஷயங்களிலருசியும், ஆர்த்தியும், அநுவர்த்தநநியதியும்,

---

ஜீ.—தஸ்யவித்தம் ஹராம்யஹம்" என்றாறிறே; ஆகையாலே யித்தை (க்ருபாபலம்) என்கிறது. (ஸ்வாநுஷ்ட்டாநத்தில் ஸாதநத்வபுத்த்தி நிவ்ருத்தி) யாவது - ப்ரபந்நனை தன்னுடைய வதிகாராநுகுணமாக வநுஷ்ட்டித்துக்கொண்டுபோரும் நல்லொழுக்கங்களைப் பேற்றுக்கு ஸாதநமாக நினையாதொழிகை; (விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்ட்டாநங்களில் வாஞ்ச்சை) யாவது: நாட்டாரோடியல் வொழிந்து நாரணனை நண்ணியிருக்கையாலே, நிர்மலஜ்ஞாநபக்திநராயிருக்கும் விலக்ஷணரான பூர்வர்களுடைய விலக்ஷணமான வந்தஜ்ஞாநமும் அநுஷ்ட்டாநமும் நமக்குண்டாகவேணுமென்னுமாசை; (உகந்தருளின நிலங்களிலாதராதிசய)மாவது - "தானுகந்த வூர்" என்கிறபடியே ஸர்வேச்வரனுகந்து வர்த்திக்கிற திவ்யதேசங்களென்றால் "நண்டியூராரங்கம்மெய்யம்கச்சிபேர் மல்லை யென்றுமண்டினார்" என்கிறபடியே மநஸ்ஸங்கே மண்டிவிழும்படி மேன்மேலும்பெருகுகிற வாதரம்(மங்களாசாஸந)மாவது அவ்வோ திவ்யதேசங்களை விரும்பி வர்த்திக்கிறவனுடைய ஸௌகுமார்யத்தையும் வாசியறிந்து நோக்கும்பரிவரில்லாமையையும், ப்ரதிகூலவர்க்கங்களின திசயத்தையும் நினைத்தேங்கி, என் வருகிறதோ என்று ..ய்யத்தேடுகிறதென்று வயிறெரிந்து இரவும்பகலும் திருப்பல்லாண்டுபாடு..; (இதரவிஷயங்களிலருசி)யாவது - பகவத்வ்யதிரிக்தங்களான ஹேய ..ங்களில் தோஷதர்சநாதிகளாலே விருப்பமற்றிருக்கை; (ஆர்த்தி) யாவது - இதரவிஷய ப்ராவண்யஹேதுவான விவ்வுடம்போடே இருள் தருமாஞாலத்திலிருக்கிற விதி லடிக்கொதிப்பாலும் ப்ராப்யவைலக்ஷண்ய தர்சநத்தால்வந்த ப்ராப்திவிளம்பாஸஹத்வத்தாலும் படும்க்லேசம்; (அநுவர்த்தநநியதி) யாவது - பகவத்பாகவதவிஷயங்களில் ஸ்வசேஷத்வாநுகுணமாக நீசோக்தி நீசவ்ருத்திகளாலே பண்ணுமநுவர்த்தநத்தை

ஆ.—மறந்தும் செய்யாமையாகிற அநுவர்த்தகாஸ்க்கலிதநியதியும்; சிஷ்டகர்ஹிதபிம்பாதி நிஷித்தபதார்த்த நிரீக்ஷணம்பண்ணாதே ப்ராக்ருத ஸ்ப்ருஷ்ட த்ருஷ்டங்களை ஸ்பர்சியாதே தத்ததீயப்ரஸாதமல்லது ஸ்வீகரியாதே போருகையாகிற பரிசுத்தாஹாரத்தில் அவச்யநியதியும்; ஜ்ஞாநாநுஷ்டாநவர்த்தகத்வேந அநுகூலரானவைஷ்ணவர்களுடன் அகவில் செய்வதென்னென்றவஸ்த்தைபிறந்து நிரந்தரஸஹவாஸமும்; ஜ்ஞாநாநுஷ்டாந நாசகத்வேந ப்ரதிகூலரான ஸம்ஸாரிகளோடுண்டான துஸ்ஸஹக்ஷணஸஹவாஸத்தின் ஸவாஸந நிவ்ருத்தியும்; ஜ்ஞாநாநுஷ்டாந பரிபூர்ணனான ஸதாசார்யனுடைய வப்ரதிஹதநிரந்தரப்ரஸாதத்தாலே க்ஷணந்தோறும் கொழுந்துபட்டுவர்த்திக்கும்படி யாசார்யாநுவர்த்தநம் பண்ணிக்கொண்டு நாள்தோறும் போரக்கடவன்.

ஜநந்யாசார்யர் திருவடிகளேசரணம்.

த்விதீயப்ரகரணம் ஸம்பூர்ணம்

ஆஹார நியதியும், அநுகூலஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும், ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்குப்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேசரணம்.

த்விதீயப்ரகரணம் ஸம்பூர்ணம்.

ஜீ.—ப்ராக்ருதவிஷயங்களில் மறந்துஞ்செய்யாதொழிகை; (ஆஹாரநியதி)யாவது-ஜாத்யாச்ரய நிமித்தாதுஷ்டங்களாய் ஸர்வேச்வரனுடையவும் ததீயருடையவும் ப்ரஸாதங்களான வஸ்துக்களையே ஆஹாரமாகக் கொள்ளுமதொழிய, ததிதரங்களானவை கொள்ளக்கடவோமல்லோமென்றிருக்கை; (அநுகூலஸஹவாஸ)மாவது - ஸ்வஸம்ஸர்கத்தாலே ஜ்ஞாநாதிகளை வர்த்திப்பியாநிற்கு மநுகூலரானவர்களுடனே க்ஷணகாலமும் பிரியாதே கூடிவர்த்திக்கை. (ப்ரதிகூலஸஹவாஸநிவ்ருத்தி)யாவது-ஸ்வஸம்ஸர்கத்தாலே ஜ்ஞாநாநுஷ்டாநங்களை நசிப்பியாநிற்கும் ப்ரதிகூலரானவர்களுடன் க்ஷணகாலமும் கூடிவர்த்தியாதொழிகை; இங்குச்சொன்ன வநுகூலரும் ப்ரதிகூலரு மின்னாரென்னுமிடம் மேலேதாமே யருளிச்செய்யக்கடவரிறே. (ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்) அதாவது கீழ்ச்சொன்ன விவையித்தனையும் ஜ்ஞாநாநுஷ்டாநபரிபூர்ணனான ஸதாசார்யனுடைய ஸர்வமங்களாவஹமான ப்ரஸாதத்தாலே தன்னடையே மேன்மேலு மபிவ்ருத்தமாம்படி செய்துகொண்டு போரக்கடவனென்றபடி. ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி இவன் பண்ணிக்கொண்டு போருகையாவது - தத்ப்ரஸாதகங்களைச் செய்துகொண்டுபோருகை; தத்ப்ரஸாதகங்களாவன இதினுடைய உபபாதநஸ்த்தலத்தி லருளிச்செய்கிறவை. (போரக்கடவன்) என்று விதிரூபேணவருளிச்செய்தது இதினுடைய அவச்யாநுஷ்டேயத்வம் தோற்றுகைக்காக.

ஜீயர் திருவடிகளேசரணம்.

த்விதீயப்ரகரணம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

த்ருதீயப்ரகரணம்.

ஆ.—உசச. ஆக ஸ்வரூபநாசகவர்த்தகவிரோதிவிஷய புத்திவிசேஷமும், ஸ்வகுணோத்பாதகபுத்திபூர்வக த்யாஜ்யோபாதேயவிசேஷமும், அபிவ்ருத்தமாம்படி வர்த்திக்கக்கடவனென்று ப்ரபந்நதிநசர்யாநுஸந்த்தாநாநுஷ்ட்டாந ப்ரகாரவிசேஷத்தைவிதித்து, அதிலுத்தேசித்த வதிகாராவச்யாபேக்ஷித மங்களாசாஸநாதித்ரயத்தில் முந்துற மங்களாசாஸநத்தை விவரித்தருளுகிறார் மேல் (மங்களாசாஸநம்) இத்யாதியால். மங்களாநாஞ்ச மங்களமாய் அமங்களப்ரதிபடனான ஸர்வரக்ஷகனுக்கு, தன்னமங்களம் தான்போக்கிக்கொள்ளமாட்டாதவசக்தரக்ஷ்யபூதன் அபிநவமங்களத்தை ஆசாஸநம்பண்ணுகை, ததேகரக்ஷ்யத்வமே வேஷமான ஸ்வரூபத்துக்கு தத்விபர்யயகரணம் விருத்தமன்றோவென்று சங்கித்து, பரிஹரிக்கிறார் மேல் (ஞாநதசையில்) இத்யாதியால். அவனே நமக்குரக்ஷகன் நாமவனுக்கே ரக்ஷ்யபூதனென்று தாத்வர்த்தாநுஸந்தாநம்பண்ணுகிற ஸ்வரூபஞாநதசையில், பாரதந்த்ர்யஸ்வாதந்த்ர்யாநுரூபமான நிருபாதிகரக்ஷ்யரக்ஷகபாவம், பாரதந்த்ரஸ்வதந்த்ரவஸ்துக்களாகிற தன்

உசச. மங்களாசாஸநம் ஸ்வரூபவிருத்தமன்றோ வென்னில் ஜ்ஞாநதசையில் ரக்ஷ்யரக்ஷகபாவம் தன்கப்பிலே கிடக்கும் ப்ரேமதசையில் தட்டுமாறிக்கிடக்கும்.

ஜீ.—உசச, இந்த திநசர்யையில் சொன்னவற்றில் விவரிக்கவேண்டுமவற்றை விவரிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமத்தில் மங்களாசாஸநத்தை விவரித்தருளுகிறார் (மங்களாசாஸநம்) என்றுதுடங்கி. ஹேயப்ரத்யநீகனாய் கல்யாணைகதானனாய் ஸ்வேதரஸகல ரக்ஷகனாயிறே ஸர்வேச்வரனிருப்பது; இப்படியிருக்கிறவவனை தனக்குண்டான வமங்களங்களைப்போக்கி இல்லாத மங்களங்களை யுண்டாக்கிக்கொள்ளக்கடவதத்ரக்ஷ்யபூதனான விவன், தனக்குரக்ஷகனானவவனுக்கு தான் மங்களங்களை யாசாஸிக்கை ததேகரக்ஷ்யத்வரூபமான ஸ்வரூபத்துக்கு விருத்தமன்றோ வென்கிறசங்கையை யநுவதிக்கிறார், (மங்களாசாஸநம் ஸ்வரூபவிருத்தமன்றோ வென்னில்) என்று. அத்தைப்பரிஹரிக்கிறார், (ஜ்ஞாநதசையில்) என்றுதுடங்கி. (ஜ்ஞாநதசை) யாவது ஸர்வேச்வரனேரக்ஷகனாகவும் தானவனுக்கு ரக்ஷ்யபூதனாகவும் ப்ரணவத்தில் சொல்லுகிறபடியே தெளியக்கண்டநுஸந்தித்திருக்குந்தசை; அந்த தசையில் "களைவாய்துன்பங்களையாதொழிவாய்" இத்யாதிப்படியே தன்னுடைய வநிஷ்ட நிவ்ருத்யாதிகளுக்கவனே கடவனென்றிருக்கையாலே, ரக்ஷ்யரக்ஷகபாவம் தனக்கடைத்த வாச்ரயத்திலேகிடக்கும். (ப்ரேமதசை, யாவது) ஸர்வேச்வரனுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களை யநுஸந்த்

ஆ.—கப்பிலே மாருடாமல் சலனமற்றுக்கிடக்கும். பகவத்ஸௌந்தர்ய ஸௌகுமார்யதர்சநாநுஸந்தான ஜநிதப்ரேமகலுஷிதசித்தனாய் அஸ்த்தாநேபயசங்கைபண்ணுகிற சரமபதார்த்தாநுஸந்தாநமாகிற ப்ரேமதசையில், பரதந்த்ரரக்ஷ்யவஸ்துவின்பக்கலிலே ரக்ஷகபாவமும் ஸ்வதந்த்ர ரக்ஷகவஸ்துவின்பக்கலிலே ரக்ஷ்யபாவமுமாய், தது்பயபாவமும் தட்டுமாறிமீட்சியின்றிக்கிடக்கும்.

உசரு. இந்த தசாத்வயஹேதுவான வநுஸந்த்தாநபேதம் ரக்ஷ்யரக்ஷகபாவ விபர்யயஹேதுவென்றுக்தார்த்தத்தை ஸ்பஷ்டீகரிக்கிறார் மேல் (அவன்ஸ்வரூபத்தை) இத்யாதியால். ஸர்வசக்தியாய் ஸர்வரக்ஷகனானவவனுடைய ஸாதாரணரூபத்தை, தாத்வர்த்தஞாநம்பிறந்து ததேகமநாவாயநுஸந்தித்தால், ரக்ஷிக்கையில் சக்தனுமாய் ப்ராப்தனுமானவவனை அநிஷ்டநிவாரகமாய் காக்கும் கடகாகக்கொண்டு, ஸ்வரக்ஷணத்திலசக்தனுமா யப்ராப்தனுமாய் ததேகரக்ஷ்யமான தன்னை ஸ்வரக்ஷணைக்வயகத்தஸ்பர்சமறநோக்கும்; அநுபாவ்யமானவவனுடைய பேசப்புசகும்படியான விக்ரஹஸௌகுமார்யத்தை, நாராயணபதார்த்தஜ்ஞாநம்பிறந்து ததேகாக்ரசித்தனாயநுஸந்தித்தால், சர்வசக்தித்வத்தைமறந்து இவ்வஸ்துவுக்கென்ன தீங்குவருகிறதோவென்று வயிறுபிடிக்கும் ப்ரேமார்த்தனான தன்னை அத்தலையிலமங்களம் ஸ்பர்சியாமல் நோக்கும் கடகாகக்கொண்டு, ஸர்வசக்தித்வாதிகளைமறைக்கும் ஸௌகுமார்யாதிசயமுடையவவனை நிரந்தரமங்களாசாஸநம்பண்ணி கண்ணெச்சில் வாராதபடி நோக்கும். ஆக அவன் ஸ்வரூபகுணாநுஸந்த்தாநம் தன்ஸ்வரூபத்தையதாவாகப்பண்ணும்; ரூபகுணாநுஸந்த்தாநம் தன் ஸ்வரூபத்தைமாருடப்பண்ணுமென்றபடி.

உசரு. அவன்ஸ்வரூபத்தை யநுஸந்த்தித்தால் அவனைக்கடகாகக்கொண்டு தன்னை நோக்கும் ஸௌகுமார்யத்தையநுஸந்த்தித்தால் தன்னைக் கடகாகக் கொண்டவனை நோக்கும்.

ஜீ.—தித்து இவ்விஷயத்துக்கென்வருகிறதோவென்று அஸ்த்தாநேபய சங்கைபண்ணி, அவன் ஸ்வரூபத்தையநுஸந்த்திக்க க்ஷமானன்றிக்கே நெஞ்சுமறுகுகிறபடியான தசை, அந்த தசையில் ஈச்வரனைரக்ஷிக்கவழி தேடித்தடுமாறுகையாலே ஈச்வரன்பக்கலிலே ரக்ஷ்யபாவமும் சேதநன்பக்கலிலே ரக்ஷகபாவமுமாய் தனக்கடைத்தவாச்ரயத்திலன்றிக்கே மாருடிக்கிடக்குமென்றபடி.

உசரு. உக்தார்த்தத்தை விசதீகரிக்கிறார், (அவன் ஸ்வரூபத்தை) என்றுதுடங்கி. அதாவது ப்ரதமாக்ஷரத்தில் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞனாய்ஸர்வசக்தியாய் ஸர்வரக்ஷகனானவவனுடைய ஸ்வரூபத்தையநுஸந்த்தித்தால், அவனை தனக்கநிஷ்ட நிவாரகனாகக்கொண்டு அஜ்ஞனாயசக்தனாயப்ராப்தனான தன்னை ரக்ஷித்துக்கொள்ளும். பேசப்புசகும்படியானவவனுடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்த்தித்தால், அவனுடைய ஸர்வசக்தித்வாதிகளைமறந்து குழைச்சரக்காக நினைத்து, தன்னை ரக்ஷகனாகக்கொண்டு மங்களாசாஸநம்பண்ணி யவனை ரக்ஷிக்குமென்கை. இவ்விடத்தில் ஸௌந்தர்யம்சொல்லிற்றில்லையாகிலும் அதுவும் மங்களாசாஸநஹேதுவாகையாலும் மேலேசொல்லுகையாலும், ஸௌகுமார்யமிதுக்குபலக்ஷணம்.

ஜீ.—பாவைகலக்ஷண | பேஷஜம்பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ ததா" இத்யாதி ச்ருத்யுபப்ருஂஹணங்களாலும் சொல்லப்படுகிற நிரதிசயாநந்தரூப பகவதநுபவம்; இந்தச்லோகத்தில் "ஃ௩ஃ) ஃ" "பகவத்ப்ராப்தி:" என்கிறவிது பகவதநுபவமாகவிறே நம்மாசார்யர்கள் ஸ்வப்ரபந்தங்களிலே யருளிச்செய்தது; கர்மாத்யுபாயங்களில் துஷ்கரத்வபுத்தியாலே யவற்றைவிட்டு ஸுகரத்வபுத்த்யா ப்ரபத்தியிலேயிழிந்த ஸ்வப்ரயோஜநபரர்க்குத்தேச்யன் "நெஞ்சினால் நினைப்பானெவன்" என்கிறபடியே ஆச்ரிதர் தங்கள் நெஞ்சாலே யாதொருத்ரவ்யத்தை தனக்குத் திருமேனியாகக் கோலினார்கள் அத்தையே தனக்குத்திருமேனியாகவபிமானித்து அதிலே யப்ராக்ருதவிக்ரஹத்தில் பண்ணுமாதரத்தைப் பண்ணிக்கொண்டு அத்யந்தஸுலபனாயிருக்கிறவர்ச்சாவதாரமான ஸர்வேச்வரன்; உபாயம் அநிஷ்ட நிவ்ருத்திக்குமிஷ்டப்ராப்திக்குமவனை யுபாயமாகநினைத்துத்தான்பற்றினபற்று, உபேயம் தனக்குகப்பாகப்பண்ணும் கைங்கர்யம்.

உ௬௬. ஆக உத்தேச்யாதிபேதத்தாலே அவர்களுக்குண்டான வந்யோந்யவிசேஷத்தைத்தர்சிப்பித்தாரீழ்; இவர்களில் பகவத்விஷயத்தோடு வொட்டற நின்றமூவர்க்கும், பகவத்விஷயத்தையேபற்றிநின்ற விருவர்க்குமுண்டான விசேஷத்தைத்தர்சிப்பிக்கிறார் மேல், (முதற்சொன்னமூவரும்) என்றுதுடங்கி. அதாவது தேஹாத்மாபிமாநமும் ஸ்வஸ்வாதந்த்ர்யமு மந்யசேஷத்வமுமாகிற விவற்றுக்கவ்வருகொன்றறியாமையாலே பகவதந்வயகந்தரஹிதரான மூவரும், "ஃ" "க்ஷிபாமி" என்கிற பகவந்நிக்ரஹத்துக்கு விஷயம்; ப்ரக்ருதே:பரமாய் பகவதநந்யார்ஹசேஷமான ஸ்வரூபத்தையறிந்து பகவதநுபவகைங்கர்யங்களைப்

ஆ.—தர்சந ஸ்பர்சந ஸம்பாஷணாத்யநுக்ரஹத்துக்கிலக்கு.—, அன்றியே மூவரு மிருவரும் பகவந்நிக்ரஹாநுக்ரஹங்களுக் கிலக்கென்று மருளிச் செய்வர்.

உ௬௭. தத்ததீயநிக்ரஹத்துக் கிலக்கான வம்மூவருடைய வநாதி காலார்ஜித ஸதஸத்கர்மமும் தத்தத்ப்பலஸுக துஃக்காநுபவ விநாச்யம்; அல்பாநுக்ரஹத்துக்கிலக்கான நாலாமதிகாரிக்கு, அஸத்கர்மத்தளவு "ధర్మేణపాపమపనుదతి" "தர்மேணபாபமபநுததி" என்கிறபடியே ப்ராயச் சித்தவிநாச்யம்; ப்ராயச்சித்தஸாத்யமல்லாத ஸதஸத்கர்மமிரண்டும் பகவத்ப்ரஸாதவிநாச்யமென்று கருத்து. அநுக்ரஹவிசேஷத்துக் கிலக் கான வஞ்சாமதிகாரிக்கு, "నకశ్చిన్నాపరాధ్యతి" "நகச்சிந்நாபராத்ய்தி" என்று அபராதபயநிவ்ருத்திஹேதுபூதமான புருஷகாரவிநாச்யம். அநிஷ்டநிவர்த்தகத்வம் ஸித்தோபாயகார்யமாகிலும் ஆச்ரயணவி ரோதி நிவ்ருத்திமாத்ரம் தத்ஸங்கல்பமடியாகப்புருஷகாரகார்ய மென்ன லாமிறே.

மற்றையிருவரு மநுக்ரஹத்துக்கிலக்கு.

உ௬௭. மூவருடையவும் கர்மமநுபவவிநாச்யம், நாலாமதிகா ரிக்கு ப்ராயச்சித்தவிநாச்யம், அஞ்சாமதிகாரிக்கு புரு ஷகாரவிநாச்யம்.

ஜீ.—புருஷார்த்தமாகக் கொள்ளுகையாலே அநந்யப்ரயோஜநராய், கர்ம ஜ்ஞாநாதிகளான உபாயாந்தரங்களிலும் ப்ரபதநத்திலும் நிஷ்டரான விருவரும் "దదామి" "ததாமி" "మోక్షయిష్యామి" "மோக்ஷயிஷ்யாமி" என்கிறபகவதநுக்ரஹத்துக்கு விஷயமென்கை.

உ௬௭. இவர்களுக்கு கர்மவிநாசஹேதுபேதத்தால் வந்தவிசேஷங் களைத்தர்சிப்பிக்கிறார் மேல் (மூவருடையவும்) என்றுதுடங்கி. அதாவது நிக்ரஹத்துக்கிலக்கான மூவருடையவும் அநாதிகாலார்ஜிதமான ஸத ஸத்கர்மம், "అవశ్యమనుభోక్తవ్యం కృతంకర్మశుభాశుభమ్ । నాభుక్తంక్షీయతేకర్మ కల్ప కోటిశతైరపి" "அவச்யமநுபோக்தவ்யம் க்ருதம்கர்மசுபாசுபம் | நாபுக்தம் க்ஷீயதேகர்ம கல்பகோடிசதைரபி" என்கிறபடியே அவச்யம் தத்பல முள்ளதநுபவித்தாலன்றி நசியாமையாலே அநுபவவிநாச்ய மென்கிறார்; அநுக்ரஹத்துக்கிலக்காகச்சொன்ன விருவரிலும்வைத்துக்கொண்டு உபா யாந்தரநிஷ்டனான நாலாமதிகாரிக்கு, கர்மஜ்ஞாநபக்திகளாகிற வுபா விசேஷங்களிலொன்றை யநுஷ்டித்தால் அத்தை ப்ராயச்சித்தஸ்த்தா நீயமாக்கி ஈச்வரன் ஸர்வகர்மங்களையும் கழிக்கையாலே கர்மம் ப்ராயச் சித்த விநாச்யமென்கிறார்; ப்ரபதநநிஷ்டனான அஞ்சாமதிகாரிக்கு ஆச் ரயணவேளையிலே அநாதிகாலக்ருதாபராதபீதனாய் அவற்றையடைய ஈச்வரன் பொறுக்கைக்குறுப்பாகப் பிராட்டியைப் புருஷகாரமாக முன்னி ட்டாச்ரயிக்கையாலே அவளுக்காகவிவனுடைய வபராதத்தையெல்லாம் பொறுத்தங்கீகரித்து இவனுடைய வகிலகர்மங்களையும் தள்ளிப்போகடு கையாலே புருஷகாரவிநாச்ய மென்கிறார்.

ஆ.—௨௬௮. புருஷகாரஸாபேக்ஷத்வத்தால் வந்த ஸித்தோபாயத்தின் நைரபேக்ஷ்யஹாநியைப்பரிஹரிக்கிறார்மேல்; நிரபேக்ஷமான ஸித்தோபாயம் சரணவரணரூபஸ்வீகாரகாலத்தில் ஸ்வீகர்த்தாவாயிருப்பானொரு புருஷஸாபேக்ஷமாய், ஸ்வீகரிப்பிக்குமதொரு புருஷகார ஸாபேக்ஷமுமாயிருக்கும்; ஸ்வீகர்த்தாவில்லாவிடில் ஸ்வீகாரந்தானில்லை, புருஷகாரமில்லாவிடில் ஸ்வீகாராதிகாரமில்லை. ஸ்வீகாராநந்தரபாவியான வநிஷ்டநிவ்ருத்திபூர்வகேஷ்டப்ராப்தியைப் பண்ணுகையாகிற கார்யகாலத்தில், புருஷபுருஷகாரரூபோபயநிரபேக்ஷமாயிருக்கும்; கார்யகாலத்தில் ஸஹகாரிஸாபேக்ஷமுண்டாகிலிறே தந்நைரபேக்ஷ்யபங்கம்வருவது.

௨௬௯. இப்படி ஸ்வப்ரயோஜநபரரடங்க ப்ரதிகூலரென்னில் "நமக்கே நலமாதலில்" என்னு மாழ்வார்களையும் ப்ரதிகூலரென்னவேண்டி வாராதோவென்றுசங்கித்து ப்ரதிகூலவகையைச்சொல்லுகிறது;

---

௨௬௮. உபாயம் ஸ்வீகாரகாலத்தில் புருஷஸாபேக்ஷமுமாய் புருஷகாரஸாபேக்ஷமுமா யிருக்கும்; கார்யகாலத்திலுபய நிரபேக்ஷமாயிருக்கும்.

௨௬௯. ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோ வென்னில்;

ஜீ.—௨௬௮. இப்படி புருஷகாரஸாபேக்ஷமென்னில் உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யஹாநிவாராதோ வென்கிறசங்கையிலே யருளிச்செய்கிறார், (உபாயம்) என்றுதுடங்கி. அதாவது ஸஹாயாந்தர ஸம்ஸர்காஸஹமான ஸித்தோபாயம், சரணவரணரூப ஸ்வீகாரகாலத்தில் ஸ்வீகர்த்தாவான புருஷனையும் ஸ்வீகரிப்பிக்கும் புருஷகாரத்தையு மபேக்ஷித்திருக்கும்; ஸ்வீக்ருதமான தானிவனுக் கநிஷ்டநிவ்ருத்திபூர்வகேஷ்டப்ராப்தியைப் பண்ணுகையாகிற கார்யகாலத்தில், புருஷனும் புருஷகாரமுமாகிற வுபயத்தையு மபேக்ஷியாதே தானேசெய்து தலைக்கட்டுமென்கை; கார்யகாலத்தில் ஸஹகாரிஸாபேக்ஷமுண்டாகிலிறே யுபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்துக்கு ஹாநிவருவதென்றுகருத்து.

௨௬௯. ஸ்வப்ரயோஜநபரரை (ப்ரதிகூலர்) என்று அவிசேஷேண வருளிச்செய்தாரிறே; இந்த ஸ்வப்ரயோஜநபரதை அநுகூலாக்ரேஸரரான வாழ்வார்கள் பக்கலிலும் தோற்றியிருக்கையாலே தந்நிபந்தநமானப்ராதிகூல்ய மவர்கள்பக்கல் வாராதபடி பரிஹரிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, தத்விஷயசங்கையை யநுவதிக்கிறார், (ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும்) என்று துடங்கி. "நமக்கேநலமாதலில்" என்றும் "நாம் கண்டுகந்து கூத்தாட ஞாலத்தூடேநடவாயே" என்றும் "கண்டு நானுன்னையுகக்க" என்று மித்யாதிவசநங்களாலும், மடலெடுக்கைமுதலான ப்ரவ்ருத்திகளாலும் ஆழ்வார்களுக்கு மிந்த ஸ்வப்ரயோஜநபரத்வமுண்டாகத்தோற்றுகின்றதிறே; ஆனபின்பு ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலரென்று சொல்லப்பார்க்கில் ஆழ்வார்களையு மப்படி நினைக்கவேண்டி வாராதோவென்று சங்கைக்கபிப்ராயம்.

ஆ.—உஎ௦. இங்கு ப்ராதிகூல்யஹேதுவான ஸ்வப்ரயோஜநமென்கிறது சேஷத்வாச்ரயமான ஸ்வரூபத்துக்கு ஸ்வபோக்த்ருத்வபுத்திரூப தோஷஜந்யமான ஸ்வப்ரயோஜநத்வத்தை.

உஎக. ஆகையாலந்தஸ்வப்ரயோஜநபரரை ப்ரதிகூலரென்னக்குறையில்லை.

உஎஉ. சேஷத்வவிஷயமான பகவத்விஷயத்தின் விக்ரஹவைலக்ஷண்யமாகிற தோஷத்தாலே வருமதான ஸ்வப்ரயோஜநத்வம், சேஷபூதனைவிவனால் ஸ்வபோக்யத்வாநுஸந்தாநம்பண்ணி வருந்தி த்யஜிக்கத்தேடினும் துஸ்த்யஜமாயிறே யிருப்பதென்று பரிஹரிக்கிறார். ஆக ஸ்வரூபதோஷமடியாகவந்த ப்ராதிகூல்யஹேதுவான ஸ்வப்ரயோஜநத்வம் ஸ்வரூபஜ்ஞாநம்பிறக்கவே விட்டுப்போம்; விஷயதோஷமடியாகவந்த ஆநுகூல்யாதிசயஹேதுவான ஸ்வப்ரயோஜநத்வம், விஷயதோஷம்

உஎ௦. இங்கு ஸ்வப்ரயோஜநமென்கிறது ஆச்ரயதோஷஜந்யமாநத்தை.

உஎக. ஆகையாலே தோஷமில்லை.

உஎஉ. விஷயதோஷத்தால் வருமவையெல்லாம்

ஜீ.—உஎ௦. அத்தைப்பரிஹரிக்கிறார், (இங்கு)என்றுதுடங்கி. அதாவது ப்ரதிகூலமாகச்சொல்லுகிறவிவ்விடத்தில் ஸ்வப்ரயோஜநமென்கிறது, அநுபவகைங்கர்யங்களுக் காச்ரயமான சேதநனுடைய அவித்யாதிதோஷத்தால்வந்த ஸ்வப்ரயோஜநத்தையென்கை. இத்தை(ஆச்ரயதோஷஜந்யம்) என்றொதுக்குகையாலே ஆழ்வார்களுடைய ஸ்வப்ரயோஜநம் விஷயதோஷஜந்யமென்று கருத்து. இதுதன்னை(விஷயதோஷத்தால்வருமவை)என்கிறவாக்யத்திலே வ்யக்தமாக வருளிச்செய்கிறாரிறே.

உஎக. இவ்வர்த்தத்தை நிகமிக்கிறார், (ஆகையாலேதோஷமில்லை) என்று. அதாவது ப்ராதிகூல்யஹேதுவாகச்சொல்லப்பட்ட ஸ்வப்ரயோஜநமாச்ரயதோஷஜந்யமாய், ஆழ்வார்கள்பக்கல் ஸ்வப்ரயோஜநம் விஷயதோஷஜந்யமா யிருக்கையாலே, அந்தப்ராதிகூல்ய மிவர்கள்பக்கலிலும் வருமென்கிறதோஷமில்லை யென்கை.—, அன்றிக்கே ஸ்வப்ரயோஜநபரரை ஸாமாந்யேந ப்ரதிகூலரென்று சொல்லுமளவில், அநுகூலரானவாழ்வார்கள்பக்கலிலு மிந்த ஸ்வப்ரயோஜநபரதை தோற்றுகையாலே அவர்களையும் ப்ரதிகூலரென்று நினைக்கவேண்டி வருகையால், ஸ்வப்ரயோஜநபரரை ப்ரதிகூலரென்கை தோஷமன்றோவென்று நினைத்துப்பண்ணுகிற சங்கையை யநுவதிக்கிறார், (ஸ்வப்ரயோஜநபரரெல்லாரையும் ப்ரதிகூலராக நினைக்கலாமோவென்னில்) என்று. அத்தைப் பரிஹரிக்கிறார், (இங்கு) என்றுதுடங்கி. அர்த்தம் பூர்வவத். நிகமிக்கிறார், (ஆகையாலேதோஷமில்லை) என்று. (ஆகையால்) என்கிறவிதுக்கர்த்தம் பூர்வவத்; (தோஷமில்லை) என்றது - ஸ்வப்ரயோஜநபரரை ப்ரதிகூலரென்று சொன்னத்தில் தோஷமில்லையென்கை என்றிங்ஙனே யோஜிக்கவுமாம்.

உஎஉ. இப்படி யாச்ரயதோஷஜந்யமன்றிக்கே விஷயதோஷஜந்யமானாலும் ஸ்வரூபவிருத்தமானது த்யாஜ்யமன்றோவென்ன வருளிச்செய்கிறார்மேல், (விஷயதோஷத்தால்) என்றுதுடங்கி. அதாவது அநுபவவிஷயமான வவனுடைய வடிவழகுக்காய் ஆண்களையும் பெண்ணுடையுடுத்தும்படியான விக்ரஹவைலக்ஷண்யமாகிற தோஷத்தாலே வருகிற ஸ்வப்ரயோஜநபரதை தத்தேதுவான ப்ராவண்யம் தத்ஸித்த்யர்த்த

ஆ.—நித்யமாகையாலே தானும் நித்யமாய் ஸ்வரூபஜ்ஞாநத்தால் விடப்படுமதொன்றன்று யிருக்குமென்றபடி.

உ௭௩. இதின் துஸ்த்யஜத்வத்தை யநுஷ்டாநசேஷமாகக் காட்டுகிறார் மேல் ("ஊமையரோடு") இத்யாதியால். ச்ரிய:பதிவிஷயமாயிருபுரியுண்டுவரும் ப்ராவண்யவிசேஷத்தை உபேயகோடியிலே நின்று நான் பட்டதுபட்டவவ்வினையாட்டிகளறியலாமத்தனையல்லது, முதலடியான வுபாயகோடியிலேநின்று அந்த ப்ராவண்யம் கனக்கண்டறியாதவந்நெஞ்சிகளான வுங்களுக்கறிவுக்கு விஷயமுமன்று; அம்மிதுநவிஷயப்ராவண்யமாகிறமடுவிலே யாழங்காற்பட்டு சலகமற்றத்ருடமகஸ்கையான வெனக்கு நீங்கள்சொல்லுகிற நிஷேதவசநமெல்லாம், கேட்கைக்கும் சொல்லுகைக்கும் கரணமற்றவூமைக்குக் கேளாதென்றறியாமல் உத்தரம் கேட்க கரணமற்று யதாப்ரதிபாஸம்நடத்தும் செவிடர் சொல்லுமுபதேசவார்த்தையோடொக்குமென்று ஹிதஞ்சொல்லும் தாயாரைப்பார்த்து ஆண்டாளருளிச்செய்கையாலே பகவத்விஷயப்ராவண்யத்தால் வருமது துஸ்த்யஜமென்னுமது ஸித்தம். "తవామృతస్యన్దినిపాదపఙ్కజే నివేశితాత్మా కథమన్యదిచ్ఛతి | స్థితే ఽరవిన్దే మకరన్దనిర్భరే మధువ్రతో నేక్షురకం హి వీక్షతే" "தவாம்ருதஸ்யந்திநிபாதபங்கஜே நிவேசிதாத்மாகதமந்யதிச்சதி | ஸ்திதே(அ)ரவிந்தேமகரந்தநிர்ப்பரே மதுவ்ரதோநேக்ஷுரகம்ஹி வீக்ஷதே" என்று மதுவேஜீவநமான வண்டு தாமரைமலர்வாய்ந்த தேனிலேமூழ்கி யிராநிற்க முள்ளிப்பூவின் துஸ்த்யஜமாயிறே யிருப்பது.

உ௭௩. "ஊமையரோடு செவிடர்வார்த்தை" "కథమన్యదిచ్ఛతి"

ஜீ.—மான வ்யாபாரங்களாகிற விவையெல்லாம் ஸ்வரூப விருத்தமென்று விடப்பார்த்தாலும் விடவரிதாயிறே யிருப்பதென்கை. (விஷயதோஷத்தாலே வரும்து) என்று பாடமானபோது ஸ்வப்ரயோஜநமாத்ரத்தையே சொல்லுகிறது.

உ௭௩. விஷயதோஷத்தால் வருமதின் துஸ்த்யஜத்வத்தில் ப்ரமாணம் காட்டுகிறார் மேல், ("ஊமையரோடு செவிடர்வார்த்தை" "కథమన్యదిచ్ఛతి" "கதமந்யதிச்சதி") என்று. "மற்றிருந்தீர்கட்கு" என்று துடங்கி. அத்தலையாலே பேறென்றறுதியிட்டாலவன் வருமளவும் க்ரமப்ராப்திபார்த்தாறியிருக்கவேணுங்காண் நீயிங்ஙனே பதறலாகாதுகாணென்ற தாய்மாரைக்குறித்து, இவ்விஷயத்தில் ப்ராவண்யமின்றிக்கே என்னுடைய நிலைக்கு வேறாயிருந்த வுங்களுக்கு எனக்கோடுகிறதசையறியப்போகாது; அவனவனென்று வாய்புலத்தும்படி ச்ரிய:பதிவிஷயமான ப்ராவண்யத்தை மறுபாடுருவவுடையளாய், இப்படியவனையொழியச்செல்லாமை யுண்டானால் அவனிருந்தவிடத்தேசென்று கிட்டுகை ப்ராப்தமாயிருக்க, அதுக்குக்கால்நடை தாராதபடியிருக்கிற வெனக்கு, நானவனோடேசென்று சேராமைக்குறுப்பாக நீங்கள் சொல்லும்வார்த்தை, கேட்கைக்குப் பரிகாரமில்லாத செவிடரோடே சொல்லுகைக்குப்பரிகாரமில்லாத வூமைகள் வார்த்தைசொன்னாப்போலே யிருப்பதொன்றென்று ஆண்டாளருளிச்செய்கையாலும்; "తవామృతస్యన్దిని" "தவாம்ருதஸ்யந்தி" என்றுதுடங்கி, வகுத்தசேஷியான தேவருடைய தேனேமலரும் திருவடித்தாமரைகளில் போக்யதையிலே யழுந்தினநெஞ்சு மற்றொரு க்ஷுத்ரவிஷயத்தை விரும்பும்படி யெங்ஙனே, மதுவே ஜீவநமானவண்டு மதுபரிபூர்ணமான தாமரைப்பூவானது நில்லாநிற்கச்செய்தே அதின்

ஆ.—தேன் பூணைக்கடைக்கணிப்பதும் செய்யாதாப்போலே, தேவர்திருவடிகளில் போக்யதையிலே யழுந்தினநெஞ்சு க்ஷுத்ரபோக்யத்தை யெங்ஙனே தானாசைப்படுமென்று ஆளவந்தாரருளிச்செய்தபடியே, பகவத்போக்யதாஸக்திபோல அத்தால் வந்த ஸ்வப்ரயோஜநத்வாதியும் துஸ்த்யஜமென்னுமிடம் ஸித்தமிறே.

உஎச. ஆக திநசர்யாநுஸந்தாநத்திலே யெடுத்தவற்றில் மங்களாசாஸநாதித்ரயத்தை விசதீகரித்தருளி, (இவையித்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டுபோரக்கடவன்) என்றங்கு நிகமித்த வார்த்தையை விசதீகரித்தருளிகிறார்மேல், (இப்படி யிவை) இத்யாதியால். கீழருளிச்செய்த க்ரமத்திலே திநசர்யாநுஸந்தாநோபாத்தகுணவிசேஷங்களான விவையித்தனையும், தத்பாதகனான ஸதாசார்யப்ரஸாதத்தாலே, ஸ்வாதிகாரபூர்த்யர்த்தமாக வர்த்திக்கும்போதைக்கு, வஸ்தவ்யாதிகள் ஏதென்னும் ப்ரச்நத்தின் மேலே முந்துற விவ்வதிகாரிக்கு வஸ்தவ்யம் ஹிதோபதேசத்தாலே ஸ்வரூபஹாநி வாராதபடி சிக்ஷிக்கும் ஸதாசார்யஸந்நிதியும், தததலாபத்திலவன் காட்டிக்கொடுத்த வர்ச்சாவதாரபகவத்ஸந்நிதியும்; இது ஸமவிகல்பமன்று, ஆசார்யவைபவ மிப்ரபந்ததாத்பர்யமாகையாலே; கர்மபாகத்திலும் ப்ரஹ்மசாரிக்கு குருகுலவாஸமே முற்படவிதித்தது. இனி

“கதமந்யதிச்சதி”.

உஎச. இப்படி இவையித்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்போதைக்கு வஸ்தவ்யமாசார்ய ஸந்நிதியும் பகவத்ஸந்நிதியும்,

ஜீ.—சுவடறிந்ததான் கிட்டுகையரிதாய் கிட்டினாலும் நாக்கு நனைக்கப்போகாததாயிருக்கிற முள்ளிப்பூவிற்சென்றுபடியாதமாத்ரமன்றிக்கே, அத்தைக்கடாக்ஷிப்பதும் செய்யாதிறேயென்று ஆளவந்தாரருளிச்செய்கையாலும், விக்ரஹவைலக்ஷண்யம்கண்டு பகவத்விஷயத்தில் ப்ரவணரானவர்களை மீட்கவரிதென்று தோற்றுகையாலே, விஷயதோஷத்தால் வருமது துஸ்த்யஜமென்னுமிடம் ஸித்தமிறே.

உஎச. ஆக திநசர்யோக்த மங்களாசாஸநாநுகூலஸஹவாஸ ப்ரதிகூலஸஹவாஸ நிவ்ருத்திகளை விவரித்தார்கீழ்; (ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்) என்றத்தை விவரிக்கிறார் மேல், (இப்படி)என்றுதுடங்கி. (இப்படி யிவையித்தனையும் ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்போதைக்கு) என்றது-கீழ்சொன்ன ப்ரகாரத்திலே இந்த ஸ்வபாவவிசேஷங்களெல்லாம் ஸதாசார்யனுடைய ப்ரஸாதத்தாலே கொழுந்துபட்டு வளர்ந்து வரும்போதைக்கென்றபடி; (வஸ்தவ்யமாசார்யஸந்நிதியும் பகவத்ஸந்நிதியும்) அதாவது இவனுக்கு வாஸஸ்தலம் ஹிதைஷியாய் உபதேசாதிகளாலே இவற்றுக்குத்பாதகனான ஸ்வாசார்யனுடைய ஸந்நிதியும், அவன் காட்டிக்கொடுக்கக்கைக்கொண்டு அவனுகந்தவிஷயமாய் தன்பக்கலிலே விசேஷகடாக்ஷாதிகளைப்பண்ணிக்கொண்டு போரு மர்ச்சாவதாரமான பகவான் ஸந்நிதியுமென்கை; இது ஸமுச்சயமுமன்று ஸமவிகல்பமுமன்று, ஆசார்யஸந்நிதியே ப்ரதாநம் தததலாபத்தில் அர்ச்சாவதாரஸந்நிதியென்றபடி; ஆகையிறே ஆசார்யஸந்நிதியை முற்படவருளிச்செய்தது, “మద్భక్తైస్సహసంవాస స్తవసిద్ధ్యై మయాపివా” “மத்பக்தைஸ்ஸஹஸம்வாஸ ஸ்ததஸித்த்யை மயாபிவா”

ஆ.—இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியில் ஸாவ்யக்தமாக வக்தவ்யம் அவ்வாசார்யனுடைய ஜ்ஞாநாநுஷ்டாநவைபவமும், ததுபயாபாவமாகிற ஸ்வநிகர்ஷமும் ; இது ஸமுச்சயமல்ல, ஸ்வநிக்ர்ஷோக்தியும் அதுபாராமலங்கீகரிக்கு மாசார்ய வைபவசேஷமாகையால். அநதிகாரிகள் கேளாமை யநுஸந்திக்குமதான ஜப்தவ்யம் த்வயபூர்வபாவியான குருபரம்பரையும், குருபரம்பரா பூர்வகமான த்வயமும் ; இந்தஸமுச்சயமும் பிந்நமந்த்ரத்வ ஸித்தவிகல்பமல்ல, ஸஹாநுஸந்தாநநியதிபரமத்தனை ; ஸ்வோத்தேச்ய புத்தியாலே குருபரம்பரையும் ஸ்வாசார்யப்ரீத்யர்த்தபுத்தியாலே குருபரம்பராபூர்வக த்வயத்தையு மநுஸந்திக்கவேணுமிறே ; தனித்தனியே யநுஸந்த்தேயமென்னில் குருபரம்பரா பூர்வகமானபோது த்வயமநுஸந்த்தேயம் அல்லாதபோது அநநுஸந்த்தேயம் என்கிற பூர்வாசார்யாநுஸந்தாநவசநவிரோதம் பிறக்கும். இவ்வதிகாரிக்கு த்ருடப்ராமாண்யபுத்தி பூர்வகமான பரிக்ராஹ்யம் நாதமுநிகள்முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்வரூபாத்யநுஸந்தாந ப்ரமாண தாத்பர்யவசநமும், ததநுரூபமான நிர்மலாநுஷ்டாநமும் ; இந்தஸமுச்சயம் ஸமப்ர்தாநம். இவனுக்கு ருசிவர்ஸனைகளுடன் பரி

வக்தவ்யமாசார்யவைபவமும் ஸ்வநிகர்ஷமும்; ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும், பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமு மநுஷ்டாநமும்,

ஜீ.—என்றிறே பகவதுக்தியும். இனி (వక్తవ్యం) (வக்தவ்யம்) துடங்கி மேலடைய ஸமுச்சயம் ; (வக்தவ்யமாசார்யவைபவமும் ஸ்வநிகர்ஷமும்) அதாவது இவனுக்கு ஸர்வகாலமும் வாக்கால்சொல்லப்படுமது துர்க்கதியே பற்றாசாகத் தன்னை யங்கீகரித்தருளின வாசார்யனுடைய தயாக்ஷாந்த்யாதி வைபவமும், எத்தனையேனும் தயாதிகுணபரிபூர்ணரு மேற்றிட்டுப்பார்க்கவருவருக்கும்படி நின்றவநாத்மகுணபூர்த்தியாகிற தன்னுடைய நிகர்ஷமுமாகிற விவையென்கை ; ஸ்ரீமதுரகவியாழ்வார் "நன்மையால்" என்கிறபாட்டுத்துடங்கி. இவை யிரண்டையும் விசதமாகவருளிச்செய்தாரிறே (ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்) அதாவது இவனுக்கு காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கு முறுப்பாகர்ஹஸ்யமாக வநுஸந்தித்துக்கொண்டு போரப்படுமது "రామానుజాఙ్ఘ్రి శరణోఽస్మి" "ராமாநுஜாங்க்ரிசரணோஸ்மி" இத்யாதியிற்படியே ஸர்வேச்வரன் குளிர நோக்குகைக்குடலாய் "స్వాచార్యవంశో జ్ఞేయః ఆచార్యాణామసావసావిత్యాభగవత్తః" "ஸ்வாசார்யவம்சோஜ்ஞேய: ஆசார்யாணமஸாவஸாவித்யாபகவத்த:" என்கிறபடியே ஸ்வாசார்யாதிபரமாசார்ய பகவத்பர்யந்தையான குருபரம்பரையும், அந்த குருபரம்பராப்ராப்தமாய் ஸ்வாசார்யன் தனக்குத்தஞ்சமாக வுபதேசித்த த்வயமுமென்கை ; இத்தால் குருபரம்பராபூர்வகமான த்வயமே இவனுக்கு ரஹஸ்யமாக வநுஸந்தித்துக்கொண்டு போரப்படுமென்றபடி ; பாஷ்யகாரர்க்கு காலக்ஷேபப்ரகாரமருளிச்செய்கிறவிடத்தில் "ద్వయమర్థానుసన్ధానేన సహ సదైవం వక్తా" "த்வயமர்த்தாநுஸந்தாநேநஸஹஸதைவம்வக்தா" என்றிறே பெரியபெருமாளருளிச்செய்தது. (பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமுமநுஷ்டாநமும்) அதாவது தனக்கு ஜ்ஞாநாநுஷ்டாநங்களுற்றிருக்கைக்குறுப்பாக கண்டகண்ட விடங்களிலே இவனால் பரிக்ரஹிக்கப்படுமது நாதமுனிகள் முதலாக விவ்வருகுள்ள பூர்வாசார்யர்களுடைய ஜ்ஞாதவ்யார்த்த ப்ரகாசகமான

ஆ.—த்யாஜ்யம் ஸ்வரூபநாசகரான அவைஷ்ணவஸஹவாஸமும், ஹேமான ததபிமாநமும்; இதுவும் ஸம்ப்ரதாநம், அஸத்ஸஹவாஸமு மபிமாநமும் ஸதாசார்யாபிமாநவிரோதித்வேந த்யாஜ்யங்களாகையால். இவனுக்கு ஸ்வரூபப்ராப்தமான கர்த்தவ்யம் நித்யசேஷியான ஸதாசார்ய கைங்கர்யமும், தத்ப்ரீதிவர்த்தகமான பகவத்கைங்கர்யமும்; இந்த ஸமுச்சயம் ப்ரதாநப்ரதாநபரம், இவ்வதிகாரிக்கு முற்பட்டது ஸஹஜமாய் பிற்பட்டது ஔபாதிகமாகையால்.

௨௭௫. ஆக நிகசர்யாநுஸந்தாநோபாத்த குணவிசேஷ வ்ருத்த்ஹேதுவான வாசார்யப்ரஸாதவ்ருத்திக் கவச்யாபேக்ஷிதங்களான வஸ்தவ்யாத்யநுஷ்டாந விசேஷங்களை யருளிச்செய்து, அதில் சரமாநுஷ்டாநமான கைங்கர்யசோதநம்பண்ணுகிறார் மேல், (கீழ்ச்சொன்ன) இத்யாதியால். (ஸ்வார்த்தகைங்கர்யம்) என்றுகீழ்ச்சொன்ன ஸ்வாஸத்வகர்ப்பகைங்கர்யமறிவது "కామాన్నీ కామరూప్యనుసఞ్చరన్ యేనయేన ధాతాగచ్ఛతి తేనతేనసహాగచ్ఛతి" "காமாந்நீகாமரூப்யநுஸஞ்சரந் யேநயேந தாதாகச்சதி தேநதேநஸஹகச்சதி" "సాయుజ్యం ప్రతిపన్నా యే తీవ్రభక్తాస్తపస్వినః। కింకరా మమ తే నిత్యం భవన్తి నిరుపద్రవాః" "ஸாயுஜ்யம்ப்ரதிபந்நாயே தீவ்ரபக்தாஸ்தபஸ்விந꞉ । கிங்கராமமதேநித்யம் பவந்திநிருபத்ரவா꞉" என்றித்யாதி வேதாந்த சாஸ்த்ரமுகத்தாலே; மேற்சொல்லுகிற சரமமான வாசார்யகைங்கர்யமறிவது "దేవమివాచార్యముపాసీత" "தேவமிவாசார்யமுபாஸீத" இத்யாதி சாஸ்த்ரமுகத்தாலும், ஸ்வாசார்யவிஷயத்தில் செய்யவேண்டும்

பரித்யாஜ்ய மவைஷ்ணவ ஸஹவாஸமு மபிமாநமும்,
கர்த்தவ்ய மாசார்யகைங்கர்யமும் பகவத்கைங்கர்யமும்.
௨௭௫. கீழ்ச்சொன்னபகவத்கைங்கர்யமறிவது சாஸ்த்ரமுக

ஜீ.—இவ்வசநங்களும், அந்த வசநாநுரூபமாக மறுவற்ற வநுஷ்டாநங்களு மென்கை, "సువ్యాహృతాని మహతాం సుకృతాని తత స్తతః। సఞ్చిన్వన్ ధీర ఆసీత శిలహారీ శిలం యథా" "ஸுவ்யாஹ்ருதாநிமஹதாம் ஸுக்ருதாநிததஸ்தத꞉ । ஸஞ்சிந்வந் தீரஆஸீத சிலஹாரீசிலம்யதா" என்னக்கடவதிறே; (பரித்யாஜ்யமவைஷ்ணவ ஸஹவாஸமு மபிமாநமும்) அதாவது ஜ்ஞாநாநுஷ்டாந நாசகமென்னும் பயத்தாலே இவனுக்கு ஸவாஸநமாக விடப்படுமது வைஷ்ணவலக்ஷண மில்லாதவர்களோட்டை ஸஹவாஸமும், அவர்களிவன் நம்முடையவனென் றோரந்வயங்களாலே தந்திரத்தில் பண்ணு மபிமாநமுமென்கை. (கர்த்தவ்யமாசார்யகைங்கர்யமும் பகவத்கைங்கர்யமும்) அதாவது இவனுக்கு ஸ்வரூபாநுகூலமாகவே யெப்போதும் செய்யப்படுமது மஹோபகாரகனான ஸ்வாசார்யன் விஷயத்தில் ப்ரேமபூர்வகமாகப் பண்ணும் கைங்கர்யமும், தந்நியோகபாதந்த்ரனாய்ப்பண்ணும் பகவத்கைங்கர்யமுமென்கை. ஆக நிகசர்யையில்சொன்ன ஸ்வபாவவிசேஷங்களெல்லாம்(ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டுபோருகை) யாவது - இப்படி யிருந்துள்ள வஸ்தவ்ய வக்தவ்ய ஜப்தவ்ய பரிக்ராஹ்ய பரித்யாஜ்ய கர்த்தவ்யங்களையறிந்து இவற்றிலே நிஷ்டனாய்ப்போருகை யென்றதாயிற்று.

௨௭௬. இப்படி கர்த்தவ்யமான கைங்கர்யங்களிரண்டு மறிவதேதம்முகத்தாலே யென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் மேல், (கீழ்ச்சொன்ன) என்றுதுடங்கி. (கீழ்) என்றது - வஸ்தவ்யாதிகளைச்சொன்ன [illegible] க்ஷணமையிலென்றபடி; (பகவத்கைங்கர்ய மறிவது சாஸ்த்ரமுகத்

ஆ.—கைங்கர்யங்களை யருளிச்செய்யுமாசார்ய தாத்பர்யவசநத்தாலும்; கேவலசாஸ்த்ரம் கொண்டறியுமத்தைப்பற்ற சாஸ்த்ரதாத்பர்யம் கொண்டறியவேண்டுமிது சீரியதிறே.—, அன்றியே சாஸ்த்ரசப்தம் சாஸ்த்ரதாத்பர்யங்களிரண்டுக்கும் வாசகமாய் கீழுமிங்கும் சொல்லுகிற ஸ்வார்த்தத கைங்கர்யங்களறிவது வேதாந்தசாஸ்த்ர தாத்பர்யசாஸ்த்ரமுகத்தாலேயென்றும், விசேஷித்து இங்குச்சொல்லுகிற வாசார்யகைங்கர்யமறிவது உபயசாஸ்த்ரமுகத்தாலும் தாத்பர்யநிஷ்ட்ட ஸதாசார்யனுடைய சரமோபதேச லப்த்தமான தாத்பர்யஸாரவசநத்தாலுமென்று மருளிச்செய்வர். ஆசார்யவசநம் ததுபயவ்யாவ்ருத்தமாய் சதாசார்யோபதேசலப்த்தமாய்ப் போருவதொருசரமப்ரமாணம்; பரார்த்தகைங்கர்யம் ஸூக்ஷ்மதர்சியான தாத்பர்யசரமவிபக்தியிலல்லது ஸித்தியாமையால், இந்தசாஸ்த்ரசப்தமுபயவாசகமென்றேகொள்ளவேணும்.

உஎகூ. இப்படி உபயமுகத்தாலு மறியவேண்டினகைங்கர்யம்தான் ப்ரவ்ருத்திநிவ்ருத்திரூபமாய்க்கொண்டு இரண்டுவகையாயிருக்குமென்ன;

உஎஎ. அதாவதேதென்ன, ஆசார்யனிஷ்டம் செய்கையும் ததநிஷ்டம் தவிருகையுமென்ன;

உஎஅ. அவனுக்கிஷ்டாநிஷ்டரூபமாவதேதென்ன, மேலெழுந்துவந்தேறியான வர்ணாச்ரமங்களைப்பற்றுகை அவனுக்கநிஷ்டம், நித்யசேஷத்வமே நிரூபகமான வாத்மஸ்வரூபத்தை நோக்கியிருக்கையவனுக்கிஷ்டம்; ஆகையாலே அநிஷ்டம் பாஹ்யமானத்யாஜ்யத்தை யவலம்பித்தும்இஷ்

த்தாலே. ஆசார்யகைங்கர்யமறிவது, சாஸ்த்ரமுகத்தாலு மாசார்யவசநத்தாலும்.

உஎகூ. கைங்கர்யம் தானிரண்டு.

உஎஎ. அதாவது இஷ்டம்செய்கையு மநிஷ்டம்தவிருகையும்.

உஎஅ. இஷ்டாநிஷ்டங்கள் வர்ணாச்ரமங்களையு மாத்மஸ்வரூ

ஜீ.—தாலே) என்றது - பகவானிவனுக்கிப்போது வாய்திறந்தொன்றை யருளிச்செய்யாமையாலே தத்ப்ரதிபாதகமான ச்ருதிஸ்ம்ருத்யாதிசாஸ்த்ரமுகத்தாலே யறியவேணுமென்கை; (ஆசார்யகைங்கர்யமறிவது சாஸ்த்ரமுகத்தாலு மாசார்யவசநத்தாலும்) என்றது - ஆசார்யவிஷயத்தில் சிச்ருஷாப்ரகாரங்களை ப்ரதிபாதிக்கிற சாஸ்த்ரமுகத்தாலும் தனக்கிஷ்டாநிஷ்டங்களின்னதென்னுமிடத்தை யவனருளிச்செய்த வசநத்தாலுமென்கை.

உஎகூ. இனிமேல் கைங்கர்யவேஷம் தன்னையறிவிக்கைக்காக (கைங்கர்யம் தானிரண்டு) என்கிறார்.

உஎஎ. அதாவதேதென்ன (அதாவதிஷ்டம் செய்கையு மநிஷ்டம் தவிருகையும்) என்கிறார்.

உஎஅ. இவைதானிரண்டுமெத்தை யவலம்பித்திருக்குமென்ன வருளிச்செய்கிறார் மேல், (இஷ்டாநிஷ்டங்கள்) என்றுதுடங்கி. அதாவது கீழ்ச்சொன்ன கைங்கர்யப்ரதிஸம்பந்திக ளிருவருடையவு மிஷ்டாநிஷ்டங்க ளிவ்வதிகாரியுடைய வர்ணாச்ரமங்களையும் ஆத்மஸ்வரூபத்தையும் பற்றி யிருக்குமென்கை; (இஷ்டாநிஷ்டங்கள் வர்ணாச்ரமங்களைப்பற்றியிருக்கை) யாவது - ஸ்வவர்ணஸ்வாச்ரமோசிதமான தர்மங்களைப் பரார்த்தபுத்த்யா வநுஷ்ட்டிக்கை யிஷ்டமாய் ஸ்வார்த்தபுத்த்யா வநிஷ்டமாயிருக்கை; பரார்த்தபுத்த்யாவநுஷ்ட்டிக்கை யாவது -லோகஸங்க்ரஹதயாவாகவும் சிஷ்யபுத்ரர்களுடைய வுஜ்ஜீவநார்த்தமாகவும் ஆந்ருசம்ஸ்ய

ஆ.—டம் ஆந்தரமான வுபாதேயத்தையவலம்பித்து யிருக்குமென்கிருர்—,
அன்றியேதேஹகதமான வர்ணத்தையும் ததநுகுணாச்ரமத்தையும் பற்று
கையநிஷ்டம், ஸ்வரூபகத சேஷத்வவர்ணத்தையும் ததநுகுணப்ரபந்நாச்ர
மத்தையும் பற்றுகையிஷ்டம்; போக்தாவாய்க்கொண்டு சேஷமாயிருக்கும்
ஸ்வரூபமென்றிருக்கையநிஷ்டம், போக்யமாய்க்கொண்டு பரதந்த்ரமாயிரு
க்கும் ஸ்வரூபமென்றிருக்கை யிஷ்டமென்று, வர்ணாச்ரமங்களிலும் ஸ்வரூ
பத்திலும் இஷ்டாநிஷ்டங்களைவகைந்து மருளிச்செய்வர்:—, அன்றியே
தர்சநதூஷணமாக வர்ணாச்ரம விபரீதம் செய்கை யவனுக்கநிஷ்டம், அது

பத்தையு மவலம்பித்திருக்கும்.

ஜீ.—த்தாலே யநுஷ்ட்டிக்கை; இவ்வர்த்தத்தை [இனி யிவற்றில் நம்மா
சார்யர்க ளநுஷ்ட்டிக்கிறவை சிஷ்யபுத்ரர்களுடைய வுஜ்ஜீவநார்த்தமாக
வாந்ருசம்ஸ்யத்தாலே யநுஷ்ட்டிக்கிருர்களத்தனை; இப்படி யநுஷ்ட்டி
யாதபோது பகவத்விபூதிபூதரான சேதநர்க்கு நாசஹேதுவாகையாலே
ஈச்வரனுக் கநபிமதபூதனுவன்; ஆகையால் யாதோரளவாலே லோகஸ
ங்க்ரஹம் பிறக்கும் யாதோரளவாலே சிஷ்யபுத்ரர்களுக் குஜ்ஜீவநமுண்
டாம் அவ்வளவு மநுஷ்ட்டேய மென்றதாயிற்று; ப்ரவ்ருத்திதர்மம்தானே
அபிஸந்த்திபேதத்தாலே நிவ்ருத்திதர்மமான வோபாதி, இந்த நிவ்ருத்
திதர்மமும் ப்ராப்யமாகக்கடவது; இவ்விடத்தில் அகரணேப்ரத்யவாயம்
எம்பெருமானுடைய வநபிமதத்வமும் தன்னுடைய புருஷார்த்தஹாநியு
மாகக்கடவது;] என்று நிச்லோகத்திலே யிவர்தாமே யருளிச்செய்தா
ரிறே. இனி ஸ்வார்த்தபுத்த்யா வநுஷ்ட்டிக்கையாவது — ஸ்வவர்ண
ஸ்வாச்ரமோசிதமாக விஹிதமாகையாலே நமக்கிவை யநுஷ்ட்டியாதொழி
யில் க்ருத்யாகரண ரூபபாபம்வருமென்று நினைத்தநுஷ்ட்டிக்கை. (இஷ்டா
நிஷ்டங்களாத்ம ஸ்வரூபத்தைப்பற்றியிருக்கை) யாவது - "இச்சைச்ஸ்வ
ரூபம்" என்கிறபடியே விநியோகதசையில் சேஷியுடைய விச்சாநுகுண
மாக ஸ்வரூபத்தைவிநியோகப்படுத்துகை யிஷ்டமாய், தட்டுமாறி விநி
யோகம் கொள்ளுமளவில் தன்னுடைய சேஷத்வத்தை யிட்டிருய்த்தல்
பாரதந்த்ர்யத்தை யிட்டெதிர்விழிகொடாதொழிதல் செய்கை யநிஷ்டமா
யிருக்கை.—, அங்ஙனன்றிக்கே (இஷ்டாநிஷ்டங்கள்) இத்யாதிக்கு ஸ்வ
வர்ணஸ்வாச்ரமோசிதங்களைச் செய்கையிஷ்டம் தத்விருத்தங்களைச்செ
ய்கை யநிஷ்டமென்றும், ஆத்மஸ்வரூபத்துக்குசிதமானவற்றைச் செய்
கை யிஷ்டம் தத்விருத்தங்களைச்செய்கை யநிஷ்டமென்றும் யோஜிக்
கவுமாம். அங்ஙனுமன்றிக்கே யௌபாதிகமுமா யநித்யமுமான வர்ணா
ச்ரமங்களிலே யூற்றிருக்கையநிஷ்டம், நிருபாதிகநித்யசேஷமான வாத்
மஸ்வரூபத்திலே யூற்றிருக்கை யிஷ்டமென்றும் யோஜிக்கவுமாம். இங்
ஙனூற்றத்தை யிட்டுச்சொல்லுகையன்றிக்கே அநிஷ்டம் வர்ணாச்ரமத்தை
யவலம்பித்திருக்கும் இஷ்டமாத்மஸ்வரூபத்தை யவலம்பித்திருக்குமென்
றிங்ஙனேவிபஜித்து வர்ணாச்ரமாசாரத்தை யநிஷ்டகோடியாகச் சொல்லப்
பார்க்கில் "శ్రుతిస్మృతిర్మమైవాజ్ఞా యస్తాముల్లఙ్ఘ్య వర్తతే । ఆజ్ఞాచ్ఛేదీ మమ ద్రోహీ మద్భ
క్తోఽపి న వైష్ణవః" "ச்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்யவர்த்த
தே। ஆஜ்ஞாச்ச்சேதீமமத்ரோஹீ மத்பக்தோऽபிநவைஷ்ணவ:" என்றும்
"అవిప్లవాయ ధర్మాణాం పాలనాయ కులస్య చ । సఙ్గ్రహాయ చ లోకస్య మర్యాదాస్థాపనాయ చ ॥
ప్రియాయ మమ విష్ణోశ్చ దేవదేవస్య శార్ఙ్గిణః । మనీషీ వైదికాచారం మనసాపి న లఙ్ఘయేత్ ॥ యథా
హి వల్లభో రాజ్ఞో నదీం రాజ్ఞా ప్రవర్తితామ్ । లోకోపయోగినీం రమ్యాం బహుసస్యవివర్ధినీమ్ ॥ లఙ్ఘ

ஆ.—வாராதபடி தத்விபரீதம் செய்யாதொழிகை யவனுக்கிஷ்டம்; ஸ்வரூபவிருத்தங்களைச்செய்கை யவனுக்கநிஷ்டம், ஸ்வரூபாநுரூபமான வற்றைச்செய்கையவனுக்கிஷ்டமென்றும் யோஜிப்பர்கள்.

உஎகூ. இப்படி யவநுக்கிஷ்டமென்று விசிஷ்டவேஷாநுபக்திகளை விடில் பாபப்ரவ்ருத்திவாராதோவென்ன, மோக்ஷவிரோதியென்று புண்யம் செய்ய வுட்படவஞ்சுகிற விவ்வதிகாரி, நரகஹேதுவாய் ஸாமாந்யருமுட்படச் செய்யாதபாபத்தைச் செய்யானென்னுமிடம் சொல்லவேண்டாவிறே யென்கிறார்; த்யஜிக்கைக்கடியான ப்ரவ்ருத்திரூபத்வ மிரண்டுக்குமொத்தபின்பு எத்தைப்பண்ணுவானென்றபடி.

உஎகூ. புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப்பண்ணுனிறே.

ஜீ.—యః శూలమారోహదనేనేతి ఉక్తవాన్ప్రితి। ఏవం విలఙ్ఘయన్ మర్త్యో మర్యాదాం వేదనిర్మితామ్॥ ప్రియోఽపి న ప్రియోఽసౌ మే మదాజ్ఞావ్యతివర్తనాత్। ఉపాయత్వగ్రహం తత్ర వర్జయేన్మనసా సుధీః'' "அவிப்லவாய தர்மாணும் பாலநாயகுலஸ்யச | ஸங்க்ரஹாயசலோகஸ்ய மர்யாதாஸ்த்தாபநாயச॥ ப்ரியாயமமவிஷ்ணோச்ச தேவதேவஸ்யசார்ங்கிண:। மநீஷீவைதிகாசாரம் மநஸாபிநலங்க்கயேத்॥ யதாஹிவல்லபோராஜ்ஞோ நதீம்ராஜ்ஞாப்ரவர்த்திதாம்। லோகோபயோகிநீம்ரம்யாம் பஹுஸஸ்யவிவர்த்திநீம்॥ லங்க்கயந் சூலமாரோஹேத நபேக்ஷோऽபிதாம்ப்ரதி। ஏவம்விலங்க்கயந்மர்த்யோ மர்யாதாம் வேதநிர்மிதாம் ॥ ப்ரியோऽபிநப்ரியோऽஸௌமே மதாஜ்ஞாவ்யதிவர்த்தநாத் ॥ உபாயத்வக்ரஹம்தத்ர வர்ஜயேந்மநஸாஸுதீ:" என்றும் ஸர்வேச்வரனும் பிராட்டியுமருளிச்செய்த வசநங்களோடும் பூர்வாசார்யர்களுடைய வசநாநுஷ்ட்டாநங்களோடும் விரோதிக்குமிறே; ஆனபின்பு கீழ்ச்சொன்னபடியே இவ்வாக்யத்துக்குப் பொருளாகக்கடவது.

உஎகூ. இம்மூன்று யோஜனைக்கும் மேலில் வாக்யத்தோடு ஸங்கதியென்னென்னில் ப்ரதமயோஜனையில் இப்படி வர்ணாச்ரமாநுஷ்ட்டாநத்தில் ப்ரதிபத்திவிசேஷங்களிலும் ஆத்மஸ்வரூபத்தினுடைய விநியோகதசையிலாநுகூல்யப்ராதிகூல்யங்களிலுமாக இஷ்டாநிஷ்டங்களுக்கு விஷயவிபாகம் பண்ணவேணுமோ, வர்ணாச்ரமாநுரூபமாயும் ஸ்வரூபாநுரூபமாயு முள்ளவற்றைச் செய்கையிஷ்டம் தத்விருத்தங்களான வக்ருத்யாதிகளைச்செய்கை யநிஷ்டமென்றாலோவென்ன வருளிச்செய்கிறார் மேல், (புண்யத்துக்கு) என்றுதுடங்கி. த்விதீயயோஜனையில் இப்படி வர்ணாச்ரமவிருத்தங்களையும் ஸ்வரூபவிருத்தங்களையும் செய்கையநிஷ்டமென்றிவனுக்குச்சொல்லித் தவிர்ப்பிக்கைதான் வேணுமோ (புண்யத்துக்கஞ்சுகிறவன்) என்றுதுடங்கி யருளிச்செய்கிறார். த்ருதீயயோஜனையில் இப்படி வர்ணாச்ரமங்களிலூற்றமறுத்தால் அக்ருத்யகரணங்கள் வந்து புகுராதோவென்ன (புண்யத்துக்கஞ்சுகிறவன்) இத்யாதியாலே யருளிச்செய்கிறார். (புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப்பண்ணுனிறே) என்றது-பகவதநுக்ரஹஹேதுவாக சாஸ்த்ரஸித்தமாயிருக்கச்செய்தேயும் மோக்ஷவிரோதியென்னுமத்தாலே புண்யம்செய்கைக்குட்படவஞ்சுகிற விவ்வதிகாரி, பகவந்நிக்ரஹஹேதுவாக சாஸ்த்ரஸித்தமாய் நரகாவஹமென்று ஸாமாந்யருமுட்படச்செய்யாதபாபத்தை யொருக்காலும் செய்யானிறேயென்கை.

ஆ.—உஅ0. இவ்வதிகாரி வத்ஸலனானவனுக்கு மிடமற நியதனாயிருக்கு மென்கிறார் மேல், (இவன்) இத்யாதியால் புண்யபாபமிரண்டும் மோக்ஷவிரோதியென்றிருக்கிற விவ்வதிகாரி, நாட்டார் ஸுகஹேதுவென்று ப்ரமிக்கும் புண்யத்தை அவர்கள் து:க்கஹேதுவென்று த்யஜிக்கும் பாபமென்று புறக்கணித்திருக்கும்; ஸாம்ஸாரிகபோகமெல்லாம் து:க்கமென்றேதோற்றினால் தத்ஸாதநமெல்லாம் பாபமென்றேதோற்றுமிறே. செய்த குற்றம் நற்றமாகவேகொள்ளு மாச்ரிதவத்ஸலனான வவன் ஆச்ரிதர் பக்கலொருபாபம் பெற்றானாகில், நங்குணத்துக் கிரைபெற்றோம், இது நம்புண்யமென்று பெறாப்பேறுபெற்றானாயிறுமாந்திருக்கும். இப்படி யாசைப்பட்டிடம்பார்த்துப் பேக்ஷணித்துப்போருகிறவனுக்கு துராசையே சேஷிக்குமித்தனையல்லது, இத்தலையில் பாபரூபமானபோக்யமொருக்காலும் கிடையாது. இவனிடம் கொடுக்கிலிறே யவனாசை தீரப்பெறுவது.

உஅக. இப்படி ஸர்வஜ்ஞனுக்கு மிடங்கொடாமல் போருகிறவிவ்வதிகாரிக்கு, மேலெழுந்தவை த்யஜிக்கையுட்பற்றினபற்றின் கார்யமாமித்தனையல்லது, பாபப்ரவ்ருத்திஹேதுவாகாதென்று ப்ராஸங்கிகத்தைத்

உஅ0. இவன் புண்யத்தைப்பாபமென்றிருக்கும், அவன் பாபத்தைப்புண்யமென்றிருக்கும், அவனுக்கது கிடையாது, இவனதுசெய்யான்.

உஅக. கைங்கர்யம்தான் பக்திமூலமல்லாதபோது

ஜீ.—உஅ0. இவன் புண்யத்துக்கஞ்சும்படியையும் வத்ஸலனான வீச்வரனுக்கு மிடமறும்படி பாபப்ரவ்ருத்தியி லக்வயமற்றிருக்கும்படியையும் தர்சிப்பிக்கிறார் மேல், (இவன் புண்யத்தை) இத்யாதிவாக்யத்ரயத்தாலே. அதாவது, "తదా విద్వాన్ పుణ్యపాపే విధూయ । నిరఞ్జనః పరమం సామ్యముపైతి" "ததா வித்வாந் புண்யபாபே விதூய । நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி" என்கையாலே புண்யபாபங்களிரண்டும் மோக்ஷவிரோதியென்றிருக்கு மிவ்வதிகாரி, நாட்டார் ஸுகஹேதுவென்று விரும்பியிருக்கும் புண்யத்தைப்பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தகதயா வநிஷ்டாவஹமாகையாலே, து:க்கஹேதுவான பாபமென்று நினைத்து வெருவியிருக்கும். ஆச்ரிதர் செய்தகுற்றம் நற்றமாகவே கொள்ளு மதிமாத்ரவத்ஸலனான வீச்வரன், இவ்வதிகாரியேதேனுமொருபாபத்தைப் பண்ணிலும் அத்தைக்குற்றமாகநினையாதே நற்றமாக நினைத்துக்கொண்டிருக்கும். அவனப்படி யிருந்தானேயாகிலும் இவ்வதிகாரி பாபப்ரவ்ருத்தியி லக்வயமற்று நியதனாய் வர்த்திக்கையாலே, பாபத்தை புண்யமாகக்கொள்ளும் வத்ஸலனானவனுக்கு அது ஆசைப்பட்டுப்போ மித்தனையொழிய கிடையாதென்கை. ஆக கீழ் கர்த்தவ்யமாகச்சொன்ன கைங்கர்யமறிவது இன்னதாலேயென்றும், கைங்கர்யந்தான் த்விவிதமென்றும், அதுதானின்னதென்றும், ததுபயமு மின்னத்தை யவலம்பித்திருக்குமென்றும் சொல்லி, அதில் ப்ராஸங்கிகசங்காபரிஹாரமும் பண்ணப்பட்டது.

உஅக. ஏதத்ருசகைங்கர்யமிவனுக்கு ஏதேனு மொருவழியாலேயாகிலு முண்டாகவேணுமென்னு மிதிலுடைய வவச்யகரணீயத்வத்தை யருளிச்செய்கிறார் மேல், (கைங்கர்யம் தான்) என்றுதுடங்கி (பக்திமூலமாய் வருகை)யாவது சேஷியுடைய முகமலர்த்திக்குறுப்பானவையே செய்துகொண்டு நிற்கவேண்டும்படியான தத்விஷயப்ரேமமடியாக வருகை. (அல்லாதபோது ப்ரீதிமூலமாய்வருகை) யாவது அதன்றிக்கே யொழிந்தால்

ஆ.—தலைக்கட்டி, ப்ரஸ்துதமான கைங்கர்யாந்வய மிவ்வதிகாரிக்கேதே னுமொருவழியாலேயாகிலு மவச்யம் வேணுமென்கிறார் (கைங்கர்யம் தான்) இத்யாதியால். அநிஷ்டத்யாகரூபமாயு மிஷ்டப்ரவ்ருத்திரூபமாயுமிருக் கிற ப்ரஸித்தகைங்கர்யம்தான் செய்தல்லது தரிக்கமாட்டாத பரமபக்தி மூலமாகச் செய்யாவிடிலும், "அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி:" "அகிஞ்சித்காரஸ்யசேஷத்வாநுபபத்தி:" என்று சேஷவ்ருத்த்யந்வயமில்லாவிடில் சேஷத்வ மழியுமென்னும்பீதிமூலமாகவாகிலும் வருத்திச்செய்யவேணும். பக்தி மூலம்முக்க்யம், பீதிமூல மமுக்க்யம்.

உஅஉ. இப்படி யமுக்க்யமான பீதிமூல கைங்கர்யமுமில்லாதபோது உபாயோபேயாதிகாரத்திலும் தத்ததிகாராநுரூபங்களான வுபாயோ பேயங்களிலும் தத்ததநுரூபபாரதந்த்ர்ய போக்யத்வாநுகுணமான வ்யவ ஸாய ப்ரீத்யந்வயமின்றிக்கே இழவாளனாயொழியும். அநிஷ்டநிவ்ருத்தி ரூபமான கைங்கர்யமில்லாதபோது நிவ்ருத்த்யதிகாரோபாயங்களிலந்வய மின்றிக்கேயொழியும்; இஷ்டப்ரவ்ருத்திரூபகைங்கர்யமில்லாதபோதுப்ரவ் ருத்த்யதிகாரோபேயங்களிலந்வயமின்றிக்கேயொழியுமென்று வகைத்தரு ளிச்செய்வர்.—, அன்றியே ஸ்தோத்ராஞ்சலி ப்ரணாமாதி ப்ரவ்ருத்திரூப கைங்கர்யம்கௌணமாகவாகிலுமுண்டாகாதபோது கைங்கர்யம்செய்தே வருமதான வுபேயாதிகாரத்திலும் தந்நிமித்தமான வுபாயத்திலும் தது பயப்ரயோஜநமான வுபேயத்திலும் ஸ்வரூபஸ்த்திதிரூபாந்வயமின்றிக்கே ஸ்வரூபமழிந்தொழியுமென்று மருளிச்செய்வர். இத்தால் கைங்கர்யாந் வயத்தில் அதிகாராந்வயமேபிடித்துக்குலையும், அதுகுலையாதபடி கைங் கர்யம் நிரந்தரம் செய்யவேணுமென்று கருத்து.

உஅ௩. ஏவம்விதகைங்கர்யத்தில் ஸாதநபுத்திகுலையவேணுமெ ன்கிறார் மேல், (கைங்கர்யம்தன்னை) இத்யாதியால். முக்க்யமாகவு மமுக்க்யமாகவும் அதிகர்த்தவ்யமான கைங்கர்யம்தன்னை, அல்பாகல்ப

பீதிமூலமாய் வரவேணும்.

உஅஉ. அதுவு மில்லாதபோது அதிகாரத்திலும் உபாயோ பேயங்களிலும் அந்வயமின்றிக்கே யொழியும்.

உஅ௩. கைங்கர்யம்தன்னை பலஸாதநமாக்காதே

ஜீ.—"அகிஞ்சித்கரஸ்ய சேஷத்வாநுபபத்தி:" "அகிஞ்சித்காரஸ்யசேஷத்வாநுபபத் தி:" என்கிறபடியே சேஷத்வவ்ருத்தியில்லாதபோது சேஷத்வஹாநிபிறக்கு மென்னும் பீதியடியாகவருகை. இதில் பக்திமூலமானதுவே முக்க்யம், ததலாபத்தில்பீதிமூலந்தானாகிலும் வேணுமென்றபடி.

உஅஉ. அதுதானுமில்லாவிடில் செய்வதென்னென்ன வருளிச்செய் கிறார், (அதுவுமில்லாதபோது) என்றுதுடங்கி, அதாவது அமுக்க்யமான பீதிமூலகைங்கர்யந்தானுமில்லாதபோது, கிஞ்சித்காராபாவத்தாலே சேஷத்வரூபமான வதிகாரத்திலும், அதிகாரிஸாபேக்ஷமாயிருந்துள்ள சேஷியுடைய க்ருபாரூபமானவுபாயத்திலும், இவனுடைய வநுகூலவ்ரு த்திஸாபேக்ஷமான வவனுடைய முகமலர்த்தியாகிற வுபேயத்திலு மந் வயமற்றுவிடுமென்கை.

உஅ௩. ஆக கீழிரண்டுவாக்யத்தாலும் கைங்கர்யாவச்யகர்த்தவ்யத் வமும் கைங்கர்யாபாவத்தில்வருமநர்த்தவிசேஷங்களும் காட்டப்பட்டது; ஏவம்வித கைங்கர்யத்தில் ஸாதநபுத்தியைத் தவிர்க்கிறார் மேல், (கைங் கர்யம் தன்னை) என்றுதுடங்கி. அதாவது - இப்படி யவச்யகரணீயமாக்

ஆ.—போகமோக்ஷரூபமான தேதேனுமொரு பலத்துக்கு ஸாதநமாக்கி பிசக்காதே எல்லாபலமுமிதுவேயென்று குறிக்கொண்டு போரவேணும்.

உஅச. இதில் ஸாதநத்வப்ரதிபத்திகந்தமற ஸித்தஸாத்ய ப்ரதிபத்தியே பிறக்கவேணுமென்று இத்தை விசதீகரிக்கிருர்மேல், (அதாவது) இத்யாதியால். (ஸாதநமாக்காதேபலமாக்குகை)யாவது—ததேக ப்ரயோஜநனுனதான் ஸ்வரூபாநுரூபகைங்கர்யத்தைப்பண்ணி மற்ருெரு ப்ரயோஜநத்துக்குக் கையேலாதே, உன்னைக்கைங்கர்யம்கொண்டோமே இதுக்கு கைக்கூலிதரலாகாதோமேலும்கைங்கர்யம் கொள்ளும்படியென்று பரிபூர்ணனுன வவன் குறைவாளனுய்க்கையேற்கும்படி கைங்கர்யம் பண்ணுகை.

உஅரு. அதுதன்னை விசதீகரிக்கிருர், (கொடுத்து) இத்யாதியால். அவனுக்குரிய வடியனு யவனுலே ப்ரேரிதனுயவனுக்குக்கைங்கர்யம்செய்து அவன்பக்கலிலே ப்ரயோஜநாந்தரங்களைக்கொள்ளாதே "இன்றுவந்து" இத்யாதிப்படியே யவன் தன்னைக் கைங்கர்யம்கொண்டதுக்கு மேன்மேலும் கைங்கர்யம்பண்ணுகையாகிற கைக்கூலி யுடன்பட்டுக்கொடுக்கவேணும்.

பலமாக்கவேணும்,

உஅச. அதாவது - தான் கையேலாதே அவனைக்கையேற்கப் பண்ணுகை,

உஅரு. கொடுத்துக்கொள்ளாதே கொண்டத்துக்குக் கைக்கூலி கொடுக்கவேணும்.

ஜீ.—கீழ்ச்சொன்ன கைங்கர்யந்தன்னைப் பண்ணுமளவில் த்ருஷ்டாத்ருஷ்டபலங்களி லேதேனுமொன்றுக்கு ஸாதநமாக ப்ரதிபத்திபண்ணுதே ஸ்வயம்ப்ரயோஜநமாக ப்ரதிபத்திபண்ணவேணுமென்கை,

உஅச. இத்தை விசதீகரிக்கிருர் மேல், (அதாவது) என்றுதுடங்கி, (அதாவது) என்றது - இத்தை ஸாதநமாக்காதே பலமாக்குகையாவதென்றபடி; (தான் கையேலாதே யவனைக்கையேற்கப்பண்ணுகை) யாவது கைங்கர்யம்பண்ணுகிறதான் அதுக்கு பலமாகவவன் பக்கலிலேயொன்றை யர்த்தியாதே ஸ்வயம்ப்ரயோஜநமாகச் செய்யாநின்றுகொண்டு, கைங்கர்யம்கொள்ளுகிற வவனை "దాస్సా ర్వాశ్చిరసాదేవః ప్రతిగృహ్ణాతివైస్వయమ్" "தாஸ்ஸர்வாச்சிரஸாதேவ: ப்ரதிக்ருஹ்ணாதிவைஸ்வயம்" என்கிறபடியே தன் பூர்த்திபாராதே ஸாபேக்ஷனுய் விரும்பிகைக்கொள்ளும்படி பண்ணுகை.

உஅரு. இவ்வளவும்போராது, தான்கொடுத்தத்தை அவன்கொண்டத்துக்கு ப்ரத்யுபகாரம்பண்ணவும் வேணுமென்கிருர் மேல், (கொடுத்து) என்றுதுடங்கி, அதாவது "దేహి మే దదామి తే" "தேஹிமேததாமிதே"என்கிறபடியே தானவனுக்கொன்றை ஸமர்ப்பித்து அவன் பக்கலிலே யொரு ப்ரயோஜநம் கொள்ளாதே "இன்றுவந்தித்தனையு மமுதுசெய்திடப்பெறில் நானொன்று நூறுயிரமாகக்கொடுத்துப்பின்னுமாளும்செய்வன்" என்ற பெரியாழ்வார் திருமகளைப்போலே தான் ஸமர்ப்பித்த த்ரவ்யத்தை யவனங்கீகரித்த வுபகாரத்துக்காக, அப்படியிருந்துள்ளவற்றை தன்னபிநிவேசாநுகுணமாக நிறையக்கொண்டுவந்து ஸமர்ப்பியாநின்றுகொண்டு பின்னையுமடிமைசெய்கையாகிற கைக்கூலிகொடுக்கவேணுமென்கை.

ஆ.—௨௱௬. அநந்யப்ரயோஜநராய் கைங்கர்யம்செய்யிலாயிற்று ஸ்வரூபமுஜ்ஜ்வலமாவதென்கிறார் மேல், (ஸ்ரீவிதுரரையும்) இத்யாதியால். க்ருஷ்ணன் பீஷ்மத்ரோணாதிகளையுபேக்ஷித்து இருந்தவிடம்தேடிவரும்படி அபிமதரான ஸ்ரீவிதுரரையும்; முடிக்குத்தெருத்தேடிவரும்படி பரிவரான ஸ்ரீமாலாகாரரையும், திருக்கைகளாலே ஸ்பர்சித்து அங்கீகரிக்கப்பெற்ற கூனியையும்போலே, அநந்யப்ரயோஜநமாக கிஞ்சித்கரிக்கிலிறே ஸ்வப்ரயோஜநாந்வய யோக்யதையற்றஸ்வரூபம் நிறம்பெறுவதென்கை.

௨௱௭. இதுதன்னை விசதமாக்குகிறார் மேல், (மடிதடவாத) இத்யாதியால். சோற்றையிட்டு மடியைப்பிடித்து முடிச்சரக்கையறுத்துக்கொள்ளுகையாகிற மடிதடவும் சோறன்றியே "విదురాన్నాని బుభుజే శుచీని గుణవన్తి చ" "விதுராந்நாநிபுபுஜே சுசீநிகுணவந்திச" என்றநந்யப்ரயோஜநத்வ பக்திபரவசத்வரூப பாவநத்வ போக்யத்வங்கள், அவன் நாவிலும் நெஞ்சிலும் வேர்விழும்படி நல்லதோர்சோறான மடிதடவாதசோறிறே ஸ்ரீவிதுரரிட்டது; பூவில்சாபலத்தாலே முந்துற தன் தலையிலேவைத்து மோந்து சுருள் நாறப்பண்ணிக் கொடுக்கையாகிற சுருள் நாறுகிற பூவன்றியே "ప్రసాదపరమౌ నాథౌ మమ గేహముపాగతౌ । ధన్యోఽహమర్చయిష్యామీత్యాహ మాల్యోపజీవనః" "ப்ரஸாதபரமௌநாதௌ மமகேஹமுபாகதௌ | தந்யோஉஹமர்ச்சயிஷ்யாமீத்யாஹமால்யோபஜீவந:" என்றநந்யப்ரயோஜநத்வகுணம் குன்றாதபடி மிக்கசீர்த்தொண்டரிட்டபூவான சுருள் நாறாதபூவிறே ஸ்ரீமாலாகாரரிட்டது; அநேகம் பொன்னேறக்கூட்டியும் சுண்ணாம்புத்

௨௱௬. ஸ்ரீ விதுரரையும் ஸ்ரீ மாலாகாரரையும் கூனியையும் போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம்பெறுவது.

௨௱௭. மடி தடவாதசோறும் சுருள்நாறாத பூவும் சுண்ணாம்பு

ஜீ.—௨௱௬. இப்படி யநந்யப்ரயோஜநனாய் கிஞ்சித்கரித்தாலாயிற்று ஸ்வரூபமுஜ்ஜ்வலமாவதென்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார்மேல், (ஸ்ரீவிதுரரையும்) என்று துடங்கி.

௨௱௭. த்ருஷ்டாந்தபூதரான வவர்கள் கிஞ்சித்கரித்தப்ரகாரந்தன்னை யருளிச்செய்கிறார், (மடிதடவாத) என்று துடங்கி. (மடிதடவாதசோறாவது) - முந்துறவாதரத்தோடேயிட்டுப்பின்னை யிதுக்குக்காசுதரலாகாதோவென்று மடிச்சீரைசோதிக்கைக்காக மடியைப்பிடித்துத் தடவி உண்டவன் நெஞ்சுளையும்படி பண்ணும் ப்ரயோஜநாந்தரபரிடும் சோறுபோலன்றிக்கே, உண்டவன் நெஞ்சுகக்கும்படி அநந்ய ப்ரயோஜநமானசோறு; இப்படி யிருந்துள்ளசோறிறே "భుక్తవత్సు ద్విజాగ్ర్యేషు నిషణ్ణః పరమాసనే । విదురాన్నాని బుభుజే శుచీని గుణవన్తి చ" "புக்தவத்ஸு த்விஜாக்ர்யேஷு நிஷண்ண:பரமாஸநே | விதுராந்நாநிபுபுஜே சுசீநிகுணவந்திச" என்று பாவநத்வ போக்யத்வ ப்ரசஸ்தமாம்படி ஸ்ரீவிதுரரவனுக்கு ஸமர்ப்பித்தது. (சுருள்நாறாதபூ) வாவது - அக்நிஸ்பர்சமுண்டானால் சுருள்நாறும்படியிறே பூவின் ஸ்வபாவமிருப்பது; அப்படியே ப்ரயோஜநாந்தர ஸ்பர்சமாகிற சுருள்நாற்றமில்லாதபடி அநந்யப்ரயோஜநத்வபரிமலயுக்தமாக இடும் புஷ்பம்; இப்படி யிருந்துள்ளபூவிறே "ప్రసాదపరమౌ నాథౌ మమ గేహముపాగతౌ । ధన్యోఽహమర్చయిష్యామీత్యాహ మాల్యోపజీవనః" "ப்ரஸாதபரமௌநாதௌ மமகேஹமுபாகதௌ | தந்யோஉஹமர்ச்சயிஷ்யாமீத்யாஹமால்யோபஜீவந:" என்று விசேஷஜ்ஞர் ச்லாகிக்கும்படி அத்யாதரபூர்வகமாக ஸ்ரீமாலாகாரரவனுக்குக் கொடுத்தது. (சுண்ணாம்புபடாதசாந்தாவது)-

ஆ.—திவலைதெறிக்கக்கெடும் சாந்துபோலன்றியே "సుగన్ధమేతద్రాజార్హం రుచిరం రుచిరాననే। ఆవయోర్గాత్రసదృశం దీయతామనులేపనమ్" "ஸுகந்த்தமேதத்ராஜார்ஹம்ருசிரம்ருசிராநநே | ஆவயோர்காத்ரஸத்ருசம் தீயதாமநுலேபநம்" என்றவனிரக்கும்படி யவன் வடிவழகுக்குத் தோற்றுச்சாற்றுகையாலே ப்ரயோஜநாந்தரஸ்மரணலேசச்சுண்ணம்படாத பூசும்சாந்திறே ஸ்ரீகூனிகொடுத்தது. ஆக வநந்யப்ரயோஜநனுயே கைங்கர்யம் பண்ணவேணும் ப்ரயோஜநாந்தரலேசம் ஸ்பர்சிக்கில் அந்தக்கைங்கர்யமும் ததாச்ரய ஸ்வரூபமும் தூஷிதமாமென்றபடி.

உஅஅ. ஆக ஸதாசார்ய ப்ரஸாதவ்ருத்த்திக்கு ஹேதுவாகவருளிச்செய்த வஸ்தவ்யாதிநியமசரமமாகவெடுத்த வுபயவிதகைங்கர்யசோதநம்பண்ணி, கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியான தசாசதுஷ்டயத்திலும் கைங்கர்யாச்ரய ஸ்வரூபவிரோதம்வாராதபடி பேணி வர்த்திக்கவேணுமென்கிறார் மேல், (கைங்கர்யதசைபோலே) இத்யாதியால். சரமபாவியான கைங்கர்யதசையிலே ஸ்வப்ரயோஜநாந்வயம் ஸ்பர்சியாதபடி பரைகப்ரயோஜநத்வவேஷசேஷத்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கினுப்போலே, கைங்கர்யத்துக்கு முன்பேயுண்டா யதில்வருகைக்கிட்ட படியோழுங்கானதசாவிசேஷங்களிலும் தத்தத்விரோதிவிசேஷங்கள் ஸ்பர்சியாதபடி பேணிக்கொண்டு, கைங்கர்யாச்ரய ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கவேணுமென்றருளிச்செய்து;

படாத சாந்துமிறே யிவர்கள்கொடுத்தது.

உஅஅ. கைங்கர்யதசைபோலே முன்புள்ளதசைகளிலும் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கவேணும்.

ஜீ.—ஆயிரம்பொன்னழியக்கூட்டியும் சுண்ணம்புத்திவலைபடக்கெடும்படியிறே சாந்தின் ஸ்வபாவம்; அப்படியே ப்ரயோஜநாந்தரஸ்பர்சமாகிற தோஷமின்றிக்கே அநந்யப்ரயோஜநமான சாந்து; இப்படி யிருந்துள்ள சாந்திறே "సుగన్ధమేతద్రాజార్హం రుచిరం రుచిరాననే। ఆవయోర్గాత్రసదృశం దీయతామనులేపనమ్" "ஸுகந்த்தமேதத்ராஜார்ஹம் ருசிரம்ருசிராநநே | ஆவயோர்காத்ரஸத்ருசம் தீயதாமநுலேபநம்" என்றவனர்த்தித்த வநந்தரம் பூசும் சாந்தாம்படி கூனிகொடுத்தது. ஆக யிப்படி யநந்யப்ரயோஜநமாக கிஞ்சித்கரித்தாலாயிற்றுகைங்கர்யாச்ரயமான ஸ்வரூபமுஜ்ஜ்வலமாவதென்கை. ஆக இவ்வளவும் வஸ்தவ்யாதிகணனையில் சரமோக்தமான கர்த்தவ்யரூபகைங்கர்யத்தைச்சோதித்து, தாத்ருசகைங்கர்யத்தாலே ஸ்வரூபமுஜ்ஜ்வலமாமென்னுமிடத்தையு மருளிச்செய்தாராயிற்று.

உஅஅ. இப்படி யநந்யப்ரயோஜநனுய்க்கொண்டு கைங்கர்யம் செய்தாலே ஸ்வரூபமுஜ்ஜ்வலமாவதென்று சொன்னவிதிலே முக்தாவஸ்த்தையில் கைங்கர்யதசையில் ஸ்வரூபௌஜ்ஜ்வல்யமும் அர்த்ததாதுக்தமென்று நினைத்து, இப்படி கைங்கர்யதசையில் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்குமோபாதி ஏதத்பூர்வ தசாவிசேஷங்களிலும் ஸ்வரூபத்தையுஜ்ஜ்வலமாக்க வேணுமென் றருளிச்செய்கிறார் மேல், (கைங்கர்யதசைபோலே) என்றுதுடங்கி. (முன்புள்ளதசைகளிலும்) என்றது – கைங்கர்யத்துக்கு பூர்வதசைகளிலு மென்றபடி.

ஆ.—உஅகூ. அவையெவ்வையென்னு மபேக்ஷயிலே ஸமுதாயமாக (முன்பே நாலுதசையுண்டு) என்று;

உகூ௦. அவற்றைப் பிரித்தருளிச்செய்யவேணுமென்னு மபேக்ஷயிலே, அதாவது - ஸ்வரூபஜ்ஞாநதசையும் உபாயவரணதசையும் ப்ராப்ய ப்ராப்திதசையும் ப்ராப்த ப்ராப்யாநுபவ தசையும் என்று நாலுபடியாயிருக்கு மென்கிறார்.

உகூக. அத்தசைகளில் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கும்படியை யருளிச்செய்கிறார், (ஜ்ஞாநதசையில்) இத்யாதியால். ப்ரணவார்த்தமான சேஷத்வ ஜ்ஞாநாநுஸந்தாநமாகிற ஜ்ஞாநதசையில் ஜ்ஞாநியென்னுமஹங்காரம் மேலிடாதபடி "யானேயென்னை யறியகிலாதே" "அறிவொன்றுமில்லாத" இத்யாதிப்படியே ஸ்வரூபஜ்ஞாந மில்லாமையை முன்னிடும்; ஸகலலோகார்த்தமான விதரோபாய த்யாகபூர்வக ஸித்தோபாய வரணதசையில் ஜ்ஞாநியென்னுமாகிஞ்சந்யம் நிறமிடும்படி "நோற்ற நோன்"

ஜ-அகூ. முன்பே நாலுதசையுண்டு.

உகூ௦. அதாவது ஜ்ஞாநதசையும் வரணதசையும் ப்ராப்தி தசையும் ப்ராப்யாநுபவதசையும்.

உகூக. ஜ்ஞாநதசையில் அஜ்ஞாநத்தை முன்னிடும். வரண தசையில் அபூர்த்தியைமுன்னிடும். ப்ராப்திதசையில்

ஜீ.—உஅகூ. முன்பே யெத்தனை தசை யுண்டென்னு மாகாங்க்ஷயிலே யருளிச்செய்கிறார், (முன்பே நாலுதசையுண்டு) என்று.

உகூ௦. அந்த நாலுதசையுந்தா னேதென்னுமபேக்ஷயிலே யருளிச்செய்கிறார், (அதாவது) என்று துடங்கி. (ஜ்ஞாநதசை) யாவது ஆசார்யோபதேசத்தாலே தனக்கு ஜ்ஞாநம்பிறந்து செல்லுகிறதசை; (வரணதசை) யாவது-ஸித்தோபாயபூதனான ஸர்வேச்வரனைத் தனக்குபாயமாக வரிக்கிறதசை; (ப்ராப்திதசை) யாவது - ஸாம்ஸாரிக ஸகலதுரித நிவ்ருத்தி பூர்வகமாக வவன்திருவடிகளை ப்ராபிக்கிறதசை; (ப்ராப்யாநுபவதசை) யாவது - ப்ராப்யபூதனான வவனைக்கிட்டி யநுபவிக்கிறதசை. இவ்வநுபவ ஜநிதப்ரீதிகாரித கைங்கர்யமிறே பரமபுருஷார்த்தம்; ப்ரதமாபேக்ஷிதமான தத்வஜ்ஞாநமும், ஜ்ஞாநபலமான வுபாயவரணமும், வரணபலமான ப்ராப்தியும், ப்ராப்திபலமான வநுபவமும், அநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யமுமாயிறே க்ரமமிருப்பது; ஆகையாலே கைங்கர்யதசை சரமதசையாய் பூர்வதசைகள் நாலு மிதிலே வந்தேறுகைக் கிட்ட படியொழுங்காயிருக்கும்.

உகூக. இவ்வோர்தசைகளில்ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கும்படியைத் தர்சிப்பிக்கிறார் மேல், (ஜ்ஞாநதசையில்) என்றுதுடங்கி. (ஜ்ஞாநதசையிலஜ்ஞாநத்தைமுன்னிடுகை) யாவது - ஆசார்யன் மேல்மேல்தனக்கஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணும்படி தத்த்வஹிதபுருஷார்த்தங்களில் தன்னுடைய வஜ்ஞாநத்தைப் பலகாலும் விஜ்ஞாபிக்கை; (வரணதசையி லபூர்த்தியை முன்னிடுகை) யாவது - "நோற்றநோன்பிலேன்" "నధర్మనిష్ఠోఽస్మి" "நதர்மநிஷ்டோ஽ஸ்மி" "[illegible]" "ஸத்கர்மநைவ கிலகிஞ்சநஸஞ்சிநோமி" இத்யாதியிற்படியே பேற்றுக்குஹேதுவாகக் கொள்ளலாவதொரு ஸுக்ருதாதிகளொன்றும் தனக்கில்லாமையாகிறவாகிஞ்சந்யத்தைப்புரஸ்கரிக்கை; (ப்ராப்திதசையிலார்த்தியை முன்னிடுகை) யாவது - பெற்றபோது பெறுகிறோமென்றிராதே "வானுலகத்தெளிந்தே

ஆ.—நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" "நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறம்செய்துமிலேன்." என்றித்யாதிப்படியே கிஞ்சித்காரலேசாபாவரூபையான வபூர்த்தியைமுன்னிடும்; ஸஹேதுக ஸம்ஸாரஸம்பந்தநிவ்ருத்திபூர்விகையான ப்ராப்திதசையில், பெற்றபோது பெறுகிறோமென்றாறியிராதே "எந்நாள்யானுன்னை யினிவந்துகூடுவனே" "என்ஞான்றுகூட்டுதியே" என்றித்யாதிப்படியே விலம்பாஸஹத்வாதிசயாரதிரூபையானவார்த்தியைமுன்னிடும்; ஸ்வரூபகுணவிக்ரஹங்கள் விட்டெரிக்க நித்யவிபூதியிலேநித்யமுக்தப்ராப்யமாய்க் கொண்டிருக்கிற பகவதநுபவதசையில் த்ருப்திபிறவாதே "அடியேன்வாய்மடுத்துப்பருகிக்களித்தேனே" "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே" என்றித்யாதிப்படியே தன்னுடைய வநுபவாபிநிவேசத்தைமுன்னிடும்.

உகூஉ. இப்படி ஞாநித்வப்ரதிபத்த்யாதி விரோதிஸ்பர்சமறஸ்வஜ்ஞானபுரஸ்கரத்வாதிகளாலே தசாசதுஷ்கத்தில் ஸ்வரூபமுஜ்ஜ்வலமாம்படிபாகம்பிறக்கும்போது, அஜ்ஞாநாதிசாமகமின்னதென்கிறார் மேல் (அஜ்ஞானம்போவது) இத்யாதியால். இப்படி ஸ்வரூபஜ்ஞனானவிவனுடைய ஸ்வரூபாதிஜ்ஞானபாவமாகிற வஜ்ஞானம்மேலிடாமற்போவது, அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணும் ஜ்ஞாநாதிகனான வாசார்யனுடைய ஸ்வாசார்யவிகஸிதநிர்மலஜ்ஞாநத்தாலே; அகிஞ்சித்கரனா யுபாயாதிகாரியான விவனுடைய கிஞ்சித்காரலேசாபாவமாகிற வபூர்த்திபோவது, உபாயபூதனானவீச்வரனுடைய அவாப்தஸமஸ்தகாமத்வமாகிற நிரபேக்ஷபூர்த்தியாலே; பகவத்ப்ராப்திவிலம்பாஸஹத்வத்தால்வருமார்த்திபோவது "அடியேற்காவா

ஆர்த்தியைமுன்னிடும், ப்ராப்யாநுபவதசையி லபிநிவேசத்தைமுன்னிடும்.

உகூஉ. அஜ்ஞானம்போவது ஆசார்யஜ்ஞானத்தாலே;
அபூர்த்திபோவது ஈச்வரபூர்த்தியாலே;
ஆர்த்திபோவது அருளாலே;

ஜீ.—யென்றெய்துவது" "தரியேனினி" "கூவிக்கொள்ளும் காலமின்னம்குறுகாதோ" இத்யாதிப்படியேவிலம்பாஸஹத்வ நிபந்தநமான தன்னுடைய க்லேசாதிசயத்தைதர்சிப்பிக்கை; (ப்ராப்யாநுபவதசையி லபிநிவேசத்தை முன்னிடுகை) யாவது - பெருவிடாயனுக்குக்கொடுத்த தண்ணீரார தாப்போலே அநுபூதாம்சத்தால் த்ருப்திபிறவாதே மேன்மேலும் தனக்குவிளைந்துசெல்லுகிற வநுபவாபிநிவேசத்தை ப்ரகாசிப்பிக்கை. ஆக ஜ்ஞாநதசைமுதலான நாலுதசையிலும் ஸ்வரூபத்தையுஜ்ஜ்வலமாக்குகையாவது- இவ்வோவாகாரங்களை முன்னிடுகையென்றுகருத்து.

உகூஉ. இப்படி யிவனிவற்றைமுன்னிட்டால் இவனுக்கிவைசமிப்பதெத்தாலேயென்ன வருளிச்செய்கிறார்மேல், (அஜ்ஞானம்போவது) என்றுதுடங்கி. அதாவது தத்த்வஹிதபுருஷார்த்தாதிகளில் இவனுக்குள்ள வஜ்ஞானம் ஸவாஸனமாக நிவ்ருத்தமாவது அவற்றை யலகலகாகதர்சித்து அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணுகைக்கீடான வாசார்யனுடைய ஜ்ஞானத்தாலே; பேற்றுக்கு ஹேதுவாயிருந்துள்ள ஸத்கர்மாதிகளொன்றும் தனக்கில்லாமையாகிற வபூர்த்திசமிப்பது, இத்தலையிலுள்ளதொன்றையு மபேக்ஷியாமல் கார்யம்செய்யு முபாயபூதனான ஈச்வரனுடைய ஸஹகாரிநைரபேக்ஷ்யமாகிறபூர்த்தியாலே; அவிலம்பேந திருவடிகளைப்ராபிக்கப்பெறுமையாலுண்டான வார்த்திதீருவது, ஆர்த்திகண்டாலாற்றமாட்டாதே

ஆ.—வென்றிரங்கும்" "அருளாழியம்மானுடைய," "பெருவிசும்பருளும் போருளாலே;" பகவத்ஸ்வரூபாதிகளில் மேல்மேலு மநுபூஷைவிளக்கையாகிற வபிநிவேசம்போவது மேல்மேலுண்டாம் பகவதநுபவத்தாலே.

௨௯௩. அந்தவஜ்ஞாநாதிகாரணமின்னதென்கிறார் மேல் (அஜ்ஞாநத்துக்கடி) இத்யாதியால். ஜ்ஞாநதசையில் முன்னிடுகிற வஜ்ஞாநத்துக்கடி அநாத்யஜ்ஞாநக்ருதமான ஸ்வாபராதஸ்மரணம்; வரணதசையில் முன்னிடுகிறவபூர்த்திக்கடி, ஸ்வகததததங்கீகாரஹேதுவில்லாமையை ஸ்மரிக்கையாகிற ஜ்ஞாநபூர்த்தி; ப்ராப்திதசையில் முன்னிடுகிறவார்த்திக்கடி விலம்ப பகவத்ப்ராப்த்யலாபம்; ப்ராப்யாநுபவதசையில் முன்னிடுகிறவபிநிவேசத்துக்கடி ததபிவ்ருத்த்திஹேதுவான வவன்வடிவழகு.

௨௯௪. சரமதசாத்வயத்திலுண்டா மார்த்த்யபிநிவேசமிருக்கும்படி அர்ச்சிராதிகதியென்கிற நித்யாநுஸந்தேய ப்ரபந்தத்திலே, [ஸர்பாஸ்யகதமான மண்டூகம்போலவும், என்று துடங்கி "திருவாணைநின்னாணை கண்டாய்" என்று தடுத்தும்வளைத்தும் பெறவேண்டும்படி பரமபக்திதலையெடுத்த] தளவாகவும்;["செய்யவுடையும் திருமுகமும்செங்கனிவாயும்" என்கிறமுன்புற்றையழகை யநுபவித்து,என்றுதுடங்கி" வழுவிலாவடிமை

அபிநிவேசம் போவது அநுபவத்தாலே.

௨௯௩. அஜ்ஞாநத்துக்கடி யபராதம், அபூர்த்திக்கடி ஜ்ஞாநபூர்த்தி, ஆர்த்திக்கடி யலாபம், அபிநிவேசத்துக்கடி யழகு.

௨௯௪. ஆர்த்தியுமபிநிவேசமு மிருக்கும்படி

ஜீ.—அப்போதே காரியம்செய்து தலைக்கட்டுகைக்குறுப்பான பரதுঃக்காஸஹிஷ்ணுத்வமாகிற வவனுடையக்ருபையாலே; அநுபவதசையி லநுக்ஷணம் பிறக்குமபிநிவேசமடங்குவது, அவ்விஷயத்தை மேன்மேலு மநுபவிக்கையாலேயென்கை.

௨௯௩. இவ்வஜ்ஞாநாதிசதுஷ்டயத்துக்கும் ஹேதுவேதென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார், (அஜ்ஞாநத்துக்கு) என்றுதுடங்கி. அதாவது ஜ்ஞாநதசையில் முன்னிடுகிறவஜ்ஞாநத்துக்குமூலம்-அநாதிகாலக்ருதாக்ருத்யகரணாக்ருத்யாகரணநிரூபமானவபராதம்; வரணதசையில் முன்னிடுகிற வபூர்த்திக்குநிதானம்-பேற்றுக்கு ஹேதுவாகநினைக்கலாவதொன்றும் தனக்கில்லாமையை தர்சிப்பிக்கைக்குடலான ஜ்ஞாநபூர்த்தி; ப்ராப்திதசையில் முன்னிடுகிற வார்த்திக்குஹேது ப்ராப்யவஸ்துவை சீக்ரமாகக்கிட்டப்பெறாமையாகிறவலாபம்; ப்ராப்யாநுபவதசையில் முன்னிடுகிற வபிநிவேசத்துக்குக்காரணம் அநுபவித்தவளவால் த்ருப்திபிறவாதே மேன்மேலுமாசைப்படப்பண்ணுமவன் வடிவழகென்கை.

௨௯௪. ஆர்த்த்யபிநிவேசமிருக்கும்படி யென்னென்ன வருளிச்செய்கிறார், (ஆர்த்தியு மபிநிவேசமுமிருக்கும்படி யர்ச்சிராதிகதியிலே சொன்னோம்) என்று. ["இன்னின்ற நீர்மைஇனியாமுறாமை" என்று துடங்கி "திருவாணைநின்னாணைகண்டாய்" என்றுதடுத்தும்வளைத்தும்பெறவேண்டும்படி பரமபக்திதலையெடுத்தது] என்னுமளவாக வார்த்தியிருக்கும்படியையும்; ["செய்யஉடையும்திருமுகமும் செங்கனிவாயுங்குழலுங்கண்டு" என்கிறபடியே முன்புற்றையழகையநுபவித்து, என்றுதுடங்கி, தன்னைப்பெற்றப்ரீதியால் வந்தசெவ்வியையநுபவித்து] என்னுமளவாக அபிநிவேச

ஆ.—செய்யவேண்டும்நாம்" என்கிற வபிநிவேசாதிசயத்தாலே நாநா தேஹங்களைப்பரிக்ரஹித்து அசேஷசேஷவ்ருத்திகளிலு மங்வயித்து] என்கிறதளவாகவும்கேட்டவர்களுக்கு ஆர்த்யபிநிவேசம்பிறக்கும்படிவிவரித்துச்சொன்னோம், அங்கே கண்டுகொள்வதென்கிறார்.

உகூரு. ஆக கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியான தசாசதுஷ்கமின்னதென்றும், தத்தத்தசாநுகுணமான வஜ்ஞாநாதிகளைமுன்னிடவே தத்தத்தசைகளில்ஸ்வரூபமுஜ்ஜ்வலமாமென்றும், முன்னிடுமந்தவஜ்ஞாநாதிகளைப்போக்குமவை ஆசார்யஜ்ஞாநாதிகளென்றும், அவற்றுக்கடியபராதாதிகளென்றும், தசாசதுஷ்கத்தில்வரும் ஸ்வரூபசோதநம்பண்ணி, இவ்வதிகாரிக்கு ஸம்பாவிதஸ்வபாவமான விருத்தஸத்குணயோகத்தை யருளிச்செய்கிறார்மேல்(இவன்தனக்கு)இத்யாதியால். பூர்வதசாவிசேஷங்களாலுஜ்ஜ்வலஸ்வரூபனானவிவன்தனக்குஸ்வரூபோஜ்ஜ்வலபரிபாக ஹேதுவான கீழ்ச்சொன்னநாலுதசைபோலே தநுஜ்ஜ்வலிதாகாரமான பரஸ்பரப்ரதியோகியான நாலுகுணமுண்டென்று.

உகூசு. அவை யெவையென்னுமபேக்ஷயிலே யதார்த்தஜ்ஞாநமும் தத்வ துபாதேயமானவஜ்ஞாநமும் ஸ்வரூபாநுரூபமான சக்தியும் ஸ்வரூபவிருத்தவிஷயாசக்தியுமாகிற விவையென்ன;

உகூஎ. இவனுக்கிவை யஸாதாரணமாயுள்ளவையோவென்ன, அன்று (இவைதானவனுக்குமுண்டு) என்றும்;

அர்ச்சிராதிகதியிலே சொன்னோம்.

உகூரு. இவன் தனக்கு நாலுதசைபோலே நாலுகுணமுண்டு.

உகூசு. அதாவது ஜ்ஞாநமு மஜ்ஞாநமும் சக்தியுமசக்தியும்.

உகூஎ. இதுதா னவனுக்குமுண்டு.

ஜீ.—மிருக்கும்படியையும் அந்தப்ரபந்தத்திலே ஸுஸ்பஷ்டமாகவருளிச்செய்தாரிறே. ஆக கைங்கர்யதசைக்குமுன்னே நாலுதசையுண்டென்றும், அவைதானின்னதென்றும், அவ்வவதசாநுகுணமான வஜ்ஞாநாதிகளை முன்னிடவே அவ்வவதசைகளில்ஸ்வரூபமுஜ்ஜ்வலமாமென்றும், அவ்வஜ்ஞாநாதிகளைப்போக்குமவை ஆசார்யஜ்ஞாநாதிகளென்றும், அவ்வஜ்ஞாநாதிகளுக்கு நிதானங்களும் சொல்லிற்றாயிற்று.

உகூரு. இந்த தசாசதுஷ்டயப்ரஸங்கத்திலே இவனுடையகுணசதுஷ்டயத்தையு மருளிச்செய்கிறார்மேல் (இவன்தனக்கு) என்று துடங்கி. அதாவது இவ்வதிகாரிக்கு ஸ்வரூபௌஜ்ஜ்வல்யத்துக்குடலாகக் கீழ்ச்சொன்ன தசாசதுஷ்டயம்போலே ஸ்வரூபௌஜ்ஜ்வல்யஹேதுவான குணசதுஷ்டயமு முண்டென்கை.

உகூசு. அவைதா னெவையென்னு மாகாங்க்ஷையிலே (அதாவது ஜ்ஞாநமுமஜ்ஞாநமும் சக்தியு மசக்தியும்) என்றந்தகுணங்கள் தம்மை யருளிச்செய்கிறார்.

உகூஎ. இவனுடைய குணசதுஷ்டயம் சொன்ன ப்ரஸங்கத்திலே ஈச்வரனுக்கு மிவையுண்டென்னுமிடத்தை யருளிச்செய்கிறார் (இதுதானவனுக்குமுண்டு) என்று. (அவன்) என்று கீழ்ச்சொல்லிக்கொண்டுவந்த வீச்வரனைப் பராமர்சிக்கிறது.

ஆ.—உகூஅ. எதுவிஷயமாக வுண்டாமென்ன, ஸர்வஜ்ஞனவவனுடைய யுகபத்ஸர்வதர்சியான ஜ்ஞாநத்துக்குக்கூட நோக்கவேண்டுமிலக்கு, தோஷதுஷ்டனை விவனுடைய அநந்ததோஷதிரோஹிதமானகுணப்ரதிபாஸம்; ஸர்வஜ்ஞனுடைய வாத்ஸல்யகார்யமான வஜ்ஞாநத்துக்கு முழுவிலக்கு, ப்ரதிபாஸிக்கிற குணலவத்தையும் மறைத்து தானே ப்ரதிபாஸிக்கிற வக்ருத்யகரணாதிதோஷம்; ஸர்வசக்தியானவவனுடைய வகடிதகடனையான சக்திக்குமேரே யிலக்கு, ஸ்வரக்ஷணாந்வயமற்ற விவனுடைய வநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகரத்வமாகிறரக்ஷணம்; ஸர்வசக்தியினசக்திக்கொன்றானவிலக்கு, ஆச்ரிததோஷபூயஸ்தவைதகண்டும் விடமாட்டாமையாகிற பரித்யாகமென்று அவனுடைய ஜ்ஞாநாதிவிஷயத்தை யருளிச்செய்து,

உகூகூ. இப்படி ஈச்வரன் இல்லாதகுணக்ரஹணம்பண்ணி உள்ள தோஷக்ரஹணம் பண்ணமாட்டாமல் அரியனசெய்து எளியனவிடாமல்

உகூஅ. அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடைய குணம், அஜ்ஞாநத்துக்கிலக்கு இவனுடையதோஷம், சக்திக்கிலக்குஇவனுடையரக்ஷணம், அசக்திக்கிலக்கு பரித்யாகம்.

உகூகூ. இவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யகுணம்,

ஜீ.—உகூஅ. இப்படியிருந்துள்ள விருவருடையகுணங்களுக்கு விஷ[illegible]யென்ன அவற்றைவிபஜித்தருளிச்செய்கிறார், (அவனுடைய) [illegible]வனிலன்றிக்கே ஈச்வரகுணவிஷயங்களை முந்[illegible]செய்தது, சேதநகுணவிஷயங்கள் சொல்லிமுடித்தால் அதின் [illegible]க நிஷித்ததசாதுர்வித்யத்தை விஸ்தரேணவருளிச்செய்கைக்காக (அவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக்கிவனுடைய குணம், என்றது "యస్సర్వజ్ఞః" "யஸ்ஸர்வஜ்ஞ:" என்றும் "సహస్రాంశుః" "ஸஹஸ்ராம்சு:" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞனை வவனுடைய திவ்யஜ்ஞாநத்துக்குவிஷயம், அத்வேஷாபிமுக்யம்துடங்கி இச்சேதநன்பக்கலுண்டான வாத்மகுணமென்கை; (அஜ்ஞாநத்துக்கிலக்கிவனுடையதோஷம்) என்றது-"అవిజ్ఞాతాసహస్రాంశుః" "அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்சு:" என்றும் "అవిజ్ఞాతాహి భక్తానా మాగస్సు కమలేక్షణః। సదాజగత్సమస్తఞ్చ పశ్యన్నపి హృదిస్థితః" "அவிஜ்ஞாதாஹி பக்தாநா மாகஸ்ஸு கமலேக்ஷண:। ஸதா ஜகத்ஸமஸ்தஞ்ச பச்யந்நபி ஹ்ருதிஸ்த்தித:॥" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞனிருக்கச்செய்தே அவிஜ்ஞாதாவாயிருக்கு மவனுடைய வஜ்ஞாநத்துக்குவிஷயம், ப்ரக்ருதிவச்யனான விவன்பண்ணு மக்ருத்யகரணாதிதோஷமென்கை; (சக்திக்கிலக்கிவனுடையரக்ஷணம்) என்றது-"పరాస్య శక్తిర్వివిధైవ శ్రూయతే" "பராஸ்ய சக்திர்விவிதைவ ச்ரூயதே" என்கிறபடியே ஸர்வசக்தியான வவனுடைய வகடிதகடநாஸாமர்த்யமாகிற சக்திக்குவிஷயம், இவனுடைய ஸகலாநிஷ்டங்களையும்போக்கி ஸ்வரூபாநுகுணமானஸகலேஷ்டங்களையும் கொடுக்கையாகிற ரக்ஷணமென்கை; (அசக்திக்கிலக்கு பரித்யாகம்) என்றது - அப்படி ஸர்வசக்தியான் வவனுடைய வசக்திக்கு விஷயம், துஸ்ஸஹமாக விவன்செய்யும் தோஷங்களாலே சீறிக்கைவிடுகையென்கை.

உகூகூ. இப்படியீச்வரகுணவிஷயங்களை யருளிச்செய்து மேல் சேதநகுண விஷயங்களை யருளிச்செய்கிறார், (இவனுடைய) என்றுதுடங்கி.

ஆ.—மேல்விழும்படி அபிமதனான விவனுடைய ஆசார்யகடாக்ஷ விகஸித ஜ்ஞாநத்துக்கு அஸாதாரணமானவிலக்கு, அஜ்ஞாதஜ்ஞாபகஸதாசார்யனுடையஜ்ஞாநபக்த்யாதிகுணம்; விகஸிதஜ்ஞாநனானவிவனுடைய ஜ்ஞாநகார்யமான வஜ்ஞாநத்துக்கு அவச்யாபேக்ஷிதமான விலக்கு, ஆசார்யன்பக்கலில்லாததோஷப்ரதிபாஸம்; ஸ்வயத்நத்தி லசக்தனான விவனுடைய ஸத்தாப்ரயுக்தப்ராவண்யகார்யசக்திக்குச் சரமமான விலக்கு, ஸ―லபனாய் நித்யசேஷியான ஸதாசார்யனுக்குப் பண்ணும் கைங்கர்யம்; கைங்கர்யசக்தியுக்தனான விவனுடைய ஸத்தாப்ரயுக்தாசக்திக்கு முற்படவிலக்கு, ஸ்வவிருத்தாக்ருத்யகரணநிஷித்தாநுஷ்டாநம், என்றிவ்வதிகாரிக்கு ஸ்வரூபமுஜ்ஜீவிக்கைக்கும் ஸ்வரூபஹாநிவாராமைக்கும் அபேக்ஷிதமான குணவிசேஷங்களை யருளிச்செய்து,

௩௦௦. ஸ்வரூபஹாநி நிவர்த்தகாசக்தி ரூபகுணவிஷயமான நிஷித்தாநுஷ்டாநம்தான் விசிஷ்டநிஷ்க்ருஷ்டவிரோதித்வேந நாலுவகையா யிருக்குமென்ன,

௩௦௧. அவையெவையென்னுமபேக்ஷயிலே நாகஹேதுவான சாஸ்த்ரநிஷித்தம் செய்கையாகிற வக்ருத்யகரணமும், அக்ருத்யகரணத்தை

அஜ்ஞாநத்துக்கிலக்கு ஆசார்யதோஷம், சக்திக்கிலக்கு ஆசார்யகைங்கர்யம், அசக்திக்கிலக்கு நிஷித்தாநுஷ்டாநம்.

௩௦௦. நிஷித்தம்தானும் நாலுபடியாயிருக்கும்.

௩௦௧. அதாவது அக்ருத்யகரணமும் பகவதபசாரமும் பாக

ஜீ.—(இவனுடைய ஜ்ஞாநத்துக்கிலக் காசார்யகுணம்) என்றது - இச்சேதநனுடைய ஜ்ஞாநத்துக்கு விஷயம், மஹோபகாரகனான வாசார்யனுடையஸத்குண ஸமூஹமென்கை; (அஜ்ஞாநத்துக்கிலக்காசார்யதோஷம்) என்றது - இவனுடைய வஜ்ஞாநத்துக்கு விஷயம் ஆசார்யன் திருமேனிஸ்வபாவஜமாய் ஆகந்துகமாயுள்ளதோஷமென்கை; (சக்திக்கிலக்காசார்ய கைங்கர்யம்) என்றது - இவன் ப்ரவ்ருத்திசக்திக்கு விஷயம் ஸ்வாசார்யனுக் குகப்பாகச்செய்யும் கைங்கர்யமென்கை; (அசக்திக்கிலக்கு நிஷித்தாநுஷ்டாநம்) என்றது - இவனுடைய வசக்திக்கு விஷயம் ஸ்வரூபோபாய புருஷார்த்தவிரோதிகளான சாஸ்த்ரநிஷித்தங்களினுடைய வநுஷ்டாநமென்கை.

௩௦௦. இப்படி யிருந்துள்ள நிஷித்தத்தினுடையபடியை யருளிச்செய்கிறார் (நிஷித்தம் தானும்) என்றுதுடங்கி. அதாவது உபாதேயமான குணசதுஷ்டயம்போலே ஹேயமான நிஷித்தம்தானும் சதுர்விதமாயிருக்கு மென்கை.

௩௦௧. அந்நாலுபடியான வதுதானேதென்னு மபேக்ஷயிலே (அதாவது அக்ருத்யகரணமும் பகவதபசாரமும் பாகவதாபசாரமு மஸஹ்ப்

ஆ.—பற்றவு மத்யந்தநிஷித்தமான பகவதபசாரமும், ஸம்ஸாரஹேது வானபாகவதாபசாரமும், தத்ததீயவிஷயியாய் ஸத்தாநாசகமான வஸஹ்யாப சாரமுமாகிற விவையென்றுத்தேசித்து,

௩௦௨. அடைவிலே விவரித்தருளுகிறார்,(அக்ருத்யகரணமாவது)இத்யாதியால். சாஸ்த்ரநிஷித்தமான வக்ருத்யத்தைச்செய்கையாகிற வக்ருத்யகரணமாவது - ஸர்வரும் பகவச்சரீரபூதர் சரீரஹிம்ஸை, சரீரிபர்யந்தமாய் அநர்த்தஹேதுவாமென்னுமறிவுமச்சமுமற்றுப் பண்ணுகிற தர்ஜநபர்த்ஸநப்ரஹாராதி பரஹிம்ஸை; பகவதேகஸ்தோத்ரார்ஹமான வாக்கைக்கொண்டு அப்ராப்தமான தத்ததீயாந்யபரஸ்தோத்ரம்; நரகபீருக்களான ஸாமாந்யரும்செய்யாதே சுநோச்சிஷ்டகாகமாம்ஸபக்ஷணஸமமான பரதாரபரிக்ரஹம்; ஸ்மரணமேபிடித்து நரகஹேதுவாய் துர்வ்யஸநஸத்ருசமான பரத்ரவ்யாபஹாரம்; பூதங்கள் நெஞ்சுளுக்கும்படியான பூதாஹிதரூபாஸத்யகதநம்; க்ராமசூகரவ தபக்ஷயமேருசித்து சாஸ்த்ரநிஷித்தமாய் நிஷ்டாஸ்ப்ருஷ்டமான ஜாத்யாதிதுஷ்டங்களைப் பக்ஷிக்கையாகிற வபக்ஷ்யபக்ஷணம் துடக்கமான அஸேவ்யஸேவாதிகளென்கிறார்; க்ருத்யாகரணத்தை யின்கெடாமைக்கடி த்யாகநிஷ்டனான விவனுக்கு நியதஸ்வபாவமாய்க்கொண்டு நிஷித்தமாகாமையால்.

வதாபசாரமு மஸஹ்யாபசாரமும்.

௩௦௨. அக்ருத்யகரணமாவது பரஹிம்ஸை பரஸ்தோத்ரம் பரதாரபரிக்ரஹம் பாத்ரவ்யாபஹாரம் அஸத்யகதநமபக்ஷ்யபக்ஷணம் துடக்கமானவை.

ஜீ.—யாபசாரமும்) என்றவைதன்னை யுத்தேசிக்கிறார்.

௩௦௨. இவற்றினுடைய வேஷம்தானேதென்னுமாகாங்க்ஷையிலே இத்தையடைவே விவரிக்கிறார்;(அக்ருத்யகரண) மாவது என்றுதுடங்கி. (பரஹிம்ஸை)மாவது - "న హింస్యాత్ సర్వభూతాని" "நஹிம்ஸ்யாத் ஸர்வபூதாநி" என்கிற விதியை யதிக்ரமித்துப் பண்ணும் ப்ராணிபீடை; (பரஸ்தோத்ர) மாவது - ப்ராப்தவிஷய ஸ்தோத்ரார்ஹமான வாக்கைக்கொண்டு அப்ராப்தவிஷயங்களை ஸ்துதிக்கை; (பரதாரபரிக்ரஹ) மாவது-பிறர்க்கு அநந்யார்ஹமானஸ்த்ரீவிஷயங்களை மோஹாதிகளாலே ஸ்வீகரிக்கை; (பரத்ரவ்யாபஹார) மாவது-பிறருடைமையானவற்றை அவர்களிசைவின்றிக்கேயிருக்க ப்ரகாசமாகவாத லப்ரகாசமாகவாதல் க்ரஹிக்கை; (அஸத்யகதந) மாவது - யதாத்ருஷ்டார்த்தவிஷயமும் பூதஹிதமு மன்றிக்கேயிருக்கும் வசநத்தைச்சொல்லுகை; (அபக்ஷ்யபக்ஷண) மாவது -ஜாத்யாச்ரயநிமித்த துஷ்டங்களாய்க்கொண்டு தனக்குப்பக்ஷ்யமன்றிக்கே யிருக்குமவற்றைப்பக்ஷிக்கை;(துடக்கமானவை)என்றது-
"పరద్రవ్యేష్వభిధ్యానం మనసాఽనిష్టచిన్తనమ్ । వితథాభినివేశశ్చ త్రివిధం కర్మ మానసమ్ ॥
పారుష్యమనృతఞ్చైవ పైశున్యఞ్చైవ సర్వశః । అనిబద్ధప్రలాపశ్చ వాఙ్మయం స్యాచ్చతుర్విధమ్ ॥
అదత్తానాముపాదానం హింసా చైవావిధానతః । పరదారాపహారశ్చ శారీరం త్రివిధం స్మృతమ్ ॥"
"பரத்ரவ்யேஷ்வபித்த்யாநம் மநஸாநிஷ்டசிந்தநம்। விததாபிநிவேசச்ச த்ரிவிதம்கர்மமாநஸம் ॥ பாருஷ்யமந்ருதஞ்சைவ பைசுநஞ்சைவஸர்வச:। அநிபத்தப்ரலாபச்ச வாங்மயம்ஸ்யாச்சதுர்விதம் ॥ அதத்தாநாமுபாதாநம் ஹிம்ஸாசைவாவிதாநத: । பரதாராபஹாரச்ச சாரீரம்த்ரிவிதம் ஸ்ம்ருதம்" இத்யாதிகளாலே மந்வாதிஸ்ம்ருதிகளில் சொல்லப்படுகிறவை யநேகமாகையாலே.

ஆ.—௩௦௩. அக்ருத்ய கரணத்தைப்பற்றவும் அத்யந்த நிஷித்தமானபகவதபசாரமாவது - 'అజ్ఞాన్యన్యాదేవతాః' "அங்காந்யந்யாதேவதா:" என்று பகவத்விபூதிபூதரான தேவதாந்தரங்களோடொக்க "తమీశ్వరాణాం పరమంమహేశ్వరమ్" "தமீச்வராணாம்பரமம் மஹேச்வரம்" என்று அநந்யேச்வரனை ஸர்வேச்வரனை ஸமமென்று ப்ரமித்துநினைக்கையும்; "శరీరగ్రహణంవ్యాపిన్ ధర్మత్రాణాయకేవలమ్" "சரீரக்ராஹணம்வ்யாபிந் தர்மத்ராணாயகேவலம்" என்று தர்மத்ராணஹேதுவாக அஜஹத்ஸ்வபாவனாய்க்கொண்டு அவதரித்தராமக்ருஷ்ணாதியான முக்க்யாவதாரங்களில், கர்ப்பவாஸஜநநசோகமோஹாதி ஸகலஜநமோஹக ஸஜாதீயபாவநாசாதுரியையறியாமல் பாமரமநுஷ்யஸஜாதீயதா புத்திபண்ணி அநர்த்தப்படுகையும்; தர்சநதூஷணம் வரும்படிபண்ணுகிற வர்ணாச்ரமவிபரீதமான தத்தநீயார்ச்சநோபசாரமும்;—, அன்றியேப்ரபந்நாதிகாராநுகுணமாகஸ்வரூபகத வர்ணாச்ரமவிபரீதமான ஸ்வார்த்தஸ்வதந்த்ரபுத்த்யா பண்ணுமுபசாரமும்; தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவமானவர்ச்சாவதாரத்தில் மாத்ருயோநிபரீக்ஷாஸமமான வுபாதாநத்ரவ்ய நிரூபணமும்; "కిం తేన న కృతం పాపం చోరేణాత్మాపహారిణా" "கிம்தேந நக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்று ஸர்வபாபஸாதகஸ்வதந்த்ராபிமாநமாகிற வாத்மாபஹார

௩௦௩. பகவதபசாரமாவது தேவதாந்தரங்களோடொக்க ஈச்வரனை நினைக்கையும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்யஸஜாதீயதாபுத்தியும், வர்ணாச்ரம விபரீதமானவுபசாரமும், அர்ச்சாவதாரத்திலுபாதாநநிரூபணமும், ஆத்மாபஹாரமும், பகவத்த்ரவ்யாபஹாரமும்

ஜீ.—௩௦௩. அநந்தரம் பகவதபசாரத்தை விவரிக்கிறார், (பகவதபசாரம்) என்றுதுடங்கி. (தேவதாந்தரங்களோடொக்க ஈச்வரனை நினைக்கை) யாவது - "యేతుసామాన్యభావేన మన్యన్తేపురుషోత్తమమ్। తేవై పాషణ్డినోజ్ఞేయాః సర్వకర్మబహిష్కృతాః॥ యస్తునారాయణందేవం సామాన్యేనాభిమన్యతే। సయాతినరకంఘోరం యావచ్చన్ద్రదివాకరమ్" 'யேதுஸாமாந்யபாவேந மாந்யந்தே புருஷோத்தமம்|தேவை பாஷண்டிநோஜ்ஞேயா: ஸர்வகர்மபஹிஷ்க்ருதா: ॥ யஸ்துநாராயணம் தேவம் ஸாமாந்யேநாபிமந்யதே | ஸயாதிநரகம்கோரம்யாவச்சந்த்ரதிவாகரம் என்று தேவதாந்தரங்களோடு ஈச்வரனைஸமபுத்திபண்ணலாகாதென்று சாஸ்த்ரம்சொல்லாநிற்க, "అన్తఃప్రవిష్టశ్శాస్తాజనానాంసర్వాత్మా" "తమీశ్వరాణాంపరమంమహేశ్వరం" "నతత్సమశ్చాభ్యధికశ్చదృశ్యతే" "அந்த:ப்ரவிஷ்டச்சாஸ்தாஜநாநாம்ஸர்வாத்மா" "தமீச்வராணாம்பரமம்மஹேச்வரம்" 'நதத்ஸமச்சாப்யதிகச்சத்ருச்யதே' என்கிறபடியே ஸ்வேதரஸகலநியாமகனாய் ஸமாப்யதிகரஹிதனான வீச்வரனை, "అజ్ఞాన్యన్యాదేవతాః" "அங்காந்யந்யாதேவதா:" என்று தச்சரீரதயாபிஹிதரான ப்ராஹ்மாதிதேவதைகளோடு ஸமபுத்திபண்ணுகை; (ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்யஸஜாதீயதாபுத்தி) யாவது - "అజోపిసన్నవ్యయాత్మా భూతానామీశ్వరోపిసన్। ప్రకృతింస్వామధిష్ఠాయ సమ్భవామ్యాత్మమాయయా" "அஜோபிஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோபிஸந் | ப்ரக்ருதிம்ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா" என்கிறபடியே அஜஹத்ஸ்வபாவனாய் அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதீயமாக்கிக்கொண்டு துயரில்மலியுமனிசர் பிறவியிற்றோன்றி

ஆ.—மும்; அமுதுபடி சாத்துப்படிமுதலான பகவத்த்ரவ்யாபஹாரமும் துடக்கமான க்ரூரமானவிவை.

௩௦௪. இந்தபகவத்த்ரவ்யத்தைதக்கையெழுந்து கூச்சமறத்தானபஹரிக்கையும், தானல்லாதாரைப்போலேயிருந்து அபஹரிக்கும்பாபிஷ்ட்டர்க்குக்கூட்டாய்நின்றுஸஹகரிக்கையும், மூகம்மாறப்படுமந்தவபஹர்த்தாக்கள் பக்கலிலே அச்சமற்று யாசித்துப்பரிக்ரஹிக்கையும், அயாசிதமாகவந்ததென்றால் கூசாமல் பரிக்ரஹிக்கையும், செய்வார்செய்வதெல்லாமறிந்து ததநுரூபமாகத்தண்டிக்கவல்ல ஜ்ஞாநசக்த்யாதி பரிபூர்ணனை பகவானுக்கு,

---

துடக்கமானவை.

௩௦௪. பகவத்த்ரவியத்தைத் தானபஹரிக்கையும், அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கையும், அவர்கள்பக்கலிலே யாசிதமாகவு மயாசிதமாகவும்பரிக்ரஹிக்கையும்பகவானுக்

ஜீ.—நிற்கிறநிலையறியாதேஅவதாரத்தில் மெய்ப்பாட்டுக்காகவவன்செய்துகாட்டின கர்ப்பவாஸஜநகசோகமோஹாதிகளையிட்டு கர்மவச்யரான மநுஷ்யரோடு ஸஜாதீயனாகநினைக்கை; (வர்ணாச்ரமவிபரீதமானவுபசார)மாவது - ததாராதனதசையில் த்ரைவர்ணிகார்ஹமான வைதிகமந்த்ரங்களாலே சதுர்த்தவர்ணரானவர்கள் ஆராதித்தல் உத்தமாச்ரமிகள் முதலானோர் க்ருஹஸ்த்தவத் தாம்பூலநிவேதனாதிகளைப்பண்ணுதல் துடக்கமானவை; (அர்ச்சாவதாரத்தி லுபாதாநநிரூபண)மாவது- "தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம்" இத்யாதிப்படியே ஆச்ரிதர்க்கபிமதமான தேதேனுமொருத்ரவ்யத்தைத் திருமேனியாகவங்கீகரித்து, அதிலேஅப்ராக்ருத விக்ரஹத்தில் பண்ணுமாதரத்தைப்பண்ணி யெழுந்தருளியிருக்கிறவேத்தத்தை யறியாதே,மாத்ருயோநிபரீக்ஷகரைப்போலே இதின்னத்ரவ்யமன்றோவென்று விக்ரஹோபாதாநத்தை நிரூபிக்கை; (ஆத்மாபஹார,மாவது) "యోఽన్యథా సన్తమాత్మాన మన్యథా ప్రతిపద్యతే । కిన్తేనన కృతంపాపం చోరేణాత్మాపహారిణా" "யோऽந்யதாஸந்தமாத்மாந மந்யதாப்ரதிபத்யதே । கிந்தேநநக்ருதம்பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்று ஸகலபாபமூலமாகச் சொல்லப்படுகிற பகவதேகசேஷபூதமான வாத்மவஸ்துவில் ஸ்வதந்த்ரபுத்தி; (பகவத்த்ரவ்யாபஹார)மாவது - அமுதுபடி சாத்துப்படிக்கர்ஹமானவற்றை ப்ரகாசமாகவாதலப்ரகாசமாகவாதல் தனக்காக்குகை; (துடக்கமானவை) என்றது-இன்னமிப்படிக்ரூரமாக சாஸ்த்ரங்களில்சொல்லுமவை பலவுமுண்டாகையால் த்வாத்ரிம்சதபசாராதிகளுமுண்டிறே.

௩௦௪. கீழ்ச்சொன்னவற்றோபாதி பகவத்ரவ்யாபஹாரமும் பகவதநிஷ்டமாயிருக்குமோ வென்கிறசங்கையிலே, தானபஹரிக்கிறமாத்ரமன்றிக்கே அபஹரிப்பார்க்கு ஸஹகரிக்கைமுதலானவையும் அவனுக்கநிஷ்டமாயிருக்குமென்கிறார், (பகவத்த்ரவ்யத்தை) என்றுதுடங்கி. (தானபஹரிக்கை, யாவது) நேரே தானே யிதுக்குக்கர்த்தாவாய்ச்செய்கை; (அபஹரிக்கிறவர்களுக்கு ஸஹகரிக்கை) யாவது - நாமபஹரிக்கிறோமில்லையிறேயென்றுநினைத்து அபஹர்த்தாக்களுக்கு அநுமத்யாதிகளாலே ஸஹாயம் பண்ணுகை; (அவர்கள்பக்கல் யாசிதமாகப் பரிக்ரஹிக்கை) யாவது-நாமிவ்வபஹாரத்துக்குக்கூட்டன்றேயென்றுநினைத்துத்தா னவர்கள்பக்கலிலே சிலவற்றையபேக்ஷித்து வாங்கிக்கொள்ளுகை; (அயாசிதமாகப்பரிக்ரஹி

ஆ.—இவர்களிப்படியநர்த்தத்தை விளைத்துக்கொள்வதேயென்று திருவுள்ளம் புண்படும்படி அநிஷ்டமாயிருக்குமென்கிறார்.

௩௦௫. பகவதபசாரபரிபாகமான பாகவதாபசாரமாவது - ஆச்ரயாசியான வஹங்காரமடியாகவும் அல்பாஸ்த்திரமாயும் துராசாவர்த்தகமான வர்த்தமடியாகவும் ஸஜ்ஜநஜுகுப்ஸிதவ்ய நரககாரணமான காமமடியாகவும் அஹங்காராதி நிவர்த்தகராய்க்கொண்டு உஜ்ஜீவிப்பிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நிலைநிற்கப்பண்ணும்விரோதம்.

௩௦௬, ௩௦௭. உபயாபசார பராகாஷ்டையான வஸஹ்யாபசாரமாவது - அர்த்தாதிவிவாதமின்றிக்கே நிர்நிபந்தநமாக பகவத்பாகவதோத்கர்ஷம் கேட்கவும்காணவும் ஸஹியாமல் புடைத்துக்கொண்டுபடுகை; பக

கநிஷ்டமாயிருக்கும்.

௩௦௫. பாகவதாபசாரமாவது அஹங்காரார்த்தகாமங்களடியாக ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும்விரோதம்.

௩௦௬. அஸஹ்யாபசாரமாவது நிர்நிபந்தநமாக பகவத்பாகவதவிஷயமென்றால் அஸஹமானாயிருக்கையும், ஆசார்யாபசாரமும், தத்பக்தாபசாரமும்.

௩௦௭. இவையொன்றுக்கொன்று க்ரூரங்களுமாய்

ஜீ.—க்கை) யாவது-காமபேக்ஷித்திலோமே யென்றுநினைத்து அவர்கள் தருமவற்றைவாங்குகை; (பகவானுக்கநிஷ்டமாயிருக்கும்) என்றது இவையித்தனையுமிவனுடைய வுஜ்ஜீவனபராஞ்ய் க்ருஷிபண்ணிப்போரும் ஸர்வேச்வரன் திருவுள்ளத்துக் கநபிமதமாயிருக்குமென்கை.

௩௦௫. அநந்தரம் பாகவதாபசாரத்தை விவரிக்கிறார். (பாகவதாபசாரமாவது) என்றுதுடங்கி. அதாவது பரோத்கர்ஷம்கண்டு ஸஹியாமைக்கும் ஸ்வோத்கர்ஷபுத்திக்குமுதலான வஹங்காரமடியாகவும், அவர்கள் வைஷ்ணவாகாரத்தைப்புத்திபண்ணி இவர்களாசைப்பட்டதொன்றாகில் இவற்றைவிட்டுப் பற்றுவோமென்றிருக்கமாட்டாமல், அர்த்தகாமங்களடியாகவும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் செய்யும்விரோதமென்கை.

௩௦௬. அநந்தரமஸஹ்யாபசாரத்தை விவரிக்கிறார், (அஸஹ்யாபசாரம்) என்றுதுடங்கி. அல்லாதவபசாரங்களிலும்காட்டில் ஈச்வரனுக்கிது அத்யந்தாஸஹ்யமாயிருக்கையாலேஅஸஹ்யாபசாரமென்கிறது. "[illegible]" "பகவதஸஹநீயாகஸிரத:" என்றிறே பட்டருளிச்செய்தது. (நிர்நிபந்தநமாக பகவத்பாகவதவிஷயமென்றா லஸஹமானாயிருக்கை, யாவது) கீழ்ச்சொன்னபடியே அர்த்தகாமாதி நிபந்தநமாகவன்றிக்கே, ஹிரண்யனைப்போலே பகவத்விஷயமும் பாகவதவிஷயமுமென்றால் காணக்கேட்கப்பொறாதபடியிருக்கை; (ஆசார்யாபசார) மாவது - அவனருளிச் செய்தவர்த்தத்தின்படி யநுஷ்டியாமையும், அவனுபதேசித்த மந்த்ரததர்த்தங்களை யல்பப்ரயோஜனங்களைநச்சி அநதிகாரிகளுக்குபதேசிக்கையும் துடக்கமானவை; (தத்பக்தாபசார) மாவது-ஆசார்யபக்தரான ஸப்ரஹ்மசாரிகளுடன் ஐகரஸ்யமுண்டாய் வர்த்திக்கவேண்டியிருக்க அதுசெய்யாதே யவர்கள் திறத்தில்பண்ணு மஸூயையு மவஜ்ஞையும் துடக்கமானவை.

௩௦௭. இப்படி யக்ருத்யகரணாதி சதுஷ்டயத்தையுமடைவே விவரித்தருளி, இவற்றினுடைய க்ரௌர்யவிசேஷங்களையும் இவைதானின்னதிக்கு விரோதியாயிருக்குமென்னுமத்தையு மருளிச்செய்கிறார்மேல் இவை என்று

ஆ.—வத்பாகவதாபசாரவிசேஷமான வாசார்யவிஷயத்தில்பண்ணும்க்ருதவிபரீதாசரணுத்யபசாரமும், தத்பக்தரானஸப்ரஹ்மசாரிகள்பக்கல்பண்ணும் ஸமத்வபுத்த்யாத்யபசாரமு மாகிறவிவை ஸ்வரூபநாசகரமாய்க்கொண்டு ஒன்றுக்கொன்றதிக்ரூரங்களுமாய், பகவதபசாரத்தைப்பற்றவும் நிஷித்தங்களுமாய், ஸர்வவிரோதிநிவர்த்தகோபாயபூத வைமுக்ய்ஹேதுத்வேநோபாயவிரோதிகளுமாய், ப்ராப்திப்ரதிபந்தகத்வேநோபேய விரோதிகளுமாய், ஸ்வரூபநாசகமாயிருக்குமென்கிறார். ஆக அசக்திக்கிலக்கான பாஹ்யாப்யந்தரவிரோதிகளான நிஷித்தவிசேஷம் விவரிக்கப்பட்டது.

உபாயவிரோதிகளுமாய்

ஜீ.—துடங்கி, (ஒன்றுக்கொன்றுக்ரூரங்களாகை) யாவது-அக்ருத்யகரணத்தில் பகவதபசாரம்க்ரூரமாய், அதிலும் பாகவதாபசாரம் க்ரூரமாய், அதுதன்னிலு மஸஹ்யாபசாரம் க்ரூரமாயிருக்கை; இதுக்கடிபூர்வங்களில்காட்டி லுத்தரோத்தரங்களில் பகவந்நிக்ரஹ மதிசயித்திருக்கை; அக்ருத்யகரணத்தில் ஸ்வாஜ்ஞாதிலங்கநமடியானசீற்றமிறே; அவ்வளவன்றிறே இவ்வாத்மாவுக்காத்மாவாய் அதின்ஸத்தையையே பிடித்துநோக்கிக்கொண்டுபோரும் தன்திறத்திலபசாரத்தால்வரும்சீற்றம்; அவ்வளவுமன்றிறே "𑌜𑍍𑌞𑌾𑌨𑍀𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵" "ஜ்ஞாநீத்வாத்மைவ" என்கிறபடியே தனக்குயிராக நினைத்திருக்கும் பாகவதவிஷயங்களில் அஹங்காராதிகளடியாகப் பண்ணுமபசாரத்தால் வரும்சீற்றம்; அதுதன்னளவுமன்றிறே நிர்நிபந்தநமாகத்தன்பக்கலிலும் தன்னுடையார்பக்கலிலுமாதல் உபயவைபவஜ்ஞாபகனுப் உபயாபிமதனுன வாசார்யன்பக்கலிலேயாதல் மூவருக்குமபிமதரான தத்பக்தர்பக்கலிலேயாதல்செய்யுமபசாரத்தால் வரும்சீற்றம்; ஆகையாலொன்றுக்கொன்றுக்ரூரமாயிருக்கும். அக்ருத்யகரணத்திலே பகவதபசாராதிகளும் அந்தர்ப்பவிக்குமாயிருக்கத் தனித்தனியிப்படி பிரித்துச்சொல்லுகிறது இவற்றினுடைய க்ரௌர்யவிசேஷங்களைப்பற்றவிறே. (உபாயவிரோதிகளுமா யுபேயவிரோதிகளுமாயிருக்கை, யாவது) இவ்வாத்மாவினுடைய வுஜ்ஜீவனத்திலொருப்பட்டு மேல்மேலும்க்ருஷிபண்ணுகைக்குறுப்பான வெம்பெருமானுடையக்ருபைக்கும், எப்போதுமிவனுக்கு ப்ராப்யமாயிருந்துள்ள வவனுடையமுகோல்லாஸத்துக்கும் விலக்காயிருக்கை; [இரக்கமுபாயம் இனிமையுபேயமென்னக்கடவதிறே]; ஆகையாலிவ்வக்ருத்யகரணாதிகள் நீரிலேநெருப்பெழுமாபோலே அவன்திருவுள்ளத்திலே நிக்ரஹத்தைக்கிளப்பி, அவனுடையகிருபையுமுகப்பு மிவன்பக்கலறும்படிபண்ணுகையாலே அவற்றையுபாயோபேய விரோதிகளென்னத்தட்டில்லை. (தனக்குத்தான்தேடும்நன்மை) என்றுதுடங்கி நமச்சப்தார்த்தத்தை விஸ்தரேணப்ரதிபாதிக்கையாலும், (உகந்தருளினநிலங்களி லாதராதிசயமும்) என்றுகந்தருளின நிலப்ரஸங்கத்தாலும், மேலே (பகவத்கைங்கர்யமும்) என்கிறவிடத்தில் பகவச்சப்தத்தாலும், கைங்கர்யப்ரதிஸம்பந்தி ப்ரதிபாதகமான ஸ்ரீமத்பதி நாராயணபதார்த்தங்களை ஸூசிப்பிக்கையாலும்; மங்கலாசாஸநப்ரகரணத்தாலும், (கர்த்தவ்யமாசார்ய கைங்கர்யமும் பகவத்கைங்கர்யமும்) என்றுதுடங்கி (கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம்நிறம்பெறுவது) என்னுமளவாகவும் சதுர்த்த்யர்த்தத்தை யருளிச்செய்கையாலும்; நிஷித்தசாதுர்வித்யப்ரதிபாதநமுகேந ப்ராஸங்கிகமாகமீளவும் நமச்சப்தார்த்தத்தைப்பேசுகையாலும், இவ்வளவும் உத்தரகண்டார்த்தமருளிச்

ஆ.—ஆக இப்ரகரணத்தால் ப்ரபந்நநிஸர்யாநுசந்தாநாநுஷ்டாநவிவரணமும், அநுஸந்தாத்ருகுணவ்ருத்த்யநுகுணாநுஷ்டாநசரமகைங்கர்யசோதகமும், தத்பூர்வ தசாவிசேஷோஜ்ஜ்வல ஸ்வரூபதத்குணவிசேஷமும், ததிதரகுணவிஷய நிஷித்தவிசேஷதோஷமும்சொல்லப்பட்டது.

ஆறுப்ரகரணங்களில் மூன்றாவதான
அதிகாரிநிஷ்ட்டாப்ரகரணம் முற்றிற்று.

உபேயவிரோதிகளுமாயிருக்கும்.

ஆறுப்ரகரணங்களில் மூன்றாவதான
அதிகாரிநிஷ்ட்டாப்ரகரணம் முற்றிற்று.

ஜீ.—செய்தாராயிற்று. ஆக இப்ரகரணத்தால்கீழுக்தோபாயத்தைக்கொண்டு உபேயத்தைப்பெறும்சேதநனுக்கு உபாயோபேயாதிகார ப்ரதாநாபேக்ஷிதங்களையும், ப்ராபகாந்தரபரித்யாகஹேதுவான ஸ்வரூபநாசகத்வாதியையும், ப்ரபத்தியின் ஸ்வரூபாநுகூலத்வாதியையும், ஸ்வகதஸ்வீகாராநுபாயத்வத்தையும் பரகதஸ்வீகாரோபாயத்வத்தையும், தத்ப்ராபல்யத்தையும், அவனேஸ்வீகரிக்குமிடத்திலும் புருஷகாரத்தை முன்னிடும்படியையும், உபயரும் முன்னிடுமதுக்கு ப்ரயோஜநவிசேஷங்களையும், உபேயதசையிலும் ப்ராப்திதசையிலுமிவன்சேஷத்வபாரதந்த்ர்யங்களும் ஸ்வதோஷநிவ்ருத்தியும் பாராநுபவவிரோதியாம்படியையும், தன்னால்வரும் நன்மையவனால்வரும்நன்மைக்குமுள்ளவாசியையும் ஈச்வரனேரக்ஷகன் தான் தனக்கு நாசகனென்னுமத்தையும், தன்னைத்தான்நசிப்பிக்கும் ப்ரகாரத்தையும், அஹங்காரமும் விஷயங்களும் ஸ்வரூபேணவும் பாகவதவிரோதத்தைவிளைத்தும் இவன் ஸ்வரூபத்தைநசிப்பிக்கும்படியையும், பாகவதாபசாரக்ரௌர்யத்தையும், தத்ப்ரஸங்கத்திலே பாகவதமாஹாத்ம்யத்தையும், இவன்நிசர்யையும், நிசர்யோக்தங்களுடைய ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்போதைக்கபேக்ஷிதமான வஸ்தவ்யாதியையும், தச்சரமோக்தகர்த்தவ்யரூபகைங்கர்யவேஷத்தையும் கைங்கர்யதத்பூர்வதசைகளில் ஸ்வரூபத்தை யுஜ்ஜ்வலமாக்கும்படியையும், இவனுக்குண்டான குணசதுஷ்டயத்தையும், தத்விஷயவிபாகத்தையும், அதில்அசக்திவிஷயநிஷித்தசாதுர்வித்யத்தையும் சொல்லுகையாலேஅதிகாரிநிஷ்ட்டாக்ரமம்சொல்லப்பட்டது.

ஆறுப்ரகரணங்களில் மூன்றாவதான
அதிகாரிநிஷ்ட்டாப்ரகரணம் முற்றிற்று.

ஆ.—௩௱௮. உக்தநிகர்யாநுஸந்த்தாநோபதேஷ்டாவனாஸதாசார்ய ஸ்வரூபசோதநம் பண்ணுகிறார்மேல்,(தான் ஹிதோபதேசம்) துடங்கி (ருசியாலேவருகையா லளவாக), சிஷ்யனுக்காசார்யாத்யபசாரம்போலே ஆசார்யனுக்கும் ஸ்வபரஸ்வரூபவிபர்யயஸ்மரணம் க்ரூரநிஷித்தமா யிருக்குமென்கிறார், (தான் ஹிதோபதேசம்) இத்யாதியால். ஸ்வாசார்யபாரதந்த்ரனாய்அநந்யப்ரயோஜநனாய் க்ருபாளுவாய் ஆப்ததமனான தான் ஸத்ஸம்ப்ரதாயக்ரமநியமம் தவறாதபடி ஸச்சிஷ்யஸ்வரூபஹிதமான ஸாரமந்த்ரார்த்தத்தைப்பேணி யுபதேசிக்கும்போது, மந்த்ரார்த்தங்களை ஸ்வாசார்யபாரதந்த்ரனா யுபதேசிக்கிற தன்னையும், ஸம்ஸாரநிர்வேதம்பிறந்துவந்துபதேசம்கேட்கிற சிஷ்யனையும், உபதேசாநுகுணபலத்தையு முள்ளபடி நினையாதே மாறாடிநினைக்கை. உபயஸ்வரூபநாசகரமா யிருக்கையாலே க்ரூரமுமாய், சிஷ்டகர்ஹிதமாகையாலே நிஷித்தமுமாயிருக்கும்.—, கீழ்ச்சொன்ன நிஷித்தவிஷயங்களைப்பற்றவும் அதிக்ரூரமான நிஷித்தமாயிருக்குமென்னவுமாம்; அதில் தான் நசிக்குமளவிறேயுள்ளது, இதிலுபயஸ்வரூபமும்நசிக்குமிறே.

௩௱௯. இத்தை ஸ்பஷ்டீகரிக்கிறார் மேல், (தன்னைமாறாடி)இத்யாதியால். உபதேஷ்டாவான தன்னை யதாக்ரமத்தை மாறாடிநினைக்கையாவது - தன்னை ஸ்வாசார்யசேஷமென்றுநினையாதே சேஷியானவாசார்ய

௩௱௮. தான் ஹிதோபதேசம்பண்ணும்போது தன்னையும்சிஷ்யனையும் பலத்தையும்மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம்.

௩௱௯. தன்னை மாறாடி நினைக்கையாவது தன்னை ஆசார்ய

ஜீ.—௩௱௮. அநந்தரம்(தான் ஹிதோபதேசம்பண்ணும்போது) என்று துடங்கி (உகப்புமுபகாரஸ்ம்ருதியும்நடக்கவேணும்)என்னுமளவாகஇவ்வதிகாரிக்குக் கீழ்ச்சொன்னவர்த்தவிசேஷங்களுக்கெல்லா முபதேஷ்டாவானவாசார்யவிஷயத்தி லுண்டாகவேண்டும் ப்ரதிபத்த்யநுவர்த்தநப்ரகாரங்களைத்தர்சிப்பிக்கைக்காக, ஸதாசார்யலக்ஷணம் ஸச்சிஷ்யலக்ஷணம் ததுபயருடையபரிமாற்றம் இவையிருக்கும்படியை ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வருளிச்செய்கிறார். இவ்வதிகாரிக்கு அசக்திவிஷயமான நிஷித்தங்கள் சொன்னப்ரஸங்கத்திலே அவையெல்லாத்திலும் க்ரூரநிஷித்தம் பரோபதேசசமயத்தில் விப்ரதிபத்தியென்றருளிச்செய்கிறார், (தான்ஹிதோபதேசம்பண்ணும்போது) இத்யாதிவாக்யத்தாலே. அதாவது கீழ்ப்ரபந்தத்தில்சொல்லப்பட்ட வதிகாரிலக்ஷணங்களெல்லாத்தாலும் குறைவற்றிருந்துள்ள தான் உஜ்ஜீவிஷுக்களாய்வந்து தன்னையுபஸத்தி பண்ணினவர்களுக்குஜ்ஜீவநஹேதுவான மந்த்ரரூபஹிதத்தை யுபதேசிக்கும்காலத்தில், உபதேஷ்டாவான தன்னையும் உபதேசபாத்ரனான சிஷ்யனையும்உபதேசபலத்தையும் விபரீதப்ரதிபத்திபண்ணுகை பூர்வோக்தநிஷித்தங்களில் காட்டில் க்ரூரநிஷித்தமென்கை. அவ்வோநிஷித்தங்க ளிவன்தனக்கு நாசகமித்தனையிறே; அவ்வளவன்றிக்கே இவனுபதேசம்கேட்டவனுக்கும் கேடாகையாலே இத்தை யவற்றிலும்காட்டில் க்ரூரநிஷித்தமென்கிறது, (இருவருக்கும் ஸ்வரூபஸித்தியில்லை) என்றிறே மேல்சொல்லத்தேடுகிறது.

௩௱௯. தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் மாறாடிநினைக்கையாவது எதென்னுமாகாங்க்ஷையிலே அவற்றையுபபாதிக்கிறார்(தன்னைமாறாடிநினைக்கை)யாவது-என்றுதுடங்கி, அதாவது உபதேஷ்டாவான தன்னை

ஆ.—னென்றுநினைக்கை; ச்ரோதாவான சிஷ்யனை யதாப்ரகாரம்மாறாடி நினைக்கையாவது - இவன் நம்மாசார்யனுக்கு சிஷ்யனென்றுநினையாதே ஸ்வாசார்யபாரதந்த்ரனான தனக்கு சிஷ்யனாகநினைக்கை; உபதேசபலத்தை யதாப்ரகாரம் மாறாடிநினைக்கையாவது - நம்மாசார்யன் நமக்கு அந்தர்யாமியா யுபதேசிக்கிறவிதுக்கு ப்ரயோஜநம் நம்மாசார்யமங்கலாசாஸநத்துக்கதிகாரியா மிதுவென்றுள்ளபடி நினையாதே, நாமிவனுக்குபதேசிக்கில் சிறிதுத்ருஷ்டம்பெறலாமென்று த்யாஜ்யமான த்ருஷ்டப்ரயோஜநத்தைப்பலமாகநினைக்கையும்உபதேசித்துஜ்ஜீவிப்பிக்கிறான்ஸ்வாசார்யனென்றுநினையாதே நானுபதேசித்து இவனை யுஜ்ஜீவிப்பிக்கிறேனென்று சிஷ்யனுடைய ஸ்வஸித்தோஜ்ஜீவனத்தைப் பலமாகநினைக்கையும்; இவன் மங்கலாசாஸநயோக்யனாம்படி திருத்தும் நம்மாசார்யன் பகவத்கைங்கர்யம் பண்ணுகிறானென்றுநினையாதே, நாமிவனையங்குற்றைக் குறுப்பாக்கித் திருத்தவே பகவத்கைங்கர்யம் லபித்தோமாவுதோமென்று ஸ்வயத்நலப்ய பகவத்கைங்கர்யத்தைப் பலமாகநினைக்கையும்; இவனுடன் ஸஹவஸிக்கும்படி நம்மாசார்யன் பண்ணினானென்றுநினையாதே, உபதேசிக்கவே நமக்கிவன் முன்னாய்ப்பின்னாய்த்திரியுமென்று ஸ்வப்ரயோஜந ஸஹவாஸத்தைப் பலமாகநினைக்கையு மாகிறவிவையாயிற்று ஆசார்யனுடைய க்ரோசிஷித்தமானநினைவின் மாறாட்டமென்கிறார்.

னென்று நினைக்கை, சிஷ்யனை மாறாடி நினைக்கையாவது தனக்குசிஷ்யனென்று நினைக்கை, பலத்தை மாறாடி நினைக்கையாவது த்ருஷ்டப்ரயோஜனத்தையும், சிஷ்யனுடைய வுஜ்ஜீவனத்தையும், பகவத்கைங்கர்யத்தையும், ஸஹவாஸத்தையும், பலமாக நினைக்கை.

ஜீ.—யுள்ளபடிநினையாமல் (மாறாடிநினைக்கை) யாவது-உபதேசசமயத்தில் தன்னுடையவாசார்யனையே யிவனுக்குபதேஷ்டாவாக்வும் தானங்குத்தைக்குக்காரணபூதனாகவும் ப்ரதிபத்திபண்ணிக்கொண்டு உபதேசிக்கவேண்டியிருக்க அப்படிசெய்யாதே, ஸ்வாசார்யபாரதந்த்ரனாயிருக்கிறதன்னை இவனுக்காசார்யனென்று நினைக்கை; உபதேசபாத்ரனான சிஷ்யனையுள்ளபடி நினையாமல் (மாறாடிநினைக்கை) யாவது- தன்னோபாதி யிவனையும் தன்னுடையவாசார்யனுக்கு சிஷ்யனாகப்ரதிபத்திபண்ணி யுபதேசிக்கவேண்டியிருக்க அதுசெய்யாதே இவனைத்தனக்குச்சிஷ்யனென்றுநினைக்கை; உபதேசபலத்தை யுள்ளபடிநினையாதே (மாறாடிநினைக்கை, யாவது) பரோபதேசம் பண்ணுமளவில் இவ்வாத்மா திருந்தி "ஆளுமாளார்" என்கிற விஷயத்துக்கு மங்கலாசாஸநத்துக் காளாகவேணுமென்னு மிதுவேபலமாக வுபதேசியாதே, இவனால்வரு மர்த்தசிச்ருஷாரூபமான த்ருஷ்டப்ரயோஜநத்தையாதல் சிஷ்யனானவிவன் ஸம்ஸாராதுத்தீர்ணனாய் வாழுகையாகிற வுஜ்ஜீவனத்தையாதல், திருநந்தவனாதிகளைச் செய்கிறதிலும் காட்டி லோராத்மாவைத்திருத்தினால் எம்பெருமான் திருவுள்ளமுகக்கையாலே இப்படியிருந்துள்ள பகவத்கைங்கர்யத்தையாதல், ஸம்ஸாரத்திலிருக்கும்நாள் தன் தனிமைதீரக்கூடிவர்த்திக்கையாகிற ஸஹவாஸத்தையாதல் உபதேசத்துக்குப் பலமாகநினைக்கையென்றபடி.

ஆ.—௩௧௦. ஆகிலிவ்வாசார்ய னிவற்றை நினையாதிருக்கை அவர்ஜநீயமான விந்நாலுபலமும் தனக்கும்சிஷ்யனுக்கும் ஸித்திக்கிறபடியென்னென்னுமசங்கித்துப்பரிஹரிக்கிருர்(சேஷபூதனை)இத்யாதியால் "𑌶𑌰𑍀𑌰𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂𑌚 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑍇𑌤𑍍" "சரீரமர்த்தம்ப்ராணஞ்ச ஸத்குருப்ப்யோ நிவேதயேத்" என்று ஆத்மாத்மீயமடங்க ஆசார்யசேஷமென்றிருக்கும் ஸத்தாநிபந்த்தநசேஷமாய் நிலநின்றசிஷ்யனுடைய மதீயத்வப்ரதிபத்தி கந்த்தமற்ற தெளிந்தநினைவாலே, பகவத்பாகவத கைங்கர்யார்த்தமான ப்ராப்தத்ருஷ்டபலம் தான் நினையாதிருக்கவே ஸித்திக்கும்; நமக்கெட்டுப்படாமலெதிர்மலைந்து அஸத்கல்பனானவிவனை நமக்கும் நம்முடையார்க்கும் மங்கலாசாஸநம்பண்ணி வாழும்படியுஜ்ஜீவிப்பித்தானிம்மஹாநுபாவனிறே என்றுகௌரவித்துநினைக்கு மீச்வரன்நினைவாலே சிஷ்யனுடையவுஜ்ஜீவநம் குறைவறஸித்திக்கும்; இவனுக்கு பூர்வாசார்யர்களநுஸந்த்திக்கும் தாத்பர்யார்த்தங்களைப் பால்பாயவுபதேசித்துத்திருத்தி மங்கலாசாஸநத்துக்குப்ராப்தனுக்கி பகவத்கைங்கர்யமிவன் பண்ணப்பெறுவதேயென்றநவாயிலேநினைக்கும் ஸ்வாசார்யன்நினைவாலே பரமப்ராப்ய பகவத்கைங்கர்யமும் பழுதறஸித்திக்கும்; பகவத்க்ருபைக்குமெட்டுப்படாதே துஷ்டமனுய்ப்போந்தவென்னைக் கடாக்ஷித்து, அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணி 'செயல்நன்றாகத்திருத்தின விந்தப்பூர்ணவிஷயமேயன்றோ நித்யஸேவ்யம்' இவன் பாதச்சாயையாய் வர்த்திக்கவேணுமென்னும் சிஷ்யனுடையவுபகாரஸ்ம்ருதியாலே இவனோடுண்டான ஸஹவாஸபலம் தன்னடையேஸித்திக்கும். ஆகவாசார்யன் நினையாதிருக்க பலசதுஷ்டயமும் சிஷ்யேச்வரஸ்வாசார்யப்ரதிபத்திவிசேஷங்களாலே ஸித்திக்கையாலே, சேஷித்வா

---

௩௧௦. நினையாதிருக்க இந்நாலுபலமும் ஸித்திக்கிறபடியென்னென்னில், சேஷபூதனை சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம்ஸித்திக்கும். ஈச்வரன் நினைவாலே யுஜ்ஜீவநம் சித்திக்கும், ஆசார்யன் நினைவாலே பகவத்.

ஜீ.—௩௧௦. இப்படியிவன் நினையாதிருக்க விந்நாலுபலமும்ஸித்திக்கிறபடிதானென் என்கிற தஜ்ஜிஜ்ஞாஸாப்ரச்நத்தையநுவதித்துக்கொண்டு, அவை ஸித்திக்கும்வழி யருளிச்செய்கிருர், (நினையாதிருக்க) என்று துடங்கி. (சேஷபூதனை சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம்ஸித்திக்கும்) என்றது - சிஷ்யனானவன் தனக்கு சேஷத்வமே ஸ்வரூபமென்றநுஸந்த்தித்திருக்கையாலே, கிஞ்சித்காரமில்லாதபோது சேஷத்வம்கூடாதென்று தன் ஸ்வரூப லாபத்துக்காக தன்னாலான கிஞ்சித்காரம் பண்ணிக்கொண்டு போருகையாலே அர்த்தசுச்ரூஷைகளாகிற த்ருஷ்டபலம் ஸித்திக்குமென்றபடி; (ஈச்வரன் நினைவாலே யுஜ்ஜீவநம்ஸித்திக்கும்) என்றது - எதிர்சூழல் புக்குத்திரிந்து தன் விசேஷகடாக்ஷங்களாலே யத்வேஷாதிகளையுண்டாக்கி ஆசார்ய ஸமாச்ரயணத்திலே மூட்டி இவ்வாசார்யனுடைய உபதேசாந்வயத்தையுண்டாக்கி அதடியாக விவனை ஸம்ஸாரத்தினின்று மக்கரைப்படுத்தவேண்டுகிற வெம்பெருமானுடைய க்ருபாகார்யமான நினைவாலே சிஷ்யனானவனுடைய வுஜ்ஜீவநம் ஸித்திக்குமென்றபடி; (ஆசார்யன் நினைவாலே பகவத்கைங்கர்யம் ஸித்திக்கும்) என்றது - இவன் ஹிதோபதேசம்பண்ணி மங்கலாசாஸநத்துக்காளாம்படி சேதநரைத்திருத்துகிறவிது எம்பெருமான் திருவுள்ளத்துக்கு மிகவு முகப்பாகையாலே இது பகவத்கைங்கர்யமன்றோ வென்றநுஸந்த்தித்திருக்கும் தன்னுடையவாசார்யன் நினைவாலே உபதேஷ்டாவான

ஆ.—பஹாரமும் ஸ்வாசார்யத்ரவ்யாபஹாரமும் க்ஷேத்ரப்ரயோஜநாகாங்க்ஷையும் ஸ்வப்ரபாவஸ்மரணமும் ஸ்வகர்த்ருத்வாரோபணதோஷமும் ஸ்வபூஜாபேக்ஷையுமாகிற தோஷவிஷயப்ரஸங்கம் வாராதென்றதாயிற்று. த்ருஷ்டப்ரயோஜன கைங்கர்யஸஹவாஸங்கள் சிஷ்யனாலும், உஜ்ஜீவநம் தன்னாலும்வரும்பலம், உஜ்ஜீவநம்போல் பகவத்கைங்கர்யமும் தன்னாலேசிஷ்யனுக்கு வரும்பலமென்று பிரித்துச்சொல்லவேண்டியதில்லை, உஜ்ஜீவநம் கைங்கர்யபர்யந்தமா யல்லதிராமையாலே.

௩௧௧. ஆகில் தன்சிஷ்யனுக்கு ஸ்வாசார்யமங்கலாசாஸநமாகிற ஸாக்ஷாத்பலமும், தனக்குபரமாப்ததமத்வமாகிறவாசார்யத்வமும்ஸித்திக்கிறபடியென்னென்னில் என்கிறப்ரச்நத்துக்கு, நம்மாசார்யவிஷயமங்கலாசாஸநத்துக்கு இவனதிகாரியாகவேணு மென்னுமிரக்கமுடைய தன்னினைவாலே, சிஷ்யனுக்கு "சூழ்ந்திருந்தேத்துவர்" என்னும் ப்ராப்யசரமமாய்க்கொண்டு ஸாக்ஷாத்பலமான மங்கலாசாஸநம்ஸித்திக்கும்; நம்மாலும் திருத்தவொண்ணாதவிவனைக்கைவிடாமல் திருத்தவல்லவனிவனன்றோ ஆப்ததமனான வாசார்யனென்று நினைக்கு மீச்வரன்நினைவாலே தனக்காசார்யத்வம் ஸித்திக்குமென்றுத்தர மருளிச்செய்கிறார். இந்தநியதியென்? சிஷ்யனுக்குண்டாம் ஸாக்ஷாத்பலம் பரமாசார்யேச்வரர்களாலும், தனக்குண்டாமாசார்யத்வம் பரமாசார்யர்களாலும் ஸித்தித்தாலோவென்னில், ஸ்வாசார்யனாலே ஸித்திக்குமென்று நியதியொழியில் குருபரம்பரையாலே சிஷ்யபரம்பரைக்கும் நன்மையுண்டாமென்று நியதிபங்கமும், ஈச்வரனாலே ஸித்திக்குமென்றுநியதியொழியில் பரமாசார்ய சிஷ்யர்களுக்கு ஸ்வாசார்யஸாஜாத்ய ஸ்வதஸ்ஸித்தாசார்யத்வஸாத்யத்வபுத்திரூப தோஷமும் ப்ரஸங்கிக்கும்; தனக்குத்தேச்யன்ஸ்வாசார்யன் ஆசார்யனுக்குத்தேச்யன் பரமாசார்யன்; ஸ்வரூபஸித்த்யர்த்தமாக ஸ்வாசார்யமங்கலாசாஸநம்பண்ணும், அதிநிஷ்டவிநியோகார்ஹ ஸித்த்யர்த்தமாக ஸ்வா

கைங்கர்யம் ஸித்திக்கும், உபகாரஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்.

௩௧௧. ஸாக்ஷாத்பலமு மாசார்யத்வமும் ஸித்திக்கிறபடியென்

ஜீ.—தனக்குபகவத்கைங்கர்யம் ஸித்திக்குமென்றபடி; (உபகாரஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்) என்றது-அநாதிகால மஹங்காரமமகாரங்களாலே நஷ்டப்ராயனாய்க்கிடந்த தன்னை நிர்ஹேதுகமாகவங்கீகரித்து அஜ்ஞாதஜ்ஞாபகமுகத்தாலே யவற்றில் ருசியைமாற்றிமங்கலாசாஸநத்துக்காளாம்படி பண்ணின மஹாநுபாவனன்றோ வென்கிறவுபகாரஸ்ம்ருதியாலே, சிஷ்யனவன் க்ஷணகாலமும்பிரியக்ஷமனன்றிக்கே கூடி நடக்கையாலவனோடுண்டான ஸஹவாஸம் தன்னடையே ஸித்திக்குமென்றபடி.

௩௧௧. இப்படி யிவன் நினையாதிருக்க இப்பலசதுஷ்டயமும் சிஷ்யேச்வர ஸ்வாசார்யர்கள் நினைவாலேஸித்திக்கு மென்னுமிடமருளிச்செய்து, உபதேசத்துக்கு ஸாக்ஷாத்பலமாயுள்ளதும், உபதேஷ்டாவான வாசார்ய பாதந்த்ரனுக்கு உபதேசபாத்ரமானவனைக்குறித்துண்டா மாசார்யத்வமும் ஸித்திக்கும்படியை ப்ரச்நோத்தரரூபேண வருளிச்செய்கிறார் (ஸாக்ஷாத்பலமும்) என்றுதுடங்கி. ஸாக்ஷாத்பலமாவது - உபதேசபாத்ரமானவிவன் திருந்தி மங்கலாசாஸநத்துக்காளாகை; இது (தன் நினைவாலே ஸித்திக்கை) யாவது - உபதேஷ்டாவான தான் விப்ரதிபத்திக ளொன்றுமின்றி இதுவேபலமாக நினைத்துபதேசிக்கவே, அவ

ஆ—சார்யார்ஹதமபரமாசார்யமங்கலாசாஸகம் பண்ணும்; பரமாசார்யர்க்கும் ஸ்வாசார்யபரமாசார்யர்களொழிந்த ஸ்வசிஷ்யப்ரசிஷ்யர்களளவில் ஸ்வாசார்யசிஷ்யத்வ ப்ரதிபத்தியொழிய ஆசார்யத்வ ப்ரதிபத்தி கடவாதிறே; சிஷ்யனுக்கும் ஸித்தாசார்யஸ்மரணமொழிய தத்ஸாத்யகத்வ ஸ்மரணம்கூடாது. ஆகநினைக்கைக்கு ப்ராப்தருமாய் சக்தருமாய் க்ருதஜ்ஞருமான வாசார்யேச்வரர்கள் நினைவாலே சிஷ்யாசார்யர்களுக்கு ஸாக்ஷாத்பலாசார்யத்வ ஸித்தியுண்டாமென்னும் நியதியேவேணும்.

௩௧௨. இந்நினைவு மாறுட்டத்தில் உபயஸ்வரூபமு மழியுமென்கிறார்மேல், (இப்படியொழிய) இத்யாதியால். தான் முதலானவற்றையுள்ளபடி நினைத்து உபதேசிக்கிறவிந்தப்ரகாரமொழிய கீழ்ச்சொன்னபடியே மாறுடிநினைத்துபதேசிக்கில், ஸ்வாசார்யபரதந்த்ரரான சிஷ்யாசார்யர்களிருவர்க்கும் ஆசார்யத்வசிஷ்யத்வரூப ஸ்வரூபஸத்பாவஸித்தியில்லை.

௩௧௩. உபதேசிக்கும்போது நியதமாகவேண்டுவ தின்னதென்கிறார் மேல், (ஆசார்யனுக்கு) இத்யாதியால். தத்வார்த்தோபதேஷ்டாவான வாசார்யனுக்கு தத்ஸார்த்தச்ரோதாவாய் வந்தாச்ரயித்த சிஷ்யன்பக்கல் சரமார்த்தாதிகாரியாய் இவனுஜ்ஜீவித்திடுகவென் றுபதேசிக்கும்க்ருபை

னென்னில், தன் நினைவாலும் ஈச்வரன் நினைவாலும் ஸித்திக்கும்.

௩௧௨. இப்படியொழியவுபதேசிக்கி லிருவர்க்கும் ஸ்வரூபஸித்தியில்லை.

௩௧௩. ஆசார்யனுக்கு சிஷ்யன்பக்கல் க்ருபையும், ஸ்வாசார்

ஜீ.—னப்படி திருத்திமங்கலாசாஸநாதிகாரியாகை. (ஆசார்யத்வ) மாவது- தன்னை யாசார்யபரதந்த்ரனாகவே யநுஸந்தித்திருக்கிறவிவன் தன்பக்கலுபதேசம் கேட்கிறவனுக்கு ஆசார்யனாகை; இது (ஈச்வரன் நினைவாலே ஸித்திக்கை) யாவது - இப்படி தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் விப்ரதிபத்திபண்ணாதே உள்ளபடி யநுஸந்தித் துபதேசிக்கும் பரிபாகமுடையனான விவன் இவனுக்காசார்யனென்று நினைப்பிட்டருளுகையாலே இவனுக்காசார்யத்வ முண்டாகை.

௩௧௨. இங்ஙனன்றி க்ரூரநிஷித்தமாக வடியில்சொன்னவிப்ரதிபத்தியாலே யுபதேசிக்கில் உபயஸ்வரூபமும் ஸித்தியாதென்கிறார், (இப்படியொழிய) என்று துடங்கி. (இருவர்க்கும் ஸ்வரூபஸித்தியில்லை) என்கிறது - கீழ்ச்சொன்னபடியே யதாப்ரதிபத்தியோடே யுபதேசிக்கிலொழிய ஈச்வரனிவனை யாசார்யனாக நினைப்பிடாமையாலே உபதேஷ்டாவுக்காசார்யத்வமாகிற ஸ்வரூபஸித்தியில்லை; அப்படி யதாப்ரதிபத்தியாலே இவனுபதேசியாதவளவில் உபதேசசுத்தி யில்லாமையாலே உபதேசபாத்ரமான வவனுக்கு சிஷ்யத்வமாகிற ஸ்வரூபஸித்தியில்லை யென்கை.

௩௧௩. ஆசார்யனுக்கிரண்டுகுணமவச்யம் வேணுமென்கிறார் (ஆசார்யனுக்கு) என்று துடங்கி. அதாவது உபதேஷ்டாவான வாசார்யனுக்கு உஜ்ஜிஜீவிஷுவாய்வந்து உபஸந்நனான சிஷ்யன்பக்கல் ஐயோவென்றிரங்கி அவனுஜ்ஜீவிக்கைக்குறுப்பான வுபதேசாதிகளைப் பண்ணுகைக்கீடான க்ருபையும், தன்னைக்கர்த்தாவாக நினையாதே அத்தலைக்குக் கரண

ஆ.—யும், தனக்குநியந்தாவான வாசார்யன்பக்கல் தத்ப்ரேரிதனுய்க்கொண்டே உபதேசிக்கையாகிற பாரதந்த்ரயமும் அவச்யம்வேணுமென்கிருர்.

௨௧௪. இவையிரண்டின் பலத்தை யருளிச்செய்கிருர் உஜ்ஜீவிக்கவேணுமென்றுபதேசிக்கிறக்ருபையாலே தயநீயனுன சிஷ்யனுடைய ஸ்வாஸாதாரணரூபம் சரமஜ்ஞாநாநுஷ்டாநரூப பலபர்யந்தமாகஸித்திக்கும்; ஸ்வாசார்யநித்ய பாரதந்த்ர்யத்தாலே தததீநமான தன்ஸ்வரூபம் உபதேசகர்த்ருத்வம் தன்பக்கல்தட்டாதபடி யபங்குரமாகஸித்திக்கும். உபதேசப்ரேரகத்வேநவும் தத்ஸ்வகதத்வதூஷணபரிஹாரகத்வேநவுமுபயமும்சியதமாகவேணுமென்றபடி.

௨௧௫. ஏவம்குணவிசிஷ்டனுய்விசிஷ்டபரிக்ருஹீத மந்த்ரோபதேஷ்டாவானவனே முக்யனென்கிருர், (நேரே) இத்யாதியால். பாடேபக்கையின்றியே நேரேபரமாப்தனுன ஸதாசார்யனென்பது "సద్యస్సంసారతారణమ్" "ஸத்யஸ்ஸம்ஸாரதாரணம்" என்று ஸக்ருதுச்சாரணமாத்ரத்தாலே ஸத்யஸ்ஸம்ஸாரநிவர்த்தகமாய் உபயரஹஸ்யமும்தன்பக்கலிலே யடங்கும்படி பெரியதாய் ஆசார்யருசிபரிக்ருஹீதமான குருபரம்பராபூர்வக த்வயமாகிற திருமந்த்ரத்தை, ததேகநிஷ்டனுய்நினைவில் மாருட்டமறவுபதேசித்தவனையென்கிருர்.—, ஸர்வஸங்க்ரஹமாய் எம்பெருமானே சிஷ்யனுமாயன்பக்கல் பாரதந்த்ர்யமும்வேணும்.

௨௧௪. க்ருபையாலே சிஷ்யன்ஸ்வரூபம் ஸித்திக்கும், பாரதந்த்ர்யத்தாலே தன்ஸ்வரூபம் ஸித்திக்கும்.

௨௧௫. நேரே யாசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான

ஜீ.—பூதனுகவநுஸந்திக்கைக்கீடான ஸ்வாசார்யவிஷயத்தில் பாரதந்த்ர்யமும் அவச்யமுண்டாகவேணுமென்கை.

௨௧௪. இவற்ருல்பலிக்குமவற்றை யருளிச்செய்கிருர், (க்ருபையாலே) என்றுதுடங்கி. அதாவது அப்படியவன் ஸ்வரூபம் திருத்துமளவும் உபதேசாதிகளைப் பண்ணிப்போருமிவன் க்ருபையாலே நாளுக்கு நாளும் ஸ்வரூபம் நிர்மலமாகையாலே சிஷ்யனுடைய ஸ்வரூபம்ஸித்திக்கும்; ஸ்வகர்த்ருத்வபுத்தியற்றுஸ்வாசார்யகரண பூதனுகத்தன்னையநுஸந்திக்கைக்கும் மற்றும் ஸர்வகார்யத்திலும் தததீநனுய் வர்த்திக்கைக்கு முடலான பாரதந்த்ர்யத்தாலே ஆசார்யனுன தன்னுடைய ஸ்வரூபம்ஸித்திக்குமென்கை. ஆகக்கீழ்ச்செய்ததாயற்றது. ஹிதோபதேசசமயத்தில் ஸ்வவிஷயத்திலும் சிஷ்யவிஷயத்திலும் பலவிஷயத்திலுமுண்டாம் விப்ரதிபத்திகள்தானின்னதென்றும், இவன் நினையாதிருக்க த்ருஷ்ட ப்ரயோஜநாதிகள் வந்து ஸித்திக்கும்வழியும், ஸாக்ஷாத்பலாசார்யத்வங்கள் ஸித்திக்கும்வழியும், இப்படியன்றியே விப்ரதிபத்யாவுபதேசிக்கில்உபயஸ்வரூபம் ஸித்தியாமையும், ஆசார்யனுனவனுக் கவச்யாபேக்ஷிதகுணத்வயமும், ததுபயபலமும் சொல்லிற்ருயிற்று.

௨௧௫. இப்படி உபதேசாநுகுணநியமங்களைத் தர்சிப்பித்தவநந்தரம் உபதேசிக்குமளவில் இன்னமந்த்ரத்தை யுபதேசித்தவனையே ஸாக்ஷாதாசார்ய னென்பதென்கிருர், (நேரே) என்றுதுடங்கி. (நேரேயாசார்யனென்பது) என்கிறது ஆசார்யத்வம் குறைவறவின்றியிருக்கச்செய்தே ப்ரதீதிமாத்ரம்கொண்டு சொல்லுமளவன்றிக்கே ஸாக்ஷாதாசார்ய னென்று சொல்லுவதென்றபடி; (ஸம்ஸாரநிவர்த்தகமான பெரியதிருமந்த்ரத்தை யுபதேசித்தவனை) என்றது - "ఐహలౌకికమైశ్వర్యమ్" "ஐஹலௌகிக மைச்வர்யம்" இத்யாதிப்படியே அகிலபலப்ரதமாயிருந்ததே யாகிலும் அந்ய

ஆ.—யாசார்யனுமாயுபதேசிக்கவேண்டும்படி பெருமையையுடைத்தாய் "సంసారార్ణవతారకః" "ஸம்ஸாரார்ணவதாரகः" என்று ஸம்ஸாரநிவர்த்தகமாய் ஸர்வமந்த்ராந்தரோத்க்ருஷ்டமுமான ப்ரதமாநுஸந்தேயமான திருமந்த்ரத்தை, ததநுஸந்தாகதத்பரனு யுபதேசித்தவனே நேரேயாசார்யனென்றும்; த்வயாநுகாராகாரியாய் குர்வர்த்தப்ரகாசகமானபெருமையையுடையசரமமந்த்ரத்தை சரமாதிகாரியா யுபதேசிக்குமவனையேயப்படிச்சொல்லுகிறதென்று மருளிச்செய்வர்.

ருககரு. ஒழிந்ததந்மந்த்ரோப தேஷ்டாக்களுக்கும்பூர்ணசார்யத்வமில்லை யென்கிறார் மேல், (ஸம்ஸாரவர்த்தகம்) இத்யாதியால் ஸம்ஸாரநிவர்த்தகமஹாமந்த்ரத்துக் கெதிர்த்தட்டாய்க்கொண்டு ஸம்ஸாரவர்த்தகங்களுமாய் க்ஷுத்ரங்களுமான அவ்யாபகத்வாசிஷ்டபரிக்ருஹீதத்வாபூர்ணர்த்தத்வ விசிஷ்டங்களான பகவந்மந்த்ரங்களையுபதேசிக்கும் மந்த்ராந்தரநிஷ்ட்டரானவர்களுக்கு ஆசார்யத்வப்ரதீதியொழிய பூர்ணசார்யத்வமில்லை.

பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை.

ருககூ. ஸம்ஸாரவர்த்தகங்களுமாய் க்ஷுத்ரங்களுமான பகவந்மந்த்ரங்களை யுபதேசித்தவர்களுக்கு ஆசார்யத்வபூர்த்தியில்லை.

ஜீ.—பலங்களில் தாத்பர்யமின்றிக்கேமோக்ஷபலத்திலேநோக்காயிருக்கையாலே, "సర్వవేదాన్తసారార్థ స్సంసారార్ణవతారకః । గతిరష్టాక్షరో నృణా మపునర్భవకాఙ్క్షిణామ్" "ஸர்வவேதாந்தஸாரார்த்த ஸ்ஸம்ஸாரார்ணவதாரகः । கதிரஷ்டாக்ஷரோ ந்ருணா மபுநர்ப்பவகாங்க்ஷிணாம்" என்கிறபடியே ஸம்ஸாரநிவர்த்தகமாய், அத ஏவ "మన్త్రాణాం పరమో మన్త్రో గుహ్యానాం గుహ్యముత్తమమ్ । పవిత్రం చ పవిత్రాణాం మూలమన్త్రస్సనాతనః" "மந்த்ராணாம்பரமோமந்த்ரோ குஹ்யாநாங்குஹ்யமுத்தமம் । பவித்ரஞ்சபவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதநः" என்கிறபடியே ஸர்வமந்த்ராந்தரோத்க்ருஷ்டமான பெருமையையுடைத்தான திருமந்த்ரத்தை, ஸம்ஸாரநிவர்த்தகத்வ ப்ரதிபத்தியோடே யுபதேசித்தவனையென்கை. த்வயம் பூர்வோத்தரவாக்யங்களாலே இதில் மத்யமசரமபதவிவரணமாய், சரமச்லோகம் பூர்வோத்தரார்த்தங்களாலே அதில் பூர்வோத்தரவாக்ய விவரணமாயிருக்கையாலே, மற்றைரஹஸ்யத்வயமும் ப்ரதமரஹஸ்யமான வித்தோடகமாயிருக்கையாலேஇத்தைச் சொல்லவே அவற்றினுடைய வுபதேசமும் தன்னடையே சொல்லிற்றுமென்று திருவுள்ளம்பற்றி (பெரியதிருமந்த்ரத்தை யுபதேசித்தவனை) என்கிறார்; ஆகையா லிந்த்ரஹஸ்யத்ரயோபதேசத்துக்கு முபலக்ஷணம்.

ருககூ. பகவந்மந்த்ரங்களி லேதேனுமொன்றை யுபதேசித்தவர்களுக்குமாசார்யத்வமில்லையோவென்ன வருளிச்செய்கிறார், (ஸம்ஸாரவர்த்தகங்களுமாய்) என்றுதுடங்கி. அதாவது ஸம்ஸாரத்தை நிவர்த்திப்பியாதமாத்ரமன்றிக்கே வளர்க்குமவையாய்ப் பெருமையன்றிக்கே க்ஷுத்ரங்களுமாயிருந்துள்ள ததிதரபகவந்மந்த்ரங்களை யுபதேசித்தவர்களுக்கு, உபதேஷ்ட்ருத்வ ப்ரயுக்தமான வாசார்யத்வ ப்ரதீதிமாத்ரமொழிய தத்பூர்த்தியில்லையென்கை.

ஆ.—௩௧௭. பகவந்மந்த்ரங்களில் க்ஷுத்ரத்வஹேது வின்னதென்கிறார்மேல் விலக்ஷணபகவந்மந்த்ரங்களை ததிதரமந்த்ரவத்க்ஷுத்ர மென்கிறதுஇவனபிஸந்திக்கீடாகவவைகொடுக்கும்க்ஷுத்ரபலத்வாராவித்தனை.

௩௧௮. ஆத்மப்ரதிகூலரூபதுஃகாவஹமான வஸாத்யவித்யாவசனாய், ஸ்வர்க்கநரகாதிகளிலேசுழன்றுதிரிகையாகிறஸம்ஸாரத்துக்குஅவிச்சேதகரத்வேந மஹாபலப்ரவர்த்தகங்க ளென்கிறது, அவைகொடுக்கும் ஸாம்ஸாரிகதுஃகப்ராய க்ஷுத்ரபலமென்னுமத்தாலே யத்தனை ஸம்ஸாரநிவர்த்தகபகவத்வாசகங்களா மத்தாலல்லது பகவத்ப்ரதிபாதகத்வாதல்ல.

௩௧௯. இம்மந்த்ரங்களினுடைய ஸம்ஸாரவர்த்தகத்வ க்ஷுத்ரபலப்ரதத்வமாகிறவிதுதான் ஸ்வாபாவிகமாய் வருகிறதல்ல; உபாதிப்ரயுக்தமாய்வந்ததத்தனை.

௩௨௦. அதெத்தாலேயென்னமந்த்ரஜபம்பண்ணுகிற சேதநருடைய ப்ரக்ருதிவச்யத்வநிபந்தநமாக தத்தத்க்ஷுத்ரபலங்களைப்பற்றின ஹீநருசியாலே தத்தத்க்ஷுத்ரபலப்ரதத்வ மிவற்றுக்கு வருகையாலேயென்கிறார். இப்படிக்ஷுத்ரபலப்ரதமான மந்த்ராந்தரோபதேஷ்டாக்கள் எல்லாத மஹாமந்த்ரோபதேஷ்டாவுக்கே யாயிற்று ஆசார்யத்வ பூர்த்தியென்றதாயிற்று. இவ்வாசார்யத்வம்தான் தானேயுபதேசிக்குமிடத்து நிஷ்க்ருஷ்டபகவத்ஸ்வரூபதர்மமாய், பரம்பரையாயுபதேசிக்குமிடத்து விலக்ஷணதர்மவிசிஷ்டபகவத் ஸ்வரூபதர்மமுமா மென்றேகொள்ளவேணும்; பாரம்பர்யோபதேசத்திலும் இது நிஷ்க்ருஷ்டபகவத்ஸ்வரூப தர்மமென்னில் குருபரம்பராயாஃஸ்வரூபைக்யதோஷம் ப்ரசங்கிக்கும் இது ததநிஷ்ட்டித குருபரம்பரையின் ஸ்வரூபப்ரதாநகுணமென்னில் ஆத்மதர்மமென்றதாய் ஆசார்யவிஷயத்தில் ஆத்மபுத்திதோஷம் ப்ரஸங்கிக்கும்; இது அதிஷ்டாத்ருஸ்வரூபத்துக்கு மதிஷ்ட்டாநஸ்வரூபத்துக்கும் பொதுவென்னில்

---

௩௧௭. பகவந்மந்த்ரங்களை க்ஷுத்ரங்களென்கிறது பலத்வாரா.
௩௧௮. ஸம்ஸாரவர்த்தகங்க ளென்கிறதும் அத்தாலே.
௩௧௯. இதுதா னௌபாதிகம்.
௩௨௦. சேதநனுடைய

ஜீ.—௩௧௭. க்ஷுத்ரங்களென்பது க்ஷுத்ர தேவதாமந்த்ரங்களையன்றோ, பகவந்மந்த்ரங்களை யிப்படிச்சொல்லுகிறதென்னென்ன வருளிச்செய்கிறார், (பகவந்மந்த்ரங்களை) என்று துடங்கி. அதாவது பரதேவதையான பகவத்விஷயமாகையாலேவந்தபெருமையையுடைய மந்த்ரங்களை க்ஷுத்ரங்க ளென்று சொல்லுகிறது, அர்த்தகாமபுத்ரவித்யாதி க்ஷுத்ரபலங்களைக் கொடுக்கிறவழியாலே.

௩௧௮. ஸம்ஸாரவர்த்தகங்க ளென்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார், (ஸம்ஸார) இத்யாதியாலே. (அத்தாலே) என்றது-கீழ்ச்சொன்ன பந்தகமான க்ஷுத்ரபலங்களைக் கொடுக்கையாலேயென்கை.

௩௧௯. ஆனாலிவற்றுக்கிது ஸ்வாபாவிகமோவென்ன வருளிச்செய்கிறார், (இதுதான்) என்று துடங்கி. (இதுதான்) என்று க்ஷுத்ரபல ப்ரதத்வத்தைப் பராமர்சிக்கிறது; (ஔபாதிகம்) என்றது உபாதிப்ரயுக்தமாய் வந்த தித்தனையென்கை.

௩௨௦. அத்தையுபபாதிக்கிறார், (சேதநனுடைய ருசியாலே வருகையாலே) என்று. அதாவது பகவந்மந்த்ரங்களாகையாலே மோக்ஷப்ரதத்வ

ஆ.—ஈசேசிதவ்யோபயஸாதாரணமான வாசார்ய த்வித்வப்ரதிபத்திதோஷம்ப்ரஸங்கிக்கும், இத்தால் ஏகபதார்த்தத்விதீயவ்யாவ்ருத்திபக்ஷையாம்; ஆகையால் பரம்பரையிலாசார்யத்வம் லோஹாதலவ்யாப்திவத்விசேஷணுதிஷ்டித்துவிபஜிக்க வொண்ணுமல் நிற்கிறபகவத்குணமென்றே கொள்ளவேணும். இப்படி முக்க்யமாகவதிஷ்டித்து நிற்கிறவாகாரத்தையிட்டு, "குருரேவபரம்ப்ரஹ்ம" "குருரேவபராம்ப்ரஹ்ம" இத்யாதி ஸாமாநாதிகரண்ய ஜ்ஞாநம்பிறந்து ஆசார்யனே ஈச்வரனென்கிற வத்யவஸாயவிசேஷ ஜ்ஞாநம்பிறக்கத்தட்டில்லை. இப்படி யத்யவஸிக்கவே ஆசார்யனை யாத்மபுத்திபண்ணுவிக்கு மந்யதாஜ்ஞாநமும்; குருபரம்பரையையில்லைசெய்யும் ஸ்வரூபைக்யப்ரமமும்புகுராது. ஆசார்யவிஷயத்தில் பகவத்ப்ரதிபத்திபண்ணும்சிஷ்யன்; ஸ்வவிஷயத்தில் ஸ்வாசார்யசேஷத்வ ப்ரதிபத்திபண்ணுமாசார்யன்; ஆசார்யவிஷயத்தில் பகவத்ப்ரதிபத்திபண்ணுமை சிஷ்யஜ்ஞாநத்தின்குறை; தன்னை ஸ்வாசார்யசேஷமென்று ப்ரதிபத்திபண்ணுமை யாசார்யஜ்ஞாநத்தின்குறை; இப்படி ப்ரதிபத்தித்வயத்தாலே சேஷியுமாய் சேஷமுமானவ்யாவ்ருத்த ஸ்வரூபவிசேஷத்தை விபரீதப்ரதிபத்தித்வயத்தாலே யொன்றிலேயொதுக்குகை யுபயஸ்வரூபஹாநியாய்த் தலைக்கட்டும்; ஸ்வப்ரதிபத்தியாலும் தத்ப்ரதிபத்திநடக்கிலாயிற்று குருபரம்பரைக்யதோஷம் ப்ரஸங்கிப்பது; ஸ்வபரப்ரதிபத்திவிபாகமற ஏகப்ரதிபத்திநடப்பது ஸ்வதந்த்ரசேஷிக்கேயிறே; சிக்ஷிதனுனவிவனிப்படி அஹம்ஏன்னமாட்டானே; அப்படியன்றாகில் பழைய "தேவோஹம்" "தேவோஹம்" இத்யாதி ப்ரமவிசேஷமாய்த் தலைகட்டுமிறே; அந்தப்ரமமற்று ஸ்வாசார்யபரதந்த்ரனாய் த்வயைகநிஷ்டனாய் பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனே பூர்ணாசார்யனென்றதாயிற்று. இத்தவாசார்யத்வம்தான் ஸ்வாசார்யத்வம் பரமாசார்யத்வமென்றிரண்டு; அதில் ஸ்வாசார்யத்வம் ஸ்வதந்த்ராசார்யத்வம் பரதந்த்ராசார்யத்வமென்றிரண்டு; பரமாசார்யத்வமும் ஸாக்ஷாத்பரமாசார்யத்வம் பரம்பரயா பரமாசார்யத்வமென்றிரண்டு; இதில் ஸ்வாதந்த்ர்யாசார்யனுக்கு ஸ்வாசார்யஸத்ப்பாவயோக்யதையுமில்லை, பரதந்த்ரஸ்வாசார்ய பரமாசார்யர்களுக்கேயாயிற்று ததுபயமுள்ளது. ஆக இப்ரகாணத்தாலே தத்த்வஜ்ஞாநோபதேஷ்டாவான ஸதாசார்யனுடைய ஸ்வரூபாதியதாஸ்மரணஸித்தமான வுபதேசசுத்தியும் உபதேச்ய சுத்திஸித்தமான பரமமஹத்த்வமும் சொல்லப்பட்டது.

ருசியாலே வருகையாலே.

ஜீ.—சக்தியுமுண்டாயிருக்கச்செய்தே இவற்றினுடைய க்ஷுத்ரபலப்ரதத்வம், ப்ரக்ருதிவச்யனுனசேதநனுடைய க்ஷுத்ரபலருசியாலே வருகையாலேயென்கை. ஐச்வர்யகாமர்க்கு கோபாலமந்த்ராதிகளும் புத்ரகாமர்க்கு ராமமந்த்ராதிகளும் வித்யாகாமர்க்கு ஹயக்ரீவமந்த்ராதிகளும் விஜயகாமர்க்கு ஸுதர்சநநாரஸிம்ஹ மந்த்ராதிகளுமாய் இப்படி நியமேந க்ஷுத்ரபலங்களையேகொடுத்துப்போருகிறவிது, சேதநருடைய ருச்யநுகுணமாக வ்வ்வோமந்த்ரங்க ளிவ்வோப்லங்களைக் கொடுக்கக்கடவதென்று ஈச்வரன்நியமேந கல்பித்துவைக்கையிறே; அதுதான் சேதநருடைய ருச்யநுகுணமாக கல்பித்ததாகையாலே அவற்றுக்கவை ஸ்வாபாவிகமன்று, ஔபாதிகமென்னலாமிறே.

ஆ.—௩௨௧. மேல்(சிஷ்யனென்பது)என்றுதுடங்கி(உபகாரஸ்ம்ருதி நடக்கவேணுமளவாக) ஸச்சிஷ்யஸ்வரூபசோதநம்பண்ணுகிறார்; முதல் சிஷ்யசப்தத்துக் கர்த்தமருளிச்செய்கிறார் (சிஷ்யனென்பது) என்றித்யாதியால். உக்தலக்ஷணோபேதஸதாசார்யஸேவைக்குத்தக்க ஸச்சிஷ்யனென்றுசொல்லலாவது, ஸ்வோத்தேச்யமான வாசார்யகைங்கர்யத்தையும், ஆசார்யோத்தேச்யமாய் வரும்ததத்தீயகைங்கர்யத்தையும்ஒழிந்து ஸ்வோத்தேச்யமாகப்பண்ணும்தத்ததீயசேஷவ்ருத்தமாகிறஸாத்த்யாந்தரத்தில் ஸவாஸநநிவ்ருத்தியும்; பலமான பகவத்விஷயஜ்ஞாநத்துக்கு ஸாதநமான வாசார்யசுச்ரூஷையும்;—, அன்றியே ஸ்வரூபாநுரூபமான பலஸாதநங்களில் ச்ரோதுமிச்சையும்;—, அன்றியே பலமான வாசார்யப்ராப்திஸாதநமான பகவச்சுச்ரூஷையும்;—, அன்றியே ஆசார்யாச்ரயணரூபபலஸாதநபூதரான பாகவதசுச்ரூஷையும்;—அன்றியே ஆசார்யகைங்கர்யமாகிற ஸாக்ஷாத்ப்பலவிசேஷமாய்க்கொண்டு ஸாதநமான வாசார்யவிக்ரஹசுச்ரூஷையுமென்று பலஸாதநசுச்ரூஷைக்குப் பலபடியாகவருளிச்செய்வர்; இந்த ஆசார்யகைங்கர்யலாபத்தில் வந்து தத்விரோதியான ஸம்ஸாரமடிச்சுட்டுமெதிசயித்து வருமார்த்தியும்; ஆசார்யவிக்ரஹாநுபவகைங்கர்யம்

---

௩௨௧. சிஷ்யனென்பது ஸாத்த்யாந்தர நிவ்ருத்தியும், பலஸாதந சுச்ரூஷையும், ஆர்த்தியு மாதரமு மநஸூயையு

ஜீ.—௩௨௧. ஆக(தான் ஹிதோபதேசம்பண்ணும்போது)என்றுதுடங்கி (ஆசார்யத்வபூர்த்தியில்லை) என்னுமளவும் ஆசார்யஸ்வரூபசோதநம்பண்ணி, அநந்தரமதின்மேல்வந்தப்ராஸங்கிகசங்கைகளையும்பரிஹரித்தார்கீழ்; மேல் சிஷ்யஸ்வரூபசோதநம்பண்ணுகிறார், (சிஷ்யனென்பது) என்றுதுடங்கி. (சிஷ்யனென்பது) என்றது - உபதேசச்ரவணமாத்ரங்கொண்டு மேலெழுந்தவாரியாகச் சொல்லுகையன்றிக்கே சிஷ்யனென்று முக்யமாகச் சொல்லுவதென்றபடி;(ஸாத்த்யாந்தரநிவ்ருத்தி) யாவது-ஸ்வரூபவிரோதியான வைச்வர்யகைவல்யங்களாகிற ப்ராப்யாந்தரத்தில்மறந்து மக்வயமற்றிருக்கை; ,அன்றிக்கே இவ்வாசார்யன் தன்னையொழிய வேறொருப்ராப்யவஸ்து அறியேனென்றிருக்கையாகவுமாம்; (பலஸாதநசுச்ரூஷை) யாவது "𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾" "குருசுச்ருஷயாவித்யா" என்கிறபடியே ஆசார்யனைத்தான்பண்ணுகிற சுச்ருஷையாலே ஸந்தோஷிப்பித்து ஜ்ஞாநோபஜீவநம்பண்ணுகை ப்ராப்தமாகையாலே, ஆசார்யன் தனக்குபகரிக்கிற தத்த்வஜ்ஞாநமாகிற பலத்தினுடையஸித்திக்கு ஸாதநமாயிருந்துள்ள வாசார்யபரிசர்யை;—, அன்றிக்கே ஸ்வரூபாநுரூபமான பலத்திலும் ஸாதநத்திலுமுண்டான ச்ரோதுமிச்சையாகவுமாம்;—,அதவா ஆசார்யமுகோல்லாஸமாகிற பலத்துக்கு ஸாதநமான தத்பரிசர்யையென்னவுமாம்; (ஆர்த்தி)யாவது "இருள் தருமாஞாலம்" என்கிறபடியே பிறந்தஜ்ஞாநத்துக்கு விரோதியான விவ்விபூதியினின்றும் கடுகப்போகப்பெறாமையாலேயுள்ளக்லேசம்;—, அன்றிக்கே ஆசார்யவிக்ரஹாநுபவாலாபத்தில் க்லேசமாகவுமாம்; (ஆதர) மாவது உத்தரோத்தரமநுபுபூஷை விளையும்படி ஆசார்யனருளிச்செய்கிற பகவத்குணாநுபவத்தில் மேன்மேலுமுண்டாகாநிற்கிற விருப்பம்;—, அன்றிக்கே (ஆசார்யனைக்கண்டால் பசியன்சோற்றைக்கண்டாப்போலே) ததநுபவகைங்கர்யங்களிலே மண்டிவிழும்படியான விருப்பமாகவுமாம்; (அநஸூயை) யாவது ஆசார்யன் பகவத்பாகவதவைபவங்களைப்பாக்க வுபபாதியாநின்றால "𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑍇" "ப்ரவக்ஷயாம்யநஸூயவே"என்னும்படி யிதிலஸூயையற்றிருக்கை;—அன்றிக்கே

ஆ.—தந்த்ரந்தரஸேவாயோக்ய ப்ராப்யபூமிகளில் கொழுந்துவிடுமாதரமும்; ஸப்ரஹ்மசாரிகள்பக்கல் ஜ்ஞாநாநுஷ்டாந மினுக்கம்கண்டும் அவர்கள் பண்ணும்கைங்கர்யம்கண்டுமுண்டாமஸூயையுமென்கிற ப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபஸத்குணஸம்பந்நனை.

௯௨௨. ஈத்ருசனான சிஷ்யனுக்குண்டாகவேண்டுமத்த்யவஸாயவிசேஷத்தையருளிச்செய்கிறார்மேல்,(மந்த்ரம்)இத்யாதியால். "మన్తారం త్రాయత ఇతి" "மந்தாரம்த்ராயதஇதி" என்றநுஸந்தாத்ருரக்ஷகமான திருமந்த்ரமும், தந்மந்த்ரப்ரதிபாத்யபலப்ரத பரதேவதையும், தத்ப்ரதத்தமான கைங்கர்யமஹாபலமும், விரோதிநிவ்ருத்திப்ராப்த்யநுபவ ப்ரீதிரூபங்களாயும் ஸர்வதேசகாலாவஸ்த்தாப்ரகாரரூபங்களாயும் வருகிற கைங்கர்யபலாநுபந்திகளும், தத்பலப்ரஸித்தஸாதநமும், புத்ரபச்வந்நாதிஸம்பதநுபவமாகிற வைஹிகபோகமாகிற விவையெல்லாம், உக்தலக்ஷணஸம்பந்நனை ஸதாசார்யனேயென்றத்யவஸித்துநிர்ப்பரனாயிருக்கக்கடவன்ஸச்சிஷ்யனானவனுடையவனை.

௯௨௨. மந்த்ரமும் தேவதையும் பலமும் பலாநுபந்திகளும் பலஸாதநமு மைஹிகபோகமுமெல்லா மாசார்யனே

ஜீ.—ஆசார்யனுடைய வுத்கர்ஷத்தையும் ஸப்ரஹ்மசாரிகளுடைய வுத்கர்ஷத்தையும்கண்டால் அதிலஸூயையற்றிருக்கை யென்னவுமாம், "అసూయాప్రసవభూః" "அஸூயாப்ரஸவபூ:" என்கிறவிதுக்கு ஹிதம்சொன்னவனுடைய வுத்கர்ஷமேயாயிற்றுப் பொறுததென்றிறே பூர்வர்களருளிச்செய்தது; பகவத்விஷயத்திலுட்பட வஸூயைபண்ணுகின்றால் ததீயவிஷயத்தில் சொல்லவேணுமோ; "ఇదం తు తే గుహ్యతమం ప్రవక్ష్యామ్యనసూయవే" "இதம்துதேகுஹ்யதமம்ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே" என்றானிறே; ஆகயிப்படியிருந்துள்ள ஸத்குணஸம்பந்நனையாயிற்று நேரேசிஷ்யனென்பது.

௯௨௨. இப்படி உக்தலக்ஷணயுக்தனான சிஷ்யனுக்கு ஸ்வாசார்யவிஷயத்திலுண்டாகவேண்டும் ப்ரதிபத்திவிசேஷத்தை விதிக்கிறார்மேல், (మన్త్రమ్)(மந்த்ரம்) என்றுதுடங்கி. அதாவது "మన్తారం త్రాయత ఇతి మన్త్రః" "மந்தாரம்த்ராயத இதி மந்த்ர:" என்கிறபடியே அநுஸந்தாத்ருரக்ஷகமாயிருந்துள்ள திருமந்த்ரமும், தத்ப்ரதிபாத்யபரதேவதையும், தத்ப்ராஸாதலப்யமான கைங்கர்யரூபமஹாபலமும், ததநுபந்திகளான வவித்யாதிநிவ்ருத்திபூர்வகமான ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவமும் ஸாலோக்யாதிகளுமாகிறவிவையும், ததாவித பலப்ரதமான ஸாதநமும், புத்ரதாரக்ருஹக்ஷேத்ர பச்வந்நாத்யநுபவரூபமான இஹலோகத்தில் போக்யமாகிறவிவையெல்லாம், நமக்கு நம்முடைய வாசார்யனேயென்று ப்ரதிபத்திபண்ணக்கடவனென்கை. "గురురేవ పరం బ్రహ్మ గురురేవ పరాగతిః । గురురేవ పరా విద్యా గురురేవ పరాయణమ్ ॥ గురురేవ పరః కామో గురురేవ పరం ధనమ్ । యస్మాత్తదుపదేష్టాసౌ తస్మాద్గురుతరో గురుః" "குருரேவபரம்ப்ரஹ்ம குருரேவபராகதி: । குருரேவபராவித்யா குருரேவபராயணம் ॥ குருரேவபர:காமோ குருரேவபரம்தநம் । யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோகுரு:" என்றும், "ఐహికాముష్మికం సర్వం సచాష్టాక్షరదో గురుః । ఇత్యేవం యే న మన్యన్తే త్యక్తవ్యాస్తే మనీషిభిః" "ஐஹிகாமுஷ்மிகம்ஸர்வம்ஸசாஷ்டாக்ஷரதோகுரு: । இத்யேவம்யேநமந்

ஆ.—னென்கிறார். (மந்த்ரமும்-பலமும்) என்று ஸமாநாதிகரிக்கிறது ப்ரதிபாத்யப்ரதிபாதகவிஷயவிஷயிஸம்பந்தத்தைப்பற்ற.

௨௬௩. "మాతాపితా యువతయః" "மாதாபிதாயுவதய:" என்கிற வாசார்யஸமாச்ரயண சரமச்லோகத்திலே(எல்லாமாசார்யனே) என்றத்யவஸித்திருக்கவேணுமென்னு மிவ்வர்த்தத்தை உடையவர்க்கு பரமாசார்யரான வாளவந்தார் ஸ்வாநுஸந்தாநம்பண்ணிவிடாதே ஸாரஜ்ஞரெல்லாருமுஜ்ஜீவிக்கும்படி யருளிச்செய்தார்; இவ்வர்த்தத்தில் ஸம்சயிக்கவேண்டுவதில்லை யென்றுக்தார்த்தப்ரகாசகப்ரமாணம் காட்டுகிறார். ஆழ்வார்திருவடிகளே ப்ரியபரமும் ஹிதபரமும் அபிமதமும் ஸுகரமும் ஸ்ப்ருஹணீயமுமென்று ஐஹிகபோகமும், அநுக்தவாசகத்தாலே திருவடிகளேபலஸாதந ததநுபந்திகளென்னுமிடமும், ஸ்வகுலஸ்வாமித்வவாசகத்தாலே பரதேவதையென்னுமிடமும், ஸவிசேஷணதத்ப்ரணதிவாசகத்தாலே மந்த்ரமென்னுமிடமும், அவதாரணத்தாலே அத்யவஸாயமும் இந்தச்லோகத்திலே ஸுஸ்பஷ்டமாகப்ரகாசிக்கிறதிறே. "గురోర్నామ సదాజపేత్" "గురురేవ పరమ్బ్రహ్మ" "ఉపాయోపేయభావేన తమేవశరణంవ్రజేత్" "గురురేవ పరన్ధనమ్। గురురేవ పరః కామః" "గురుర్మాతా గురుఃపితా" "குரோர்நாமஸதாஜபேத்" "குருரேவபரம்ப்ரஹ்ம" "உபாயோபேயபாவேந தமேவசரணம்வ்ரஜேத்" "குருரேவபரம்தநம் - குருரேவபர:காம:" "குருர்மாதாகுரு:பிதா" என்றித்யாதிகளிலுமிவ்வர்த்தம் ஸுப்ரஸித்தமிறே.

௨௬௪. இப்படியருளிச்செய்கைக்குக் காரணமின்னதென்கிறார் மேல் (எல்லாமாசார்யன்) என்கிறவிதுக்கடி அறியாதனவறிவித்த மஹோபகாரஸ்ம்ருதியென்றருளிச்செய்து;

யென்று நினைக்கக்கடவன்.

௨௬௩. "మాతాపితాయువతయః" "மாதாபிதாயுவதய:" என்கிற ச்லோகத்திலே இவ்வர்த்தத்தை பரமாசார்யரு மருளிச்செய்தார்.

௨௬௪. இதுக்கடி யுபகாரஸ்ம்ருதி.

ஜீ.—யக்தே த்யக்தவ்யாஸ்தேமநீஷிபி:"என்றுமிப்படிசாஸ்த்ரங்களில்சொல்லுகையாலே(நினைக்கக்கடவன்) என்று விதிரூபேண வருளிச்செய்கிறார்.

௨௬௩. இப்படி தாமருளிச்செய்த விவ்வர்த்தத்தி லாப்திக்குடலாக இது பரமாசார்யவசநஸித்தமு மென்றருளிச்செய்கிறார், (மாதா) என்றுதுடங்கி. அதாவது "మాతాపితా యువతయ స్తనయా విభూతి స్సర్వం యదేవ నియమేన మదన్వయానామ్" "மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதி ஸ்ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்" என்று ஐஹிகபோகங்களையும் "సర్వమ్" "ஸர்வம்" என்று அநுக்தஸகலகதநத்தாலேமந்த்ரதேவதாபலாதிகளையு மெடுத்து, இத்தனையு மாழ்வார்திருவடிகளே யென்றருளிச்செய்கையாலே, அந்தச்லோகத்திலே இவ்வர்த்தத்தைப் பரமாசார்யரான வாளவந்தாரு மருளிச்செய்தாரென்கை.

௨௬௪. இப்படி யெல்லாமிவனேயென் றநுஸந்திக்கைக்கடி யேதென்னவருளிச்செய்கிறார், (இதுக்கடி வுபகாரஸ்ம்ருதி) என்று. அதாவது இப்படி ஆசார்யனே நமக்கு ஸகலமுமென் றநுஸந்திக்கைக்கு ஹேது, நித்யஸம்ஸாரியாய்க்கிடந்த தன்னை உபதேசாதிகளாலே திருத்தி நித்யஸூரிகளுடைய வநுபவத்துக்கர்ஹனும்படிபண்ணின உபகாராநுஸந்தாநமென்கை.

ஆ.— ௩௨௫. ப்ரதமசரமகாரண மின்னதென்கிறார்மேல்; அத்யவஸாய ஹேதுவான வுபகாரஸ்ம்ருதிக்குமுதலடி, தன்னை யிவ்வளவாக்கினவாசார்யன்பக்கல் அவன் பகவத்விஷயத்தை ''கையிற்கனியென்னக்காட்டித்தந்த வுபகாரத்தையநுஸந்திக்கையாகிற க்ருதஜ்ஞதை; இந்தவுபகாரஸ்ம்ருதிக்குமுடிந்தநிலம் ஆசார்யப்ராப்திஹேதுவான வீச்வரன்பக்கல் இவ்வாசார்யவிஷயத்தை யுபகரித்தமையை யநுஸந்திக்கையாகிற க்ருதஜ்ஞதையென்கிறார். ப்ரதமோபகாரஸ்ம்ருதி உபகார்யவஸ்துவின் வைலக்ஷண்யத்தைப்பற்றிவரும் சரமோபகாரஸ்ம்ருதி யுபகார்யவஸ்துவின் கௌரவத்தைப்பற்றிவரும்; முந்துறவீச்வரவைலக்ஷண்யம் ஆசார்யைகசேஷமாயிருக்கும், முடிவிலாசார்யகௌரவமும் ததுபகாரேச்வரகௌரவமும் ஈச்வரைகசேஷமாயிருக்கும்.

௩௨௬. இவ்வளவாகசிஷ்யனுடையலக்ஷணாத்யவஸாயவைலக்ஷண்யத்தை யருளிச்செய்து, மேல் (பூர்த்தியாலே ஸ்வரூபம்ஜீவித்த தளவாக) சிஷ்யாசார்யர்களுக்குண்டாம்ஸமவ்ருத்த்யக்யோக்யவ்யாவ்ருத்திகளை யருளிச்செய்கிறார், (சிஷ்யனுமாசார்யனும்) இத்யாதியால். ஸமீசீநலக்ஷண ஸம்பந்நராய் ப்ரியஹிதபரரான ஸச்சிஷ்யனும் ஸதாசார்யனும் தம்தாம் நிலைகுலைந்து அந்யோந்யம் ப்ரியஹிதங்களிரண்டையும் காதாசித்கமாக நடத்தக்கடவர்கள்.

---

௩௨௫. உபகாரஸ்ம்ருதிக்கு முதலடி ஆசார்யன்பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்தநில மீச்வரன்பக்கல் க்ருதஜ்ஞதை.

௩௨௬. சிஷ்யனு மாசார்யனு மந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்தக்கடவர்கள்.

ஜீ.— ௩௨௫. இவ்வுபகாரஸ்ம்ருதி ப்ரஸங்கத்திலே அதினுடைய ப்ரதம சரமாவதிகளைத் தர்சிப்பிக்கிறார், (உபகாரஸ்ம்ருதிக்கு) என்றுதுடங்கி. இச்சேதநன் முந்துறவநுஸந்திப்பது, அஜ்ஞாதஜ்ஞாபகசுமுகத்தாலே தனக்கிலத்தையு மறிவித்து பகவத்விஷயத்தைக் கைப்படுத்தினவாசார்யன் பண்ணினவுபகாரத்தையாகையாலே (உபகாரஸ்ம்ருதிக்குமுதலடி ஆசார்யன்பக்கல் க்ருதஜ்ஞதை) என்கிறது; க்ருதஜ்ஞதையு முபகாரஸ்ம்ருதியும் பர்யாயம்; ஆசார்யகௌரவம் நெஞ்சில்படப்பட அவ்விஷயத்திலே தன்னைக்கொண்டுவந்துசேர்த்த வீச்வரன் பண்ணினக்ருஷி பரம்பரையைப் பின்னையநுஸந்திக்கையாலே (முடிந்தநில மீச்வரன்பக்கல் க்ருதஜ்ஞதை) என்கிறது. இதுவு மீச்வரன்பக்க லுபகாரஸ்ம்ருதியென்றபடி. இத்தால் பகவத்விஷயத்தையுபகரித்த வாசார்யன் பண்ணினவுபகாரத்தை யநுஸந்திக்கவிழிந்தால் அவனுடையவைபவம் நெஞ்சிலேயூற்றிருந்தவாறே, இப்படி யிருக்கிறவிஷயத்தைநாம்பெற்றது தம்பெருமானாலேயன்றோவென்று தத்க்ருதோபகாராநுஸந்தாநத்திலே சென்று தலைக்கட்டுமென்றதாயிற்று.

௩௨௬. இந்த ஸதாசார்ய ஸச்சிஷ்யர்களுடைய பரிமாற்றமிருக்கும்படியை யருளிச்செய்கிறார் மேல், (சிஷ்யனும் ஆசார்யனும்) என்று துடங்கி. (அந்யோந்யம் ப்ரியஹிதங்களை நடத்துகை) யாவது - சிஷ்ய னாசார்யனுக்கு ப்ரியஹிதங்களிரண்டையும் நடத்துகையும், ஆசார்யன் சிஷ்யனுக்கு ப்ரியஹிதங்களிரண்டையும் நடத்துகையும். (நடத்தக்கடவர்கள்) என்றது - இதினுடைய வவச்யகரணீயத்வம் தோற்றுகைக்காக.

ஆ.—௩௨௭. அதில் ப்ரியைகபரனான சிஷ்யன் சேஷியானவாசார்யனுக்கு நிஷ்களங்கஸ்வஜ்ஞாநாநுஷ்டாநரூபப்ரியத்தையே முடியநடத்தக்கடவன்; ஆசார்யனுக்கு ப்ராமாதிகஜ்ஞாநாதிஸ்க்காலித்யம்விக்ரஹாஸ்வாஸ்த்யமுமுண்டானபோது, எங்களாசார்யன் திருவுள்ளத்தில் திருமேனியில் நலக்கத்தைப்போக்கி யருளவேணுமென்று ஹிதைஷியான வீச்வரனைக்கொண்டு ஹிதத்தைக்காதாசித்கமாக நடத்தக்கடவன். இனி ஹிதைகபரனானவாசார்யன் சிஷ்யனுக்கு ஸ்வரூபஹாநிவாராதபடி நியமித்து ஹிதத்தையேமுடிய நடத்தியும், இவனுக்கு தத்தீயகைங்கர்யோபயோகியாமவை அதிஸங்குசிதமானபோது இவனுக்குசிதகைங்கர்யம் நடக்கும்படி திருவுள்ளம்பற்றியருளவேணுமென்றுஈச்வரனைக்கொண்டுப்ரியத்தைக்காதாசித்கமாகநடத்தியும், இப்படி சிஷ்யனைப்போலன்றியே ப்ரியஹிதங்களை மாறுடிநடத்தக்கடவனென்று.

௩௨௮. இவர்களுக்கு நிலைநின்றவேஷத்தை யருளிச்செய்கிறார்மேல் சேஷபூதனானசிஷ்யன் சேஷியானவாசார்யனுடைய ஸ்வரூபஜ்ஞாநவிபாகமாகிறவுகப்பிலே நிரந்தரம் வேர்விழவூன்றிப்போரும்; ஹிதைஷியான

---

௩௨௭. சிஷ்யன் தான் ப்ரியத்தைநடத்தக்கடவன், ஈச்வரனைக்கொண்டு ஹிதத்தைநடத்தக்கடவன்; ஆசார்யன் மாறுடி நடத்தக்கடவன்

௩௨௮. சிஷ்யன் உகப்பிலே யூன்றிப்போரும்; ஆசார்யனுஜ்

ஜீ.—௩௨௭. இருவருமிரண்டையும் அந்யோந்யம் நடத்தும் க்ரமமென்னென்ன வருளிச்செய்கிறார், (சிஷ்யன்) என்றுதுடங்கி. அதாவது சிஷ்யனாசார்யனுக்கிரண்டையும் நடத்துமிடத்தில் தன் ஸ்வரூபாநுகுணமாக வாசார்யமுகோல்லாஸமே புருஷார்த்தமென்று நினைத்து தன்னுடைய கிஞ்சித்காராதிகளாலே தானாசார்யனுக்கு ஸர்வகாலமும் ப்ரியத்தை நடத்திப்போரக்கடவன்; மங்கலாசாஸநபரனாகையாலே இவ்விபூதிஸ்வபாவத்தால் திருவுள்ளத்திலொருகலக்கம் வாராதொழியவேணுமென்றும், அப்படியேதேனுமொன்றுவந்தகாலத்தில்இத்தைப்போக்கித்தந்தருளவேணுமென்றும் ப்ரார்த்தித்து ஈச்வரனைக்கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவனென்கை; (ஆசார்யன் மாறுடி நடத்துகை) யாவது - ஹிதைகபரனாகையாலே இவனுக்கு ஸ்வரூபஹாநிவாராதபடி ஹேயோபாதேயங்களினுடைய ஹாநோபாதாநங்களில் ஸ்க்காலித்யம் பிறவாமல் நியமித்து, ஸர்வகாலமும் நல்வழி நடத்திக்கொண்டு போருகையாகிற ஹிதத்தைத் தான் நடத்தி, த்ருஷ்டத்தில் ஸங்கோசத்தாலே இவன் மிகவும் நலங்குமளவில் இருந்தநாளைக்கு இவன் நலங்காமல் இவையுமவனுக்குண்டாம்படி திருவுள்ளம் பற்றியருளவேணு மென்றர்த்தித்து, ஈச்வரனைக்கொண்டு ப்ரியத்தை நடத்தக்கடவனென்கை.

௩௨௮. இப்படி செய்துபோருமிடத்தில் இருவர்க்குமிரண்டும் ஸமப்ரதாநமாயிருக்குமோ வென்கிறசங்கையிலே யருளிச்செய்கிறார், (சிஷ்யனுகப்பிலே) என்றுதுடங்கி. அதாவது சிஷ்யன் சேஷபூதனாகையாலே சேஷியான வாசார்யனுடைய ப்ரீதியிலே யூற்றமாய்ப்போரும்; ஆசார்யன் பரமக்ருபாவானாகையாலே தன்னுடைய சிஷ்யனை இவன் ஸம்ஸார

ஆ.—வாசார்யன் நிர்மலஜ்ஞாநாத்யபிவ்ருத்தியாகிற ஸ்வரூபோஜ்ஜீவநத்திலே நிரந்தரம் நிச்சலனா யூன்றிப்போரும்.

௩௨௯. இப்படி ஆசார்யப்ரியமே நடத்திப்போருகையாலே ப்ரியபரனானசிஷ்யன் ஹிதபரனான வாசார்யனுடைய தன் ஜ்ஞாநாநுஷ்டாநாபிவ்ருத்திதர்சநத்தாலே அபிவ்ருத்தமாம்ஹர்ஷத்துக்கு நித்யவிஷயமாகையொழிய, அப்ரியகரதர்சநநிமித்த தோஷத்துக்கு காதாசித்கவிஷயமாகைக்கும் கிஞ்சிதவகாசமில்லை யென்கிறார்.

௩௩௦. காதாசித்கமாகவரும் சிக்ஷகாசார்யநிக்ரஹத்துக்கு சிக்ஷணீயனானிவன் காதாசித்கமாக பாத்ரமாம்போது, அந்த ஹிதைஷியானவாசார்யநிக்ரஹம் ஸ்வரூபவிருத்தங்களைத் துரந்து பேணிவர்த்திக்கும்படி பண்ணி ஸ்வரூபத்தையுஜ்ஜீவிப்பிக்கும் ஹிதரூபமாகையாலே, சிக்ஷகசிக்ஷணீயரானவிருவர்க்கும் ஸ்வஸ்வாநுகுணமான வுபாதேயம்.

ஜீவநத்திலே யூன்றிப்போரும்.

௩௨௯. ஆகையால் சிஷ்யனாசார்யனுடைய ஹர்ஷத்துக்கு இலக்காகை யொழிய ரோஷத்துக்கிலக்காகைக் கவகாசமில்லை.

௩௩௦. நிக்ரஹத்துக்கு பாத்ரமாம்போது அதுஹிதரூபமாகையாலே யிருவர்க்கு முபாதேயம்.

ஜீ.—துத்தீர்ணனாய் உஜ்ஜீவிக்கையிலே யூற்றமாய்ப்போருமென்கை. ஆகையால் சிஷ்யனுக்கு ப்ரியகரணமும் ஆசார்யனுக்கு ஹிதகரணமுமே ப்ரதாநமென்றுகருத்து.

௩௨௯. கீழ்ச்சொன்னவற்றால் பலிக்குமத்தை யருளிச்செய்கிறார், (ஆகையாலே) என்றுதுடங்கி. அதாவது சிஷ்யனாசார்யனுடைய ப்ரியகரணமும் ஆசார்யன் சிஷ்யனுடைய ஹிதகரணமும் ப்ரதாநமாகநடத்திப்போருகையாலே, சிஷ்யனானிவன் ஆசார்யனுடைய ப்ரீதிக்கு விஷயமாய்ப்போருகையொழிய, அநிஷ்டகரணாதிகளாலே நிக்ரஹத்துக்கு விஷயமாகைக்கு இடந்தான் முதலிலேயில்லையென்கை; (ஆகையாலே) என்று உகப்பிலே யூன்றிப்போருமென்று சொன்னதொன்றையு மநுவதிக்கிறதாகவுமாம்.

௩௩௦. ப்ரக்ருதிஸம்பந்தத்தோடே யிருக்கிறவனுக்கு எப்போதுமொருபடிப்பட்டிருக்குமோ, காலுஷ்யங்களுண்டாகாதோ, அதடியாக நிக்ரஹபாத்ரமாம்போது அந்தநிக்ரஹ மிரண்டுதலைக்கு மெங்ஙனேயாகக்கடவதென்னவருளிச்செய்கிறார், (நிக்ரஹத்துக்கு) என்றுதுடங்கி. அதாவது அநிஷ்டகரணாதிகளடியாக வாசார்யநிக்ரஹத்துக்கு பாத்ரமாம்தசையில், அந்த நிக்ரஹம் சிஷ்யனானிவனை யபதேப்ரவ்ருத்தனாகாதபடி நியமித்து நல்வழி நடத்துகைக்குறுப்பாய்க்கொண்டு ஹிதரூபமாயிருப்பதொன்றாகையாலே, இப்படிநம்மை நிக்ரஹிப்பதேயென்று இவன்நெஞ்சுளைதல் இவனை யிப்படி நிக்ரஹிக்கவேண்டுகிறதே என்றாசார்யன் நெஞ்சுளைதல் செய்கையன்றிக்கே, நிக்ரஹவிஷயமான விவனுக்கும் நிக்ரஹாச்ரயமான வாசார்யனுக்கும் அங்கீகார்யமென்கை.

ஆ.—௩௩௧. இப்படி யுபாதேயமாயிருக்கும் நிக்ரஹமென்னு, தத்காரணமு முபாதேயமாயிருக்குமோவென்ன ; ப்ரியாவஹனான சிஷ்யனுக்கு தச்சித்தகாலுஷ்யகர நிக்ரஹகாரணமான ஸ்வரூபவிருத்தவர்த்தநம், ஸவாஸநமாக த்யாஜ்யமென்கிறார்.

௩௩௨. இப்படி நிக்ரஹகாரணம் த்யாஜ்யமென்னு, ஹிதரூபதந்நிக்ரஹம் த்யாஜ்யமாகாதென்கிறார் மேல் ; ஹிதரூபமானநிக்ரஹம் தான் "கொண்டசீற்றமொன்றுண்டு" என்று ப்ராப்யநிஷ்டப்ரியதமமான பகவந்நிக்ரஹம்போலே ப்ரார்த்தநீயமாய்க்கொண்டு அநுக்ரஹவத் ப்ராப்யாந்தர்கதமாய்க்கொண்டுஉபாதேயமாயேயிருக்கும். ஆக ப்ரியபரனானசிஷ்யன் ஹிதபரனான வாசார்யனுடைய ஹர்ஷவர்த்தகனாய்க்கொண்டுநிக்ரஹஹேதுக்களை த்யஜித்தும் ஹிதரூபநிக்ரஹத்துக்குகந்தும் போரக்கடவனென்றபடி.

௩௩௩. இப்படி ஹிதபரனானவாசார்யன் ப்ரியபரனானசிஷ்யனுடைய பரதந்த்ரமான ஸ்வரூபத்தை த்யாஜ்யோபாதேயங்களை ச்ரவிப்பித்து, த்யாகபரிக்ரஹ நிஷ்டையைப்பிறப்பித்து, தத்தநீய ப்ராவண்யத்தை விளைப்பித்து, நிஷ்டாநுஷ்டாந விசேஷங்களைப் பிறப்பித்து ப்ராப்தி

---

௩௩௧. சிஷ்யனுக்கு நிக்ரஹகாரணம் த்யாஜ்யம்.

௩௩௨. நிக்ரஹம்தான் பகவந்நிக்ரஹம்போலே ப்ராப்யாந்தர்க்கதம்.

௩௩௩. ஆசார்யன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப்பேணக்

ஜீ.—௩௩௧. நிக்ரஹமுபாதேயமாகில் நிக்ரஹகாரணமுமுபாதேயமாகாதோவென்ன, (சிஷ்யனுக்கு நிக்ரஹகாரணம்த்யாஜ்யம்) என்கிறார். அதாவது - நிக்ரஹமுபாதேயமென்று நினைத்து, மீளவும் தத்காரணத்தைச் செய்யவொண்ணாது ; யாதொருகாரணத்தாலே நீரிலேநெருப்பெழுமாபோலே தன்விஷயத்தில் குளிர்ந்துதெளிந்திருக்கிற வாசார்யஹ்ருதயத்தில் நிக்ரஹமெழுந்திருந்தது, அந்தக்காரணத்தை மறுவலிடாதபடி விடவேணுமென்கை.

ஆ.—விவ்வர்த்தம் ப்ரஸங்காத் ப்ரஸ்துதமானவளவிலே, ஸாத்யமாய் அசேதநமாய் புறப்பூச்சான ஸுக்ருதத்தையன்றுகாணுமவர் சொல்லுகிறது, ஸித்தமாய் பரமசேதநமாய் வைரம்பற்றின அநந்தன்மேல்கிடந்த வெம்புண்ணியமான வடிவுபட்ட ஸாக்ஷாத்ஸுக்ருதத்தைக்காணுமவர் சொல்லுகிறதென்று உடையவரருளிச்செய்த நிர்ஹேதுகஸ்தாபகமான தாத்பர்யவார்த்தையை, அநதிகாரிகள்செவிபடாதபடி ஸ்மரிப்பதென்கிறார்.

௩௮௬. இப்படி ஸ்வஸம்பந்தமே ஹேதுவாக நிர்ஹேதுககடாக்ஷம் பண்ணவல்ல பரமசேதநனாகையாலே ஸர்வாங்கீகார ப்ரஸங்க பரிஹாரார்த்தமாக, சேதநரால் அஜ்ஞாதமான யாத்ருச்சிகாதி துச்ச நன்மைகளையே சேதநாங்கீகாரப் பற்றாசாகக்கொண்டு இடம்பெற்றவிடங்களிலே கடாக்ஷியாநிற்கும், ஸர்வமுக்திப்ரஸங்கம் பரிஹரிக்கவேண்டுகையாலே யென்று. ஆகையாலுமிங்ஙனம் யோஜிப்பர்கள்:—, ஸாக்ஷாந்நிர்ஹேதுகத்வோக்தி ஸித்ததாத்பர்யத்தை ப்ராதீதிக நிர்ஹேதுகத்வ ஸூசகவேதாந்த யோஜனையாலே மறைத்தருளுகிறாரென்று மருளிச் செய்வர்.

௩௮௭. இந்த யாத்ருச்சிகாதிகள் தானிவனாலுண்டாகிறதன்று அவனடியாக வுண்டாயிற்ற தித்தனையென்கிறார் மேல்; இந்த யாத்ருச்சிகா

இவ்வர்த்தம்ப்ரஸ்துதமாக, பின்புபிறந்தவார்த்தைகளை ஸ்மரிப்பது.

௩௮௬. ஆகையாலஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக் கொண்டு கடாக்ஷியா நிற்கும்.

௩௮௭. இவையுங்கூட விவனுக்கு விளையும்படியிறே

ஜீ.—ஸுக்ருதமென்ன அஜ்ஞாதஸுக்ருதமென்ன பிறந்ததாய் அவ்வளவிலேகிடாம்பிப்பெருமாளிருந்தவர் நமக்குபகவத்விஷயம்போலே ஸுக்ருத தேவரென்னு மொருவருண்டோ வாச்ரயணீயரென்ன, பிள்ளைதிருநறையூரறையர் ஸுக்ருதமென்று சொல்லுகிறது நினைக்கிறவிஷயம்தன்னைக்காணென்றருளிச்செய்ய, ஆக விப்படிப்பின்பு பிறந்தவார்த்தைகளை யிவ்விடத்திலே நினைப்பதென்றபடி. இக்கதைதான் "தருதுயரம்தடாயேல்" என்கிறபாட்டில் வ்யாக்யாநத்திலே ஸங்க்ரஹேண பூர்வர்களருளிச் செய்து வைத்தார்களிறே. இத்தாலஜ்ஞாத ஸுக்ருதமுண்டாயிற்றாகிலுமது பலஹேதுவன்று, அத்தை வ்யாஜமாக்கி யங்கீகரிக்குமீச்வரனே பல ஹேதுவென்றதாயிற்று.

௩௮௬. கீழுக்தமான வர்த்தத்தை நிகமிக்கிறார், (ஆகையால்) என்றுதுடங்கி. அதாவது கீழ்ச்சொன்னப்ரகாரத்தாலே ஸர்வமுக்திப்ரஸங்காதிகள் வாராமைக்காக விச்சேதநனறியாமல் விளையுமவையான சில ஸுக்ருதவிசேஷங்களையே, இவனையங்கீகரிக்கைக்குப் பற்றாசாகப் பிடித்துக்கொண்டு விசேஷகடாக்ஷத்தைப் பண்ணாநிற்குமென்கை.

௩௮௭. இப்படி யஜ்ஞாத ஸுக்ருதங்களையாகிலும் ஹேதுவாகக் கொண்டு கடாக்ஷிக்குமளவில், அங்கீகாரம் ஸஹேதுகமாகாதோவென்ன வருளிச்செய்கிறார், (இவையுங்கூட) என்றுதுடங்கி. அதாவதிந்தயாத்ருச்சிகாதி ஸுக்ருதங்களுமுட்பட இவனுக்குண்டாம்படியிறே இவற்றுக்கும் யோக்யதையில்லாதபடி கரணகளேபர விதுரனாய்க்கிடந்த விவன் தன்னை, ஸ்ருஷ்டிகாலத்திலே கரணாதிகளைக்கொடுத்தவனுண்டாக்கிற றென்கை. இத்தால் கடாக்ஷஹேதுவாகச்சொன்ன யாத்ருச்சிகாதிகளு

ஆ.—திகள் முற்பட காலக்ரமேண விளையும்படியிறே யிவற்றுக்கும் யோக்யதையற்ற வெறுவியனான விவன்றன்னை அநாதியேபிடித்து விசித்ரசக்தியுக்தன் விரகிட்டு ஸ்ருஷ்டித்தது.

௱அஅ. யாத்ருச்சிகாதிகளும் விளையும்படி சேதநனுக்கு ஈச்வரனெறக்கோலி ரக்ஷிக்கிற ரக்ஷகஸ்வபாவமாகிற விதுதன்னை நிரூபித்தால், தச்சரீரபூதனான விவனுக்கு புத்திபூர்வகமாகவும் இவனுக்கொன்றும் செய்யவேண்டாதபடியாயிருக்கும்.

௱அகூ. சேதநேச்வரர்க ளிருவரையுமொழிய விவை தன்னடையே யுண்டாமோவென்ன உண்டாக்கவற்றவனுடைய சக்திசாதுரியென்கிறார், (பழையதாக) இத்யாதியால். உதிரி முளைக்கும் யோக்யதையறும்படி தரிசுகிடவாதே பழையதாக வுழுவது, உழவு நிஷ்பலமாகாதபடி நடுவது, நட்டகாற்று சாவிபோகாதே ஸபலமாம்படி விளைவதுமாய்க்கொண்டு இப்படி யநாதியேபிடித்து அவிச்சிந்நமான கர்ஷணாதிகளை யுடைத்தாய்ப்போரும் ஸுக்ஷேத்ரத்தின் கர்ஷணாதிவ்யாபாரமின்றியே யிருக்கச்செய்தே, ஸர்வாங்குர ஸாதாரணமான ஜலமொன்றையுமே ஸஹகாரியாகக்கொண்டு, பரிபாகமாயுதிர்ந்து தன்னடையே முளைத்துவிளைந்து யத்நாந்தரமற பலபர்யந்தமாமாபோலே, அநாதிகாலமேபிடித்து ப்ரவாஹரூபேண ஸ்ருஷ்ட்யாதிபூதனாய்ப் போருகிற ஸம்ஸாரி சேதநனுக்கு இந்த யாத்ருச்சிகாதிகள் அநாதிபகவத்ஸங்கல்ப சக்திவைசித்ரிமாத்ர

இவன்தன்னை முதலிலே யவன் ஸ்ருஷ்டித்தது.

௱அஅ. அது தன்னை நிரூபித்தா லிவன்தனக்கு ஒன்றும்செய்ய வேண்டாதபடியா யிருக்கும்.

௱அகூ. பழையதாகவுழுவது நடுவது விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரி முளைத்து பலபர்யந்தமாமா போலே, இவைதான் தன்னடையே விளையும்படியா

ஜீ.—மவனுடைய க்ருஷிபலமென்கை. ச-சப்தத்தாலே துல்யந்யாயஜ்ஞாதஸுக்ருதபலங்களுக்குமடியவன் க்ருஷியென்கிறது.—, அன்றிக்கே லக்ஷயமாண நிரூபணவிசேஷங்களை ஸமுச்சயிக்கிறதாகவுமாம். ஸ்ருஷ்டிதான் சேதந கர்மாநுகுணமாகவன்றோ வென்னில் ஸ்ருஷ்டிப்பது கர்மத்தைக் கடாக்ஷித்தேயாகிலும் யௌகபத்ய மநுக்ரஹகார்யமிறே.

௱அஅ. தந்நிரூபணத்தி லிவனுக்கு ஸம்பவிக்குமத்தை யருளிச்செய்கிறார், (அது தன்னை) என்றுதுடங்கி. அதாவது அசிதவிசேஷிதமாய்க்கிடக்கிறதசையிலே உஜ்ஜீவநோபயோகியான கரணகளேபரங்களை பரமதயையாலே அவன்தந்த படியை யநுஸந்தித்தால், தததீநஸத்தாதிகனான விவன்தனக்கு ஸ்வோஜ்ஜீவநாம்சத்தில் அவன்செய்தபடி கண்டிருக்கையொழிய தானொருப்ரவ்ருத்தி பண்ணவேண்டாதபடியா யிருக்குமென்கை.

௱அகூ. ஈச்வரஸ்ருஷ்டியா லிவனுக்குவிளையு மங்கீகாரப்பற்றாசைகள் யாத்ருச்சிகாதிகள் மாத்ரமேயன்று, இன்னம் சிலவுண்டென்று தர்சிப்பிக்கைக்காகவாதல்; கீழ்ச்சொன்னவிவைதா னுண்டாம் ப்ரகாரத்தையுபபாதிக்கைக்காகவாத லருளிச்செய்கிறார் மேல், (பழையதாக) என்றுதுடங்கி. அதாவது புதியதாகத் தரிசுதிருத்தினதன்றிக்கே பழையதாக வுழுவது நடுவதுவிளைவதாய்க்கொண்டு செய்காலாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே, கர்ஷகனதுக் கென்றொருக்ருஷியும்பண்ணாதிருக்க, உதிரியானது

ஆ—த்தைப்பற்றாசாகக்கொண்டு, மற்றொருஹேத்வந்தரமறத்தன்னடையே ஸ்வாங்கீகாரபலபர்யந்தமாக விளையும்படியாயிற்று பக்த்யுத்பாதகனான பத்தியுழவன் பழம்புனமான யாத்ருச்சிகாதிகள் விளையும்நாதி ஸம்ஸாரத்தை ஸ்வஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்டித்தவடைவு தவிராதே நியதமாய் வரும் கட்டளையென்கிறார். ஆக, யாத்ருச்சிகாதிகளும் தத்ஸங்கல்ப ஸித்தமாய் வருமென்றதாயிற்று.

௩௯௦. அநாதி பகவத்ஸங்கல்ப சக்திகார்யமாய் தன்னடையேவிளையுமவைதா னெவையென்னில், என்று ப்ரச்நைபண்ணி;

௩௯௧. உத்தரமருளிச்செய்கிறார்; (𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤) (பூர்வக்ருத) இத்யாதியால். அநாதியேபிடித்துப்பண்ணுவ தநுபவிப்பதாய்ப் போருகிற கர்மபரம்பரையில், பூர்வகாலக்ருத புண்யபாபபலமான ஸுகதுக்கங்களை நெடுங்காலமநுபவித்து, உத்தரகாலக்ருத புண்யபாபபலமான ஸுகதுக்கங்களை அநந்தரகாலத்தில் ததுபயவாஸனைகொண்டு அநுபவிக்க ப்ரவர்த்திக்குமத்தனை பூர்வக்ருதகர்மபல மநுபவித்ததென்னும்படி மற்றொன்றுபற்றுகையொழிந்த மத்யமதசையிலே, குடமிட்டு நீக்க நீங்கும் குழப்பாசிபோலே, கர்மபலாநுபவம் க்ஷணம்மேலெழ நீங்கப்பெற்றபோது, புண்யபாபங்களை யநுபவிக்கிறநாம் ஸ்வதந்த்ரரோ பரதந்த்ரரோ ஆர்தானென்றும், கெடும்படி நின்றோமோ ஈடேறும்படி நின்றோமோ நின்றநிலையேதுதானென்றும், நினைத்ததுசெய்யும் ஸ்வதந்த்ரரல்லாத நமக்கு நம்மால் நன்மையொன்றற்றபின்பு மேலுள்ளகால மீடேறுகைக்குப் போக்கடி

யிற்று; பத்தியுழவன் பழம்புனத்தை ஸ்ருஷ்டித்தகட்டளை.

௩௯௦. அவைதா னெவையென்றால்.

௩௯௧. பூர்வக்ருத புண்யாபுண்யபலங்களை சிரகாலம்புஜித்து, உத்தரகாலத்தில் வாஸனைகொண்டு ப்ரவர்த்திக்குமத்தனையென்னும்படி கையொழிந்ததசையிலே, நாமார் நாம்நின்ற நிலையேது நமக்கினிமேல் போக்கடியே

ஜீ.—மூளைத்து விளைந்ததலைக்கட்டுமாபோலே, மேல் சொல்லப்படுகிற கிருபை விசேஷங்களாதல் கீழ்ச்சொன்னயாத்ருச்சிகாதிகளாதல், இதுக்கென்ன வொருக்ருஷிசெய்யவேண்டாதே இச்சேதநர்பக்கலிலே தன்னடையே விளையும்படியாயிற்று, பக்திக்கு கர்ஷகனான வீச்வரன் ப்ரவாஹரூபேண நடக்கிறஸம்ஸாரமாகிற பழம்புனத்தை ஸ்ருஷ்டித்துத் திருத்துமென்றபடி.

௩௯௦. (இவை) என்று கீழருளிச்செய்தவற்றை விசதீகரிக்கைக்காக தத்விஷய ப்ரச்நத்தை யநுவதிக்கிறார், (அவைதானெவையென்றால்) என்று.

௩௯௧. அதுக்குத்தரமருளிச்செய்கிறார், (𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍃𑌤) (பூர்வக்ருத) இத்யாதியாலே. அதாவது முன்புசெய்யப்பட்ட புண்யபாபரூபகர்மத்வயத்தினுடையவும் பலங்களை ஸ்வர்க்கநரகாதிகளிலே நெடுங்காலமநுபவித்து, மேலுள்ளகாலத்தில் பூர்வகர்மவாஸனைகொண்டு புண்யபாபரூபகர்மங்களில் ப்ரவ்ருத்திக்குமத்தனையென்று சொல்லத்தக்கதாம்படி அச்சுகர்மவாய் கர்மபலாநுபவத்தில் கையொழிந்து நின்றதசையிலே, நாமின்று தேஹமோதேஹாதிரிக்தரோ ஸ்வதந்த்ரரோ நாமாரென்றும், நசிக்கும்படி நின்றோமோ பிழைக்கும்படி நின்றோமோ நாம் நின்ற நிலையேதென்

ஆ.—யின்னதென்றறியலா மதுதானேதென்றும், அச்சபாபர்க்கு தாதாத்விகமாகப் பிறப்பன சில ஸ்வரூபஸ்த்திதிபாவி பலஸாதநங்களைப் பற்றி வரும் ஜ்ஞாநஸம்சய கார்ய நிரூபணவிசேஷங்கள் அநாதி ஸ்ருஷ்டிபலமாகவுண்டு ; இந்த நிரூபணவிசேஷங்களாதல் முன்புசொன்ன யாத்ருச்சிகாதிகளாதல் பகவத்ஸங்கல்பசக்தியடியாகத் தன்னடையே விளையுமவையென்கிறார்.

௩௱௰௨. இந்த முக்க்யாமுக்க்ய நிர்ஹேதுகாங்கீகார விசேஷங்கள் சாஸ்த்ரதாத்பர்ய வசநஸித்தமென்கிறார் மேல் ; "యథాహి మోక్షకాఙ్క్షపాస్థే పరిబర్హాముపేయుషి । నవృత్తమోక్షణోద్యోగా స్తదానస్తమపాసతే" "யதாஹிமோக்ஷ

தென்று பிறப்பனசில நிரூபண விசேஷங்களுண்டு ; அவையாதல் முன்புசொன்னவையாதல்.

௩௱௰௨. "యథాహి మోక్షకాఙ్క్షపాస్థే" "யதாஹி மோக்ஷகாங்க்ஷபாந்த்தே"

ஜீ.—றும், இப்படி நின்றநமக்கினிமே லீடேறுகைக்கிடான் போக்கடியேதென்று தன்னடையே யுண்டாவன சில நிரூபண விசேஷங்களுண்டு, அந்நிரூபண விசேஷங்களாதல் பூர்வோக்தங்களான யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்களாதலென்கை.

௩௱௰௨. இந் நிர்ஹேதுக விஷயீகாரக்ரமம் சாஸ்த்ரத்திலெங்கே சொல்லிற்றென்ன வருளிச்செய்கிறார். ("యథాహి") ("யதாஹி") என்று துடங்கி. பகவச்சாஸ்த்ரம் நூற்றெட்டு ஸம்ஹிதையாயிறே யிருப்பது, அதிலேயொன்றிறே யஹிர்புத்த்ந்யஸம்ஹிதை "పఞ్చరాత్రస్య కృత్స్నస్య వక్తా నారాయణః స్వయమ్" "பஞ்சராத்ரஸ்யக்ருத்ஸ்நஸ்ய வக்தாநாராயண:ஸ்வயம்" என்கிறபடியே ஸகலத்துக்கு மாதிவக்தாபகவானுயிருக்கச்செய்தே தத்தத்ஸம்ஹிதைகள்தோறு மவாந்தரவக்தாக்களு முண்டிறே, அதிலிந்த ஸம்ஹிதைக்கு அஹிர்புத்த்ந்ய ஸம்ஜ்ஞிகனானருத்ரன் வக்தாவாயிருக்கையாலே இத்தை யஹிர்புத்த்ந்ய ஸம்ஹிதையென்கிறது ; இந்த ஸம்ஹிதையிலே "நுண்ணுணர்வில் நீலார்கண்டத்தம்மானும்" என்கிறபடியே ஸத்வம் தலையெடுத்தபோது ஸூக்ஷ்மதர்சியா யிருக்கும் ருத்ரனை, தேவர்ஷியாய் ப்ரஹ்மவித்தமனான ஸ்ரீ நாரதபகவான்சென் றநுவர்த்தித்து ஸ்வஸம்சயங்களெல்லாம்கேட்க, அவன் நிர்ணயித்துக்கொண்டு வாராநிற்க, பதினாலாமத்த்யாயத்தி லிவன்பண்ணின ப்ரச்நத்துக்குத்தரமாக ஸம்ஸாரமோக்ஷ ஹேதுக்களாக நிக்ரஹசக்தி யநுக்ரஹசக்தியென்று ஸர்வேச்வரனுக்கிரண்டுசக்தி யுண்டென்று ப்ரதிஜ்ஞைபண்ணி, அதில் "తిరోధానకరీ శక్తిస్సా నిగ్రహసమాహ్వయా । పుమాంసం జీవసంజ్ఞం సా తిరోభావయతి స్వయమ్" "திரோதாநகரீசக்தி ஸ்ஸாநிக்ரஹஸமாஹ்வயா । புமாம்ஸம்ஜீவஸம்ஜ்ஞம்ஸா திரோபாவயதி ஸ்ஸ்வயம்" என்றுதுடங்கி நிக்ரஹாத்மிகையானசக்தியிலே திரோஹித ஸ்வஸ்வரூபாதிகனாய் ஜீவாத்மாஸம்ஸரிக்கும்படியை விஸ்தரேண ப்ரதிபாதித்து, அநந்தர மநுக்ரஹாத்மிகையான சக்தியாலே ஸம்ஸாரான் முக்தனாம்படியை ப்ரதிபாதிப்பதாக, "ఏవం సంసృతిచక్రస్థే భ్రామ్యమాణే స్వకర్మభిః । జీవే దుఃఖాకులే విష్ణోః కృపా కాప్యుపజాయతే ॥ సమీక్షితస్తు దాసోఽయం కరుణావర్షరూపయా । కర్మసామ్యం భజత్యేవ జీవో విష్ణుసమీక్షయా ॥ శక్తిభావన్నవై జీవ ముత్తారయతి సంసృతేః । కర్మాణి చన మేతత్ర తూష్ణీంభావముపాగతే" "ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்த்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: । ஜீவே துஃக்காகுலேவிஷ்ணோ: க்ருபாகாப்யுபஜாயதே ॥ ஸமீக்ஷிதஸ்துதாஸோऽயம் கருணாவர்ஷரூபயா । கர்மஸாம்யம்பஜத்யேவ

ஆ.—காஃபாங்க்ஷே பரிபர்ஹமுபேயுஷி । நிவ்ருத்தமோக்ஷணோத்யோகா ஸ்ததாஸந்தஉபாஸதே” என்று தொடங்கி. யாத்ருச்சிக ஸுக்ருதஸா பல்யத்தை இதர வக்த்ருகமல்லாத பகவச்சாஸ்த்ரத்திலே மூக்தகண்ட மாகச் சொல்லிற்று.

என்றுதுடங்கி இதினுடைய க்ரமத்தை பகவச்சசாஸ் த்ரத்திலே சொல்லிற்று.

ஜீ.—ஜீவோவிஷ்ணுஸமீக்ஷயா ॥ சக்திபாவஸ்ஸவைஜீவ முத்தாரயதிஸம் ஸ்ருதேஃ । கர்மாணிச்ஸமேதத்ர தூஷ்ணீம்ப்பாவமுபாகதே” என்று ஸம் ஸாரசக்ரஸ்த்தனாய் துஃக்காகுலனான ஜீவன்விஷயமாகஸர்வேச்வரனுக்கொ ருக்ருபை ஜநிக்கும்படியையும், அந்தக்ருபையடியாக வுண்டான வவன் கடாக்ஷத்துக்கு விஷயபூதனாய்க்கொண்டு இவன் கர்மஸாம்யத்தை பஜி க்குமென்னுமத்தையும்; அந்த வநுக்ரஹாத்மிகையான சக்தியினுடைய ஸத்ப்பாவமிவனை ஸம்ஸாரத்தினின்றுமுத்தரிப்பிக்குமென்னுமிடத்தை யும்,கீழ்கர்மஸாம்யமென்றதின்கருத்தையும்ஸங்க்ரஹேணச்சொல்லி, “యథా హి మోక్షకాఙ్క్షాపాఙ్గే పరిబర్హముపేయుషి । నివృత్తమోక్షణోద్యోగా స్తదాసన్తఉపాసతే ॥ అను గ్రహాత్మికాయాస్తు శక్తేఃపాతక్షణేతథా । ఉదాసాతేసమీభూయ కర్మణీతేశుభాశుభే ॥ తత్పా తానన్తరంజన్తు ర్యుక్తో మోక్షసమీక్షయా । ప్రవర్తమానవైరాగ్యో విశేషేఽభినివేశవాన్ ॥ ఆగ మానను సఞ్చిన్త్య గురూనప్యుపసర్వ్యచ । లబ్ధసత్తః ప్రకారైస్తైః ప్రబుద్ధో బోధపాలనః” “யதா ஹிமோக்ஷகாங்க்ஷபாங்க்தே பரிபர்ஹமுபேயுஷி । நிவ்ருத்தமோக்ஷணோத்யோகா ஸ்ததாஸந்தஉபாஸதே ॥ அநுக்ரஹாத்மிகாயாஸ்து சக்தேஃபாதக்ஷ ணேததா । உதாஸாதேஸமீபூய கர்மணீதேசுபாசுபே ॥ தத்பாதாநந்தரம் ஜந்துர்யுக்தோமோக்ஷஸமீக்ஷயா । ப்ரவர்த்தமாநவைராக்யோ விசேஷே உபிநிவேசவான் ॥ ஆகமாநுஸஞ்சிந்த்ய குருகப்யுபஸர்வ்யச । லப்த்தஸத் தஃப்ரகாரைஸ்தைஃப்ரபுத்த்தோபோதபாலகஃ”இத்யாத்யத்த்யாயசேஷத் தாலே வழிபோகிறவன் ஸம்ப்பாரத்தைவைத்து மறையநின்றவளவிலே அவனுடையஸம்ப்பாரத்தை யபஹரிப்பதாக வுத்யோகிக்கிற தஸ்கரர், அந்த ஸம்ப்பாரத்தை யவன் வந்து கைப்பற்றினவளவில் யாதொருபடி நிவ்ருத்தமோக்ஷணோத்யோகராக நின்றுகொண்டேப்போது முதாஸீந ராயிருந்து விடுவர்கள், அப்படியே பகவதநுக்ரஹசக்தி யிவன்பக்கலிலே வந்தக்ஷணத்திலே, இவ்வாத்மாவை தன் வழியேயிழுப்பதாகாநின்ற புண்யபாபகர்மங்களிரண்டும், இவனைவந்து மேலிடாம லுதாஸீநித்திருந் து விடும்; அந்த வநுக்ரஹாத்மிகையானசக்தி தன்பக்கல்வந்த வநந்தர மிச்சேதநன் மோக்ஷஸமீக்ஷாயுக்தனாய் ப்ரவ்ருத்தமான வைராக்யனாய் விவேகாபிநிவேசியாய் சாஸ்த்ரப்ரவணனாய் ஸதாசார்ய ஸம்ச்ரயணம் பண்ணி லப்த்தஸத்தாகனாய் லப்த்தஜ்ஞாநனாய் அந்தஜ்ஞாநத்தை ரக்ஷித் துக்கொண்டு ஸாரக்ராஹியாய் ஸமுசிதோபாயபரிக்ரஹத்தாலே ஸம் ஸாராதுத்தீர்ணனாய் பரமபதத்ஸ்த ப்ராபிக்குமென்று சொன்னானிறே. ஆகையாலே, “యథా హి మోక్షకాఙ్క్షాపాఙ్గే” “யதாஹிமோக்ஷகாஃபாங்க்தே” என்றுதுடங்கி இந் நிர்ஹேதுகவிஷயீகாரத்தினுடையக்ரமத்தை ஆப்த ப்ரமாணமான பகவச்சாஸ்த்ரத்திலே சொல்லிற்றென்கிறார்.

ஆ.—௩௯௩. "வெறிதேயருள்செய்வர்" நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிப்பரென்று ஸாக்ஷாந்நிர்ஹேதுகமாகிற விந்ததாத்பர்யார்த்தத்தை யருளக்கண்டு அநுபவித்ததாமே வெளியிட்டருளிச்செய்தார். யாத்ருச்சிக நிர்ஹேதுகம் சாஸ்த்ரோபதேசவசநஸித்தம், ஸாக்ஷாந்நிர்ஹேதுகம் தாத்பர்யதர்சி வசநஸித்தம்.

௩௯௪. "செய்வார்கட்கு" க்ருபைபண்ணும்படி யத்திக்குமவர்களுக்கு, என்றவனருளுகிற வருளுக்குஹேது புத்திபூர்வக ஸுக்ருதமென்னு நின்றதே, இத்தை நிர்ஹேதுகமென்னும்படி யென்னென்னிலென்று சங்கித்து ;

பரிஹரிக்கிறார் மேல், (அப்போது) இத்யாதியால். ஸுக்ருதமடியாக வருள்செய்வரென்னும்போது நிர்ஹேதுகத்வ வாசகமான "வெறிதே" என்னும் ப்ரதிஜ்ஞை குறையுமாகையாலே சேராது, ஸ்வவசநவிரோதம்வரும் ; ஆகையால் "செய்வார்கட்கு" என்றவிடத்துக்கு தான்செய்ய நினைத்தவர்களுக்கு என்று பொருளாகவேணும்.

௩௯௫. இப்படி நிர்ஹேதுகமாகவே யிவனை யங்கீகரிக்குமிடத்து ஆபிமுக்யத்துக்கு ஹேதுபோலத்தோற்றுகிற ஸுக்ருதம் தத்தேதுவாகாதென்கிறார்மேல், (𑌭𑌗𑌵𑌦𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍍)(பகவதாபிமுக்யம்)இத்யாதியால்.

---

௩௯௩. "வெறிதேயருள்செய்வர்" என்றிவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக வருளிச்செய்தாரிறே.

௩௯௪. "செய்வார்கட்கு" என்றருளுக்கு ஹேது ஸுக்ருதமென்னு நின்றதே யென்னில். அப்போது "வெறிதே" என்கிறவிடமும்சேராது.

௩௯௫. பகவதாபிமுக்யம்

ஜீ.—௩௯௩. இப்படிசாஸ்த்ரம்சொன்னவளவன்றிக்கே நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு நேரேபாத்ரபூதராய், ஆப்ததமாக்ரேஸரரான வாழ்வாரிவ்வர்த்தத்தைத்தெளியவருளிச்செய்தாரென்கிறார் மேல், ("வெறிதே") என்றுதுடங்கி. ("வெறிதேயருள்செய்வர்") என்றது நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணுவரென்றபடி ; (இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக வருளிச்செய்தார்) என்றது - இந் நிர்ஹேதுக விஷயீகாரமாகிற ரஹஸ்யார்த்தத்தை ஸம்சயவிபர்யயமற ஸகலருமறியும்படி ப்ரகாசமாகவருளிச்செய்தாரென்கை.

௩௯௪. அந்த திவ்யஸூக்திக் கநந்தரோக்தியி லபிப்ராயமறியாதார் சங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார், ("செய்வார்கட்கு") என்று துடங்கி. அதாவது அருள்செய்வரென்ற வநந்தர மார்க்குத்தானென்னுமபேக்ஷையிலே "செய்வார்கட்கு" என்று அருளுகைக்குறுப்பாகத்திருவுள்ளமுகக்கும்படி சிலவற்றைச்செய்யுமவர்களுக் கென்கையாலே, அவன் க்ருபைபண்ணுகைக்கு ஹேது சேதந ஸுக்ருதமென்னு நின்றதே யென்னில்,

இப்படி சொல்லும்போது நிர்ஹேதுகவாசகமான "வெறிதே" என்கிறவிடம் ஸங்கதமாகாதேயென்கை ; ஆகையாலே "செய்வார்கட்கு" என்றது - தான்செய்ய நினைத்தவர்களுக்கென்றபடி.

௩௯௫. ஆபிமுக்யத்துக்கு பகவத்க்ருபைகாரணம், அத்வேஷத்துக்கு ஸுக்ருதம் காரணமென்றுநினைத்துச் சொல்லுவார்வசநத்தை யநுவதித்துக்கொண்டுபரிஹரிக்கிறார், (𑌭𑌗𑌵𑌦𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍍)(பகவதாபிமுக்யம்)

ஆ.—பகவத்வைமுக்ய நிவ்ருத்திபலமான க்ருபாபூர்ண தத்விஷயாபிமுக்யம் "యదృచ్ఛాసుకృతం తథా" "யத்ருச்சாஸுக்ருதம் ததா" என்கிற யாத்ருச்சிக ஸுக்ருதத்தாலன்றிக்கே, "విష్ణోః ప్రసాదాత్" "விஷ்ணோ:ப்ரஸாதாத்" என்கிற பகவத்க்ருபையாலே பிறக்கிறதித்தனை. இந்த ச்லோகத்தில் "విష్ణోః ప్రసాదాదద్వేష ఆభిముఖ్యమ్" "விஷ்ணோ:ப்ரஸாதாதத்வேஷ மாபிமுக்யம்" என்று தத்ப்ரஸாதபலமான வத்வேஷகார்யமாகவிறே வாபிமுக்யத்தைச்சொல்லுகிறது; ஆகில் ஆபிமுக்ய பூர்வபாவியான வத்வேஷம் "యదృచ్ఛాసుకృతం తథా" "யத்ருச்சாஸுக்ருதம் ததா" என்கிற ஸுக்ருதத்தாலே பிறந்ததாஞ்லோவென்னில் ஸ்வோஜ்ஜீவநமூலமான பகவதத்வேஷமாகிற விம்மஹாபலவிசேஷத்துக்கு அச்சமாமிந்த யாத்ருச்சிகஸுக்ருதத்தை அநுரூபஸாதநமாக்கப் போராமையாலே யொண்ணாது. மஹாரத்நலாபத்துக்கு பலகறையைஸாதநமாக்க வொண்ணாதிறே. இந்த யாத்ருச்சிகஸுக்ருதத்தை, "యదృచ్ఛాసుకృతం తథా । విష్ణోః ప్రసాదాత్" "யத்ருச்சாஸுக்ருதம் ததா । விஷ்ணோ:ப்ரஸாதாத்" என்று பகவத்ப்ரஸாதஹேதுவாகச் சொல்லுகையாலே தத்கார்யமான வத்வேஷாதிகளுக்கு மிதுபரம்பரையா காரணமாகாதோவென்னில், ஸூர்யோதய ப்ரகாசகாரணமான வுஷ:காலத்துக்கு தத்கிரணகார்யகமலவிகாஸ காரணத்வமில்லாதாப்போலே, விஷ்ணுப்ரஸாதோதய காரணமான யத்ருச்சாஸுக்ருதத்துக்கு, தத்ப்ரஸாதகார்யாத்வேஷாதி காரணத்வமில்லையிறே; பரம்பராகாரணத்வ கல்பனையில் கல்பநாகௌரவதோஷமும், முக்யகாரணத்தின் ஸ்வகார்யோத்பாதக சக்த்யபர்யாப்தி ப்ரஸங்கமும் வரும்; பரம்பராகாரணத்வம் கொள்ளுமிடத்திலும் "ఈశ్వరస్య చ సౌహార్దమ్" "ஈச்வரஸ்யசஸௌஹார்தம்" என்று ப்ரஸாதகாரணமான ஸுக்ருத காரணமாய் பரம்பராகாரணசரமமான பகவத்ஸௌஹார்தத்துக்கே ப்ரஸாதகார்யாத்வேஷாதிகாரணத்வ ஸீமாபூமித்வம் வந்தன்றிகில்லாது, தத்ஸௌஹார்தத்தின் பரம்பராகார்யமானவத்வேஷாதிகள் தத்ப்ரஸாதோதய வ்யஞ்சகத்வமாத்ரமுள்ள தத்கல்பித ஸுக்ருதத்தின் ஸாக்ஷாத் கார்யமென்னப்பெறாது.

ஸுக்ருதத்தாலன்றிக்கே பகவத்க்ருபையாலே பிறக்கிறது அத்வேஷம் ஸுக்ருதத்தாலே யென்னிலிந்த பலவிசேஷத்துக்கத்தை ஸாதநமாக்கவொண்ணாது.

ஜீ.—என்று துடங்கி. அதாவது அநாதிகாலம் விமுகனாய்ப்போந்த விச்சேதநனுக்கு, பகவத்விஷயத்தில் பிறக்கிற வாபிமுக்யம் இவனுடைய ஸுக்ருதநிபந்தநமாகவன்றிக்கே கேவலபகவத்க்ருபையாலே பிறக்கிறது; தத்பூர்வபாவியான வத்வேஷம் ஸுக்ருதமடியாகப் பிறக்கிறதென்று சொல்லப்பார்க்கில், அகிலாத்மகுணநிதியா யாத்மோஜ்ஜீவநாங்குரமாயிருந்துள்ள பகவ தத்வேஷமாகிற விப்பலவிசேஷத்துக்கு, அதிக்ஷுத்ரமான யாத்ருச்சிகாதி ஸுக்ருதத்தைக் காரணமென்று சொல்லவொண்ணாதென்கை. ஆகையாலத்வேஷத்துக்கும் பகவத்க்ருபையே காரணமென்று சொல்லவேணுமென்று கருத்து.

ஆ.—௩௬௬. சாஸ்த்ரவிஹிதமுமாய் நாமுமறியுமதானவொன்றை யன்றோ ஸுக்ருதமென்றுபேரிட்டுச்சொல்லலாவது, "మోక్షకామోయదృచ్ఛా సుకృతం కుర్యాత్" "மோக்ஷகாமோயத்ருச்ச்சா ஸுக்ருதம்குர்யாத்" என்று மோக்ஷஸாதநமாக சாஸ்த்ரம்விதியாதே, இன்னஸுக்ருதம்பண்ணினேமென்று நாமுமறியாதே, அநாதியுமாய் அதிதுச்ச்சங்களுமானவிவற்றை ஸுஷ்ட்டுவாகக்ருதமாம் ஸுக்ருதமென்று வ்யுத்பத்திபண்ணுதகாம் வ்யுத்பந்நப்பேரிடும்படி யென்னென்னில், தத்ஜ்ஞரல்லாதநா மிதுக்குஸுக்ருதமென்று பேரிடுகிறோமன்று; ஸர்வஜ்ஞனான ஸர்வேச்வரந்தானே தனக்கு ஸர்வாங்கீகார ப்ரஸங்கம் வாராமைக்குச்சிலவற்றைக்கல்பித்து, அவற்றுக்கு ஸுக்ருதமென்றொரு பேரிட்டானென்று ஸூக்ஷ்மதர்சிக ளுபதேசிக்கக்கேட்டு புத்திபண்ணியிருக்கையா யிருக்குமென்கிறார்.

௩௬௭. இந்த நிர்ஹேதுக விரோதபரிஹார ப்ரகாரங்களை துரவகாஹத்வபயத்தைப்பற்ற விஸ்தரித்துச்சொல்லுகிறிலோ மென்கிறார், (இவ்வர்த்தவிஷயமாக) இத்யாதியால். ஸஹேதுக நிர்ஹேதுகாங்கீகாரமாகிற விவ்வர்த்தவிஷயமாகவன்றியே முக்ய நிர்ஹேதுகாங்கீகாரமாகிற விவ்வர்த்த விஷயமாக, பகவத்விஷயத்தை ஸாக்ஷாத்கரித்தநுபவிக்குமேககண்டரான வாழ்வார்களுடைய அநுபவப்ரவாஹ ரூபமாய் பகவதங்கீகார ப்ரகாசகமான மறுப்பெருக்கின பாசுரங்களில் "எண்டானு

---

௩௬௬. சாஸ்த்ரமும் விதியாதே நாமு மறியாதே யிருக்கிறவித்தை, ஸுக்ருதயென்று நாம் பேரிடுகிறபடி யென்னென்னில், நாமன்று ஈச்வரனென்று கேட்டிருக்கை யாயிருக்கும்.

௩௬௭. இவ்வர்த்தவிஷயமாக ஆழ்வார்கள் பாசுரங்களில் பர

ஜீ.—௩௬௬. சாஸ்த்ராவிஹிதமாய் சேதநாவிதிதமுமான விந்தயாத்ருச்ச்சிகாதிக்கு ஸுக்ருதமென்று பேரிட்டாரின்றோரென்னுமிடத்தை சங்காபரிஹாரரூபேண வருளிச்செய்கிறார், (శాస్త్రము) (சாஸ்த்ரமும்) என்றுதுடங்கி. அதாவது "ఇదంకుర్యాత్" "இதம்குர்யாத்" என்று சாஸ்த்ரவிஹிதமுமாய் கர்த்ருபூதரான சேதநராலே புத்திபூர்வேணநுஷ்ட்டிதமுமான தொன்றையிறே ஸுக்ருதமென்பது; அப்படியே இத்தைச்செய்வானென்று சாஸ்த்ரமும் விதியாதே இன்ன ஸுக்ருதம் பண்ணினேமென்று தத்கர்த்தாக்களான நாமுமறியாதேயிருக்கிறவிந்த யாத்ருச்ச்சிகாதியை ஸுக்ருதமென்று நாம் பேரிடுகிறபடியெங்ஙனே யென்னில், இதுக்கு ஸுக்ருதமென்று பேரிடுகிறோம் நாமன்று, ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வாராமைக்காக ஸர்வஜ்ஞனா னீச்வரன் ஸுக்ருதமென்று பேரிட்டுவைத்தானென்று தத்த்வதர்சிகளான வாசார்யர்களருளிச்செய்யக்கேட்டிருக்கையா யிருக்குமென்கை. ஆகக்கீழ் "வெறிதேயருள்செய்வர்" என்று மயர்வறமதிநலம் பெற்றவர்களில் தலைவரான நம்மாழ்வார் நிர்ஹேதுக விஷயீகாரமாகிற விவ்வர்த்தத்தை விசதமாக வருளிச்செய்தபடியை தர்சிப்பித்து அதின்மேல் வந்த சங்காபரிஹாரம் பண்ணியருளினாராயிற்று.

௩௬௭. இனி யிவ்வர்த்தவிஷயமாக வாழ்வார்கள் பாசுரங்களி லயோக்ய விருத்தம்போலத்தோற்று மவற்றுக்குப் பரிஹாரமும், இவ்வர்த்தஸ்த்தாபகமாக மற்றும் சொல்லவேண்டும் ப்ரமாணதர்க்கங்களும், இவ்விடத்திலே தாமருளிச்செய்யாமைக்கு ஹேது வின்னதென்கிறார், (இவ்வர்த்தவிஷயமாக) என்றுதுடங்கி. அதாவது-நிர்ஹேதுகவிஷயீகார

ஆ.—மின்றியே" "எண்ணிலும்வரும்" "வெறிதேயருள்செய்வர் செய்வார்கட்குகந்து" "நோற்றநோன்பிலேன்" "நோற்றேன்பல்பிறவி" "நின்னருளேபுரிந்திருந்தேன்" "இன்றுவந்திங்குன்னைக் கண்டுகொண்டேன்" "உனதருளேபார்ப்பன்" "நின்னருளென்பாலதே" "வணங்கினல்செறிந்தெழுந்தஞானமோடு செல்வமும் செறிந்திடும்" "போதரேயென்று சொல்லிப்புந்தியில்புகுந்து தன்பாலாதரம்பெருகவைத்த" "உன்னையன்றேயழைக்கின்றேன்" "திருக்கமலபாதம்வந்து" "சென்றதாமென் சிந்தனையே" "யானெத்தவத்தால் காண்பன்கொலென்று" "யானெத்தவஞ்செய்தேன்" என்றேவமாதிகளாலே ஸஹேதுக நிர்ஹேதுகாங்கீகாரோபயப்ரகாசகாகாரேண மேலெழப்பார்த்தால் பரஸ்பரவிருத்தம்போலே மந்தமதிகளுக்குத்தோற்றும்; எண்ணிலும் வருகைக்கு பரிகணநாப்ரபாவம்; செய்வார்கட்கு நியமிதசப்தார்த்தத்வம்; நோற்றேனுக்கு தத்தர்சநார்த்தஸ்க்காலித்யம்; இன்றுவந்துக்கு தத்தர்சஜநித விச்லேஷாஸஹிஷ்ணுத்வம்; நான் வேண்டிநிற்பனுக்கு தத்வைலக்ஷண்ய ப்ரேரிதத்வம்; அடியிணைவணங்கினலுக்கு தத்ப்ரணதி ப்ரசம்ஸை; அன்றேயழைக்கின்றேனுக்கு க்ரூரவிஷய ஸ்மரணாக்ரோசம்; சென்றதாமுக்கு தத்விக்ரஹாநுபவாபிநிவேசம்; தவஞ்செய்தேனுக்கு ப்ரஸங்கபாஷாஸ்துதி லாபஹர்ஷப்ரகர்ஷம் என்ற விருத்தமானவற்றில் வரும் விருத்தப்ரதீதிக்கு அநுரூபமாகச்சொல்லும் விரோதிபரிஹாரமும், இப்படியாழ்வார்கள் பாசுரங்களுக்குச்சொல்லும் பரிஹாரமொழிய நிர்ஹேதுக விஷயமாக மற்றுமுண்டான விரோதிபரிஹாரரூபங்களான ப்ரமாண

ஸ்பர விருத்தம்போலே தோற்றுமவற்றில் சொல்லுகிறபரிஹாரமும், மற்றுமுண்டான வக்தவ்யங்களும்

ஜீ.—மாகிற விவ்வர்த்தவிஷயமாக இவ்விஷயீகாரத்துக்கிலக்காய் "மயர்வறமதிநலம்பெற்ற" வாழ்வார்களுடைய பகவதங்கீகாரப்ரகாசகங்களான பாசுரங்களில் "வெறிதேயருள்செய்வர்" "எங்கன்றி செய்தேனா வென்னெஞ்சில் திகழ்வதுவே" என்றும் "திருமாலிருஞ் சோலைமலையென்றேனென்ன" "மாதவனென்றதேகொண்டு" என்றும் "நல்லதோரறம் செய்துமிலேன்" என்றும் "நோற்றேன் பல்பிறவி" என்றும் "யானெத்தவத்தால் காண்மின்கொலின்று" என்றும் "யானேதவம்செய்தேன்" என்று மித்யாதிகளாலே பகவதங்கீகார ஹேதுக்களொன்றும் தங்கள் பக்கலில்லையென்பதும் உண்டானப்போலச் சொல்லுவதாகையாலே கருத்தறியாதவர்களுக்கு பரஸ்பர விருத்தம்போலே ப்ரதிபாஸிக்குமென்கை. அவற்றில் சொல்லும் பரிஹாரங்களான, "மாதவன்" "மலை" என்கிற வைவ்யாவ்ருத்த்யுக்திமாத்ர மாகையா லவற்றையாரோபித்துவந்து மேல்விழுகிற பகவத்க்ருபையே யங்கீகாரஹேது, அவைஹேதுவன்றென்னுமிடம் ஸித்தம்; "நோற்றேன்பல்பிறவி" என்றது இவனுக்குப்பல ஜந்மங்களுண்டாம்படியாக வாயிற்று நான் ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணிற்றென்று ஸ்வநிகர்ஷம் சொன்னவித்தனை. அநேகஜந்மமுன்னைப் பெறுகைக்கு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணினேனென்றபடியன்று; "யானேதவம் செய்தேன்" என்றது - இருந்தமிழ் நன்மாலையிணையடிக்கேசொல்லப்பெற்ற ப்ரீத்யதிசயத்தாலே என்னைப்போலே பாக்யம் பண்ணினாரில்லையென்றிப்பேறுபெற்ற தம்மைச்லாகித்தமாத்ரமென்று இப்புடைகளிலே நிர்ஹேதுகவசநவிரோதம் வாராதபடி ஸஹேதுகம்போலத் தோற்றுமவற்றுக்குச் சொல்லும் பரிஹாரங்கள் (மற்றுமுண்டான வக்தவ்யங்களாவன-

ஆ.—ந்யாயங்களாகிற வக்தவ்யங்களும், தூரவகாஹத்வஹேதுவான ப்ரபந்த விஸ்தரபயத்தாலே விவரித்துச்சொல்லுகிறிலோமென்கிறார். இந்த நிர்ஹேதுகாங்கீகாரமென்கிற விதில் ஹேதுவினபாவம் தத்க்ருபையொழிந்த ஹேத்வந்தராபாவத்தைக் காட்டுமித்தனையல்லது அத்யந்தாபாவத்தைக் காட்டுகிறதன்று, கடாபாவம் கபாலாபாவத்தை யொழிந்தவத்யந்தாபாவத்தைக்காட்டாதிறே; இந்த வங்கீகாரஹேதுவாயற்ற பகவத்க்ருபை தன்னோடொக்கவநாதியான ஸம்ஸாரபந்தவிநாசகையாகக் கூடாதென்னவேண்டா, அநாதியான விஷௌஷதங்களுக்குப்போலவு முபயஸம்யோகத்தில்வரும் நாச்யநாசகஸம்பந்த மிவற்றுக்கும் கடிக்கையால்; ஸ்வநிரோதகமான ஔஷதசக்திபோகவே அக்நியின் தாஹகத்வசக்தி தோன்றுமாபோலவும், ஜலாதி ஸஹகாரியைப்பெறவே பீஜத்தின் ஸ்வதஸ்ஸித்தாங்குர சக்திதோன்றுமாபோலவும் பகவல்லீலாரஸேச்சையாகிற ப்ரதிபந்தகமற்று போகரஸேச்சையாகிற ஸஹகாரியைப்பெறவே க்ருபையின் ஸம்ஸார நிவர்த்தகத்வசக்தி காலாந்தரத்தி லுதிக்கத்தட்டில்லை; தேஜஸ்திமிரம்போல ஸஹாவஸ்தாநம் கடியாதபாத்யபாதகஸம்பந்தம் க்ருபாஸம்ஸாரங்களுக் கில்லாமையால், ப்ரதிபந்தகமற்று ஸஹகாரியைப்பெற்றபோது ஸம்ஸாரத்தின் கதிபயசேதந பந்தகத்வத்தைக் குலைக்கிறதித்தனையல்லது ஸம்ஸார ஸ்வரூபநாசகையாகிறதன்று. ஸம்ஸாரநிவர்த்தகையான விந்த பகவத்க்ருபாங்கீகாரமொழிந்த யாத்ருச்சிகாதி நிமித்தாங்கீகாரம் நிர்ஹேதுகம்போலத் தோற்று மத்தனை, சேதநஸுக்ருத துஷ்க்ருதங்கள் பாராமல் ஸ்வகதக்ருபையே ஹேதுவாக ஸங்கல்பித்தகாலங்களிலே யங்கீகரிக்கை ஸாக்ஷாந்நிர்ஹேதுகம்; என்றேவமாதியான நிர்ஹேதுகவிஷயமாக வருமவை (மற்று முண்டான வ்யக்தவ்யம்) என்றருளிச்செய்வர்.

௩௯௮—௨௦௧. இப்படி நிர்ஹேதுகமாக வங்கீகரிக்கவேண்டும் ஸம்பந்தமுடைய ஸர்வப்ரகார ரக்ஷகனையநுஸந்தித்தால் பிறக்குமதிகாரி க்ருத்

விஸ்தரபயத்தாலே சொல்லுகிறிலோம்.

௩௯௮. ஆகையால் இவன் விமுகனான தசையிலும்கூட வுஜ்ஜீவி

ஜீ.—மற்று மிந்நிர்ஹேதுக ஸ்தாபகார்த்தமாகச் சொல்லவேண்டுமவையான "ఏవంసంసృతిచక్రస్థే భ్రామ్యమాణేస్వకర్మభిః। జీవేదుఃఖాకులేవిష్ణోః కృపాకాప్యుపజాయతే॥ నిర్హేతుకకటాక్షేణ మదీయేనమహామతే। ఆచార్యవిషయీకారాత్ప్రాప్నువన్తిపరాంగతిమ్॥ నాసౌపురుషకారేణ నచాప్యన్యేనహేతునా। కేవలంస్వేచ్ఛయైవాహం ప్రేక్షేకఞ్చిత్కదాచన"

"ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்த்தே ப்ராம்யமாணேஸ்வகர்மபி: । ஜீவே துக்காகுலேவிஷ்ணோ: க்ருபாகாப்யுபஜாயதே॥ நிர்ஹேதுககடாக்ஷேண மதீயேந மஹாமதே । ஆசார்யவிஷயீகாராத்ப்ராப்நுவந்திபராங்கதிம் ॥ நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேநஹேதுநா । கேவலம்ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷேகஞ்சித்கதாசந" இத்யாதி ப்ரமாணங்களும், ஏததநுக்ராஹகதர்க்கங்களும்; (விஸ்தரபயத்தாலே சொல்லுகிறிலோம்) என்றது - இவையெல்லாம் சொல்லப்பார்க்குமளவில் க்ரந்தப்பரப்புவருமென்றஞ்சி சொல்லுகிறோமில்லை யென்றபடி.

௩௯௮. ஆகக்கீழ் (பகவத்குணாநுஸந்தாந மபயஹேது) என்னப்ரதிஜ்ஞைக் குபபாதமாக (த்ரிபாத்விபூதியிலே) என்றுதுடங்கி. இவ்வளவும் ஈச்வரனிவ்வாத்மோஜ்ஜீவநார்த்தமாக விமுகதசையேபிடித்து க்ருஷிபண்ணிப் போரும்படியை விஸ்தரேணவருளிச்செய்தார்; அதுதன்னை

ஆ.—யத்தை யருளிச்செய்கிறார்மேல், (ஆகையால்) இத்யாதியால். அங்கிகாரஹேதுவா யிருப்பதித்தலையி லொன்றுமில்லையாகையாலே, ஸ்வசரீரபூதனான விச்சேதநன் விஷயாந்தர ப்ரவணனாய்க்கொண்டு விமுகனான குணலேசமற்ற ஸம்ஸாரதசையிலும்கூட தன் திருவடிகளைச்சேர்ந் துஜ்ஜீவிக்கும்படி அத்வேஷாதிகள் யாத்ருச்சிகாதிகள்விளைய முன்னமே ஸங்கல்பித்து க்ருஷிபண்ணின சரீரியானவீச்வரனை நிருபாதிக ரக்ஷகனென் றிவ்வதிகாரி யநுஸ்ந்தித்தால், ஜ்ஞாநதசை துடங்கி யெப்போதும் தன்

க்கைக்கு க்ருஷிபண்ணின வீச்வரனை யநுஸந்தித்தால், எப்போதும் நிர்ப்பரனாயே யிருக்குமித்தனை.

௩௯௯. "எதிர்சூழல்புக்கு"

௪௦௦. ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரைவளைவாரைப்போலே வ்யாப்தியும்.

௪௦௧. ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே ஸ்வார்த்தமாகவென்றிறே ஜ்ஞாநாதிகாநுஸந்திப்பது.

ஜீ.—நிகமிக்கிறார், (ஆகையால்) என்று துடங்கி, அதாவது ஈச்வரனிவ்வாத்மோஜ்ஜீவநத்துக்கு க்ருஷிபண்ணும் கட்டளையிதுவாகையால் இப்படியிச்சேதநன் தன்பக்கல் விமுகனான வவஸ்த்தையிலுமுட்பட விவனுஜ்ஜீவிக்கைக்கு க்ருஷிபண்ணிப்போந்த குணாதிகனானவவனை யநுஸந்தித்தால், ஏவம்பூதனானவ னிவ்வவஸ்த்தாபந்நராக்கின நம்மை கர்மாநுகுணமாக ஸம்ஸரிக்கவிடானென்று தத்குணவிச்வாஸத்தாலே ஸர்வகாலமும் நிர்ப்பரனாயே யிருக்குமித்தனை, பயப்ரஸங்கமில்லை யென்றபடி.

௩௯௯. (விமுகனானதசையிலும்கூட வுஜ்ஜீவிக்க க்ருஷிபண்ணின வீச்வரனை யநுஸந்தித்தால்) என்றுதாம் கீழருளிச்செய்த வர்த்தத்திலாப்திக்குடலாக ஜ்ஞாநாதிகருடைய வநுஸந்தாநவிசேஷத்தை யருளிச்செய்கிறார், ("எதிர்சூழல்புக்கு") என்று. "எதிர்சூழல்புக்கு" என்றது - எனக்குத்தப்ப வொண்ணாதபடி பார்த்தவிடமெங்கும் தானே யாம்படியான வ்யாப்தியிலே யுள்புக்கென்றபடி; "எதிர்சூழல்" என்கிறது - அவதாரபரமாக மற்றுள்ளாராலே வ்யாக்யாதமாயிற்றாகிலும், இப்போதிவ ரிவ்விடத்தில் வ்யாப்திபரமாக வருளிச்செய்கிறார்; அநேகயோஜனைகளுண்டாயிறே யிருப்பது.

௪௦௦. அதுக்கு த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார், (ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரைவளைவாரைப்போலே) என்று. அதாவது - ஒருவனைப்பிடிக்க நினைத்தவன் அவனைத்தப்பாமல் பிடிக்கவேணுமென்றபிநிவேசத்தாலே அவ்வூரைச்சேர வளையுமாபோலே யாயிற்று ஓராத்மாவை யகப்படுத்திக்கொள்ளுகைக்காக ஸகலசேதநாசேதநங்களிலும் வ்யாபித்துநிற்கும்படி; ஆகையாலே வ்யாப்தியும்ஸ்வார்த்தமாக வென்றிறே ஜ்ஞாநாதிகாநுஸந்திப்பதென்கிறார் (வ்யாப்தியும்) என்றது - ஸர்வஸத்தாஹேதுவான வதுவுமுட்பட வென்றபடி.

௪௦௧. ஸ்ருஷ்ட்யவதாராதிகளை ஸ்வார்த்தமாக வநுஸந்திக்கையை ஸித்தவத்கரித்து, இதுக்கு த்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார், (ஸ்ருஷ்ட்யவதாராதிகளைப்போலே) என்று. முந்நீர் ஞாலத்தில் முதல் பாட்டிலே ஸ்ருஷ்டியை ஸ்வார்த்தமாகவும், இரண்டாம் பாட்டிலும் மூன்றும் பாட்டிலு மவதாரங்களை ஸ்வார்த்தமாகவும் இவர் தாமே யநு

ஆ.—னுடைமை தானே கைக்கொள்ளுகிறானென்று நிர்ப்பரனாய் மார்விலே கைவைத்திருக்குமத்தனை யென்கிறார்.

சு0உ. நிர்ப்பரனாயிராதே ஸ்வரக்ஷணத்திலே முயன்று விலக்கடி தேடிலும் அவன் க்ருபையை யிவனால்தவிரப்போகா தென்கிறார் மேல், (కర్మఫలమ్) (கர்மபலம்) இத்யாதியால். அநாத்யவித்யா ஸஞ்சிதமான புண்யபாபகர்மபலமான ஸுகதுःக்கங்களை யநுபவித்தேயறவேண்டினாப்போலே, அநாத்யநந்த பகவத்க்ருபாஸஞ்சிதமான ஜ்ஞாநாதிமோக்ஷாந்தமான வநந்தஸ்த்திர ஸுகபலமும் தன்னால் தவிர்த்துக்கொள்ளப்போகாது, அநுபவித்தேயறவேணும்.

சு0௩. அசக்தனானவனேயன்றியே ஸர்வசக்தனானவனாலும் தலையெடுத்தக்ருபையைத் தகையவொண்ணாதென்கிறார், (க்ருபைபெருகப்புக்கால்) இத்யாதியால். அநாதிகாலமேபிடித்து பகவத்ஸ்வாதந்த்ர்ய நிருத்தமான க்ருபை, ஸ்வாதந்த்ர்யவணையை யுடைத்து கடலுடைத்தாற்போலே தகையறப்பெறப் பெருகப்புக்கால், ஸ்வாதந்த்ர்யமான ஸ்வதःஸ்வதந்த்ரனுடைய நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தாலும், ஸ்வவிஷயமான ஸ்வதःபரதந்த்ரனுடைய வாகந்துக ஸ்வாதந்த்ர்யத்தாலும் அடக்கியும் விலக்கியும் தகையவொண்ணாதபடி உபயஸ்வாதந்த்ர்யமாகிற விருகரையும்,

---

சு0உ. கர்மபலம்போலே க்ருபாபலமுமநுபவித்தே யறவேணும்.

சு0௩. க்ருபைபெருகப்புக்கா லிருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும்

ஜீ.—ஸந்த்தித்தருளினாரிறே. (அவதாராதிகள்) என்கிறவிடத்தி லாதிசப்தத்தாலே குணசேஷ்டாதிகளைச் சொல்லுகிறது.

சு0உ. இப்படியிவன் விமுகனானதசையிலும் ஸ்ருஷ்ட்யவதாராதிகளாலே இவனுடைய வுஜ்ஜீவநத்துக்கவன் க்ருஷிபண்ணிப்போருகிறது, தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலேயிறே; தாத்ருச க்ருபாபல மிவனுக்கு அவச்யாநுபாவ்ய மென்னுமிடத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்யாநின்றுகொண்டு, கீழ் (நிர்ப்பரனாயிருக்குமித்தனை) என்றவற்றை ஸ்த்திரீகரிக்கிறார் மேல், (கர்மபலம்போலே) என்றுதுடங்கி அதாவது - தான்செய்த புண்யபாபரூபகர்மபலம், "అవశ్యమనుభోక్తవ్యమ్" "அவச்யமநுபோக்தவ்யம்" என்கிறபடியே யநுபவித்தே யறவேண்டுமோபாதி, நித்யஸம்ஸாரஹேதுவான கர்மத்தைத்தள்ளி நித்யஸூரிகளோடு ஸமாநபோகபாகியாக்குகைக்கு ஹேதுவான வவனுடைய க்ருபாபலம் இவனுக்கிச்சையில்லையேயாகிலு மவச்யமநுபவித்தே விடவேணுமென்கை.

சு0௩. ஏவம்பூத க்ருபையநாதியாகச்செய்தே, கர்மகர்த்தாவான சேதநனுடையவும் தத்பலபோக்தாவான ஈச்வரனுடையவும் ஸ்வாதந்த்ர்யங்களாலே தகையப்பட்டன்றோ கிடந்துபோந்தது, இன்னமு மப்படியானாலோவென்ன வருளிச்செய்கிறார், (க்ருபைபெருகப்புக்கால்) என்றுதுடங்கி அதாவது க்ருபாகுணம் நிரங்குச ஸ்வதந்த்ரனான ஈச்வரன் தானிட்டகட்டளையிலே வந்தவாறே யங்கீகரிக்கக்கடவோமென்று இச்சேதநனை கர்மாநுகுணமாக நிர்வஹிக்குமளவில் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகையப்பட்டு நிற்குமதொழிய, அக்கட்டளையில் வாராமையாலே துர்க்கதியேபற்றாசாக விவனையவன்தானே மேல்விழுந்தங்கீகரிக்கைக் குடலாம்படி பெருகுமளவில், ஸ்வாச்ரயமான ஈச்வரனுடைய "శ్రుతిః స్మృతిర్మమైవాజ్ఞా యస్తాముల్లఙ్ఘ్య వర్తతే" "ச்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா

ஆ.—கட்டுக்குலைந்து கரைந்தழிய விஷயத்தி லளவன்றியே, தன் பெருமையேபார்த்தளவறப்பெருகும், "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்று அக்கரைப்படுத்தி யல்லது நில்லாதபடி கரையடைந்த க்ருபாங்கீகாரமே ப்ரபலமென்று தலைக்கட்டுகிறார்.

௨௦௪. இந்த க்ருபாவிஷயமான வதிகாரியினுடைய பயாபய ஹேது வின்னதென்று ப்ரஸ்துதார்த்தத்தை நிகமிக்கிறார் (பயஹேது இத்யாதியால். அவன் க்ருபையே தஞ்சமென்று நிர்ப்பயனாயிருக்கு மிவ்வதிகாரிக்கு, இன்னமும் ஸம்ஸரிக்கில் செய்வதென்னென்கிற பயத்துக்கு ஹேது, அநாதிகாலமே பிடித்து ஸம்ஸரிக்கைக் கடியான ஸ்வக்ருத ஸதஸத்கர்ம ஸ்மரணம் இனி ஸம்ஸாரமடியற்றது சரீராவஸாநத்தில் பேறு தப்பாதென்று நிர்ப்பயனாகையாகிற வபயஹேது, நிர்ஹேதுகமாக ஸம்ஸாரத்தையறுத்துக் கடுக நல்பேற்றைப் பண்ணிக்கொடுக்கு மபங்குர பகவத்காருண்யஸ்மரணம்.

௨௦௫. இந்த கர்ம காருண்யங்களால் வரும் பயாபயங்களிரண்டும் தத்தத்ஸ்மரணாவலம்பங்களாய்க்கொண்டு மாறிமாறி யர்ச்சிராதிகதி ப்ரா

தகையவொண்ணாதபடி யிருகரையு மழியப்பெருகும்.

௨௦௪. பயஹேதுகர்மம்; அபயஹேதுகாருண்யம்.

௨௦௫. பயாபயங்களிரண்டும் மாறிமாறி

ஜீ.—யஸ்தாமுல்லங்க்யவர்த்ததே" என்கிறபடியே யீச்வராஜ்ஞையை யதிலங்கித்து நடக்கைக்கடியானஸ்வாதந்த்ர்யத்தாலும் நிரோதிக்கவொண்ணாதபடி "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்கிறபடியே யுபயஸ்வாதந்த்ர்யரூபமான விரண்டுதலையு முடைந்தழியும்படி யொருமட்டில் நில்லாமை மேல்மேலும் பெருகா நிற்குமென்கை.

௨௦௪. ப்ரகரணாதியில் பயாபயஹேதுக்களாகச்சொன்ன ஸ்வதோஷ பகவத்குணங்களில் வைத்துக்கொண்டு, கர்மகாருண்யங்கள் ப்ரதாநங்களாகையாலே அவற்றையுபபாதித்துக்கொண்டு வந்தார்கீழ்; அது தன்னை நிகமித்தருளுகிறார் மேல், (பயஹேது என்றுதுடங்கி. அதாவது ஈச்வரனே யுபாயமென்றிருக்கிற விவ்வதிகாரிக்கு இன்னமும் ஸம்ஸாரமநுவர்த்திக்கில் செய்வதென்னென்கிற பயத்துக்குஹேது அநாதிகாலம் ஸம்ஸரிக்கைக்குக் காரணமாய்ப்போந்த ஸ்வகர்மஸ்மரணம்; "சூழ் பிறப்பும் மருங்கேவரப்பெறுமே" என்கிறபடியே ஸம்ஸாரம் நம்மருகும் வரமாட்டாது, சரீராவஸாநத்தில் பகவத்ப்ராப்திக்குக் கண்ணழிவில்லையென்று நிர்ப்பயனாயிருக்கைக்கு ஹேது, கர்மத்தைப்பாராம லங்கீகரித்து ஸம்ஸாரத்தை யடியறுத்து தன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளுகைக்குறுப்பான வவனுடைய நிர்ஹேதுக காருண்ய ஸ்மரணமென்கை. (స్వదోషానుసన్ధానమ్) (భగవద్గుణానుసన్ధానమ్) (ஸ்வதோஷாநுஸந்தாநம்) (பகவத்குணாநுஸந்தாநம்) என்று துடங்கினத்தை நிகமிக்கிறவிடமாகையாலே (కర్మ) (కారుణ్యమ్) (கர்மம்)(காருண்யம்) என்கிறவிடத்தில் ஸ்மரணபர்யந்தம் விவக்ஷிதம்.

௨௦௫. இப்பயாபயங்களிரண்டு மிவனுக்கெவ்வளவாக நடக்குமென்ன வருளிச்செய்கிறார், (பயாபயங்களிரண்டும்) என்றுதுடங்கி. அதாவது பகவத்க்ருபாவிஷயமாயும், ப்ரக்ருதியோடே யிருக்கையாலே யநாதிகாலம் ஸம்ஸரணஹேதுவாய்ப் போந்த ஸ்வகர்மத்தை யநுஸந்திப்பது, அத்தைப்பாராதே அங்கீகரித்த பகவத்காருண்யத்தை யநுஸந்திப்ப

ஆ.—ப்தியளவும், முமுக்ஷுத்வ லக்ஷணமான விரக்தி விச்வாஸங்கள் முற்றும்படி விடாமல் நடக்கும்.

சூ०ஸு. பகவத்க்ருபைக நிவர்த்யமான ஸம்ஸாரப்ராபல்ய ஜ்ஞாநம், இத்தால் மயக்குண்டினும் ஸம்ஸரிக்கில் செய்வதென்னென்னும் பயஹேது; நிர்ஹேதுகாங்கீகாரத்தாலே ப்ரபலஸம்ஸாரத்தை ஸவாஸநமாக நிவர்த்திப்பிக்கவல்ல ஸம்ஸார நிவர்த்தக பகவத்க்ருபாப்ராபல்யஜ்ஞாநம், இனி நாம் மேல்விழிலும் ஸம்ஸாரம் நம்மைக்கிட்டமாட்டாதென்னும் நிச்சலமான அபயஹேதுவென்று ப்ரகரணாதியில் ப்ரஸ்துதார்த்தத்தோடே சேர்த்து நிகமிக்கிறார். இப்ரகரணத்தில் அஜ்ஞாதஸுக்ருத நிமித்தாங்கீகாரத்தையும், ததநபேக்ஷமான நிர்ஹேதுகாங்கீகாரத்தையுமருளிச்செய்து, இரண்டுமபிமதமாயல்ல, ஸ்வபுத்திக்ருதஸுக்ருதத்தைப்பற்றவே யவனங்கீகரிக்குமென்னும் ப்ரதிபத்தியை நிரஸ்கரிக்கைக்காக அபுத்திக்ருத ஸுக்ருதாங்கீகாரத்தையும், இதுதன்னை நிரஸ்கரிக்கைக்காக முக்கிய நிர்ஹேதுகாங்கீகாரத்தையும் க்ரமேண வெளியிடுகைக்காக வித்தனை. இதில் "வெறிதேயருள்செய்வர்" "నిర్హేతుకకటాక్షేణ మదీయేన మహామతే" "நிர்ஹேதுககடாக்ஷேண மதீயேந மஹாமதே" என்றாழ்வார்களுக்குமாசார்யர்களுக்குமபிமதமாய் தத்க்ருபாதிக ரக்ஷகத்வ தூஷகமாகாத நிர்ஹேதுகாங்கீகாரமேயிறே யிவர்களுக்கபிமதம். பகவத்ஸ்வாதந்த்ர்யகார்யம் ஸம்ஸாரம், பகவத்க்ருபாகார்யம் மோக்ஷமென்று பூர்வாசார்யர்கள்

ப்ராப்தியளவும் நடக்கும்.

சூ०ஸு. நிவர்த்ய ஜ்ஞாநம் பயஹேது,

ஸ்ரீ.—தாய்க்கொண்டிறே இவ்வதிகாரியிருப்பது; அதில்கர்மத்தை யநுஸந்தித்தபோது பயமும், காருண்யத்தை யநுஸந்தித்தபோது அபயமுமா யிரண்டும் மாறிமாறி ப்ரக்ருதி ஸம்பந்தமற்று பகவத்ப்ராப்தி பண்ணுமளவும் நடக்குமென்கை.

சூ०ஸு. இப்படி யுபயமும் மாறிமாறி ப்ராப்தியளவும் நடக்கிறதென், தத்குணவிச்வாஸத்தாலே யெப்போதுமொக்க நிர்ப்பயனாயிருக்கவொண்ணாதோவென்னவருளிச்செய்கிறார், (నివర్త్యజ్ఞానమ్) (நிவர்த்யஜ்ஞாநம்) என்று துடங்கி. அதாவது அவனுடையகாருண்யத்தாலே நிவர்த்திக்கப்படுமதான வவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்த விஷயஜ்ஞாநம், இவை கிடக்கையாலேயின்னமும் ஸம்ஸாரம்மேலிட்டால்செய்வதென்னென்கிறபயஹேது; "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ஸர்வேச்வரனிவற்றைத்தள்ளிப் பொகடும்படி பண்ணுகையாலே இவற்றுக்கு நிவர்த்தகமான வவனுடைய காருண்யவிஷயஜ்ஞாநம் தத்பய ராஹித்யஹேதுவென்கை. நிவர்த்தகபலமறிந்தாலும் நிவர்த்யம் கிடக்குமளவும் பயமும் நடுநடுவே கலசிச்செல்லுமென்றுகருத்து. ஆக விப்ரகரணத்தால் இவனுக்கு பயாபயஹேதுக்களும், ததுபயவிபர்யயத்தில் ஸித்திக்குமதும், தந்நிபந்தந சங்காபரிஹாரங்களும், ஸர்வேச்வரன் ஸம்ஸாரிகளுக்குஜ்ஜீவநத்தில் க்ருஷிபண்ணும்படியும், அஜ்ஞாதஸுக்ருதபகவதங்கீகாரஹேதுத்வமும், அந்நிர்ஹேதுகவிஷயீகார வைபவாபிஜ்ஞர்படியும், ஏதத்வைபவாபிஜ்ஞர்படியும், இவ்வர்த்த மபியுக்தவசந ஸித்தமென்னுமதும், அஜ்ஞாதஸுக்ருதவ்யாஜேந வவனங்கீகரிக்கும்படியும், அங்கீகாரஹேதுவாக்குமஜ்ஞாதஸுக்ருதங்களின் தத்க்ருஷிபலத்வமும், தந்நிருபணபலிதமும், அங்கீகாரப்பற்றாசாமவைகாதாசித்கமாகஸ்வயமேவ

ஆ.—ரஹஸ்யமாகவநுஸந்த்திக்கு மூபய நிர்ஹேதுகத்வத்தை ஸஹே துகத்வோக்தியாலே மறைப்பது வெளியிடுவதா யருளிச்செய்கிறுரென்று பிள்ளையருளிச்செய்வர். ஆக விப்ரகரணத்தால் ஸ்வபராநுஸந்த்தாக கார்யங்களில் பராநுஸந்த்தாக கார்யவிபர்யய ஸ்மாரகாநுஸந்த்தாநம், பாலபாலாப மூக்க்யகாரண நிர்ப்பயோக்திப்ரோகதக்ருபாளுத்வம், க்ருபாவச பரிகல்பித யாத்ருச்சிகாதிருபசிமித்த ஸஹேதுகநிர்ஹேதுகா ங்கிகாரங்களின் துர்பலப்ரபலத்வஸூசக நிரூபணவிசேஷமும், அதிலஹே துகாங்கிகாரஹேதுவான துர்நிவார ப்ரபல க்ருபாநுஸந்த்தாகபலமும் சொல்லப்பட்டது.

ஆறு ப்ரகரணங்களில் ஐந்தாவதான

பகவந்நிர்ஹேதுக க்ருபாப்ரபாவம் மூற்றிற்று.

நிவர்த்தகஜ்ஞாநமபயஹேது.

ஆறு ப்ரகரணங்களில் ஐந்தாவதான

பகவந்நிர்ஹேதுக க்ருபாப்ரபாவம் மூற்றிற்று.

ஆ.—விளக்கைக்கடியும், அவற்றின் த்வைவித்யமும், ஏவம்பூதவிஷயீ கார சாஸ்த்ரஸித்தத்வமும், இவ்விஷயீகாரம்பெற்றவர் இத்தை வெளி யாகப்பேசினபடியும், ஏததநபிஜ்ஞ வசநபரிஹாரமும், ஆபிமுக்க்யவதத் வேஷதத்க்ருபாஜநிதத்வமும், யாத்ருச்சிகாதிகளின் ஸுக்ருதகரம மீச்வரக்ருதமென்னுமதும், ஏததர்த்த விஷயாபியுக்தவசந பரஸ்பரவி ரோத பரிஹாரார்த்யநுக்தி ஹேதுவும், கீழ்பரக்க வுபபாதித்துவந்த விதின்பலிதமும், ததாப்திஹேதுதயா ஜ்ஞாநாதிக ரநுஸந்த்தாநமும், நிர்ஹேதுக க்ருபாபலாவச்யாநுபாவ்யத்வமும், ஈத்ருசக்ருபா ப்ரவாஹ துர்நிவாரகத்வமும், ப்ரகரணுதி ப்ரதிஜ்ஞாதார்த்த நிகமநமும், பயாப யாநுவர்த்தந காலாவதியும், ஏததுபயஹேதுபூதஜ்ஞாநவிசேஷங்களும் சொல்லுகையாலே இவ்வதிகாரிக் கத்வேஷாதிமோக்ஷ பர்யந்தாகில லாபஹேதுவான பகவதாகஸ்மிக க்ருபாப்ரபாவம் விஸ்தரேண ப்ரதிபாதிக் கப்பட்டது. இத்தால் த்வயோபதேஷ்ட்ரு பூதாசார்யோபஸத்யாதிக ளுக்கும், தததுபதிஷ்டத்வயார்த்த ஜ்ஞாநாதிகளுக்கும் ஹேதுவான பக வந்நிர்ஹேதுக க்ருபாவைபவம் சொல்லப்பட்டது.

ஆறு ப்ரகரணங்களில் ஐந்தாவதான

பகவந்நிர்ஹேதுக க்ருபாப்ரபாவம் மூற்றிற்று.

ஆ.—சூஎ. இப்படி நிர்ஹேதுகாங்கீகார விஷயபூதனான சரமாதிகா
ரிக்கு சரமப்ராப்ய ப்ராபகமின்னதென்று தலைக்கட்டுகிறார் மேல்; அதில்
முக்துறயாவக்மோக்ஷ மநுவர்த்திக்கும் பயாபயம் பாதந்த்ரசேஷியைப்பற்
றியிருப்பார்க்குண்டாகாதென்கிறார், (ஸ்வதந்த்ரனை) இத்யாதியால். பந்
த்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான நிரங்குசஸ்வதந்த்ரனை; அநி
ஷ்ட நிவ்ருத்திபூர்வகமான இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்கும் சா
மோபாயமாகப் பற்றினாலிறே, ஸம்ஸார தந்நிவர்த்தகாநுஸந்த்தாநகார்ய
பயாபயாகமநருபமான இந்த சித்தவிகாரப்ரஸங்கம்தானுள்ளது; மோ
க்ஷைகஹேதுவாய் ஸ்வாசார்யபாதந்த்ரனான சரமசேஷியை சரமோபாய
மாகப்பற்றினால், பயாபயம் கலசாத நிர்ப்பயத்வமே யுள்ளதென்றபடி.

ஆறு ப்ரகரணங்களில் ஆறுவதான சரமபர்வநிஷ்ட்டா ப்ரகரணம்.

சூஎ. ஸ்வதந்த்ரனை யுபாயமாகத்தான் பற்றினபோதிறே
யிப்ரஸங்கம்தானுள்ளது.

ஆறு ப்ரகரணங்களில் ஆறுவதான சரமபர்வநிஷ்ட்டா ப்ரகரணம்.

ஜீ.—சூஎ. இப்ரபந்த்தத்தில் உபக்ரமமேபிடித்திவ்வளவாக ஸித்தோ
பாயபூதனான ஸர்வேச்வரனே சேதநர்க்கு பரமபுருஷார்த்த லக்ஷணமோ
க்ஷ ஸித்திக்கு நிரபேக்ஷஸாதநமென்றருளிச்செய்து, உபாயபூதனான
ஸர்வேச்வரன் கர்மநிபந்த்தநமாக ஸம்ஸரிப்பிக்கவும், காருண்ய நிபந்த்
தநமாகமுக்தனாக்கவும் வல்லநிரங்குச ஸ்வதந்த்ரனாகையாலே, அவனை
யுபாயமாகப்பற்றி யிருக்குமவர்களுக்கு ஸ்வகர்மாநுஸந்த்தாநத்தாலும்
தத்காருண்யாநுஸந்த்தானத்தாலும் வரும் பயாபயங்கள் யாவத்ப்ரா
ப்திமாறிமாறி நடக்கும்படியையும் தர்சிப்பித்தார்கீழ்; இனிமேல் “సాక్షా
న్నారాయణో దేవః కృత్వా మర్త్యమయీం తనుమ్” “ஸாக்ஷாந்நாராயணோதேவ: க்ரு
த்வாமர்த்யமயீம்தநும்” என்றும் “திருமகள் கொழுநன் தானே
குருவாகி” என்றும் சொல்லுகையாலே அந்தஸித்தோபாய பஹிர்
ப்பூதமன்றியே தச்சரமாவதியாய், பந்த்தமோக்ஷங்க ளிரண்டுக்கும்
பொதுவாயிருக்கை யன்றிக்கே மோக்ஷைகஹேதுவா யிருக்கையாலே
தந்நிஷ்ட்டர்க்கு பயப்ரஸங்கமின்றியே எப்போதுமொக்க நிர்ப்பய
ராய்க்கொண் டிருக்கலாம்படியாய், சரமாவதியான ஸ்வரூபப்ராப்யங்
களுக் கநுரூபமான சரமோபாயம் ஸதாசார்யாபிமாநமேயென்று ஸகல
வேதாந்தஸார வித்தமரான பூர்வாசார்யர்கள் தங்களுக்குத்தஞ்சமாக
வநுஸந்த்தித்து முபதேசித்தும் போந்த ரஹஸ்யார்த்தத்தை ஸகலரு
மறிந்துஜ்ஜீவிக்கும்படி ப்ரபந்த்தசேஷத்தாலும் ஸுஸ்பஷ்டமாக வருளிச்
செய்கிறார். அதிலிப்படி பயாபயங்களிரண்டும் மாறிமாறி யநுவர்த்தியாம
லெப்போதுமொக்க நிர்ப்பயனா யிருக்கலாவதொரு வழியில்லையோவென்னு
மாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார், (ஸ்வதந்த்ரனை) என்றுதுடங்கி.
அதாவது கர்மாநுகுணமாக ஸம்ஸரிப்பிக்கவும் காருண்யாநுகுணமாக
ஸம்ஸார நிவ்ருத்தியைப்பண்ணி திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவும்
வல்ல நிரங்குச ஸ்வதந்த்ரனானவீச்வரனை இஷ்டாநிஷ்ட ப்ராப்திபரிஹா
ரங்களுக்குபாயமாகப்பற்றினபோதிறே, யாவத்ப்ராப்திபயாபயங்களிரண்
டும் மாறிமாறி நடக்குமென்னு மிப்ரஸங்கம்தானுள்ளதென்கை. பாதந்த்ர
ஸ்வரூபனாய் மோக்ஷைகஹேதுவான வாசார்யனை யுபாயமாகப்பற்றினா
லிப்ரஸங்கமில்லை; ஸதத நிர்ப்பயனாயிருக்கலாமென்றுகருத்து. (உபாய
மாகத்தான்) என்றொருமுழுச்சொல்லித்தனை.

ஆ.—௪௦௮. பரதந்த்ரசேஷியை யுபாயமாகப் பற்றவேணுமென்னுமிவ்வர்த்தத்தை, தந்நிஷ்டவசநம்கொண்டே நிர்ணயிக்கக்கடவோமென்கிறார் மேல், (உண்டபோது) இத்யாதியால். ஓவாதவூணாக பகவத்விக்ரஹாநுபவம் பண்ணுகையாகிற வுண்டபோது "உண்டுகளித்தேற்கு உம்பரென்குறை" "இனியாவர் நிகரகல்வானத்தே" "மாறுளதோ விம்மண்ணின் மிசையே" என்றித்யாதி பகவதநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷகர்விதமானதொருவார்த்தையும்; "உண்ணுநாளில்லை" என்னும்படி பாஹ்யஸம்ச்லேஷாலாபத்தால், தத்விக்ரஹாநுபவம் பண்ணப்பெறாமையாகிற வுண்ணாதபோது "மதியெல்லாமுள்கலங்கிமயங்குமால்" "சாயலொடுமணிமாமைதளர்ந்தேன் நான்" என்றித்யாதி சோகப்ரகர்ஷகத்கதமாய்த்துவண்டபோதொருவார்த்தையும் பரம்பரையாக மாறிச்சொல்லுவார்

௪௦௮. உண்டபோதொருவார்த்தையுமுண்ணாதபோதொருவார்த்தையும் சொல்லுவார்பத்துப்பேருண்டிறே.

ஜீ.—௪௦௮. ப்ரமாணப்ரமேய நிச்சயம்பண்ணவேணுமிறே, இவ்வர்த்தமென்கொண்டு நிச்சயிக்கக்கடவோமென்னுமாகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார், (உண்டபோது) என்றுதுடங்கி. மயர்வறமதிநலம்பெற்று பகவதநுபவைகதாரகராயிருக்குமாழ்வார்களுக்கு, உண்டபோதுமுண்ணாதபோதுமாவன - பகவதநுபவ ததலாபகாலங்கள்; அதில் பகவதநுபவம் பண்ணி ஹ்ருஷ்டரானபோது, தத்தாஸ்யவிவ்ருத்திகாமதயா ததீயதாஸ்யத்திலேயூன்றி "பயிலும் பிறப்பிடைதோறெம்மையாளும்பரமர்" "காணும்பிறப்பிடைதோறெம்மையாளுடைநாதர்" "வருமையுமிம்மையும் நம்மை யளிக்கும் பிராக்கள்" "சலிப்பின்றி யாண்டெம்மைச் சக்மசந்மாந்திரம் காப்பர்" "நன்மைபெறுத்தெம்மை நாளுய்யக்கொள்கின்ற நம்பர்" "எம்பல் பிறப்பிடைதோறெந்தொழுகுலம் தாங்கள்" "அவனடியார்சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கேதிரியவே-செந்தாமரைக்கட்டிருக்குறள்ன் நறுமாவிரை நாண்மலரடிக்கீழ்ப்புகுதல் - உறுமோபாவியேனுக்கு" என்றும் "ஆரேனும் நெஞ்சுடையாரவரெம்மையாள்வாரே" "ஞானத்தினொளியுருவை நினைவாரென்நாயகரே" "நச்சித்தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே" "பேராளன் பேரோதும் பெரியோரையொருகாலும் பிரிகிலேனே" "கண்ணாரக்கண்டுருகிக் கையாரத்தொழுவாரைக் கருதுங்கால் உண்ணாதுவெங்கூற்றமோவாதபாவங்கள் சேராவே" என்றும் "ஈட்டம்கண்டிடக்கூடுமேலதுகாணும் கண்பயனாவதே" "தொண்டரடிப்பொடி யாடநாம்பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கையென்னாவதே" "இன்புறும்தொண்டர் சேவடியேத்திவாழ்த்துமென்னெஞ்சமே" என்றுமித்யாதிகளாலே தத்விஷயத்திலும் காட்டில் ததீயரேநமக்குசேஷிகளுமுபாயோபேயபூதருமென்றத்யாதரத்தைப் பண்ணிப்பேசுவது; பகவதநுபவாலாபக்லிஷ்டரானபோது அப்படி பரமசேஷிகளும் பரமப்ராப்ய ப்ராபகபூதருமான ததீயர் ஸந்நிஹிதருமாயிருந்தாலும் அவர்கள்பக்கல் நெஞ்சுசெல்லாமல் பகவத்விஷயமே ப்ராப்யமும் ப்ராபகமுமாக நினைத்து "காணவாராய்" "காணுமாறருளாய்" "வரிகொள்வெஞ்சிலை வளைவித்தமைந்தனும் வந்திலனென்செய்கேன்" "வெஞ்சமத்தடிசரந்துரந்த வெம்மடிகளும் வாரானால்" "வாஸுதேவாவுன்வரவு பார்த்து - வார்மணல்குன்றில் புலாகின்றேன்" என்றித்யாதிகளாலே ஆர்த்திபரவசராய் அலற்றுவதாடுவது "வெஞ்சிறைப்புள்" "உங்களோடெங்களிடையில்லை" இத்யாதிகளாலே வெறுப்பது உதறுவதாகையாலே,

ஆ.—ஒருவரிருவரன்றிக்கே பத்துப்பேருண்டிறே; "நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்" "உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" "தனக்கேயாக வெனைக்கொள்ளும்" "நின்திருத்தவடிமைக் குற்றேவல்செய்து" என்றித்யாதியாலே ஸ்வதந்த்ர பகவத்விஷயமே யுபாயோபேயமென்றறுதியிட்டு, ப்ரதமபர்வாபிலாஷிகளான வந்தவாழ்வார்களுடைய சோகஹர்ஷ கலப்பனை பாசுரம்கொண்டன்று அந்தபகவத்விஷயமே யுபாயோபேயமென்றிருக்கும் ஸதாசார்யன் திருவடிகளே ததுபயமுமென்னு மிச்சரமார்த்தம், ஸம்சயவிபர்யயமற வறுதியிடுவது.

௪௦௯. ப்ரதமபர்வத்திலே நின்று சிரிப்பதழுவதாய்க்கொண்டு இளகெஞ்சானவவர்களை, ஹர்ஷைகஹேதுவான வாசார்யவிஷயத்தையே முற்படப்பற்றி ஸுகித்திருக்கமாட்டாதே, சோகஹர்ஷ மிரண்டுக்கும் ஹேதுவான ஸ்வதந்த்ரவிஷயத்தையே முற்படப்பற்றி சோகிப்பது ஹர்ஷிப்பதாய், இவர்கள் படுகிறபாடென்னென்றுசிரித்து "மேவினேனவன்பொன்னடி" என்று விச்லேஷகந்தமற ஆழ்வார்திருவடிகளுடன் நிரந்தரஸம்ச்லேஷம்பண்ணி "நாவினால்நவிற்றின்பமெய்தி வீறடித்திருக்கும் ப்ரஸித்தரான ஸ்ரீமதுரகவியாழ்வாரொருவருண்டிறே; சரமநிஷ்டராய்ப்போருமவ்வாழ்வாருடைய" "மேவினேனவன்பொன்னடி - தேவுமற்றறியேன்"

அவர்கள்பாசுரம்கொண்டன்றிவ்வர்த்தமறுதியிடுவது.

௪௦௯. அவர்களைச் சிரித்திருப்பாரொருவ ருண்டிறே;

ஜீ.—(உண்டபோதொருவார்த்தையும்உண்ணாதபோதொருவார்த்தையுஞ் சொல்லுவார்) என்கிறார். ஆழ்வார்களெல்லாருமேகப்ரக்ருதிகளாய் ஏககண்டரா யிருக்கையாலே (பத்துப்பேருண்டிறே) என்கிறார். (அவர்கள் பாசுரம்கொண்டன்றிவ்வர்த்தமறுதியிடுவது) என்றது - மயர்வறமதிநலம்பெற்றவர்களாகையாலே ப்ரதமபர்வத்தில் காட்டில் சரமபர்வத்துக்குள்ள தன்னேற்றமடையத்தெளியக்கண்டு பேசினார்களேயாகிலும், சரமபர்வைகநிஷ்டரன்றியே ப்ரதமபர்வத்திலேமண்டி ததநுபவஹ்ருஷ்டரானபோதொன்றைச்சொல்லுவது, ததலாபக்லிஷ்டரானபோதொன்றைச்சொல்லுவதாயொருபடிப்பாடரல்லாதவர்கள் பாசுரம்கொண்டன்று ஆசார்யனேயுபாயமென்றிவ்வர்த்தநிச்சயம்பண்ணுவதென்கை.

௪௦௯. பின்னை யார்பாசுரம்கொண் டறுதியிடுவதென்ன வருளிச்செய்கிறார், (அவர்களை) என்று துடங்கி. அதாவது- "மேவினேனவன்பொன்னடி - தேவுமற்றறியேன்" என்று ஸ்வாசார்யரானவாழ்வார்திருவடிகளை ப்ராப்யமும் ப்ராபகமுமாகப் புரையறப்பற்றி அவிதிதாந்யதேவதராய் "நாவினால் நவிற்றின்பமெய்தினேன்" என்று தத்ஸங்கீர்த்தநாநந்தநிர்ப்பராய் "அடியேன் சதிர்த்தேன்" என்றுறுவதறிந்து பற்றினசதுரராயிருக்கையாலே, சரமபர்வத்திலேற்றமறிந்து பேசாநிற்கச்செய்தே ததேகநிஷ்டரன்றியே ப்ரதமபர்வத்திலேமண்டி தத்வைலக்ஷண்யபரவசராய் உண்டபோதொருவார்த்தையுமுண்ணாதபோதொரு வார்த்தையுஞ் சொல்லுகிறவாழ்வார்கள்பதின்மரையும், அடியிலேயோராசார்யன் திருவடிகளைப்பற்றி யகவாதஸுகிகளா யிருக்கப்பெறாதே ஸ்வவைலக்ஷண்யத்தாலே பிச்சேற்றும் பகவத்விஷயத்திலே முந்துறமுன்னமிழிந்து ததநுபவதசையிலொன்றைச்சொல்லுவது ததலாபதசையிலொன்றைச்சொல்லுவதா யிவர்கள் படுகிறபாடென்னென்று பரிஹஸித்திருக்கும் ஸ்ரீமதுரகவியாழ்வாரொருவருண்டிறே; சரமபர்வநிஷ்டராய் ஸதைகரூபவீசரானவிவருடையபாசுரமான கண்ணிநுண்சிறுத்தாம்பைக்கொண்டு இவ்வர்த்த

ஆ:—என்று ஆழ்வார் திருவடிகளை யுபாயோபேயமென்று ப்ரதிபாதிக்கிற திருமுகப்பாசுரமான கண்ணிநுண்சிறுத்தாம்புகொண்டே, சரமசேஷியே யுபாயோபேயமென்னும் சரமார்த்தம், ததபிலாஷிகளான நாம் நிஸ்ஸம்சயமாகவறுதியிட்டு நிஸ்சலசித்தராகக்கடவோமென்கிறார். ஸ்வாமியினுடைய பாதுகையைச்சிரஸாவஹித்து, நான் தரித்தவித்தோ..டாக்குமோ நீதரித்தரத்நாபிஷேகமென்று ஸ்வாமியைப்பார்த்துச் சிரித்தானென்றால் ஸ்வாமித்ரோஹம்வாராதாப்போலே, ஆசார்யப்ரேமப்ரகர்ஷத்தாலே ஆசார்யனைப்பற்று மித்தோடொக்குமோ தத்விஷயத்தைப்பற்று மிதுவென்னும் சிரிப்பு ஆசார்ய ப்ரீதிவர்த்தகமாய்க்கொண்டு அடிக்கழஞ்சுபெறுமத்தனை யல்லது, ஆசார்யாபசாரமாய்த்தலைக்கட்டாதிறே; ஆகையாலாசார்யைகநிஷ்டரான விவர்சிரிப்பு தத்ப்ரேமாதிசயத்துக்குப் போக்குவீடாய், திருவுள்ளத்தில் கொழுந்துபட்டுப் படரும் தத்பக்திவல்லி பூத்தபூவாயே யிவர்க்கு முக்யாபரணமுமா யிருக்குமிறே.

௪௧௦. இப்படி யாசார்யதத்ஸத்ருசருகக்கும்படி சிரித்திருக்குமிவர் சொன்ன "நம்பிக்காளுரியேனாய்" என்கிற வாசார்யைகசேஷமான ஸ்வரூபத்துக்கும், "நம்பிக்காள்புக்க காதலடிமைப்பயனன்றே" என்றாசார்ய கைங்கர்யரூபமான ஸ்வரூபாநுரூப ப்ராப்யத்துக்கும், "மேவினேனவன் பொன்னடி" என்னும்படி விபரீதமாகாதே சேர்ந்திருக்கவேணுமிறே

அவர்பாசுரம்கொண் டிவ்வர்த்த மறுதியிடக்கடவோம்,

௪௧௦. ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும்

ஜீ:—த்தை ஸம்சயவிபர்யயகத்தமற நிச்சயிக்கக்கடவோமென்கை.—, அதவா (உண்டபோது) இத்யாதிக்கு பகவதநுபவம் பண்ணினபோது "உண்டுகளித்தேற்கும்பரென்குறை" "யாவர் நிகரகல்வானத்தே" "மாறுளதோ விம்மண்ணின்மிசை" என்றிப்படி பகவதநுபவ ஜநித ஹர்ஷப்ரகர்ஷகர்விதமான தொருவார்த்தையும், ததநுபவம்பெறாதபோது "மதியெல்லாமுள்கலங்கி மயங்குமால்" "சாயலொடுமணிமாமை தளர்ந்தேன்நான்" "காணவாராயென்றென்று கண்ணும் வாயுந்துவர்ந்து" "தீயோடுடன் சேர்மெழுகாயுலகிற்றிரிவேனே" என்றிப்படி சோகவேகஜநிதமான தொருவார்த்தையும் சொல்லுவாரொருவ ரிருவரன்றிக்கே பத்துப்பேருண்டிறே; ததீயரேசேஷிகளு முபாயோபேயபூதரு மென்றறிந்திருக்கச் செய்தே, ததநுகுணமாக நிற்கமாட்டாமல் பகவத்விஷய வைலக்ஷண்ய பரவசராய் இப்படி யுண்டபோதொருவார்த்தை சொல்லுகிறவர்களுக்கு கொண்டன்று; ஸ்வாசார்ய சரணயுகளமே யுபாயமென்கிற விப்பரமார்த்த நிர்ணயம்பண்ணுமது அவர்திருவடிகளையே தமக்குத் தஞ்சமாகப்பற்றி "தேவுமற்றறியேன்" என்றிருக்கையாலே ப்ரதமபர்வத்திலே மண்டி ஹர்ஷசோகபரவசராய்ப்பேசுகிறவர்களைப் பரிஹஸித்திருப்பாரொருவருண்டிறே; அப்படி யிருந்துள்ள ஸ்ரீமதுரகவிகள் திவ்யஸூக்தியைக் கொண் டிவ்வர்த்த நிச்சயம்பண்ணக்கடவோ மென்றிங்ஙனே யோஜிக்கவுமாம்.

௪௧௦. இப்படி ப்ரமாணஸித்தமான வர்த்தத்தை உபபத்தியாலே ஸ்த்திரீகரிக்கிறார் மேல் (ஸ்வரூபத்துக்கும்) என்று துடங்கி. ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை நிஷ்கர்ஷிக்குமளவில், ப்ரதமம் ஸ்வரூபத்தையுள்ளபடிநிஷ்கர்ஷித்து அநந்தரம்ப்ராப்யத்தை ததநுரூபமாக நிஷ்கர்ஷித்துப்ராபகத்தை ததுபயாநுரூபமாக நிஷ்கர்ஷிக்கவேணுமிறே; வ்யுத்பத்திதசையி லுபேயம்முற்பட்டு உபாயம்பிற்பட்டிருக்கும், அநுஷ்டாநதசையில் மாறாடியிருக்கும்; ஸ்வரூபத்துக்கும்ப்ராப்யத்துக்கும் சேராமையாலேயிறே

ஆ.—தது பயமத்த்யஸ்த்தமான ப்ராபகம்: ஸ்வரூபம்சரமசேஷிக்குசேஷம் தத்கைங்கர்யமே சரமப்ராப்யமென்று சரமஜ்ஞாநவ்யவஸாயம்பிறந்தால், சரம விஷயமே சரமோபாயமாகாவிடில் சேராச்சேர்த்தியாய் விடுமென்கிறார். ப்ரதமசேஷத்வாதிகள் சரமபர்யந்தமாய் நிலைத்தபின்பு, ப்ரதமசரமங்களிரண்டையும் ப்ராதாந்யேநப்பற்றி நிற்கைசேராதிறே. ப்ரதமநமஸ்ஸிலே ப்ரதமத்ருதீயாக்ஷர சதுர்த்திநமஸ்ஸுக்களாலே சரமஸ்வரூப ப்ராப்ய ப்ராபகங்கள் சரமாதிகாரிக் கநுஸந்த்தேயங்களென் றருளிச்செய்வர்.

சுகக. ததுபயவிபரீத ப்ராபகாந்தர பரிக்ரஹம் சரமநிஷ்ட்டர்க் கநபிமதமென்கிறார் மேல்; எம்பெருமானார் திருவடிகளே சரணமென் றிருக்கும் வடுகநம்பி, உடையவர்க்கு பவித்ரமான கூரத்தாழ்வானையும் தண்டமான முதலியாண்டானையும், எம்பெருமானார் திருவடிகளேசரணம் பெரியபெருமாள் திருவடிகளேசரணம் என்றிரண்டையு மநுஸந்திக்கை

சேர்ந்திருக்கவேணுமிறே ப்ராபகம்.

சுகக. வடுகநம்பி யாழ்வானையு மாண்டானையு மிருகரைய ரென்பர்.

ஜீ.—உபாயாந்தரத்தைப்பரித்யஜித்தது; ஆகையாலே (ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்கவேணுமிறே) என்கிறார். இனிஸ்வரூபம்தன்னை நிரூபித்தால் ஜ்ஞாநாநந்தங்களும் புறவிதழென்னும்படி பகவதநந்யார்ஹசேஷத்வமேவடிவாய், அதினுடைய யாதாத்ம்யம் தச்சேஷத்வமும் புறவிதழென்னும்படி ததீயசேஷத்வமேவடிவாயிறே யிருப்பது; ஏவம்பூதஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை நிரூபித்தால், தத்கைங்கர்யம் ப்ரதமாவதியாய் ததீயகைங்கர்யம் சரமாவதியாயிருக்கும்; ஸ்வரூபப்ராப்யவேஷ மிதுவாகையாலே ததுபயாநுகுணமான ப்ராபகம் ததீயரேயாக வேண்டியிறேயிருப்பது; இனி யந்தத்ததீயரில் வைத்துக்கொண்டு முதலடியிலே தன்னை யங்கீகரித்து தத்வஜ்ஞாநப்ரதாநத்தைப்பண்ணின மஹோபகாரகனான ஸ்வாசார்யனுக்கே சேஷமாயிருக்கை. ஸமஸ்தபாகவதருடைய வுகப்புமாய் தன் ஸ்வரூபத்தினுடைய வெல்லைநிலமுமாயிருக்கும்; இந்த ஸ்வரூபத்துக்கநுரூபமான ப்ராப்யமும் ஸ்வாசார்யன் திருவடிகளில்பண்ணும் கைங்கர்யமுமாயிருக்கும்; இப்படி ஸ்வரூபப்ராப்யங்களாயநின்ற இவையிரண்டுக்கும் ஸத்ருசமான ப்ராபகம் ஸ்வாசார்ய சரணயுகளமாக வேணுமென்கை. இதுவே ஸ்வரூபப்ராப்யங்களுக்குச்சேர்ந்த வுபாயமென் கையால் ஈச்வரஸ்வாதந்த்ர்ய பீத்யா நிர்ப்பயத்வத்தைப்பற்ற விதில் போந்தவளவல்ல, முக்க்யோபாய மிதுவேயென்னுமிடம்ஸம்ப்ரதிபந்நமிறே.

சுகக. இவ்வர்த்தவிஷயமாக வோரைதிஹ்யத்தை யருளிச்செய்கிறார் மேல், (வடுகநம்பி) என்றுதுடங்கி. அதாவது ஆழ்வார்திருவடிகளில் ஸ்ரீமதுரகவிக ளிருந்தாப்போலே, ப்ராப்யப்ராபகங்களிரண்டு மெம்பெருமானார் திருவடிகளிலேயென்று ப்ரதிபத்திபண்ணி "தேவுமற்றறியேன்" என்றிருக்கும் வடுகநம்பி, எம்பெருமானார்க்கு நிழலுமடிதாரும் போலே யவிநாபூதராய் "రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే" "రామానుజార్య వశగః పరివర్తిషీయ" "ராமாநுஜஸ்யசரணௌ சரணம்ப்ரபத்யே" "ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய" என் றுபாயோபேயங்க ளவர்திருவடிகளு மத்திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமென்றிருக்கும் கூரத்தாழ்வானையும் தாத்ருசரான முதலியாண்டானையும், ஸம்ஸாரத்திலிருப்பிலடிக்கொதிப்பால்வந்த வார்த்தியின் மிகுதியாலேகலங்கி காதாசித்கமாகப் பெருமாள்

ஆ.—யாலே ஒருகரையில் நிலையற்ற இருகரையரென்பர். ஆகையால் ப்ராபக வைபரீத்யம் சரமநிஷ்டர்க் கநிஷ்டமென்றபடி

சகஉ. ஆகில் பகவத்பாகவதாசார்ய விஷயகைங்கர்ய த்ரயமும் ப்ராப்யமாயிருக்க, ஆசார்யகைங்கர்யமே ப்ராப்யமானபடியென்னென்ன, ஸ்வரூபஜ்ஞாநபரிபாக நிபந்தநமாக பர்வக்ரமமாய் வருகையாலேயென்கிறார் மேல், (ப்ராப்யத்துக்கு) இத்யாதியால். ப்ராதமிக பகவச்சேஷத்வாநுகுணமான ப்ராப்யத்துக்கு ப்ரதமாம்சம் ப்ரதமசேஷியான பகவத் கைங்கர்யம்; மாத்யமிகசேஷத்வாநுகுணமான ப்ராப்யத்துக்கு மத்யமாம்சம் மத்யஸ்தசேஷிகளான பாகவதகைங்கர்யம்; சரமசேஷத்வாநுகுணமான ப்ராப்யத்துக்கு சரமாம்சம் சரமசேஷியான வாசார்யகைங்கர்யமென்று மேல் (சரமபர்வம் வரக்கடவது) என்கிறதுக்கும் சேரும்படி இங்கு மாறுடி யந்வயித்தருளிச்செய்வர். பகவத்கைங்கர்யம் பாகவதகைங்கர்யத்திலே மூட்டும், அந்த பாகவதகைங்கர்யம் ஆசார்யகைங்கர்யத்திலே நிலைப்பிக்கும், ஆகையா லாசார்யகைங்கர்யமே சரமபர்வம். பகவத்கைங்கர்யத்திலே பாகவதகைங்கர்யமில்லை, ஸாமாந்யமான பாகவதகைங்கர்யத்தில் விசேஷமானவாசார்யகைங்கர்யமில்லை, ததுபயபாவமுள்ள வாசார்ய கைங்கர்யத்தில் ததுபயகைங்கர்யமுண்டு. பகவத்கைங்கர்யத்தை விடில் ஆசார்யபாகவதர்கள் கைவிடுவார்கள், பாகவதகைங்கர்யத்தை விடில் பகவதாசார்யர்கள் கைவிடுவார்கள், ஆசார்ய கைங்கர்யத்தை விடில் பகவத்பாகவதர்கள் கைவிடுவார்கள். ஆசார்யபாகவத ப்ரீதிவர்த்தகம் பகவத்கைங்கர்யம், பகவதாசார்ய ப்ரீதிவர்த்தகம் பாகவதகைங்கர்யம், பகவத்பாகவத ப்ரீதிவர்த்தகமாசார்யகைங்கர்யம். பகவத்கைங்கர்யமொருபுரி, பாகவதகைங்கர்யமிருபுரி, ஆசார்யகைங்கர்யம் முப்புரியுண்டது. இனி பகவச்சேஷத்வப்ரதாநர் பகவத்கைங்கர்யம் நிருபாதிகம்

சகஉ. ப்ராப்யத்துக்கு ப்ரதமபர்வ மாசார்யகைங்கர்யம்; மத்யமபர்வம் பகவத்கைங்கர்யம்;

ஜீ.—பக்கலிலும்சென்று பல்காட்டுவது தத்வைலக்ஷண்யம்கண்டவாறே ப்ரவணராய்ப் போருவதா மிவ்வளவைக்கொண்டு, எம்பெருமானார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமானால் "தேவுமற்றறியேன்" என்றிருக்க வேண்டாவோ, அங்ஙனன்றிக்கே சரமாவதியிலும் ப்ரதமாவதியிலும் கைவைத்து நிற்கிறவர்க ளிருகரையரென்றருளிச்செய்வரென்றபடி.

